# இனம்

இனம் இனத்தைச் சேரும்

ISSN : 2455 - 0531

Mail Id: inameditor@gmail.com
editor@inamtamil.com

பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்

International E-Journal of Tamil Studies

UAN.TN03D0061112

இலக்கணம், இலக்கியம், கலை, பண்பாடு, அறிவியல், கணினிசார் ஆய்வை இனங்காண!

மலர்:4 இதழ்:16 பிப்ரவரி 2019 Vol. 4 Issue : 16 February 2019




ப.சு.மூவேந்தன்
ஆ.சந்திரன்
ஆ.அருணாசலம்
ச.கண்ணதாசன்
ஜெஸின் பிரான்சிஸ் - ம.பிரேமா - ஆ.ஷர்மி
பா.ஈஸ்வரன்
மூ.பாலசுப்பிரமணியன்
மா.இரா.இராஜ்குமார்
ஆ.ஈஸ்வரன்
வி.வசந்தா
சே.முனியசாமி
அ.அனேஜா

Inam ISSN : 2455 - 0531
UAN.TN03D0061112

# இனம்

பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்
An Internationally Refereed e_ Journal of Tamil Studies

## பதிப்பாசிரியர்

முனைவர் மு.முனீஸ்மூர்த்தி
தமிழ் உதவிப்பேராசிரியர்
பிசப் ஹீபர் கல்லூரி, திருச்சி - 17.

முனைவர் த.சத்தியராஜ்
தமிழ் உதவிப்பேராசிரியர்
இந்துஸ்தான் கலை அறிவியல் கல்லூரி,
கோயம்புத்தூர் - 28.

## ஆலோசனைக் குழு

முனைவர் செ.வை.சண்முகம் (சிதம்பரம்)
முனைவர் சு.இராசாராம் (நாகர்கோயில்)
முனைவர் சிலம்பு நா.செல்வராசு (புதுச்சேரி)
முனைவர் ந.வேலுச்சாமி (சேலம்)

## ஆசிரியர் குழு

முனைவர் ஆ.மணி (புதுச்சேரி)
முனைவர் க.பாலாஜி (கோவை)
முனைவர் இரா.குணசீலன் (திருச்செங்கோடு)
முனைவர் இரா.இராஜா (திருச்சி)
முனைவர் சி.இரவிசங்கர் (மதுரை)
முனைவர் ப.சிவமாருதி (தாய்லாந்து)
முனைவர் ச.முத்துச்செல்வம் (மதுரை)
முனைவர் சா.விஜய ராஜேஸ்வரி (தஞ்சாவூர்)
திரு சு.ஸ்ரீகந்தராசா (ஆஸ்திரேலியா)

## இதழாக்கமும் வெளியீடும்

முனைவர் த.சத்தியராஜ்
கோயமுத்தூர்

பிப்ரவரி 2019 மலர் : 4 இதழ் : 16
February 2019 Volume IV Issue 16

# உள்ளே ...

**தமிழ்ச் செவ்வியல்**

**பாலைக்கலி : காட்சியும் கருத்தாக்க உத்திகளும்**
Pālaikkali: Kāṭciyum karuttākka uttikaḷum
முனைவர் ப.சு.மூவேந்தன் / Dr.P.S.Moovendan | 4

**சங்கப் பாடல்களில் கூற்றும் கதைசொல்லியின் குரலும்**
sanga padalkalil kootrum kathaicholliyin kuralum (Narrator voice)
முனைவர் ஆ.சந்திரன் / Dr.A.Chandran | 12

**முல்லைப்பாட்டில் இனவரைவியல் பதிவுகளும் ஆயர் பண்பாட்டு மரபுகளும்**
Ethnography records and pastoral cultural traditions in Mullaippattu
முனைவர் ஆ.அருணாசலம் / Dr.A.Arunachalam | 19

**அகநானூற்றில் குறிஞ்சி** Akanāṉūṟṟil kuṟiñci
முனைவர் ம.பிரேமா / Dr.M.Prema - முனைவர் ஜெஸின் பிரான்ஸிஸ் / Dr.Jesin Frances - முனைவர் ஆ.ஷர்மி / Dr.A.sharmi | 27

**காப்பிய இலக்கியம்**

**சிலப்பதிகார ஆய்ச்சியர் குரவையில் ஆழ்மன உணர்வுகள்**
Subconscious feelings of "Aaichiyar Kuravai" in Silappathikaram
முனைவர் ச.கண்ணதாசன் / Dr.S.Kannadasan | 33


**சிலம்பில் மதுரை** Silampil maturai
முனைவர் ஜெஸின் பிரான்ஸிஸ் / Dr.Jesin Frances - முனைவர் ம.பிரேமா / Dr.M.Prema - முனைவர் ஆ.ஷர்மி / Dr.A.sharmi | 39

**தற்கால இலக்கியம்**

**பொன்னீலனின் 'தேடல்' நாவல் - பன்முகப் பார்வை**
Thedal Navalum Panmugap Parvaiyum
முனைவர் பா.ஈஸ்வரன் / Dr.P.Eswaran | 45

**பொய்க்கால் குதிரை நாவலில் அங்கத உத்திகள்**
The trick in the Poikkal Kuthirai
முனைவர் மு.பாலசுப்பிரமணியன் / Dr.M.Balasubrahmanian | 52

...




**சு.தமிழ்ச்செல்வியின் 'கீதாரி' நாவலில் தகுபுணர்ச்சிக் கோட்பாடு**
**The theoretical theory in 'Geetari' novel by Thamizhaldevi**
முனைவர் அ.மரிய செபஸ்தியான் / Dr.A.Maria Sebasten | 62

**பாரதிதாசன் படைப்புகளில் பெண்ணுரிமைக் கதாபாத்திரங்கள் - ஒரு பார்வை**
**Feminist characters in Bharathidasan creation - a vision**
மா.இரா.இராஜ்குமார் / M.R.Rajkumar | 65

**தமிழவனின் ஆடிப்பாவை போல : தீவிர கதைத்தேர்வும் ஜனரஞ்சகக் கதைபோக்கும்**
**Tamiḻavaṉiṉ āṭippāvai pōla:**
**Tīvira kataittērvum jaṉarañcakak kataipōkkum**
ஆ.ஈஸ்வரன் / A.Eswaran | 71

**வரலாறு - சமூகவியல் - புவியியல் - கல்வியியல்**

**அதிக கல்வித் தகமை உடையவர்கள் அதிகளவு சம்பாதிக்கக் கூடியவர்கள் - பொருளியல் நோக்கு**
**Those with higher education are highly earned - economical orientation**
வினாயகமூர்த்தி - வசந்தா | 75

**முதுகுளத்தூரார் MUDUKULATHURAR**
சே.முனியசாமி / S.MUNIYASAMY | 87

**மருத்துவ விஞ்ஞானத்தின் ஒழுக்க மீறுகைகளும் அவற்றின் அனுமதிப் பாங்கும்**
**Moral violations of medical science are also permitted**
அரியரெத்தினம் அனேஷா / Ariyarethinam Anesha | 94

...

இனம்: பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ் ISSN : 2455-0531 பிப்ரவரி 2019 மலர்:4 இதழ்:16 4

மதிப்பிடப்பெற்றது

# பாலைக்கலி : காட்சியும் கருத்தாக்க உத்திகளும்
## Pālaikkali: Kāṭciyum karuttākka uttikaḷum

முனைவர் ப.சு.மூவேந்தன்
உதவிப்பேராசிரியர், தமிழியல்துறை,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.
அண்ணாமலைநகர் - 608 002
psmnthn757@gmail.com

Abstract: The conceptual technique of the feeding teens referred to in Sangam literature is rich. These texts point to the essential necessity of the subject of social life and the humanitarian crisis in order to get it. Behind the scenes to be separated from the leader of his head for the sake of materialism, the condition of the forests and the forests is the backdrop of these stories. Peruṅkaṭuṅkō is a great masterpiece of the milk ballads in the Sangam syllabus. The article deals with the creativity of the songs that he has created and the concept of conceptualization.

Creative techniques are the language techniques that the creator has to make in order to make his point of view. The creativity of the poetry is revealed through his ruling techniques. Through the embodiment of the creativity and creativity of the creature, the learner can feel and feel in mind. All of the best creators have the ability to use creative techniques to be elegantly employed. In the Sangam songs you can see the list of Kapilar, Paranar, Ovvaiyar, Peruṅkaṭuṅkō. Thus, the article focuses on the creation of their creative work in the creation of their creative work in the creation of their creativity.

Keywords: Sangam literature, Peruṅkaṭuṅkō, Kapilar, Paranar, Avvaiyar, திணை, சங்கப்பாடல், படைப்பாளன், கபிலர், பரணர், ஔவையார், பெருங்கடுங்கோ

### முன்னுரை

சங்கப்பனுவலில் ‘நடுவணைந்திணை’யாக அமைந்தது பாலைத்திணை. இச்சொல்லின் பொருளே பாலைத்திணையின் நிலைப்பாட்டினை அறிவிக்கப் போதுமானதாகும். சங்க காலத்தில் பாலைத்திணை புலவர்களால் புனைந்துகொள்ளப்பட்ட ஒரு திணை என்பது ஆய்வாளர்களின் கருத்தாகும். இவற்றோடு தொல்காப்பியர் பாலைத்திணை குறித்த இலக்கணங்களை விரிவாகக் குறிப்பிடாததும் கருதத்தக்கது. தொல்காப்பியத்திற்குப் பின்னர் எழுந்த பொருளிலக்கண நூல்கள் இத்திணை குறித்து விரிவாகப் பேசியுள்ளன.

சங்கப்பாடல்களில் சிறப்பானவையாக அமைந்தவை பாலைத்திணைப் பாடல்களே. சங்கப் பாடல்களில் பாலைப்பாடல்களே எண்ணிக்கையில் மிகுதி என்பதும் அறியத்தக்கதாகும். மனித வாழ்வில் இணைவும் பிரிவும் இயல்பானவை என்றாலும், இணைப்பினைக் காட்டிலும் பிரிவு ஏற்படுத்தும் தாக்கங்கள் ஏராளமானதாகும். சங்கப்பாடல்களில் பிரிவுத்திணையாக விளங்கும் பாலைத்திணைப் பாடல்களில் புலப்படுத்தப்படும் காட்சியுருக்களும், கருத்துருக்களும் சங்கச் சமூகத்தைக் காட்டுபவையாகும். பாலைத்திணைப் பாடல்களைப் பாடிய புலவர்களில் பெருங்கடுங்கோ தனித்துவம் பெற்றுத் திகழ்கிறார். அவரது பாலைப்பாடல்களின் படைப்பாக்க நிலைப்பாடுகள் கலித்தொகைப் பாடல்களில் இடம்பெற்றுள்ள திறம் குறித்து இக்கட்டுரையில் ஆராயப்பெறுகிறது.

**படைப்பாக்க உத்திகள்**

படைப்பாளன் தனது கருத்தினைப் புலப்படுத்துவதற்குப் படைப்பில் மேற்கொள்ளப் பெறும் மொழிவழிச் செயல்நுட்பங்களே படைப்பாக்க உத்திகள் ஆகும். புலவரின் படைப்பாற்றல் அவர் ஆளும் உத்திகளின்வழியாக வெளிப்படுத்தப்படுகின்றது. படைப்பின் கருவும் உருவும் உத்திகளின் வழியாகப் பயில்வார் உள்ளத்தில் உணரவும் உணர்த்தவும் படுகின்றன. சிறந்த படைப்பாளர்கள் யாவரும் படைப்பு உத்திகளை நேர்த்தியாகப் பயன்படுத்தும் ஆளுமை கொண்டவர்களாக விளங்குவதனைக் காணலாம். சங்கப் பாடல்களில் கபிலர், பரணர், ஔவையார், பெருங்கடுங்கோ என இப்பட்டியல்நீளக் காணலாம். இவ்வாறு இவர்கள் தம் படைப்புப்பரப்பில் தலைசிறந்து விளங்குவதற்கு அவர்கள் தம் படைப்பில் மேற்கொண்ட படைப்பு உத்திகளே காரணம் என்பது அவர்களது படைப்புகளை உற்றுநோக்கின் தெளிவாகும்.

**பாலைத்திணை**

பாலைத்திணைக்குரிய உரிப்பொருள் பிரிதலும் பிரிதல் நிமித்தமும் ஆகும். அது மனித வாழ்வில் நேரும் பிரிவு நிலைப்பாட்டினையும், அவை ஏற்படுத்தும் உயிரியல் உணர்வு மாற்றங்களையும், இவற்றின்வழி வெளிப்படும் உறவுகளின் மேன்மைகளையும் காட்டுகின்றது. பிரிவுச்செய்திகளை உணர்த்துவதற்கும், உயிரினங்களின் அன்பு வாழ்க்கையைப் புலப்படுத்துவதற்கும் பாலைத்திணைப் பாடல்கள் பெருந்துணைபுரிகின்றன. மனித வாழ்வின் பொருளை உணர்வதற்கும், உணர்த்துவதற்கும் பாலைத்திணைப் பாடல்கள் பெருந்துணை செய்துள்ளமையாலும் புலவர்களின் வறுமைவயப்பட்ட வாழ்வியலை வெளிப்படுத்துவதற்கும் புலவர்கள் இத்திணையின்பால் மிகுந்த கவனம் செலுத்தியுள்ளனர் என்பது தெளிவு. சங்ககால மக்களின் அன்பின் உயர்வினையும், வாழ்க்கையின் முதிர்ந்த பொருளினையும் விளக்குவதற்குப் பாலைத்திணைப் பாடல்களைப் பயன்படுத்தியுள்ளார் பெருங்கடுங்கோ.

மனித வாழ்வில் பிரிவு நிலையானது. அது உயிரினங்களிடையே உறவின் அருமைப்பாட்டையும், உணர்வின் நிலைப்பாட்டினையும் உணர்வதற்கும் உணர்த்துவதற்கும் ஏற்படுத்தப்பட்ட திணையாகும். சங்கப் புலவர்கள் பிரிதலை உயிரினங்களிடையே அன்பினைப் போதிப்பதற்கும், சமயவாதிகள் நிலையாமை குறித்தான தத்துவ மரபினை ஏற்படுத்துவதற்கும், சான்றோர்கள் அறத்தை வலியுறுத்துவதற்கும் எடுத்தாண்டு கொண்டனர்.

**கலித்தொகை**

சங்கப் பனுவல்களில் காலத்தால் பிற்பட்டது கலித்தொகை என்பது ஆய்வாளர்களின் கருத்து. தொல்காப்பியர் குறிப்பிடும் கலிப்பாடல் யாப்பு மரபில் அமைந்தது இந்நூலாகும். இதில் இடம்பெறும் ஐந்து திணைகளையும் ஐந்து புலவர்கள் பாடிச்சிறப்பித்துள்ளனர். இதில் இடம்பெறும் பாலைத்திணைப் பாடல்களைப் பாடியவர் பெருங்கடுங்கோ ஆவார்.

**பெருங்கடுங்கோ**

சங்கப்புலவர்களில் பாலைத்திணை குறித்த பாடல்களை மிகுதியாகப் படைத்துள்ளதோடு மட்டுமல்லாது, பாலைத்திணைப் பாடல்களில் தனித்துவம் மிக்கவராகத் திகழ்கிறார் பெருங்கடுங்கோ. சேரவேந்தர்களில் ஒருவராகத் திகழ்ந்த சிறப்புக்கு உரியவர். பாலைத்திணைப் பாடல்களை இலக்கிய இன்பம் நல்கப் பாடிய காரணத்தினால் புலவர் பெருமக்களால் 'பாலைபாடிய பெருங்கடுங்கோ' என்று சிறப்பிக்கப்பட்டார். அவர் படைத்த பாலைக்கலிப் பாடல்களில் பாலைத்திணைப் படைப்பாக்க உத்திகளும் அதன்வழி வெளிப்படுத்தப்பெறும் இயற்கைச் சூழலியல் சிந்தனையும் ஆய்வுக்குரியனவாக அமைந்துள்ளன.

**படைப்பாக்க உத்திகள்**

பாலைத்திணைப் பாடல்கள் பிரிதலைப் பொருளாக்கியுள்ளதோடு, பிரிதல் நிகழும் களமான பாலை நிலத்தைக் காட்சிப்படுத்துவதில் மிகுந்த கவனம் செலுத்தியுள்ளன. மக்கள் தாங்கள் வாழும்

இடத்தில் வாழ்வதற்கு இயலாத சூழல் ஏற்படும்போது, தங்கள் வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளுக்காகப் புலம்பெயர்ந்து செல்ல முடிவெடுக்கின்றனர். இந்நிலையே சங்கத் தமிழகத்தில் பிரிவுப்பொருள் நிகழ்வதற்கான அடிப்படையாக அமைந்திருந்ததைச் சங்கப் பாடல்கள் காட்டுகின்றன. ஆதலால், தம் சொந்த மண்ணைவிட்டு அகன்று வேற்று நாட்டிற்குச் சென்று, அங்கு தங்கி, பொருளீட்டிப் பின்னர் தம் இடத்திற்கு வந்து வாழ்ந்த நிகழ்வுகளைச் சங்கப்பாடல்கள் வெகுவாக எடுத்துரைக்கின்றன. தலைவன் தலைவியை விடுத்து அயல் நாட்டிற்குச் செல்லவேண்டிய நிலைக்குத் தள்ளப்படும் வாழ்நிலை இப்பாடல்களின் அடிப்படைப் பொருளாக அமைந்துள்ளது. ஆதலால், பாலைத்திணைப் பாடல்களில் முதற்பொருளும் கருப்பொருளும் உரிப்பொருளும் மிக முக்கியமான இடத்தைப் பெறுகின்றன. பாலைநிலத்தின் தன்மைகளைப் புலப்படுத்துவதற்குப் பெருங்கடுங்கோ,

1. வழியின் வெம்மை காட்டுதல்
2. வழியின் கொடுமை காட்டுதல்
3. வாழ்வின் செம்மை காட்டுதல்
4. அறத்தை நிலைநிறுத்துதல்

என்னும் அமைப்பில் உத்திகளை ஆண்டு, அதனுள் பல நுட்பமான கருத்துருக்களையும், காட்சிப்புலப்படுத்தல்களையும், உணர்வுக்கூறுகளையும் ஆள்கிறார்.

**1.வழியின் வெம்மை காட்டுதல்**

எல்லாக் காலத்திலும் பொருளீட்டுவதற்காகக் கடல் கடந்தும், நிலம் கடந்தும் செல்வது மரபு. இலக்கிய மரபில் அது முதுவேனிற்காலத்தில் செல்வதாகக் காட்டப்பெறும். வேனிற்காலத்தில் செல்வது வாழிடச் சூழலைக் கருத்தில் கொண்டே ஆகும். ஒருகாலத்தில் நன்கு செழித்திருந்த குறிஞ்சியும் முல்லையும் தன் வளமை குன்றி, இயற்கைச் சீர்கேடு நிகழுமானால், இனியும் இந்த இயற்கையை நம்பிப் பிழைப்பது அரிது என்ற நிலையிலேயே தலைவன் வேற்றுப்புலத்திற்குச் செல்ல முடிவுசெய்கிறான். பாலைநிலத்தின் வெம்மைநிலம் சுரம் என்று புலவர்களால் குறிக்கப்பெறும். பாலைவழியே அச்சமானதாகவும் அந்நிலத்தில் வாழ்வோர்க்கு அச்சம் தருவதாகவும், அந்நிலத்தில் வாழும் உயிரினங்களுக்கு அச்சந்தரத்தக்கதாகவும், வழிச்செல்வோர்க்கு அச்சந் தரத்தக்கதாகவும் அமைந்திருக்கும். இவ்வச்சமே பாலை நிலத்தை நரக வழியாகக் காட்டுகிறது. இவ்வச்சத்தின் கொடுமையை வெளிக்காட்டுவதற்குப் புலவர்கள் தலைவன் பிரிந்து செல்லும் வழியின் வெம்மைத் தன்மையைக் காட்சிப்பொருளாகப் படைத்துக் காட்டுகின்றனர். பாலைநிலத்தின் வெம்மையைக் காட்சிப்படுத்துவதற்குப் பெருங்கடுங்கோ, கதிரவன் காய்தல், நீர்வறட்சி, காற்றின் தன்மை, விலங்குகளின் துயர் முதலான இயற்கை நிகழ்வுகளைப் பயன்படுத்திச் செய்யுளைப் படைத்துக் காட்டுகின்றார்.

**1.1.ஞாயிற்றின் வெம்மை**

வேனிற்காலத்தில் சூரியக்கோளுக்கு அருகில் பூமி இருப்பதால் அக்காலகட்டத்தில் வெப்பத்தின் தாக்கம் மிக அதிகமாகத் திகழ்கிறது. இதனால் சராசரியான வெப்பநிலை மிகுந்து உயிரினங்களும், தாவரங்களும் வாழ்வதற்கு அரிதான புவியியல் மாற்றங்கள் நிகழ்கின்றன.

பாலைநிலம் வெம்மை பொருந்தியதாய் இருப்பதற்குக் காரணம் அப்பகுதியில் பரவும் சூரியனின் வெப்பக்கதிர்வீச்சின் தன்மையே காரணம் ஆகும். இக்கதிர்வீசும் தன்மை, உயிரினங்களின் மீது பகை கொண்டவர்கள் செய்யும் கொடுமைபோன்று காட்சியளிப்பதாகக் காட்டுகிறார்.

“செல்கதிர் ஞாயிறு செயிர்சினஞ் சொரிதலின்” (கலி. 20:2)

அளவுக்கு அதிகமான வெப்பக்கதிர்களின் தாக்கம் நிலப்பரப்பில் வெம்மையை ஏற்படுத்துகிறது. இத்தகு வெம்மை சிவபெருமானின் ஒள்ளொளி முகம் போன்றும், நடுநிலை தவறுவோர் மீது செங்கோல் மன்னன் காட்டும் சினம்போன்றும் விளங்கியதாகக் காட்டுகிறார். சுரத்தின் வெம்மை காட்டுவதற்கு

"மடங்கல்போற் சினைஇ மாயஞ்செ யவுணரைக்
கடந்தடு முன்பொடு முக்கண்ணான் மூவெயிலும்
உடன்றக்கால் முகம்போல ஒண்கதிர் தெறுதலின்" (கலி. 2:1-3)

என்றும்,

"நடுவிகந் தொரீஇ நயனில்லான் வினைவாங்கக்
கொடிதேர்ந்த மன்னவன் கோல்போல் ஞாயிறு
கடுகுபு கதிர்மூட்டிக் காய்சினந் தெறுதலின்" (கலி. 8:1-3)

என்றும் உவமையாக்கிப் படைத்துக்காட்டியுள்ள திறம் போற்றத்தக்கதாக அமைந்திருக்கின்றது.

**1.2.நீர் வறட்சி**

கதிரவனின் வெம்மை காய்தல் காரணமாக நிலமானது தன்னியல்பில் திரிந்துபோனது. நிலத்தின் நீர்ப்பகுதிகளின் வறட்சியால் உயிரினங்கள் வாழ்வதற்கு இயலாதநிலை ஏற்பட்டது. இதனால் கயம், சுனை, அருவி இவைகள் நீரற்றுப் போயின. இதன் காரணமாகப் பாலைநிலம் வெம்மையானது. பாலை நிலத்தில் நீர் வற்றியதால் கதிரவனின் தாக்கம் மேலும் அதிகரிப்புக்கு உள்ளாகிறது.

"தளியுறு பறியாவே காடு" (கலி. 20:8)

"புயல் துளி மாறிய போக்கரு வெஞ்சுரம்" (கலி. 13:1)

**1.3.காற்றின் வெம்மை**

நிலமும் நீரும் குளிர்மையுடன் திகழும்போது வெளிப்படும் காற்று சுவாசிப்பதற்கு ஏற்றதாக உள்ளது. வெப்பமண்டலமாகிவிட்ட பாலைநிலத்தில் வீசும் காற்றும் வெம்மையாக உள்ளது. இவை உயிரினங்களின் உடலுக்கும் உள்ளத்திற்கும் ஏற்றதாக அமையவில்லை.

"முளியரில் பொத்திய முழங்கலிடை போழ்ந்த வளி" (கலி. 13:20)

**1.4.காற்றின் வெம்மையால் உயிரினங்கள் துயருறுதல்**

வேனிற்கால வெம்மையால் நிலனும், மரங்களும், விலங்குகளும், மனிதர்களும் துயருறுற்ற நிலையினை,

"பல்வளம் பகர்பூட்டும் பயனிலம் பைதறச்
செல்கதிர் ஞாயிறு செயிர்சினஞ் சொரிதலின்" (கலி. 20:1-2)

இதன்வழிச் சுட்டிக்காட்டி, உலக உயிரினங்களின் மீது ஞாயிறு சினம் கொண்டுவிட்டதோ என்று அச்சப்படும்படியாக ஞாயிற்றின் வெம்மை மிகுந்த நிலைப்பாட்டினை அறிவுறுத்துகிறார்.

ஞாயிறு பாலை நில உயிரினங்களின்மீது காட்டும் கொடுமைநிறைந்த வெயில், பகைவர் மீது தீராத சினம் கொண்ட வேந்தனது திறத்தினை ஒத்ததாய் விளங்கிய தன்மையினை,

"செருமிரு சினவேந்தன் சிவந்திறுத்த புலம்போல
எரிமேய்ந்த கரிவறல்" (கலி. 13:1-2)

என்றும், சூரியக்கதிர்களால் பூமிப்பரப்பிலுள்ள பொருள்கள் யாவும் அழல்போன்று வெம்மைப்படுத்தி நிற்பதனை,

"அடிதாங்கு மளவின்றி அழலன்ன வெம்மை" (கலி. 11:6)

என்றும் காட்டுவதன்வழி சூரியக்கதிர்கள் வேனிற்காலத்தில் நிலத்தின்மீது ஏற்படுத்தும் தாக்கங்களைக் காட்டுகின்றார். பண்டு செழித்தோங்கி வளர்ந்திருந்த மரங்கள் நிறைந்த காடு, தற்போது அழகொழிந்து கிடப்பதனை,

"வறியவ னிளமைபோல் வாடிய சினையவாய்ச்
சிறியவன் செல்வம்போற் சேர்ந்தார்க்கு நிழலின்றி
யார்கண்ணு மிகந்துசெய் திசைகெட்டா னிறுதிபோல்
வேரோடு மரம்வெம்ப விரிகதிர் தெறுதலின்
அலவுற்றுக் குடிகூவ ஆறின்றிப் பொருள்வெஃகிக்
கொலையஞ்சா வினைவராற் கோல்கோடி யவனிழல்
உலகுபோ லுலறிய உயர்மர வெஞ்சுரம்"(கலி. 10:1-8)

என்று காட்சிப்படுத்துகிறார். வறியவன் இளமை, சிறியவன் செல்வம், கொடுத்துப் பயன்பெறாதவன் உள்ளம்போல் இயற்கை மாற்றங்கள் மனிதவாழ்வில் ஏற்படுத்தும் தாக்கங்களை வெப்பத்தின் தாக்கத்திற்கு ஒத்ததாகக் காட்டியுள்ள திறம் அறியத்தக்கது. மக்களின் நிலையறியாது துன்புறுத்தும் மன்னனை ஒத்ததாய், கொலைத்தொழிலுக்கு அஞ்சாத, அறனில்லாத வேந்தனின் நிழலில் வாழும் மக்களின் நிலையினை ஒத்ததாய்க் காட்டியுள்ள திறம் சிந்திக்கத்தக்கது.

### 1.5.விலங்குகளின் துயர் நிறைந்த வாழ்க்கை

வேனிற்காலத்தில் உயிரினங்களின் பசித்துயரைத் தீர்ப்பவை பருகும் நீரே. தொடர்ச்சியான வேனிலின் தாக்கத்தால் ஆறுகளும், சுனைகளும் நீரற்றுப் பொய்த்துப் போயின. காட்டுநிலம் எங்கும் கானல்நீர்போல் காட்சித் தருகின்றது. நீர்வேட்கை காரணமாகத் தவிப்புக்குள்ளான விலங்குகள் கானல் நீரினை நீர்நிலையாகக் கருதி அங்குச் சென்று ஏமாற்றமடைகின்றன. இதனை கலித்தொகைப் (7:1-3; 13:7-9; 24:10-11) பாடல்களில் காட்டுகிறார்.

பாலைநிலத்தில் வாழும் மக்களும் விலங்குகளும் நீரின்றி வாடித் தவிப்புக்குள்ளாகும் நிலைப்பாட்டினை,

"வரையோங் கருஞ்சுரத் தாரிடைச் செல்வோர்
சுரையம்பு மூழ்கச் சுருங்கிப் புரையோர்தம்
உண்ணீர் வறப்பப் புலர்வாடு நாவிற்குத்
தண்ணீர் பெறாஅத் தடுமாற் றருந்துயரங்
கண்ணீர் நனைக்கும் கடுமைய காடு" (கலி. 6:1-6)

என்னும் பாடல்வழிப் புலப்படுத்துகிறார். 'தண்ணீரை வேண்டி நிற்பார்க்குக் கண்ணீரைத் துணையாக்கித் தரும் காடு' என்று காட்டும்திறம் நிலத்தின் தன்மையைக் காட்டுவதற்கும் புலவரின் படைப்பாக்கத்திறனுக்கும் தக்க சான்றாகும்.

## 2.வழியின் கொடுமை காட்டுதல்

மழை பொய்த்துப் போனதால் வளமையற்ற பாலைநிலம் வழிச்செல்வோர்க்கு அச்சந்தரத்தக்கதாக உள்ளது. உயிரினங்களிடையே அருளும் அன்பும் இரக்க உணர்வும் மறைந்து ஒருவர் துயரைப் பற்றி மற்றவர் கவலைகொள்ளாத நிலைக்குத் தள்ளப்படும் நிகழ்வு வழியின் கொடுமைப் பகுதியால் காட்டப்பெறுகிறது.

தலைவன் செல்லும் பாலைநிலக் காட்டுவழியின் கொடுமையினைக் கூறுவதற்குப் பெருங்கடுங்கோ, 1.வழியின் தன்மை, 2.விலங்குகள் ஒன்றோடொன்று போரிடுதல், 3.மறவர்களின் கொடுமை, 4.வழிக்கொலையை எதிர்நோக்கி அதனின்று பயன்பெறும் விலங்குகளின் செயல்கள் முதலான நிகழ்வுகளை எடுத்துக்கூறி காட்சிப்படுத்துகிறார்.

பாலைநிலம் வற்றிய மரங்களைக் கொண்டது என்பதால், அந்நிலப்பகுதியில் வாழும் விலங்குகளும் கொடுமை நிறைந்தனவாகவே காட்டப்படுகின்றன. மக்கள் நடமாடுவதற்கே அஞ்சுகின்ற

நிலமாக, “இனம் பிரியொருத்தல் ஆறுகடி கொள்ளும் வேறுபுலம்” (கலி. 21:2) என்னும் அடிகளில் காட்டுகின்றார்.

பாலைநிலத்தில் வாழும் யானைக்கூட்டங்கள், கதிரவனின் வெம்மையால் நீர் இன்றித் தவித்தலையும், மறவரும் யானைகளும் பொருதலும், யானைகள் செல்லும் நெறியறியாது தவிக்கும் நிலையினையும்

“....... அறுசுனை முற்றி
உடங்குநீர் வேட்ட உடம்புயங்கு யானை
கடுந்தாம் பதிபாங்குக் கைதெறப்பட்டு
வெறிநிரை வேறாகச் சார்ச்சார லோடி
நெறி மயக்குற்ற நிரம்பாநீ டத்தம்” (கலி. 12:3-7)

என்னும் அடிகளில் காட்டுகிறார். இவ்வாறு கொடுமைநிறைந்த விலங்குகள் வாழும் நிலமாகப் பாலைநிலம் காட்டப்படுகின்றது. அங்கு வாழும் மறவர்களின் அருளற்ற தன்மையினை,

“பொருள்கொண்டு புண்செயி னல்லதை யன்பொடு
அருள்புற மாறிய ஆரிடை யத்தம்” (கலி. 15:8-9)
... மறவர்தாங்
கொள்ளும் பொருளில ராயினும் வம்பலர்த்
துள்ளுநர்க் காண்மார் தொடர்ந்துயிர் வௌவலின்” (கலி. 4:2-4)

என்னும் பாடலடிகளில் எடுத்துரைக்கிறார்.

**3.செம்மை காட்டுதல்**

மனித வாழ்வில் வறுமையும் செம்மையும் வாழ்வின் பொருளை உணர்த்துவன. பல்வேறு கொடுமைகளும் அருளற்ற தன்மைகொண்ட மக்களும் வாழும் நிலமாகப் பாலைநிலம் காட்சிப்படுத்தப்படினும், அங்கு உயிரினங்களின் அன்புவாழ்க்கை பாலைப் பாடல்களின்வழி புலப்படுத்தப்படுகின்றது. மனித வாழ்க்கையின் பொருளை எடுத்துரைப்பதற்கான தக்க களமாகப் பாலைநிலம் அமைந்துள்ளது. இத்தகு வறட்சிகொண்ட பாலைநிலத்தில்தான் அன்பு ஊற்றெடுத்து உலகம் வாழ வழிசெய்கிறது.

பாலைநிலத்தில் அன்பு, களனாக அமைவதனைக் காட்சிப்படுத்துவதற்கு,

3.1.உயிரினங்களின் அன்புநிறை வாழ்க்கை

3.2.ஒன்றன் துன்பத்தை மற்றொன்று களைதல்

3.3.ஒன்றன் துயர்க்கு மற்றொன்று கலங்குதல்

என்னும் மூன்று உத்திகளைப் பயன்படுத்துகின்றார் பெருங்கடுங்கோ.

**3.1.உயிரினங்களின் அன்புநிலை வாழ்க்கை**

உணவுப்பொருள் கிடைக்காத கானகத்தில் தன் துணைக்குத் தேவையான உணவினைத் தேடியளிக்கும் விலங்கின் அன்பு வாழ்க்கை காட்டப்படுகிறது. ஏற்றின் பின்செல்லும் மானையும், பிணையினைத் தழுவி உறங்கும் இரலையையும் (கலி. 13:3-4; 20:41) என்னும் பாடலடிகளில் காட்டுகிறார்.

**3.2.ஒன்றன் துன்பத்தை மற்றொன்று களைதல்**

நீர்வறட்சி மிக்க பாலைநிலத்தில் கிடைக்கும் சிறியவாகிய நீரையும் முதலில் தன் துணைக்களித்துப் பின்னர் தானுண்ணும் காட்சியினை,

“துடியடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்

பிடியூட்டிப் பின்னுண்ணுங் களிறெனவு முரைத்தனரே” (கலி. 11:8-9)

என்னும் பாடலடிகளில் காட்டுகின்றார்.

**3.3.ஒன்றன் துயர்க்கு மற்றொன்று கலங்குதல்**

மரங்கள் வாடிப்போய் நிழலற்றுக் கவினிழந்து கிடக்கும் சுரத்தில் தன்னிழலைத் தந்து, தன் பெடையின் துயர் களையும் நிகழ்வினை,

“இன்னிழ லின்மையான் வருந்திய மடப்பிணைக்குத்

தன்னிழலைக் கொடுத்தளிக்கும் கலை.” (கலி. 11:16-17)

என்று காட்டுகின்றார். அவை அஃறிணைப் பொருட்கள் வழியாக மனிதர்க்கு உணர்த்தும் நிலை சிந்தித்தற்கு உரியது.

**4.அறத்தை நிலைநிறுத்துதல்**

சங்கப் பாடல்களின் திரண்ட கருத்தாக அமைவது வாழ்வியல் அறமே. வாழ்வியலின் ஒவ்வொரு நிலையிலும் அறம் பேணப்பட வேண்டும் என்பதே சங்கப்புலவர்களின் கருத்துரை. அவ்வகையில் உயிரினங்களிடையே அறத்தை நிலைநிறுத்துவதற்குப் பாலைத்திணைப் பாடல்கள் பெருந்துணை செய்துள்ளன.

பிரிந்து செல்லும் தலைவனைச் செலவழுங்குவிக்க முயலும் தோழி, பாலைநிலக் கொடுங்காட்சிகளைப் படமாகக் காட்டிப் பின்னர், தலைவியின் துயரநிலையினைக் கூறும்போது, நீ இத்தகைய அரிய பாலைநில வழியைக் கடந்துசெல்லுவதனை நினைந்து தலைவி துயருறுவாளே என்று குறிப்பால் உணர்த்துவாள். இதனை வெளிப்படுத்தும் விதத்தில், கலித்தொகையின் 11ஆம் பாடல் அமைந்துள்ளது.

பாலைநிலக் காட்டின் கொடுமையையும், அங்கு வாழும் விலங்குகளின் அன்பாற் கட்டுண்ட வாழ்க்கையினையும் முரண்பட அமைத்து, தலைவன் அன்பை வலியுறுத்தும் விதத்தில்,

“இன்பத்தி னிகந்தொரீஇ இலைதீந்த உலவையால்

துன்புறூஉந் தகையவே காடென்றா ரக்காட்டுள்

அன்புகொள் மடப்பெடை அசைஇய வருத்தத்தை

மென்சிறக ராலாற்றும் புறவெனவு முரைத்தனரே....

...இனைநல முடைய கானஞ் சென்றோர்

புனைநலம் வாட்டுந ரல்லர்” (கலி. 11)

என்று பாடலைப் புனைந்துரைத்துள்ளார் பெருங்கடுங்கோ.

இவ்வாறு காட்டின் கொடுமை-வெம்மை-செம்மை என்ற காட்சிகள் பாடற்பொருளுக்கு உத்திகளாகும் தன்மையில் பயன்படுத்தியுள்ளதைக் காணமுடிகிறது. வறண்டு பசுமையற்றதாய்க் கண்ணுக்கும் காட்சிக்கும் பொருளற்றதாக விளங்கும் பாலைநிலை வாழ்வின் பொருளை உணர்வதற்கேற்ற விதத்தில் படைப்பாக்க உத்திகளால் காட்டுவது சிறப்பு.

தலைவன் பிரிந்ததால் வாட்டமுற்ற தலைவியின் உடலின் மென்மையோடு, காட்டின் கடுமையை ஒன்றிணைத்துக் காட்டும் திறத்தினை,

“கிளிபுரை கிளவியாய்! நின்னடிக் கெளியவோ

தளியுறு பறியாவே காடெனக் கூறுவீர்

வளியினும் வரைநில்லா வாழும்நாள் நும்மாகத்து

அளியென உடையேன்யான் அவலங் கொண்டழிவலோ?" (கலி. 20:7-10)

என்னும் பாடலில் காணலாம். இப்பாடலடிகளில், வான்நீரற்றக் காட்டுவழியின் தன்மையோடு, தலைவனது அன்பு நீரற்ற நிலையையும் முரண்பட இணைத்துக் காட்டியுள்ள திறம் அறியத்தக்கதாகும்.

இச்செய்திகளால் அகக்காட்சிகளின் உணர்வு வெளிப்பாட்டிற்குப் பாலைநில வருணனை காட்சிப்பொருளாகவும், கருத்துப் பொருளாகவும் அமைந்துள்ளமை தெளிவாகிறது. பாடலில் அமையும் வருணனைக்கூறுகள் பாடலோடு இயைந்து ஒருமைநலம் பெற்று, பாலைத்திணைப் பாடல்களுக்குத் தனித்த சிறப்பினை ஏற்படுத்தித் தருகின்றன. பாடல்களின் பொருள்நலத்தோடு பொருந்தவருமாறு முதற்பொருளையும், கருப்பொருளையும், உரிப்பொருளையும் காட்டியுள்ள படைப்பாக்கத்திறம் சங்க அகப்பாடல்களின் தனிச்சிறப்பாகும். இந்த இணைப்பு நிலையினை மிகச்சிறப்பாகவும், நுண்ணோக்குத் திறனோடும் வாழ்வியல் களத்தோடும் பொருந்தவருமாறு பயன்படுத்தியுள்ளார் பெருங்கடுங்கோ. பாடல் அமையும் துறை, அதில் நிறைந்துள்ள உணர்வு, கூற்று நிலை இவற்றிற்கேற்ப வருணனை அமைதல் வேண்டும் எனும் படைப்பாக்க மரபு பெருங்கடுங்கோ பாடல்களில் பொருந்திவரும் திறன் இதன்வழி தெளிவுறுத்தப்பட்டது.

பாலைநிலத்தின் வெம்மையையும், சுரத்தின் கொடுமையையும், விலங்குகளின் துன்புறு வாழ்க்கையினையும், அவற்றினிடையே கடந்து செல்லும் தலைவனது மனநிலையினையும் எடுத்துக்காட்டி, இவற்றினிடையே உயிரினங்களின் அன்புசெறிந்த வாழ்க்கையினைப் பாடல்களாக்கிக் காட்டியுள்ளார் பெருங்கடுங்கோ.

பெருங்கடுங்கோவின் பாலைத்திணைப் பாடல்கள் தனிநிலை ஆய்வுக்குரிய பொருளாகும். அவர் பாலைநிலத்தைக் காட்டுவதற்குப் பயன்படுத்தும் உவமைகள் அதன்வழி உணர்த்தப்படும் சமூகப் பின்புலம் தனிஆய்வுக்குரியதாகும். பெருங்கடுங்கோவின் படைப்பாக்க உத்திகள் மேலாய்வுக்கு உரியன என்பது இதன்வழி பெறப்படுகிறது.

**துணைநூல்**

❖ விசுவநாதன் அ., 2004, **கலித்தொகை**, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் பி.லிட்., சென்னை.

-----------------

மதிப்பிடப்பெற்றது

# சங்கப் பாடல்களில் கூற்றும் கதைசொல்லியின் குரலும்

## sanga padalkalil kootrum kathaicholliyin kuralum (Narrator voice)

முனைவர் ஆ.சந்திரன்
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி)
திருப்பத்தூர், வேலூர்
செல் - 9344495413

Dr A.Chandiran
Assistant professor, Department of Tamil
Sacred Heart College, Tirupattur, Vellore
chandran@shctpt.edu

**Abstract:** Sangam Literature in general expresses us the emotions of the poets. Sangam poetry is subjective, because it expresses the emotions and feeling of the poets. Poems, during the age are divided on the basics of agam, puram, thinai. thurai, kootru. Here we talk exclusively about kootru (narration). There are no authorial narrations but narrations of characters. The narration has already been handled by our poets. Appling tamizhiyavans modern's concept of narrator's voice (kathai cholliyin kural) to sangam poems change the narration sometimes from thalaivi to tholi. The title of **sangapadalkalil kootrum / kathaicholliyin kuralum (Narrator voice)** is discusses kootru arrangements and similar issues.

**Keywords:** sangapadalkalil kootrum, kathaicholliyin kuralum, tamizhiyavans, Narrator voice, பண்டைக்கால, அகம் - புறம், திணை - துறை, கூற்று.

பண்டைக்காலப் புலவர்களின் உணர்வின் வெளிப்பாடுகளை நமக்கு உணர்த்தி நிற்பவை சங்கப் பாடல்கள். ஏறக்குறைய ஐந்நூறு அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுகால அளவில் பரந்து விரிந்த தமிழ் நிலப்பரப்பில் புலவர்களின் தன்னுணர்ச்சிப் பாக்களாக உருவான அப்பாடல்கள் பின்னர், அகம் - புறம், திணை - துறை, கூற்று என்று பல நிலைகளில் பகுத்துத் தொகுக்கப்பட்டுள்ளன. புறப்பாடல்களில் கூற்று என்பது புலவர் பெயரால் அமைகிறது. ஆனால் அகப்பாடல்கள் கூற்று என்று வரும்போது தலைவன், தலைவி, தோழி என்று கற்பனைப் பாத்திரத்தின் பொதுப்பெயராக அமைகிறது. இங்குக் கவனிக்கவேண்டிய அம்சம் ஒன்று உண்டு. அது அகப்பாடல் பற்றியது. அதாவது அகப்பாடல்கள் புறப்பாடல்கள்போல் புலவர்களால் பாடப்பட்டிருந்தாலும் பாடலைப் பாடியவராகத் தலைவனோ, தலைவியோ, தோழியோ அல்லது வேறு ஏதோ ஒரு பாத்திரமாகவோ கருதப்படுகிறது. அதாவது பாடலாசிரியன் வேறு - பாடலில் வெளிப்படும் குரல் வேறு என இது அமைகிறது.

பாடப்பட்டுள்ள பாடல்களின் சில அடையாளங்களைக் கொண்டுதான் இது தலைவன் குரல், இது தோழி குரல், இது தலைவி குரல் என்று இனங்காண முடிகிறது. இத்தகைய ஒரு சிந்தனை பல நூறு ஆண்டுகளுக்கு முன்னரே நம் முன்னோர் கொண்டிருப்பது வியப்பான ஒன்று. என்றாலும், அவ்வாறு அவர்கள் வகுத்துச் சென்ற கூற்று என்ற வரையறை அனைத்தும் சரியாக அமைந்துள்ளனவா? அவற்றில் மாற்றம் செய்ய இடமுள்ளதா? மாற்றம் செய்ய வேண்டிய தேவை

உள்ளதா? என்பன போன்ற கேள்விகளை இன்று சிலர் எழுப்புகின்றனர். அப்பாடல்களின் நுட்பமான பொருளை அறிந்தால் இம்மாதிரியான கேள்விகளுக்குப் பதில்சொல்ல முடியும்.

“கதைசொல்லியின் குரல்” என்ற புதிய சிந்தனை பாடலின் நுட்பப் பொருளை அறிய உதவும் என நம்பலாம்.

“கதைசொல்லியின் குரல்” என்ற சிந்தனையை முன்நிறுத்திச் சங்கப் பாடல்களை வாசிக்கும் முயற்சி இதுவரை நடந்ததாகத் தெரியவில்லை. ஆனால் சிவத்தம்பியின் சில கருத்துகள் இம்மாதிரியான அடையாளக் குரலைக் காண முடியும் என்பதற்கு வழிகாட்டியாக அமைகிறது.

புறநானூற்றுப் பாடலின் கதையாடலைக் கட்டவிழ்க்கும் அவர் *“மாவாராதே மாவாராதே எனும் பாடலில் வரும் சோகம் பற்றியோ, கைம்மை காரணமாகச் சாணி மெழுகிய நிலத்தில் போடப்பெற்ற வீரன் ஒருவனின் உடலை எரிப்பதா புதைப்பதா எனக் கேட்கப்பெறும் வினாவின் உக்கிரத்தையோ அன்றேல் ‘துடியன், கடம்பன் பாணன் பறையனென்று இந்நான்கல்லது குடியுமில்லை‘ என்ற பாடலில் காணப்படுகின்ற புதிய மரபு நிராகரிப்பையோ நன்கு விளங்கிக் கொண்டவர்களாக மாட்டோம். புறத்திணை பற்றி விதந்துரைக்கப்படாத பல அம்சங்கள் புறநானூறு ஏறத்தாழ 250ஆவது பாடலுக்குப் பின்னரே பெரும்பாலும் காணப்படுகின்றன”* (தமிழின் கவிதையியல். பக்:12,13)

என்று கூறும் சிவத்தம்பி, தலைவனின் பிரிவால் வாடும் பெண்ணின் அங்கலாய்ப்பாய் அமையும் அப்பாடல் புறத்தில் சேர்க்கப்பட்டுள்ளதாகக் கூறுகிறார். அத்துடன், குறிஞ்சிப்பாட்டின் தோழி வெளிப்படுத்தும் (குறிஞ்.பா.26-29) கருத்தை ஐயப்படும் அவர், *“சங்க அகமரபைப் போன்று இல்லாமல் பிற்கால கோவை இலக்கியங்களில் வரும் தோழி பேசுவது போல் அக்கருத்து அமைவதாகக்”* (தொல்காப்பியமும் கவிதையியலும், பக்: 23, 24) குற்றம் சாட்டுகிறார். இவ்விரு கருத்துகளும் அவருடைய நுட்பமான வாசிப்பின் வெளிப்பாட்டால் உருவானவை. இவை பாடலின் கருத்தோ அல்லது கதாசிரியன் கருத்தோ அல்ல. இவை கதைசொல்லியின் குரலை அடையாளங் கண்டுகொண்டதால் உருவான கருத்து. அதனால் கதைசொல்லியின் குரல் என்ற சிந்தனையை அவர் முன்வைத்தார் என்பது அல்ல இங்குப் பொருள். அச்சிந்தனையைத் தமிழ் இலக்கியத்தில் பரிசோதித்தவர் தமிழவன். அதே நேரம் சிவத்தம்பியிடம் அப்படிப்பட்ட சிந்தனை இருந்துள்ளது என்பதும் இங்குக் கவனிக்கத்தக்கது.

சங்கப்பாடல்கள் அனைத்தையும் இந்தக் கோணத்தில் ஆராய்ந்தால் அகம் - புறம் என்பதைத் தாண்டிய தனிமனித உணர்வுகள் பலவற்றை வெளிக்கொணர முடியும். எட்டுத்தொகையில் இடம்பெற்றுள்ள அகப்பாடல்கள் சிலவற்றை எடுத்துக்கொண்டு அவற்றின் அடையாளக் குரல் - அது முன் வைக்கும் கருத்து ஆகியவற்றை விளக்க முயல்கின்றது இந்த எழுத்துரை.

நற்றிணை 124ஆம் பாடல், தன்னுடைய துணை பிரிந்தபோது வருந்தும் அன்றில் பறவை போன்ற தனிமைத்துயர் தரும் பருவம் இது. எனவே இப்போது நீங்கள் என்னை விட்டுப் பிரிந்து செல்ல வேண்டாம் என்ற பொருளைத் தருகிறது. ஆனால் “பிரிவுணர்த்தப் பட்ட தோழி தலைவற்கு உரைத்தது” என்று இப்பாடலுக்குக் கூற்று வரையறுக்கப்பட்டுள்ளது. இது பொருத்தமுடையதாகத் தோன்றவில்லை.

பொதுவாகத் தலைவன் கார்காலத்தின் தொடக்கத்தில் வருவேன் என்று கூறிச் செல்வான். தலைவி அப்பருவம் வரும்வரை ஆற்றியிருப்பாள். கார்காலம் வந்தும் அவன் வரத்

தாமதமானால் வருந்துவாள். முல்லை மலர் அவள் வாட்டத்தை அதிகரிக்கும். வாடைத் துயர் அவளை அதிகம் வாட்டும். இவ்வாறு பிரிவு பற்றிய பாடல்கள் அமையும். ஆனால் இப்பாடலில் தலைவன் பிரியக் கருதிய காலம் தலைவியின் ஆற்றாமையை அதிகரிக்கும் கூதிர்ப் பருவம். அதாவது, தலைவன் திரும்பி வரவேண்டிய பருவத்தில் பிரியக் கருதுகிறான். அவ்வாறான சூழலைத்தான் பாடல் புலப்படுத்துகிறது. அப்பாடலின் விளக்கம் வருமாறு:

> ''*தன் துணை பிரிந்த காலத்து மற்றோர் அன்றிற்பறவை ஆற்றாது இறந்துபடுதல் போலத் தனிமையுற்று இருக்கும் துன்பமான வாழ்வினை யானும் ஆற்றவியலாது இருக்கும் தன்மையானேன். ஈங்கையின் அரும்பும், மல்லிகை மலரும் உயர்ந்த மணலால் அமைந்த திடலில் உதிர்கின்றன. மான்கள் வன்மையான குளம்புகளினால் மிதித்து அழுத்துகையினால், வெள்ளியை உருக்கிச் சாய்க்கும் கொள்கலத்தை ஒத்து வடியும் தெளிந்த நீர்க்குமிழியையுடைய தண்ணீரைப் பெற்றதாகக் கூதிர்ப்பருவம் வந்துவிட்டது. இப்பருவமே யான் ஆற்றாதிருப்பதற்குக் காரணம் ஆகும். ஆதலின் ஐயனே! என்னை விட்டு நீங்காது இருப்பாயாக. நீ நெடுங்காலம் வாழ்வாயாக!*'' (நற். 124)

மேற்கண்ட பாடலில் ''புன்கண் வாழ்க்கை''- ''யானும் ஆற்றேன்'' ''அதுதான் வந்தது'' என்பன தலைவியின் துன்பத்தை வெளிப்படுத்துகின்றன. அதாவது தலைவனின் பிரிவைத் தாங்க இயலாமல் தவிக்கும் தலைவியின் குரல் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. ஆக இப்பாடல் தலைவி கூற்றுப் பாடல் என்று கொள்வதே சரியாக இருக்கும்.

அடுத்து நற்றிணை 132ஆம் பாடல். ''*பெரிதாய் விளங்கும் இவ்வூரின்கண் உள்ள யாவரும் துயில்கின்றனர். விழித்திருப்பவர் என ஒருவரும் இல்லை*'' (நற்.132-1) என்று தொடங்கும் இப்பாடல், அதன் பிறகு மழைப்பொழிவு, ஊரில் இரவு வேளையில் புரியும் கடுங்காவல் பற்றி விவரிக்கிறது. அவ்வாறு இரவு முழுவதும் காவல் கடுமையாக இருப்பதால் தலைவி தலைவனைச் சந்திக்க வாய்ப்பில்லாமல் போகிறது. அதனால் அவள் ''இன்றுகொல் அளியேன் பொன்றும் நாளோ'' (நற்132-11) என்று புலம்புகின்றாள் என்று முடிகிறது. இப்பாடலில் தோழி பற்றிய குறிப்பு இல்லை. தோழியிடம் தலைவி பேசுவதாகப் பொருள்கொள்ளவும் இடமில்லை என்பது பாடலில் தெளிவாகப் புலப்படுகின்றது. அப்படி இருக்க இப்பாடல் தோழி கூற்றுப்பாடல் என்று கூற்று வரையறை செய்யப்பட்டுள்ளது.

நற்றிணை 36ஆம் பாடல் ''இரவுக்குறி - சிறைப்புறமாகத் தோழி சொல்லியது'' என்று கூற்று வரையறுக்கப்பட்டுள்ளது.

குறுங்கை இரும்புலிக் கோள்வல் ஏற்றை,
பூநுதல் இரும்பிடி புலம்ப, தாக்கி,
தாழ்நீர் நனந்தலைப் பொருகளிறு அடூஉம்
கல்லக வெற்பன் சொல்லின் தேறி,
யாம்எம் நலன்இழந் தனமே; யாமத்து
அலர்வாய்ப் பெண்டிர் அம்பலொடு ஒன்றி,
புரைஇல் தீமொழி பயிற்றிய உரைஎடுத்து,
ஆனாக் கௌவைத்து ஆக,
தான்என் இழந்தது, இவ்அழுங்கல் ஊரே! (நற். 36)

இப்பாடல் தோழி கூற்றுப் பாடல் என்று கொள்ள இடமளிப்பதாகத் தெரியவில்லை. "*தலைவனின் சொல்லை நம்பி யாம் எம் நலனை இழந்தோம்*" (நற்.36) என்று வருந்தும் தலைவி "*இவ்வூர் எதை இழந்தது இப்படி என்னைப் பழி கூறிக் கொண்டுள்ளது*" (நற்.36) என்று புலம்புகிறாள். இது பாடலில் தெளிவாக உள்ளது. அப்படியிருக்க இது எவ்வாறு தோழி கூற்றாக அமையும் என்பது கேள்விக்குறி?

ஆனால் "தலைவன் இரவுக்குறியிடத்தே வந்து நிற்க, அதனை அறிந்த தோழி அவன் விரைவில் வரைந்து கொள்ளுதல் வேண்டித் "தலைவனின் சொல்லை நம்பி யாம் எம் நலனை இழந்தோம். ஊர் அலர் தூற்றுகிறது. எம்மைப் போல் இந்த ஊரும் துயிலாது அமைய எதனை இழந்தது" என்று கூறுமுகத்தால் "ஊர் உம்மைக் கண்டு கொள்ளும். எனவே வரைந்து கொள்க" என்று வற்புறுத்துவதாகக் கூற்றுவிளக்கம் வலிந்து கூறுவதாகத் தோன்றுகிறது.

தலைவனை அடைய இயலாது தவிக்கும் தலைவியின் உள்ளக் குமுறல் என்பதுதான் இப்பாடல் தரும் பொருள். அப்படி வாசிக்கப் பொருள் தெளிவாகும் நிலையில் வலிந்து பொருள் கொள்ள வேண்டுமா என்பது சிந்திக்க வேண்டியதே! இவ்வாறு கூற்று முறையில் மாற்றம் கோரி நிற்கின்ற பாடல்கள் பல இந்நூலில் உள்ளன.

**கதைசொல்லியின் குரல் முன்வைக்கும் கருத்துகள் சில**

"பூவின் அன்ன நலம்புதிது உண்டு
நீபுணர்ந் தனையேம் அன்மையின் யாமே
நேர்புடை நெஞ்சம் தாங்கத் தாங்கி
மாசுஇல் கற்பின் மடவோள் குழவி
பேஎய் வாங்கக் கைவிட்டாங்கு
சேணும் எம்மொடு வந்த
நாணும் விட்டோம் அலர்கஇவ் ஊரே" (நற்.15)

தலைவியின் நலத்தைக் களவில் நுகர்ந்தான் எனினும் வரைவுக்கு அவன் உடம்படவில்லை என்ற தன் மனவருத்தத்தை வெளிப்படுத்துவதாக அமைகிறது இப்பாடல். இது தலைவனால் ஏமாற்றப்பட்ட ஒரு தலைவியின் ஆதங்கத்தின் வெளிப்பாடு. அப்படி இருக்க இப்பாடல் தோழி கூறுவதாக இதற்குக் கூற்று வரையறுக்கப்பட்டுள்ளது. ஒரு பெண்ணின் ஆதங்கக் குரலாக வெளிப்படையாகத் தெரியும் இது ஆய்வுக்குரிய ஒன்று.

அதேவேளையில் காதலிப்பதற்கு முன்பு ஆணின் பண்புகளை ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்ற சிந்தனையையும் இக்குரல் முன்வைக்கிறது. பெண்ணைக் காதலித்து, பின் கைவிடும் செயல் அக்காலத்தில் இருந்துள்ளதை இது வெளிப்படுத்துகிறது.

அகநானூற்றுப் பாடலில் தோழியின் குரலாக வெளிப்படும் கதைசொல்லியின் குரல் இக்கருத்தை வெளிப்படையாகவே கூறுகிறது. "*நெறி தவறிய அறமிலி ஒருவன் இளம்பெண் ஒருத்தியின் அழகிய பெண்மை நலத்தைக் கவர்ந்து கொண்டான். பின்னர் அவளை அறியேன் என்று அறவோர் முன்னர் அறமற்ற பொய்ச்சூளும் உரைத்தான். அவர் தம் சேர்க்கையை அறிந்தார்வாய்க் கேட்டறிந்த அவையத்தார், அவன் செய்த அடாச்செயலை உண்மையெனத் தெளிந்து, தளிர்கள் கொண்ட பெரிய மரத்தின் கவர்த்த கிளையில் அவனை இறுகக் கட்டி வைத்து அவன் தலையில் நீற்றினைப் பெய்தனர்*" (அகம். 256.13 - 21).

இப்பாடலில் நாம் கவனிக்க வேண்டிய முக்கியமான மற்றொரு அம்சம் இந்தச் செய்தி பரத்தையருடன் தலைவன் நீராடியபோது எழுந்த அலருக்கு உவமையாகத் தோழியால் கூறப்பட்டுள்ளது. திருமணம் செய்துகொள்ள மாட்டேன் என்று மறுப்பவனுக்குத் தண்டனை வழங்கப்படும். ஆனால் பெண்ணைத் திருமணம் செய்துகொண்டு பரத்தையர் எத்தனைப் பேருடன் வேண்டுமானாலும் மகிழ்ச்சியாக இருக்கலாம். இது அக்காலச் சமூக முரண்பாட்டை நமக்கு உணர்த்துகிறது. [வழக்கமாகப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் தமிழாசிரியர்கள் கூறும் ‘‘பண்டைத் தமிழர் வாழ்வு ஒருவனுக்கு ஒருத்தி என அமைந்திருந்தது’’ என்ற கூற்றை இது மறுக்கிறது].

இவ்வாறு பெண்ணின் ஆதங்கம் அகப்பாடல்கள் பலவற்றில் வெளிப்படுவதைக் காணமுடிகிறது. அவ்வாறான பாடல்கள் சிலவற்றைக் காண்போம்.

*‘‘காட்டில் உள்ள மயிலானது பாறையில் ஈன்ற முட்டைகளைக் கருங்குரங்கின் விளையாடும் குட்டிகள் உருட்டி விளையாடும் குன்றுகளையுடைய நாடன்’’* (குறு.38) என்று தலைவியின் குரலாக வெளிப்படும் கதைசொல்லி, பெண்ணின் (தலைவியின்) நெஞ்சம் பற்றி அறியாமல் அவளை ஒரு போகப்பொருளாக மட்டும் பார்க்கிறான் ஆண் (தலைவன்) என்ற கருத்தை வெளிப்படுத்துகிறது. குரங்கு உயிருள்ள முட்டையைக் கல்லாக நினைத்து விளையாடுவதுபோல ஆண் பெண்ணின் உடலை நினைக்கிறான். தனக்கும் மனம் உண்டு. அதில் ஆசைகள், ஏக்கங்கள் உண்டு. அவற்றைப் பற்றியெல்லாம் கவலை கொள்ளாமல் தன் உடலை மட்டும் விரும்புகின்ற ஆணின் சுயநலச் சிந்தனையைத் தோலுரித்துக் காட்டுகிறது இந்தப் பெண்ணின் குரல்.

குரங்கின் பண்பை வைத்துச் சமூகத்தின் இன்னொரு பண்பினை வெளிப்படுத்துகிறது மற்றொரு பாடல். அப்பாடல் குறுந்தொகை 69ஆம் பாடல். *‘‘இருளில் தாவுதலையுடைய ஆண்குரங்கு இறந்துவிட்டது. கணவனை இழந்து வருந்தும் பெண்குரங்கு கைம்மை வாழ்வினை விரும்பவில்லை. தலைவனைப் போன்ற தொழிலை இன்னும் கற்காத தன் குட்டியைச் சுற்றத்தவரிடம் ஒப்படைத்துவிட்டு உயரந்த மலைச்சிகரத்திலிருந்து விழுந்து இறந்துபோனது’’*(குறு.69) என்று வெளிப்படும் கதைசொல்லியின் குரல் கவனிக்கத்தக்கது. ‘‘தாவுதலைத் தன்குட்டி கற்கவில்லை. ஆனால் அதன் தந்தை அதைக் கற்றிருந்தது. அதனால் அது இறந்தது. தான் கைம்மை நிலைக்குத் தள்ளப்பட்டதால் இனி நான் வாழத் தயாரில்லை. எனவே என் குட்டியை அதன் தந்தையைப் போல் வளர்க்க வேண்டாம் என்று கூறி உயிர் துறக்கிறது.

இப்பாடலில் கூறப்படும் கருங்குரங்கு என்பதை ஆணின் குறியீடாகக் கொள்ள இடமுள்ளது. இப்படிக் கொண்டால், மந்தி என்பது பெண்ணைக் குறிக்கிறது. குட்டி குழந்தையைக் குறிக்கிறது. இப்படிக் கொண்டால் இப்பாடல் ஆணால் கைவிடப்பட்ட பெண் தன் குழந்தையை நல்லமுறையில்(தந்தையைப் போல் அல்லாமல்) வளர்க்குமாறு கூறி இறந்துபோவது இயல்பாக நடைபெற்றுள்ளதை அறிய முடிகிறது. இவ்வாறு கணவனால் ஏமாற்றப்பட்ட பெண்கள் வயிற்றிலிருந்த தம் குழந்தை பிறக்கும்வரை அவர்களுக்காக உயிர் வாழ்ந்தனர் என்பதும், அக்குழந்தைகளின் எதிர்காலத்தை உறுதிசெய்த பின்னர் தம் உயிரைத் துறந்தனர் என்பதும் புலனாகிறது. இது அச்சமூகத்தில் நிலவிய ஒன்றாக விளங்கிக்கொள்ள முடிகிறது.

இதுமாதிரியான நிகழ்வுகள் நடைபெற்றுள்ளதை மற்றொரு குறுந்தொகைப் பாடலும் கூறுகிறது. *‘‘தலைவியின் நோய்க்குக் காரணம் குறிஞ்சிநிலத் தலைவன் தகுதியில்லாதவன் போலக் கட்டுவிச்சி, இது தெய்வத்தால் வந்தது என்று தீமை பயக்கும் மொழிகளை*

*உரைத்தாள்…. வலிய குட்டியின் தந்தையாகிய கடுவனும் அக்கொடிய தலைவனை அறியும். அது தன் கண்களால் கண்ட நிகழ்ச்சியைக் கண்டிலேன் எனப் பொய் கூறாது''* (குறு.26) என்று தோழியின் குரலாக வெளிப்படும் கதைசொல்லி ஆணின் தகுதி, பெண்ணின் துயரம் பற்றிய பதிவுகளை நமக்குத் தருகிறது. இப்பாடலில் கூறப்படும் ஆண் பெண்ணுக்குத் தகுதியில்லாதவன். அதனால் குறிசொல்லும் பெண் இது தெய்வத்தால் வந்தது என்று பொய் சொன்னாள் என்கிறது கதைசொல்லி. அடுத்து அவர்களுடைய காதலை அறிந்தது ஒரு குரங்கு. அதனால் ''இவ்விருவரும் காதலித்தார்கள்'' என்று கூறமுடியாது. எனவே தலைவியின் வேதனை அவள் உள்ளத்தை வருத்திக்கொண்டுள்ளது. வருந்துவதைத் தவிர அவளால் வேறென்ன செய்யமுடியும்?

''கதைசொல்லியின் குரல் என்ற அடையாளத்தைக் கொண்டு சங்கப்பாடல்களை வாசிக்கும் போது இவ்வாறு பல புதிய செய்திகளை அறியமுடியும். அத்துடன் வரையறை செய்துள்ள கூற்று என்ற அமைப்பில் மாற்றங்களைக் கொண்டுவர முடியும். அகம் என்ற போர்வையில் மறைந்திருக்கும் பல உண்மைகளை மீட்டெடுக்க முடியும் என்று எதிர்பார்க்கலாம்.

அடுத்து நாம் கவனிக்கவேண்டிய ஒன்று குழந்தை பேய் என்ற வெளிப்பாடுகள். *''குழந்தையைக் கவர்ந்து கொண்ட பேயை என்ன செய்யமுடியும்? அதுவாக வந்து கொடுத்தால் தான் உண்டு. இல்லையென்றால் போனது போனதுதான் என்று விட்டு விடவேண்டியதுதான்''.* அதைத்தவிர வேறேதும் செய்யமுடியாது என்று வெளிப்படும் கதைசொல்லியின் குரல் அகமரபை விட்டு வெளியேறிய நிலையைக் காட்டுவதாக உள்ளது. அதாவது இனி தன்னால் எதுவும் செய்ய இயலாது என்று காதலனால் ஏமாற்றப்பட்ட பெண்ணின் அவலத்தை இது புலப்படுத்துகிறது.

*''தலைவனே! நேற்று உன்னோடு தங்கி உறங்கியவள்…. பூந்துகள் கமழும் கூந்தல் விளங்கிய வகையில் அசையுமாறும், இடையிற் கட்டிய உடை சரியவும், நெருங்கிய வளை ஒலிக்கவும் கண்ணால் பெயர்த்து நோக்கியபடி எமது தெருவில் சென்றாள்… அவள் உன்னுடைய தழுவலிலிருந்து நீங்கி எமது தெருவில் சென்றாள். அத்தகைய இளம் பருவமுடைய பரத்தையை நான் கண்டேன். அவள் உன்னோடு நீடு வாழ்வாளாக''* (நற்.20) என்ற கதைசொல்லியின் குரல் இங்குக் கவனிக்கத்தக்கது. தன்னைவிட்டு நீங்கினாலும் பரவாயில்லை. நீ விரும்பிய - உன்னை விரும்பிய இளம்பெண்ணிடமாவது நீ சேர்ந்துவாழ் என்று தன்னைப் போன்ற வேறொரு பெண்ணுக்காகத் தன் வாழ்வைத் தியாகம் செய்யத் தயாரக இருக்கும் பெண்ணின் பண்பையும், ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களுடன் உறவு கொள்ளும் ஆணின் பண்பையும் விளக்குகிறது இப்பாடல். பாடல் இவ்வாறு பொருள் தர, ''பரத்தையரோடு இருந்து மீண்டவன் 'யாரையும் அறியேன்' என்று கூற, அதற்குப் பதில் கூறுவதாக இப்பாடல் அமைகிறது என்றும் தோழி வாயில் மறுத்தது என்றும்'' இதற்கு வகுக்கப்பட்டுள்ள துறை வரையறை மறுபரிசீலனைக்கு உரியது.

இவ்வாறு கதைசொல்லியின் குரல் என்ற அடையாளத்தைக் கொண்டு சங்கப்பாடல்களை வாசிக்கும்போது பாடலின் பின்புலத்திலுள்ள செய்திகளை நன்கு அறிய முடியும். அத்துடன், வரையறை செய்துள்ள ''கூற்று'' என்ற அமைப்பில் மாற்றங்களைக் கொண்டுவர முடியும். அகம் என்ற போர்வையில் மறைந்திருக்கும் மக்களின் வாழ்வியல் உளப்பாங்கை மீட்டெடுக்க முடியும்.

**துணைநின்றவை**


- சந்திரன் ஆ., 2018, “சங்கப் பாடல்களும் கதைசொல்லியின் குரலும்”, புதிய அவையம் மின்னிதழ், http://shcpub.edu.in/shc/publish_paper/?name=Puthiya+Aaviayam
- ………… 2016, “மாதொரு பாகன் - கதைசொல்லியின் குரல்”, சிற்றேடு (தமிழ்) காலாண்டிதழ், volume - 2 issue : 5 பக்.45-48.
- சிவத்தம்பி கா, 2007, **தமிழின் கவிதையியல்**, குமரன் புத்தக இல்லம், சென்னை.
- ……………., 2007, **தொல்காப்பியமும் கவிதையியலும்**, குமரன் புத்தக இல்லம், சென்னை.
- செயபால் இரா., 2004(மு.ப.), **அகநானூறு மூலமும் உரையும்,** நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
- தமிழவன், 2008, **அமைப்பியலும் அதன் பிறகும்** (ஸ்ட்ரக்சுரலிசம் நூலின் விரிவாக்கப்பட்ட பதிப்பு), அடையாளம், 1205/1, கருப்பூர் சாலை, புத்தாநத்தம், திருச்சி.
- …………,2009, **பழந்தமிழ் அமைப்பியல் மற்றும் குறியியல் ஆய்வுகள்,** உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை.
- நாகராசன் வி., 2004(மு.ப.), **குறுந்தொகை மூலமும் உரையும்,** நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
- பாலசுப்பிரமணியன் கு.வெ., 2004(மு.ப.), **நற்றிணை மூலமும் உரையும்**, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
- முத்தையன் ஆ., 2016, “நடனக்காரியான 35வயது எழுத்தாளர்”, சிற்றேடு (தமிழ்) காலாண்டிதழ், volume 3 issue 2, பக் 36-39.
- மோகன் இரா., 2004(மு.ப.), **பத்துப்பாட்டு மூலமும் உரையும்,** நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

மதிப்பிடப்பெற்றது

# முல்லைப்பாட்டில் இனவரைவியல் பதிவுகளும் ஆயர் பண்பாட்டு மரபுகளும்

## Ethnography records and pastoral cultural traditions in Mullaippattu

**முனைவர் ஆ.அருணாசலம்**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
பெரியார் அரசு கலைக் கல்லூரி, கடலூர்
9894154523, arounatamil@gmail.com

**Abstract:** This article examines the internal life styles of sheperd's in Mullaippattu. It difine that Mullaippattu is included the ethnic life of sheperds. It has a collection of practices, rituals, war patterns, economical backrounds and the culture of the sheperds. These are the ethnic concepts of their life. The study of this article concludes the following concepts. 1.The Oman of Mullaipattu is shown as the main ritual Sheperd's culture. 2.Most often of rituals and the omens are act as diverision of women's suffering andworries. 3.Shepherds are separated the main cause of the war and economic sectors. But they obviosusly returned home in rainy season. 4.Women who are adored are constructed by the social structures of the chastity. 5.In the sheperd's culture, the women are constructed as a second gender.

**Keywords:** Mullaipattu, practices, rituals, war patterns, economical backrounds, நப்பூதனார், முல்லை, வாழ்வியல், போர்ப் பாசறை அமைப்பு, சட்ட விதிமுறைகள், இனவியல், அதிகார உறவுகள்.

> *"யுத்த வீரனும், வேட்டையாடுபவனும் பெண்ணுக்கு முதலிடம் கொடுத்து அவன் இரண்டாம் பட்சமாகத்தான் இருந்தான். ஆனால், ஆடு, மாடு மேய்ப்பவனோ, தன் சொத்துரிமையைக் கொண்டாடி, தான் முதலிடத்தில் அமர்ந்து கொண்டு, பெண்ணை இரண்டாம் பட்சமாகத் தள்ளிவிட்டான். அவளும் குறைகூற முடியாமல் போய் விட்டது. வேலைப் பிரிவினை அவளுக்கு இந்த அவல நிலையை ஏற்படுத்தியது. ஆண் வெளியிற் சென்று உணவையும் சொத்தையும் சம்பாதித்தான். பெண்ணோ வீட்டு வேலைகளைக் கவனிப்பதும், சமையல் செய்வதும், அவள் வேலைகள் அனைத்தும் ஆணுக்கு அடிமைப்பட்டிருப்பதுமாயிற்று." (ஏ.எஸ்.கே. ப.57)*

காவிரிப் பூம்பட்டினத்துப் பொன் வணிகனார் மகனார் நப்பூதனார் எழுதிய முல்லைப்பாட்டு எவர் மீது பாடப்பட்டது என்பது அறியப்படவில்லை. ஆயினும், இவ்விலக்கியத்துள் ஆயர் சமூகப் பண்பாட்டுப் பதிவுகள், முல்லை நிலத்தலைவன் தலைவியரின் வாழ்வியல், போர்க்களத்தின் தன்மை, போர்ப் பாசறை அமைப்பு, பாதுகாவலர்களின்

தன்மைகள், அரசு அமைப்புகளின் சட்ட விதிமுறைகள், அதிகார உறவுகள், பாதுகாக்கும் முறைமைகள், சுற்றுச்சூழலின் தன்மைகள், கால நிலைகளின் தேவை, புவிச்சூழல் முதலான பல இனவியல்சார் தரவுகளுக்கு இடமளித்து, இது ஓர் இனவரைவியல் இலக்கியமாகத் திகழ்கிறது. *“இலக்கியம் பண்பாட்டின் ஒரு பகுதியாகத் திகழும் போது, அப்பண்பாடு பற்றிய இனவரைவியலுக்கான ஆதாரங்களில் ஒன்றாக அவ்விலக்கியமும் அமைந்துவிடுகிறது” (ஆ.தனஞ்செயன், விளிம்பு நில மக்கள் வழக்காறுகள், ப.12)* என்பர். அந்தவகையில் முல்லைப்பாட்டு இலக்கியமும் ஆயர் இன மக்களின் வாழ்க்கைமுறைகளை விளக்குவதாக அமைவதோடு திணைசார் பெண்டிரின் இருப்பு நிலையையும் புலப்படுத்துகின்றது. குறிப்பாக, ஆயரின் அகவாழ்வாகிய முல்லைநில ஒழுகலாறுகளும், புறவாழ்வாகிய வேந்துவிடு தொழிலையும் உணர்த்தி அந்நிலம் சார்ந்த இனவரைவியல் பதிவாக வெளிப்பட்டுள்ளது. இதனுள் அகம்சார் பண்பாடுகள் இங்கு விளக்கம் பெறுகின்றன.

**முல்லை நிலவியலும் இனவரைவியலும்**

காடும் காடுசார்ந்த இடமுமாகிய முல்லை நிலம் ஆநிரைகளை மேய்த்தற்குரிய நிலப்பரப்பாக அமைந்திருந்தது. இந்நிலப்பரப்பில் வாழ்ந்தவர்கள் நிலச்சூழலுக்கேற்ற கால நிலைகளைக் கணக்கிட்டு வாழ்ந்தவர்களாகக் காணப்படுகின்றனர். பண்டைத் தமிழரின் முதல் - கரு - உரிப்பொருள் கோட்பாட்டில் வாழிடமாகிய நிலம் முதன்மையான முதற்பொருளாகவும் அந்நிலம் சார்ந்து அமைந்த கால நிலையாகிய பொழுது முதற்பொருளின் துணைப் பொருளாகவும் கட்டப்பட்டிருந்தது. நிலம்சார் ஒழுக்கங்களைப் பாடும் புலவர்கள் அதன் பொழுதுகளின் தேவையையும் முன்வைத்துச் சென்றனர். இவ்வழி, நப்பூதனார் முல்லைப்பாட்டு, முல்லைநிலப் பெரும்பொழுதாகிய கார்காலத்தினையும் சிறுபொழுதாகிய மாலையையும் பாடலின் தொடக்கத்திலேயே குறித்துவிடுகின்றார்.

*“பாடுஇமிழ் பனிக்கடல் பருகிவலன் ஏர்பு*
*கோடு கொண்டெழுந்த கொடுஞ் செலவுஎழினி*
*பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை” (முல்லைப்பாட்டு, பா.வ. 4-6)*

எனப் பாடி பெரும் பொழுதாகிய கார்பருவத்தின் தன்மையையும், அக்கார் பருவத்துள் தோன்றும் சிறுபொழுதாகிய புன்மாலையையும் குறிக்கின்றார். துணையைப் பிரிந்து தனித்திருக்கும் முல்லை நிலமகளிர்க்கு மாலைப் பொழுதென்பது புன்மையாகிய நோய் தருவது என்பதைப் பாடும் இவர் மழையின் சிறப்பைப் பாடுதற்கு, கருப்பொருளுள் நிலத் தெய்வமாகிய திருமாலின் அவதாரச் சிறப்பை மொழிகின்றார். தமிழரின் சங்க இலக்கியங்களில் பலவிடங்களில் சிறப்பித்துப் பாடப்படுவது திருமாலின் வடிவம் குறளன் வடிவம் ஆகும். இவ்வடிவத்தின் தனித்தன்மையை மழை மேகங்களின் மேலேற்றிப் பாடுதல்வழி, வண்ண உவமை, வடிவ உவமை எனும் அணியிலக்கணங்களின்; தன்மையை வெளிப்படுத்திவிடுகின்றார். வெண்ணிற மேகம் கடல் நீர் முகந்து கருந்திரள் மேகமாகிய காட்சியை வேதகாலத் திருமால் அவதாரச் சிறப்புடன் இணைத்துக் காட்டுகின்றார். திருமால் வெண்ணிற வாமனப் பார்ப்பன (குறளன்) வடிவம் கொண்டு மாவலியிடம் மூவடி மண் வேண்டிச் சென்று, அவனால் தாரை வார்க்கப்பட்ட

நீர் கையை அடைந்தவுடன் திரிவிக்கிரமனாகக் கருமேனி கொண்டு உயர்ந்தோங்கிய நிலைக்கு மழையை உவமையாக்குகின்றார். இதனை,

*"நனந்தலை உலகம் வளைஇ நேமியொடு*
*வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை*
*நீர்செல நிமிர்ந்த மாஅல் போல" (முல்லைப்பாட்டு, பா.வ. 1-3)*

எனப் பாடுகின்றார். மிகப் பழமையான வேதமான இருக்கு வேதத்தில் காணப்படும் திருமாலின் ஒரேயொரு வடிவமாகிய வாமன வடிவத்தைச் சுற்றுச்சூழலின் தன்மையோடு பொருத்திக்காட்டி மாயோனின் சிறப்பையும் மழைக் காலத்தின் வன்மை, மென்மைகளைப் புலப்படுத்திவிடுகின்றார். இவர் கார்பருவ வருணனையைத் திட்டமிட்டுப் படைப்பதன் நோக்கத்தை,

*"வாமன வடிவம் போலப் பார்வைக்குக் காமம் சிறிய ஒரு பொருள் போலத் தோன்றினாலும் உண்மையில் அது எல்லாவற்றையும் உட்கொள்ளும் ஆற்றல் வாய்ந்தது" (க.பஞ்சாங்கம், பஞ்சாங்கம் கட்டுரைகள் தொகுதி -2, ப.38).*

எனக் குறிப்பிடுவர். கார்பருவத்தின் வருகை தலைவனின் பிரிவு எனும் இரண்டின் தாக்கத்தால் அழுத்தப்படும் தலைவியின் ஆற்றாமை மாவலியின் வன்மை ஒடுங்குதல்போல் உள்ளொடுங்கி அடிமனத்தில் மூழ்கிப் போவதாகவும் கருத இத்தொடர்கள் இடமளிக்கின்றன. முல்லை நிலத் தலைவியிடத்தே காணப்பட வேண்டிய உரிப்பொருளாகிய ஆற்றியிருத்தலை விளக்குதற்கும் இந்நிகழ்வு அரண் சேர்க்கிறது. தொல்காப்பியர் வரையறுக்கும் முதல் கரு உரிப்பொருள் என்ற மூன்றன் தன்மையையும் இவை புலப்படுத்தி விடுகின்றன. தொல்காப்பியரின் இக்கோட்பாட்டை இனவரைவியல் பதிவாக விளக்கும் ஸ்டீபன்,

*"இம்மூன்றும் காலம், இடம், மக்கள் ஆகிய கூறுகளின் இயல்புகளையும் ஒழுகலாறுகளையும் உள்ளடக்கியவை. திணை என்ற சொல் இலக்கண விதி சார்ந்தது என்பதை விட பண்பாட்டு மரபைச் சார்ந்தது" (ஸ்டீபன்,* தொல்காப்பியமும் இனவரைவியல் கவிதையியலும், *ப.8)*

எனச் சுட்டுவர். முல்லைநிலத் தலைவியின் ஆற்றாமையை நீக்கும் களங்களாகவும் ஆற்றியிருத்தலுக்கான பாலங்களாகவும் முல்லைநிலக் கருப்பொருட்களை நப்பூதனார் படைத்துக் காட்டியமையும் ஆயர் சமூகத்தின் பண்பாட்டு மரபுகளின் தரவுத் தொகுப்புகளாக அமைகின்றன.

**ஆயர் சமூகப் பண்பாடுகள்**

உலகின் சொத்துரிமை அரசியலில் ஆநிரைகளைப் பழக்கியவனும் அவற்றை அடக்கியாளத் தெரிந்தவனுமே முதலாளியாய் உருப்பெற்றதாகப் பண்பாட்டு ஆய்வுகள் புலப்படுத்துகின்றன. மனித நாகரிகத்தின் வளர்ச்சியில் கருவிகளைக் கண்டுபிடித்தல் முதல்நிலை எனவும் அதற்கு அடுத்த படிமலர்ச்சியாக விலங்குகளைப் பழக்கிய நிலை இருந்ததையும்

எங்கல்ஸ் குறிப்பிடுகின்றார். இவர்களுள் மற்ற இனத்தவரைக் காட்டிலும் விலங்குகளைப் பழக்கியவர்கள் சொத்துரிமையாளர்களாக இருந்ததையும் அவர் சுட்டுகின்றார்.

*“மேய்ச்சல் வாழ்க்கை நடத்தும் இனக்குழுக்கள் மற்ற பண்பாடற்ற மக்களைக் காட்டிலும் அதிகமான உணவுப் பொருட்களை மட்டுமன்றி பல்வகைப் பொருட்களையும் அதிகமாக உற்பத்தி செய்தன” (இ.லி.அந்திரேயெவ், குடும்பம் தனிச்சொத்து அரசுடைமை ஆகியவற்றின் தோற்றம் என்னும் நூல், ப.90)*

எனக் குறிப்பிடுகின்றார். இவரின் கருத்தின் அடிப்படையிலும் சங்க கால மனிதப் பண்பாட்டு அடிப்படையிலும் நோக்கும்போது ஆநிரைகளைப் பெருமளவில் பெற்றிருந்த ஆயர் சமூகமே உயரிய சமூகமாக இருந்தமை புலப்படும். முல்லைநிலத் தலைவர்களாகச் சுட்டப்பட்டோர் தேரன் எனும் அடைகளால் சுட்டப்பட்டமையானும் அவர்கள் உயர் பொருளாதாரத்தில் சொத்துடைமையாளர்களாக உழன்றமை புலப்படும். சங்ககால நடைமுறைகளில் ஆநிரைகளைச் செல்வங்களாகக் கருதியமைக்கு நிரை கவர்தல், நிரை மீட்டல் சார்ந்த வெட்சி, கரந்தை ஆகிய புறத்திணைகள் சாட்சிகளாய் நிற்கின்றன. ஆயர் சமூகத்தின் உயர் பண்பாட்டு நடத்தைகளாக ஏறுதழுவல் நிகழ்வு இருந்தமையையும் இதற்கு அரணாகக் குறிக்கலாம். *“கொல்லேற்றுக் கோடஞ்சுவானைப் புல்லாளே ஆயமகள்”* எனும் சங்கத்தொடர் இதனை மேலும் உறுதிசெய்கிறது. இத்தகைய வீரப் பண்பாட்டோடு கற்புநெறிப் பண்பாட்டிலும் ஆயர் சமூகம் உயர்ந்திருந்ததாகக் கருதமுடிகிறது. முல்லைநிலத்தைக் குறிக்கும் நச்சினார்க்கினியர்,

*“முல்லையஞ் சான்ற கற்புப் பொருந்தியதனால், இல்லறம் நிகழ்த்துதற்குப் பிரிந்து வருந்துணையும் ஆற்றியிரு என்று கணவன் கூறிய சொல்லைப் பிழையாமல் ஆற்றியிருந்து இல்லறம் நிகழ்த்திய இயற்கை” (முல்லைப்பாட்டு, நச்சினார்கினியர் உரை)*

எனக் கருத்துரைப்பதினின்று, முல்லைநிலப் பெண்டிர் கற்புநெறியில் சிறந்தார் என்பது உணர்த்தப்படுகின்றது. இக்கற்புநெறியின் தன்மையை மிகுத்துக் காட்டும் போக்கில் முல்லைப்பாட்டு ஆசிரியரின் பதிவுகள் அமைந்துள்ளன. கார்பருவத்தே வருவன் யான் என உரைத்துப் போந்த தலைவன் பருவம் வந்தவழி வந்துறாமை அறிந்து தலைவி வருந்துகின்றாள். அவள் ஆற்றுதல் தன்மையிலிருந்து ஆற்றாமை உணர்வினுள் செலுத்தப்படாதிருக்க முல்லைநில மக்கள் விரிச்சி கேட்டல், வழிபாடு செய்தல் முதலான பண்பாட்டு நடத்தைகளை மேற்கொள்கின்றனர். இதனை,

*“அருங்கடி மூதூர் மருங்கில் போகி*
*யாழ்இசை இனவண்டு ஆர்ப்ப நெல்லொடு*
*நாழி கொண்ட நறுவீ முல்லை*
*அரும்பு அவிழ்அலரி தூஉய்கை தொழுது*
*பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்ப” (முல்லைப்பாட்டு, பா.வ. 7-11)*

என நப்பூதனார் பதிவுசெய்கின்றார். ஆயர் சமூகத்தினர் இடர்கள் தோன்றும்போது விரிச்சி கேட்டலை வழக்கமாகக் கொண்டிருந்தனர். சிலப்பதிகாரக் காலத்திலும் இத்தகைய விரிச்சி குறித்த பதிவுகளைக் காணமுடிகிறது. கோவலன் கொலைக்களப்படும் நிகழ்வினை ஆநிரைகளின் செயலால் உணரும் ஆயமகளிர்,

*“ஆயர் முதுமகள் ஆடிய சாயலாள்*
*பூவும் புகையும் புனைசாந்தும் கண்ணியும்*
*நீடு நீர் வையை நெடுமாலடியேத்தத்*
*தூவித் துறைபடிய” (சிலம்பு., துன்பமாலை, பா.வ.2-5)*

எனத் தெய்வத்தை வேண்டுகின்றனர். முல்லைப்பாட்டில் குறிக்கப்பட்ட பெருமுது பெண்டிரின் விரிச்சி கேட்டல் நிகழ்வு சிலம்பின் ஆயர் முதுமகளின் செயலோடு பொருந்தி அவர்களின் வரைவியல் பதிவுகளாக நின்றுவிடுகின்றன. தொல்காப்பியரும்,

*“தன்னும் அவளும் அவனும் சுட்டி மன்னு நிமித்தம் மொழிப் பொருள் தெய்வம்*
*நன்மை தீமை அச்சம் சார்தலென்று” (தொல்., அகத்., நூ.39)*

என நற்றாய் கூற்றினை விளக்குமிடத்து நிமித்தம் காணும் செயலைப் பதிவுசெய்வர். இவ்வாறு நிமித்தம் கேட்போர் அல்லது விரிச்சி கேட்போர் தெய்வத்திற்குச் சில வழிபடு பொருட்களைப் படையலிடுவர். சைவ சமயத்தார் நீரும் மலரும் தூவி வழிபட்டதை, *“சலம் பூவொடு தூபம் மறந்தறியேன், நலந் தீங்கினும் உன்னை மறந்தறியேன்” (திருஞான சம்பந்தர் தேவாரம், பா.6)* எனும் ஞானசம்பந்தரின் பாடலடிகள் புலப்படுத்துகின்றன. இது சங்ககாலப் பண்பாட்டின் நீட்சியென்பதை உணரமுடிகின்றது. நெல்லும் நறுமணம் வீசுகின்ற முல்லை மலரும் தூவி வழிபடும் பண்பாட்டு மரபினை ஆயர் சமூகத்தினர் கொண்டிருந்ததையும் நற்சொல் கேட்டு நின்ற தன்மையையும் நப்பூதனார் இனக்குழுப் பண்பாட்டுச் செய்தியாகப் பதிவுசெய்கின்றார். இவற்றோடு,

*“சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்*
*உறுதுயர் அலமரல் நோக்கி ஆய்மகள்*
*நடுங்கு சுவல் அசைத்த கையள் கைய*
*கொடுங்கோற் கோவலர் பின்னின்று உய்த்தர*
*இனிதே வருகுவர் நின் தாயர் என்போள*
*நன்னர் நன்மொழி கேட்டனம் ஆகலின்*
*நல்ல நல்லோர் வாய்ப்புள்” (முல்லைப்பாட்டு, பா.வ. 12-18)*

என நன்னிமித்த விளைவுகளையும் பதிவுசெய்கின்றார். ஆயச்சிறுமியின் குரலாக வெளிப்படுத்தப்படும் ஆயரின் மேய்த்தல் கருவி (கொடுங்கோற் கோவலர்), தொழில் (ஆநிரை மேய்த்தல்), கன்றின் கலக்கம், அவளின் தேற்றுதல் மொழி ஆகியன ஆயர் பண்பாட்டை அறிய வைக்கும் ஆவணங்களாகின்றன. இவை தலைவியின் ஆற்றாமையைத் தவிர்க்க முனையும்

ஆற்றுதல் களமாகி ஆற்றியிருத்தலின் நிலையை உணர்த்துகின்றன. தலைவி தலைவன்பால் கொண்டுள்ள அன்பின் மிகுதி இத்தேற்றுதல் மொழிகளையும் கடந்து வருத்துகின்றன என்பதை,

*"முனைகவர்ந்து கொண்ட திறையர் வினைமுடித்து*
*வருதல் தலைவர் வாய்வது நீநின்*
*பருவரல் எவ்வம் களைமா யோய்என*
*காட்டவும் காட்டவும் காணாள் கலுழ்சிறந்து*
*பூப்போல் உண்கண் புலம்பு முத்துறைப்ப" (முல்லைப்பாட்டு, பா.வ. 20- 24)*

எனும் தொடர்களால் சுட்டி உரிப்பொருளின் தன்மையை மிகுத்துக் காட்டுகின்றார். இவ்விடத்து முல்லை நிலத்தலைவன் வேந்துறு தொழில், வேந்துவிடு தொழில் எனக் குறிக்கப்படும் ஓதல், தூது, பகை முதலான பிரிவுகளில் ஏதேனும் ஒன்றின் காரணமாகத் தலைவியைப் பிரிந்து சென்றிருக்க வேண்டும் என்ற குறிப்பினைத் திறையர் வினைமுடித்து எனும் தொடரால் சுட்டுவர். திறையர் வினைமுடிந்து தலைவன் வருவன் என முதுபெண்டிர் நற்சொல் கேட்டு உரைக்கின்றனர். எனினும், தலைவியின் கண்கள் நீர் பனிக்கின்றன எனக் குறிப்பதோடு அவளின் உணர்வுகளை எதிரொலிக்கும் நப்பூதனார் கண்ணீர் விடுபவளாகக் காட்டாமை இல்லிருத்தலின் உயர் ஒழுக்கத்தை உணர்த்தும் பதிவுகளாக நின்றுவிடுகின்றன. இங்குத் தலைவியின் சமூக நிலைப்பாடு என்பது ஆணைச் சார்ந்து இயங்கும் பெண்ணடிமைச் சமூக வரலாறாக இருந்ததையும் வரைவியலாக்கித் தந்துவிடுகின்றார். ஏ.எஸ்.கேயின்,

*"குடும்பம் தோன்றிய விதத்திலிருந்து இன்று உள்ள முறை மனித சமுதாய வளர்ச்சியை எடுத்துக்காட்டுகிறது என்பதில் எவ்விதச் சந்தேகமும் இருக்க முடியாது. நியாயம் அநியாயம், நல்லது கெட்டது, கற்பு அறம் என்று எல்லாக் காலத்திலும் அழியாக் கருத்துகளாக இருந்ததில்லை. காலம், நாடு, சுற்றுச் சார்பு முதலியவற்றை ஒட்டி இவற்றின் உள்ளடக்கங்கள் இருந்துவந்துள்ளன" (ஏ.எஸ்.கே., மனித குல வரலாறு, ப.52)*

என்ற கருத்தியலின் அடிப்படையில் நப்பூதனாரின் வரிகளை உற்றுநோக்கினால் முல்லைநிலத் தலைவி மீது புனையப்பட்டிருந்த கற்புக் கோட்பாடு அறியவரும். ஆற்றியிருத்தல் என்பது கலங்காமை எனக் கருதப்படும் நிலையில் நப்பூதனாரே அக்கருத்தியலை, *"பூப்போல் உண்கண் புலம்பு முத்துறைப்ப"* என இனவரைவியலுக்கேற்ப (காலம், நாடு, சுற்றுச்சார்பு) மாற்றியமைக்க முயல்வதை உணரமுடியும். இந்நிலத் தலைவியின் ஆற்றாமைத் துயரை மேலும் மிகுத்துக்காட்டுவனவாக,

*"இன்துயில் வதியுநன் காணாள் துயருழந்து*
*நெஞ்சாற்றுப் படுத்த நிறைதபு புலம்பொடு*
*நீடு நினைந்து தேற்றியும் ஒடுவளை திருத்தியும்*
*மையல் கொண்டும் ஒய்யென உயிர்த்தும்*
*ஏஉறு மஞ்ஞையின் நடுங்கிஇழை நெகிழ்ந்து*

*பாவை விளக்கின் பரூஉச்சுடர் அழல"* (முல்லைப்பாட்டு, பா.வ. 80-85)

எனும் முல்லைப்பாட்டின் பிற்பகுதிக் காட்சிகள் கட்டமைக்கப்பட்டுள்ளன. தலைவனின் பிரிவையும் வருகையையும் எண்ணித் துயருற்று, உறக்கமின்றி, நெஞ்சை ஆற்றுப்படுத்தப் புலம்புதலாகிய தன்மை கொண்டனள் என்று குறிப்பர். மேலும், பெருமூச்செறிதல் முதலாகிய மிகுதுயர் நிலையை எய்திய அவள் எழுநிலை மாடத்தில் தனித்துத் தவிப்பதாகவும் படைத்துக்காட்டுவர். இந்நிலையில் முல்லை நிலமக்கள் பெண்களுக்குக் கற்பு நெறியை மட்டும் கற்பிக்காமல் தலைவியை இல்லகம் கடந்துசெல்ல இயலாத பாலின அரசியலுக்குள் திணறுவதை இவரின் பதிவுகள் உணர்த்துகின்றன. பொதுவுடைமை அரசியலைப் பேசிய எங்கல்சின் கருத்தியலும் இத்தகைய அரசியலையே இனவரைவியல் பதிவுகளாக்கித் தருகின்றது.

> *"காட்டுமிராண்டித்தனமான போர்வீரனும், வேட்டைக்காரனும் வீட்டில் இரண்டாம் ஸ்தானத்தை வகித்துப் பெண்ணுக்கு முதலிடம் தருவதில் திருப்தியடைந்திருந்தார்கள். மேன்மையடைந்த ஆட்டிடையனோ தனது செல்வத்தைக் காட்டி, முதலிடத்தை முண்டியடித்துப் பிடித்துக் கொண்டு பெண்ணை இரண்டாம் ஸ்தானத்துக்குத் தள்ளிவிட்டான். அவளால் புகார் செய்யவும் முடியவில்லை"* (இ.லி.அந்திரேயெவ், குடும்பம் தனிச்சொத்து அரசுடைமை ஆகியவற்றின் தோற்றம் என்னும் நூல், ப. 210)

என எங்கல்ஸ் குறிப்பிடுகின்றார். சங்ககாலப் பண்பாட்டை இவரின் கருத்தோடு பொருத்திக் காண்கையில் மருதம், முல்லை ஆகிய இருநிலங்களில்தான் கற்பை முன்னிறுத்திய குடும்பக் கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும் எனத் தெரிகின்றது. குறிப்பாக, ஆயர் சமூகத்தால் கட்டமைக்கப்பட்ட கற்புக் கோட்பாடுகள் செல்வத்தையும் வீரத்தையும் பின்புலமாகக் கொண்டியங்கின. இதில் ஆண்மகன் கட்டற்ற சுதந்திரம் உடையவனாகப் படைக்கப்பட்டிருக்கிறான். மேலும், தமிழ்ச் சமூகத்தின் குடும்பக் கட்டமைப்பு முறை தோன்றியதன் பின்புலத்தில் முல்லைத்திணை வரையறுத்த கற்புக் கோட்பாடுகள் பின்னியங்குவனவாக உள்ளன.

> *"தமிழ்ச் சமூகத்தில் குடும்பம் என்ற அமைப்பு முறை முல்லை நிலத்தில்தான் தோற்றம் கொண்டிருக்க வேண்டும். வேட்டைச் சமூகத்திலிருந்து பிரிந்த கால்நடை மேய்ப்போர் ஆண் பெண்களுக்கிடையேயான பொதுப் பகிர்வில் இருந்த இன்னல்களிலிருந்து விலகி குழு என்பதைக் குடும்பம் என்ற அமைப்பு முறையாக ஆக்கிக் கொண்டனர். இந்த அமைப்பு முறையின் தோற்றம் தான் கற்புக் கோட்பாட்டையும் உருவாக்கியது"* (அ.செல்வராசு, தமிழ்ச் சமூகத்தில் கற்பும் கற்பிப்பும், ப.55).

இதன்வழி, ஆணையும் பெண்ணையும் இல்லறத்தில் இணைக்கும் கற்பு சார்ந்த இக்கோட்பாடுகளில் பெண்ணின் மீதான ஒடுக்குமுறைகள் செயல்படத் தொடங்கிய இடமாகவும் முல்லை நில வாழ்வியல் அமைந்துவிட்டதாகக் குறிக்க முடிகிறது. குறுந்தொகையில் பதிவு செய்யப்பட்டுள்ள *"வினையே ஆடவர்க் குயிரே, மனையுறை மகளிர்க் காடவர் உயிரென"*

*(குறுந்தொகை, பா. 136: 1-2)* எனப் பாலை பாடிய பெருங்கடுங்கோவின் பண்டைத் தமிழரது வாழ்வியல் பதிவுகள் நப்பூதனாரின் பதிவுகளிலும் எதிரொலித்துள்ளன. ஆனால், இவர் முல்லைநிலம் சார்ந்த அகத்திணைப் பதிவுகளையும், முல்லையின் புறத்திணையாகிய வஞ்சித்திணையது வரைவியல் பதிவுகளையும் வெளிப்படுத்தியுள்ளார். இனவரைவியல் கருத்தியலின் அடிப்படையில் முல்லைப்பாட்டின் அகவாழ்வு சார்ந்த தலைவியின் நிலைப்பாடு என்பது தலைவனின் போரியல் நடத்தை சாரந்த பின்னியக்கமாக அமையக் காணமுடிகிறது.

> ''முல்லையின் ஒழுக்கமான இருத்தலும் இருத்தல் நிமித்தமும் போர்ச் சூழலின் காரணமாகத் தோன்றும் தனிப்பட்ட நடத்தை முறைகள் என்பதை முல்லைத் திணைப்பாடல்கள் வழி அறியலாம். அவ்வாறெனில் உரிப்பொருள் என்பது குறிப்பிட்ட சமூகச் சூழல் சார்ந்த நடத்தை முறையாகக் கொள்ளப்பெற்று அச்சூழலை எதிர்கொள்ளும் நிலத்தோடு அடையாளப் படுத்தப்பெற்றது எனலாம். இக்குறிப்பிட்ட சூழல் அல்லாத போது உரி வேறுபடலாம். இதன் காரணமாகக் கரு, உரி ஆகிய இரண்டும் ஒன்றோடொன்ற மேவி வருவதற்கான வாய்ப்புகள் உண்டு'' (ஞா.ஸ்டீபன், தொல்காப்பியமும் இனவரைவியல் கவிதையியலும், ப.11)

என்ற கருத்தியலின்வழி முல்லைப்பாட்டில் அமைந்துவரும் திணைசார் கோட்பாடுகள் இனவரைவியல் பதிவுகளாகியிருப்பதை உணர்த்தமுடியும்.

**நிறைவாக**

பத்துப்பாட்டு இலக்கியங்களில் முல்லைநிலப் பண்பாட்டுத் தரவுகளின் நிலைக்களனாக முல்லைப்பாட்டு அமைந்துள்ளது. இது ஆயர் சமூகத்தின் பொருளாதார நிலை, சமூக நிலை, பெண்களின் நிலை எனும் கூறுகளின் பதிவாக வெளிப்பட்டிருப்பதை மறுக்கவியலாது. முதல், கரு, உரிப்பொருள் சார்ந்த நப்பூதனாரின் விளக்கங்கள் ஒரு இனவரைவியல் தகவலாளியின் தரவுகளாக உணர்த்தப்பட்டமை புலப்படுகிறது. இனவரைவியலின் இடம், காலம், சுற்றுச்சூழல் எனும் முப்பொருண்மைகளுக்கேற்ற வகையில் இவை கட்டமைந்துள்ளன. நிலப்பண்பாட்டில் மனிதக் குழுக்கள் கொண்டுள்ள தொழில்கள், நம்பிக்கைகள், சடங்குகள், போர் முறைகள், அரசியல், பொருளீட்டல் முறைகள் சார்ந்த இனவரைவியல் கூறுகளையும் முல்லைப்பாட்டின்வழி உணர்த்த முடியும்.

**பார்வை நூல்கள்**


- *ஆ.தனஞ்செயன், **விளிம்பு நில மக்கள் வழக்காறுகள்**, வல்லினம், புதுவை, 2006.*
- *ஞா.ஸ்டீபன, **தொல்காப்பியமும் இனவரைவியல் கவிதையியலும்**, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2010.*
- *ம.வே. பசுபதி (ப.ஆ.), **செம்மொழித் தமிழ் இலக்கண இலக்கியங்கள்**, தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சாவூர், 2010.*
- *அ. செல்வராசு, **தமிழ்ச் சமூகத்தில் கற்பும் கற்பிப்பும்**, எழில் பதிப்பகம், திருச்சி, 2006.*
- *இ.வி. அந்திரேயெவ், **குடும்பம் தனிச்சொத்து அரசுடைமை ஆகியவற்றின் தோற்றம் என்னும் நூல்**, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1986.*
- *ஏ. எஸ். கே., **மனித குல வரலாறு**, புலம் வெளியீடு, சென்னை, 2012.*
- *க.பஞ்சாங்கம், **பஞ்சாங்கம் கட்டுரைகள் தொகுதி - 2**, காவ்யா பதிப்பகம், சென்னை, 2010.*

மதிப்பிடப்பெற்றது

# அகநானூற்றில் குறிஞ்சி

**முனைவர் ம.பிரேமா**
உதவிப் பேராசிரியர்
**முனைவர் ஜெஸின் பிரான்ஸிஸ்**
இணைப்பேராசிரியர்
**முனைவர் ஆ.ஷர்மி**
உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை,
புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி - 02.
jeusinfrancistrichy@gmail.com

Abstract: The kurinji filed that is spoken in agananuru is of heat reflection. The nature of hill and the produce of hilly areas reveal the life style of tribal people in the hill stations. The efficiency of the rulers of hilly region, the small villages annexed to the hills, the products of kurinji land, the unpolluted environment, the water sources, the rare products used by them for their everyday life living is properly highlights by the poets which invites us to life such life now.

Keywords: kurinji, agananuru, literature, tribal people, குறிஞ்சி நிலம், குறிஞ்சிநில மக்கட்பெயர்கள், ஊர்கள், கருப்பொருட்கள்

சங்க இலக்கிய அகநூல்களுள் "அகம்" என்னும் அடைமொழியைக் கொண்ட நூல் அகநானூறு. அகநானூற்றில் இடம்பெற்றுள்ள குறிஞ்சித்திணைப் பாடல்கள் எண்பது. அவற்றுள் தலைவன் கூற்றாக 13 பாடல்கள், தலைவி கூற்றாக 18 பாடல்கள், தோழி கூற்றாக 49 பாடல்கள் உள்ளன. இப்பாடல்களுக்கும் குறிஞ்சி நிலம், குறிஞ்சிநில மக்கட்பெயர்கள், ஊர்கள், கருப்பொருட்கள் புலப்படுத்தும் வளமான வாழ்வியல் முதலியவற்றை இக்கட்டுரை விளக்க முனைகின்றது.

## குறிஞ்சி நிலம்

மலையும் மலை சார்ந்த பகுதியும் குறிஞ்சி நிலம். தமிழ்நாட்டில் மேற்குத்தொடர்ச்சி மலைப்பகுதி குறிஞ்சிநிலப் பரப்பாக உள்ளது. மலைகளின் மேலும் மலைச்சாரல்களிலும் மக்கள் வாழ்ந்துள்ளனர். இன்றும் வாழ்ந்து வருகின்றனர். "மலை"என்னும் பொருள்தரக் கூடிய வெவ்வேறு சொல்லாட்சிகள் இலக்கியங்களில் ஆளப்பட்டுள்ளன.

மலையின் நெடுமை, உயர்வு, மலைவிளை பொருட்கள் முதலியவற்றை அகநானூறு,

**'சாரல் பலவின் சுளையோடு' (அகம்-2)**

**'ஓங்கல் வெற்ப' (அகம்-18)**

**'குன்று கண்டன்ன' (அகம்-42)**

**'ஏகல் அடுக்கம்' (அகம்-52)**

**'கறிஇவர் சிலம்பின்' (அகம்-112)**

**'குன்றத்துக் கவாஅன்' (அகம்-202)**

**'சிறுகுடிப் பாக்கம்' (118)**

**'பெருமலை விடரகம்' (218)**

**'பயமலை' (அகம்-318)**

**'சேயுயர் பிறங்கல்' (அகம்-152)**

என்று பதிவு செய்துள்ளது. உயர்ந்த மலைகள் பாதுகாப்பு அரணாகத் திகழ்ந்ததோடு மக்களின் வாழ்க்கைக்குத் தேவையான பொருட்களையும் விளைவித்துள்ளமையால் ''பயமலை''என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

**மக்கட்பெயர்**

மக்களை வாழ்விடங்களின் அடிப்படையிலும் தொழிலின் அடிப்படையிலும் பல்வேறு விதமாக அழைத்துள்ளனர். குறிஞ்சிநில மக்கள் குறவன், வெற்பன், சிலம்பன், நாடன், கொடிச்சி, குறமகள், கானவர் என்று அழைக்கப்பட்டுள்ளமையை,

**'வான்தோய் வெற்பன்' (அகம்-38)**

**'கான்கெழு நாடன்' (அகம்-22)**

**'புதுமலர் வேண்டிய குறமகள்' (அகம்-152)**

**'கொடிச்சியர் தந்தை' (அகம்-58)**

**'குறவர் முன்றில்' (அகம்-78)**

**'கானவர் மடிந்த' (அகம்-168)**

என்னும் அகநானூற்றுத் தொடர்கள் வழி அறிந்து கொள்ள முடிகின்றது.

**கூத்தாட்டு அவைக்களம்**

மனிதனை மகிழ்விக்கக்கூடிய கலைகளுள் ஒன்று கூத்துக்கலை. கூத்துக்கலையினை நிகழ்த்துபவர்களைக் கூத்தர்கள் என்று அழைத்தனர். கூத்தராற்றுப்படை என்ற ஒரு நூலே பத்துப்பாட்டில் இடம்பெற்றிருப்பதிலிருந்து கூத்துக்கலையின் சிறப்பு வெளிப்படுகின்றது. இக்கூத்துக்கலையினைக் கலைஞர்கள் விழாக்காலங்களிலும் மன்னனை மகிழ்விக்கும் பொருட்டும் நிகழ்த்துவர். இந்நிகழ்வில் ஆடல் பாடல், கலைஞர்கள், இசை வல்லார்கள், பார்வையாளர்கள் முதலியோர் பங்கேற்பாளர்களாக இருப்பர். ஆனால் குறிஞ்சிநிலத்தில் கருப்பொருட்களின் இன்பநுகர்வுப் புலப்பாட்டு நெறிகளே ஆடரங்கை கண்முன் நிறுத்துகின்றது.

மூங்கிலின் துளையில் புகுந்து எழும் காற்று புல்லாங்குழல் போல் இன்னிசை எழுப்புகின்றது. பக்கமலையில் ஓடிவரும் அருவியின் ஓசை முழவு போன்று அதிர்கின்றது. துள்ளித் திரியும் மான்களின் ஒலி பெருவங்கியம் போல ஒலிக்கின்றது. பூக்களில் தேனுண்ணும் வண்டுகளின் ரீங்காரம் யாழிசையை ஒத்திருக்கின்றது. இவ்வாறு பல ஓசைகளையும் ஒருங்கே செவிமடுத்த குரங்குகள் பார்வையாளர்களைப் போன்று வியப்புடன் பார்க்கின்றன. மயில்கள்

அவைக்களத்தில் ஆடும் மகளிரைப் போல் ஆடுகின்றன. இக்காட்சிகள் நிரம்பிய குறிஞ்சிநிலம் கூத்தாட்டு அவைக்களமாகத் தோற்றமளித்ததனை,

**'ஆடுமை குயின்ற அவிர்துளை மருங்கின்**
**கோடை அவ்வளி குழலிசை ஆக**
**பாடுஇன் அருவிப் பனிநீர் இன்இசை**
**தோடுஅமை முழவின் துதை குரல்ஆக' (அகம்-82)**

என்று அகநானூறு குறிப்பிட்டிருப்பது கற்போருக்கு மகிழ்வூட்டுகின்றது.

**வளம்**

குறிஞ்சி நிலத்தில் மூங்கில் மரங்களும் வேங்கை மரங்களும் சந்தன மரங்களும் மிகுதியாக வளர்ந்திருக்கின்றன. சந்தன மரங்கள் முழுவதையும் வெட்டி உழுது விதைத்த மென்மையானக் கதிர்களைக் கொண்ட தினைப்புனம் மிகுந்திருக்கின்றன. குரங்குகளும் அறியாத உயரமான மரங்கள் நிறைந்த காடுகள் அடர்திருக்கின்றன. காட்டில் பளிங்கு போன்ற நீர்த்துறைகளும், அருவிகளும் நிறைந்திருக்கின்றன. காந்தள் மலர்கள் மிகுதியாக மலர்ந்திருக்கின்றன.

இலைகளுடன் கூடிய பலாப்பழத்தைக் கையில் வைத்திருக்கும் பெண்குரங்குகள், ஆண்குரங்குகளோடு துள்ளித்திரிகின்றன. மயில்களும், மலைவாழ் ஆடுகளும் உலவுகின்றன. மலைகளில் தேன்கூடுகள் நிறைந்திருக்கின்றன. குவளைப்பூக்களும், நீலமலர்களும் நீர்நிலைகளில் நிறைந்துக் காணப்படுகின்றன. காட்டுமல்லிகை, கூதளம்பூ, மிளகுக்கொடிப்படர்ந்த தோட்டங்கள் அடர்ந்திருக்கின்றன. பலாமரக்கிளையில் அணில்கள் விளையாடுகின்றன. பலாப்பழங்கள் பெறுவதற்காக அமைக்கப்பட்ட குடிசைகளின் மேலே வேங்கைமலர்கள் பூத்துக்குலுங்குகின்றன. சுரபுன்னை மரங்கள் நிறைந்த மலைச்சாரலில் நள்ளிரவில் மேகங்கள் எழுந்து கூத்தரின் முழவம் போல முழங்கி இடிகளுடன் கூடிய மிகுந்த மழையைப் பொழிவித்தது. இதனால் நாடு முழுவதும் காண்பதற்குரிய நிலையில் வளம் நிரம்பி காணப்பட்டது. இதனை,

**"வழைஅமல் அடுக்கத்து வலன்ஏர்பு வயிரியர்" (அகம்-328)**

**"...பலவின் பழுப்பயம் கொண்மார்**

**குறவர் ஊன்றிய குரம்பை புதைய" (அகம்-12)**

**"குளவியொடு மிடைந்த கூதளங் கண்ணி" (அகம்-272)**

**"காமர் பீலி ஆய்மயில் தோகை**
**வேறுவேறு இனத்த வரைவாழ் வருடை**
**அள்இலைப் பலவின் கனிகவர் கைய" (அகம்-378)**

**"குரங்குஅறி வாரா மரம்பயில் இறும்பில்" (அகம்-368)**

என்று அகநானூறு சுட்டுவதிலிருந்து குறிஞ்சி நிலத்தின் இயற்கை வனப்பு, மக்களின் வாழ்வியலுக்கு உகந்த சுற்றுச்சூழல், கருப்பொருட்களின் மகிழ்வு முதலியவை புலனாகின்றது.

மேலும், பலாப்பழத்தின் சாற்றினைக் கொண்டு செய்த மதுவைப் பருகியதையும், சந்தனக் கட்டையை விறகாகக் கொண்டு சமைத்த புலவுச் சோற்றினை உண்டதனையும்,

**“புல்வேய் குரம்பை புலர ஊன்றி**
**…ஊன் புழுக்கு அயரும்”** (அகம் - 172)

என்று அகநானூறு குறிப்பிடுகின்றது.

**பொதிய மலை**

உச்சிப்பாறைகளில் தேனடைகளை அறுத்து எடுக்க முயலும் குறவர்களும் அடைய இயலாத, ஏறுதற்கு அரிய பக்கமலையையும், புகுந்து செல்வதற்கு இயலாத சிகரங்களையும் உடையது பொதியமலை என்பதனை,

**“அறைஉறு தீம்தேன் குறவர் அறுப்ப**
**முயலுநர் முற்றா**
**புகல் அரும் பொதியில் போல”** **(அகம்-322)**

என்னும் பாடல் பறைசாற்றுகின்றது.

**கொல்லிமலை**

சேரனுக்குச் சொந்தமான மலை கொல்லிமலை. சேரமன்னன் வேல்படை, யானைப்படை இவற்றைக் கொண்டு போர் செய்வதில் வல்லவன் என்னும் செய்தியினை,

**“…வென்வேல்**
**களிறுகெழு தானைப் பொறையன் கொல்லி”** **(அகம்-62)**

என்னும் அகநானூற்றுப் பாடல் வழி அறிந்து கொள்ளமுடிகின்றது. முத்தொள்ளாயிரமும் சேரனின் போர்த்திறனை,

**“கரிபரந்து எங்கும் கடுமுள்ளி பம்பி**
**நரிபரந்து நாற்றிசையும் கூடி — எரி பரந்த**
**பைங்கண் மால் யானைப் பகையடுதோட் கோதையை**
**செங்கண் சிவப்பித்தார் நாடு.”** **(முத்தொள்-22)**

என்று குறிப்பிடுவது ஒப்புநோக்கத்தக்க வகையில் உள்ளது.

**பறம்புமலை**

கடையெழு வள்ளல்களில் ஒருவன் பாரி. பாரி பறம்புமலையினை ஆண்டு வந்தான். பறம்புமலையின் வளத்தினை அறிந்து பலமுறை முடியுடை மூவேந்தர்களும் முற்றுகையிட்டனர். பறம்புமலையில் உள்ள கிளிகள் மலையடிவாரத்தில் உள்ள நிலங்களில் விளைந்த நெற்கதிர்களைக் கொத்திக்கொண்டு வந்து களஞ்சியத்தில் சேர்த்ததால் உணவு பஞ்சம் இல்லாத மலையாக விளங்கியதை,

**நெல்லின் விளைகதிர் கொண்டு”** **(அகம்-78)**

என்பதன்வழி உணர முடிகின்றது.

**சிற்றூர்**

குறிஞ்சி நிலத்தில் பாழில், பாரம், தலையாறு என்னும் ஊர்கள் இருந்துள்ளன. ‘நன்னன்’ என்னும் குறுநிலமன்னனின் ஊர் பாழி; பாரம் என்னும் ஊரின் தலைவனாகவும் விளங்கியுள்ளார். கடையேழு வள்ளல்களுள் ஒருவன் ‘ஆய். ஆய் என்பவன் அரசாட்சி செய்த ஊர் தலையாறு. இவ்வாறு குறுநில மன்னர்கள் அரசாட்சி செய்த ஊர்களை,

**“குன்றுழை நண்ணிய சீறூர் பாரத்துத் தலைவன்**
**பாழி சிலம்பில் தலையாற்று நிலைஇய”** (அகம்-152)

**“பாழி ஆங்கண்”** (அகம்-172)

என்று அகஇலக்கியம் தெளிவுபடுத்துகின்றது.

**தொழில்**

குறவனின் தொழில் வேட்டையாடுதல். அவன் வேட்டைக்குச் செல்லும் பொழுது வேங்கை மலர்களைச் சூடிக்கொண்டு, தோளில் வில்லை மாட்டிக் கொண்டு, சீழ்க்கை ஒலியோடு வேட்டைநாய் பின் வரச் செல்வான். அவ்வாறு செல்லும் குறவன் யானையின் மீது அம்புகளைச் செலுத்தி தந்தங்களைக் குடிசைக்குக் கொண்டு வந்து குவித்ததை,

**“ஓட்டுஇயல் பிழையா வயநாய் பிற்பட**
**வேட்டம் போகிய குறவன் காட்ட”** (அகம் - 182)

**“பரியல் நாயொடு பல்மலைப் படரும்**
**வேட்டுற் பெறலொடு அமைந்தனை** (அகம் - 28)

**“வெண்கோடு கொண்டு”** ( அகம் - 172)

என்று காட்சிப்படுத்துகின்றது.

தினையினை மேய்ந்த யானைக்கூட்டம் நிலைக்கெட்டு ஓடும் படி பரணில் இருந்து கானவன் வீசிய கவண்கல்லின் கடுமையான ஓசை கானகம் முழுவதும் ஒலித்தது. அவ்வோசையைக் கேட்டுப் புலிகள் முழங்கின. புலிகளின் முழக்கத்தால் யானைகள் கதறின. அழகிய மயிலும் இடியோசை என்று எண்ணியது. இதனை,

**கல்உயர் கழுதில் சேணோன் எறிந்த**
**வல்வாய்க் கவணின் கடுவெடி ஒல்லென**
**மறப்புலி உரற வாரணம் கதற** (அகம் - 392)

என்னும் பாடல்வழி அறிந்து கொள்ள முடிகின்றது.

புனம் காக்கச்செல்லும் குறவருக்கு குறமகளிர் கள்ளினை ஊற்றிக்கொடுத்ததையும், தட்டை, தழல் என்னும் கருவிகளைக் கொண்டு கதிர்களை உண்ணவரும் கிளிகளை விரட்டியுள்ளமையையும்

**…குறவர்**
**முறித்தழை மகளிர் மடுப்ப மாந்தி**

**அடுக்கல் ஏனல் இரும்புனம் மறந்துழி (அகம் - 348)**
**தழலை வாங்கியும் தட்டை ஒப்பியும்**
**குறமகள் காக்கும் ஏனல் (அகம் - 188)**

என்னும் பாடலடிகள் புலப்படுத்துகின்றன.

**நிறைவுரை**

பாதுகாப்பான சுற்றுச்சூழல் மேம்பாடு, பொருளாதார வளர்ச்சி, மக்களின் விருப்பம் சார்ந்த வாழ்க்கை முறைகள், கருப்பொருட்களின் கட்டுப்பாடற்ற சுதந்திரம் முதலியவற்றை அகநானூறு குறிஞ்சி நில அமைப்பு, இயற்கை எழில் கொஞ்சும் வனப்பு, குறிஞ்சிநில மக்களின் தொழில்கள், பக்கமலைகள், சிற்றூர்கள் வாயிலாக அழகுற சித்திரித்திருக்கின்றது.

**"இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்**
**வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு"** (குறள்-737)

**"நாடென்ப நாடா வளத்தன"** (குறள்-739)

**"செல்வம் விளை(வு) இன்பம்"** (குறள்-738)

என்ற வள்ளுவரின் குறளுக்கு உரம் சேர்க்கும் நிலம் குறிஞ்சி நிலம் என்றுரைத்து கட்டுரை நிறைவுறுகின்றது.

**துணைநின்றவை**


- இராமநாதன் செட்டியார்.லெ.ப.கரு., 1958, **சங்கத் தமிழர் வாழ்வு,** வெள்ளையன் பதிப்புக் கழகம், இராமநாதபுரம்.
- சுந்தரமூர்த்தி இ., 1988, **வான்மறை வள்ளுவம்,** ஐந்திணைப் பதிப்பகம், சென்னை.
- சுப்பிரமணியன் ச. வே. (உரை.), 2009, **சங்க இலக்கியம் - எட்டுத்தொகை மூலமும் தெளிவுரையும், அகநானூறு** (தொகுதி-3), மணிவாசகர் பதிப்பகம், பாரிமுனை, சென்னை.
- சுப்ரமணியன் ந., 1982, **சங்ககாலச் சமுதாயம்,** நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

மதிப்பிடப்பெற்றது

# சிலப்பதிகார ஆய்ச்சியர் குரவையில் ஆழ்மன உணர்வுகள்

## Subconscious feelings of "Aaichiyar Kuravai" in Silappathikaram.



முனைவர் **ச.கண்ணதாசன்**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை (சுயநிதிப்பிரிவு)
மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி,
பசுமலை, மதுரை- 625004
அலைபேசி - 9600484338
மின்னஞ்சல் - sendoordasan@gmail.com

Abstract: Aaichiyar Kuravai is a chapter that explains the worship method of Aayar people in Mullai land (Forest region). Author Ilangovadigal describes the worship method which is performed by Aayars to their worship god 'Thirumal'. This chapter is important, because the 'Kuravai koothu' is performed after the murder of Kovalan. This chapter is not only written for 'Kuravai koothu' but also featured based on the flow of the story. In Aayarpaadi, Kannaki is expecting the return of Kovalan who went to sell the anklet. The presages happened there also increase the sadness of Kannaki and the daze of Mathiri and Iyai. So the 'Kuravai koothu' and the featured songs are completely performed to solace Kannaki. This article analyses in a psychological way that the effects of the subconscious thoughts of Mathiri and Iyai, who were dismayed by the presages and how Ilangovadigal cleared the questions which rise in reader's mind that why this Aaichiyar Kuravai is featured in this chapter.

Keywords: Aaichiyar Kuravai, Aayar people, Mullai land (Forest region), Thirumal, சிக்மண்ட் பிராய்டு, ஆய்ச்சியர், குறவர், வேட்டுவர், சு.சக்திவேல், இளங்கோவடிகள்.

### முன்னுரை

"இயற்கையிடமும் மரணத்திற்குப் பின்வரும் நிலையிடமும் மனிதன் கொண்ட அச்சமே வழிபாட்டிற்கு அடிப்படைக் காரணம்" (2010:222) என்று சிக்மண்ட் பிராய்டு கூறுவதை எடுத்துரைப்பார் சு.சக்திவேல். பிராய்டு கூறியது ஆதி சமூகமான வேட்டைச் சமூகத்திற்குப் பொருந்தும். பின்னாளில் நிலவுடைமைச் சமூகத்தில் இயற்கையை மட்டுமல்லாமல் இறைவன் எனும் பெரும் சக்தியும் உண்டு என்று மக்கள் எண்ணியதன் விளைவே இறைவழிபாட்டின் தோற்றம்.

வழிபாடு என்பது அச்சத்தின் காரணமாக நிகழ்வது என்பது பெரும்பான்மை. ஆனால் மகிழ்ச்சியின் வெளிப்பாடாகவும் வழிபாடு நடந்தது, நடக்கின்றது. எனவே மக்கள் தங்கள் மனத்தில் உள்ள துயரங்கள் தீர வழிபாடு செய்தும், மன மகிழ்ச்சியின் வெளிப்பாடாக நன்றிக் கடன் செலுத்தும் விழாவாகவும் வழிபாடுகளை நடத்தத் தொடங்கினர். ஒவ்வொரு சமூகத்திற்கேற்றவாறு வழிபாட்டு முறைகள் மாறுபடும் என்பது நடப்பியல் உண்மை.

சிலப்பதிகாரத்தில் வேட்டுவர், ஆயர், குறவர் ஆகியோர் மேற்கொள்ளும் வழிபாட்டு முறைகளை இளங்கோவடிகள் முறையே வேட்டுவரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை ஆகிய பகுதிகளில் எடுத்துரைக்கின்றார். இன்ப வெளிப்பாடு, இறை நம்பிக்கையின்வழிக் கிடைக்கின்ற ஆறுதல், துன்பத்துடைப்பு எனும் பொருண்மையின் அடிப்படையிலேயே சிலம்பில்

மூன்று சமூக மக்களும் (ஆய்ச்சியர், குறவர், வேட்டுவர்) தத்தம் மக்களோடு சேர்ந்து தங்கள் குலதெய்வங்களை வேண்டி வழிபாடு செய்கின்றனர். ஆய்ச்சியர் குரவையைப் பொறுத்தமட்டில் தீயசகுணங்களைக் கண்டு வரவிருக்கும் துன்பம் நீங்கவேண்டும் என்ற நோக்கில் குரவை கூத்து நிகழ்த்தப்படுகிறது.

ஆய்ச்சியர் குரவை இளங்கோவடிகளால் படைக்கப்பட்டதன் நோக்கம், அப்பகுதியில் இடம்பெறும் மாந்தர்களின் மனப் போராட்டங்கள், இப்பகுதி இங்கு வைக்கப்பட்டதற்கான காரணம் யாது என வாசிப்போர் தளத்தில் இருந்து எழுப்பப்படும் கேள்விகளுக்குரிய விடை யாது போன்றவை குறித்து இங்கு ஆராயப்படுகின்றன.

வாசகர் உளவியலும் படைப்பாக்கமும்

“படைப்பாளி தன் உணர்வு மூலம் படைப்பை வெளியிடத் தொடங்கி அனைவரது உள்ளத்திலும் தான் கருதிய மனஉணர்வு எழுமாறு அவ்வுணர்வுகளைக் கலைநுணுக்கக் கூறுகளுக்கு ஏற்ப மாற்றித் தருகிறான்” (1982:33) என்ற ஆ.இராமகிருஷ்ணனின் கருத்துக்கேற்றவாறு கோவலன் மடியப்போகிறான் என்பதை வாசகர்களுக்கு உணர்த்த வேண்டும் என்ற தன்னுடைய ஆழ்மனக் கருத்தை மதுரை நகருக்குள் அவர்கள் நுழையும் முன்பாகவே குறியீடாக இளங்கோவடிகள் உணர்த்துவது அனைவராலும் அறியப்பட்ட ஒன்று.

அடுத்ததாக ஆயர்சேரியில் நடக்கும் நிகழ்வு. கோவலன் சிலம்பு விற்கப்புறப்படும் பொழுது அவளை அனுப்ப கண்ணகி தடுமாறுகிறாள், தயங்குகிறாள். இதனால் அவளைப் பார்த்து,

“மாறி வருவன் மயங்கா தொழிகென” (கொலைக்களக்., 93)

கோவலன் கூறுகிறான். அதே நேரத்தில் அவனும் அதே மனநிலையில், பிரிய மனமில்லாமல், பிழைப்புத் தேடி வந்த இடத்திலும் இவளைத் தனியாக விட்டுச் செல்கிறோம் என்ற தவிப்போடுதான் செல்கிறான். இதனால்தான் அவளை ஆரத் தழுவி ஆற்றுவித்தாலும், இவனால் ஆற்றியிருக்க முடியாமல் கண்ணீர் ததும்ப விடைபெறுகிறான்.

“கருங்கயல் நெடுங்கண் காதலி தன்னை
ஒருங்குடன் தழீஇ உழையோர் இல்லா
ஒருதனி கண்டு தன் உள்ளகம் வெதும்பி
வருபனி கரந்த கண்ண னாகி..” (கொலைக்களக்., 94-97)

அவன் செல்கிறான். இந்நிலையில் அவன் செல்லும்போதே தீய நிமித்தமாகக் காளை ஒன்று எதிர்வருவதன் மூலம் அவனுக்குக் கேடு வரப்போகிறது என்பதை இளங்கோ வாசகர்களுக்குக் குறிப்பால் உணர்த்துகிறார். “ஏறு எதிர்தல் இடையரறியும் நிமித்தமாதலின் அறிந்திலன்” (2008:418) என்று விளக்கம் தரப்பட்டாலும் அது ஆயர்பாடியில் ஏற்பட்ட முதல் தீய நிமித்தமாகும். கிராமப்புறங்களில் இன்றும் காளை எதிர்வருதல் தீய நிமித்தமாகக் கொள்ளப்படுவது நினைவிற் கொள்ளத்தக்கது.

பாத்திர உளவியலும் படைப்பாக்கமும்

சிலம்பில் உளவியல் கூறுகள் மிகுந்து காணப்படும் காதைகளுள் ஆய்ச்சியர் குரவைக்குத் தனியிடம் உண்டு. ஆய்ச்சியர் குரவைக்கு முன், குரவைக் கூத்தின் பொழுது என ஒவ்வொரு படிநிலைகளிலும் உளவியல் கருத்துக்கள் மிகுந்து காணப்படுகின்றன.

கலக்கத்தோடு கோவலனை வழியனுப்பிய கண்ணகி அவன் விரைவாக வந்துவிட வேண்டும் என்று எண்ணியதைப் போலவே அவ்விருவரையும் அடைக்கலமாகப் பெற்ற மாதரியும் எண்ணியிருப்பாள். தன் இருப்பிடத்தில் இருக்கும் பொழுது அவர்களுக்கு ஏதேனும் இன்னல் நேர்ந்துவிடக் கூடாது என்பதே இதற்குக் காரணம்.

“உணர்வுகள் அல்லது மனவெழுச்சிகளால் ஒருவர் பாதிக்கப்படும் பொழுது அப்பாதிப்பைப் பகிர்ந்து கொள்ளும் வேறொருவருக்கும் அது மாற்றம் பெறுவது இயற்கையே” (1986:53) எனும் கருத்திற்கேற்ப இரவு முழுவதும் கோவலன் வரவை எதிர்நோக்கியிருந்த கண்ணகியின் மனநிலை மாதரிக்கும் ஐயைக்கும் இருந்திருக்கும்.

பொழுது விடிந்து முரசம் ஒலிக்கின்றது. முரசம் ஒலித்த பின்பு இன்று நெய்கொண்டு செல்வது நம்முறை என்று மாதரி கூறுகிறாள். வேறொரு நாளில் மாதரியின் நெய் அளக்கும் முறை இடம்பெறாமல், கோவலன் - கண்ணகி இருக்கும் நாளில் வரும்படி இளங்கோவடிகளால் திட்டமிட்டு அமைக்கப்பட்டுள்ளது. முரசம் ஒலிப்பது நெய் அளப்பதற்கு மட்டுமன்று, அது மாதரி, கண்ணகி, ஏன் மதுரை மக்களுக்கே ஒலிக்கப்படும் அபாயத்தின் குறியீடாக அமைந்துள்ளது.

தயிர்க் குடத்தைத் திறந்தவுடன்; அது உறையாததைப் பார்த்த மாதரியின் இதயம் கனக்கிறது. இந்நிலை கண்ணகிக்குத் தெரியக்கூடாது என்று அவள் எண்ணியபொழுதே, புறத்தே அடுத்தடுத்த தீநிமித்தங்கள் நிகழ்கின்றன. காளை மாடுகள் கண்ணீர் வடிக்கின்றன. வெண்ணெய் உருகவில்லை; ஆட்டுக்குட்டிகள் துள்ளி விளையாடவில்லை; பசுக்கூட்டங்கள் நடுங்கிக் கதறுகின்றன. அவற்றின் கழுத்தில் கட்டப்பட்டிருந்த மணிகள் அறுந்து நிலத்தில் வீழ்கின்றன. இவற்றையெல்லாம் இரவு முழுதும் உறங்காமல் இருந்த கண்ணகியும் பார்த்துக்கொண்டுதான் இருந்திருப்பாள்.

ஆனால் ‘காளை எதிர்வருதல்’ தீநிமித்தம் என்பதை, எவ்வாறு கோவலன் அறியவில்லையோ, அதைப்போல் கண்ணகியும் ஆயர்சேரியில் நடந்த தீய நிமித்தங்களைப் பற்றித் தெரிந்திருக்க வாய்ப்புகள் குறைவே. ஆனால் மகள் ஐயைக்கு நன்கு தெரியும். எனவே மகளைப் பார்த்து,

“குடத்துப்பால் உறையாமையும் குவிஇமில்
ஏற்றின் மடக்கண்ணீர் சோர்தலும் உறியில்
வெண்ணை உருகாமையும் மறிமுடங்கி ஆடாமையும்
மான்மணி நிலத்து அற்று வீழ்தலும் வருவது
ஒரு துன்பம் உண்டு என மகளை
நோக்கி மனம் மயங்காதே.....” (ஆய்ச்சியர் குரவை,கருப்பம் -5;1-6)

என்கிறாள். “கோபம், மகிழ்ச்சி அல்லது ஏமாற்றம் கொண்ட பேச்சாளரின் குரல் தொனியை வைத்து அவரது உள்ள உணர்வை சாதாரணமாகக் கூறிவிட முடியும்” (1986:5) என்பது உளவியல் கருத்து. கோவலன், கண்ணகி இருவரையும் விருந்தோம்புவதில் ஏதோ குறை நேரப்போகிறது என்ற ஏமாற்றத்தைத் தாய் மாதரியின் முகத்தில் காண்கிறாள் ஐயை.

நிலைமை இவ்வாறிருக்க, விடிந்தும் கோவலன் வராததால் அவனை எதிர்பார்த்திருந்த கண்ணகியின் கவலை இன்னும் அதிகரித்தே இருக்கும். ஆனால் அதை யாரும் அறியாவண்ணம் உள்ளத்தே மறைத்தே வைத்திருப்பாள். காரணம் தன் கவலைகளை வெளிக்காட்டினால் அடைக்கலம் கொடுப்பதில் குறை கண்டோம் என மாதரி முதலானோர் கவலைப்படுவர் என்று கண்ணகி எண்ணுகிறாள். ஆனால் மாதரியோ கண்ணிகியின் கவலை அதிகரித்துவிடக்கூடாது என்றெண்ணுகிறாள். எனவே மகளை நோக்கி,

“ மாதர்க்கு அணி ஆகிய கண்ணகியும் தான்காண
ஆயர்பாடியில் எருமன்றத்து மாயவனுடன்
தம்முன் ஆடிய வாலசரிதை நாடகங்களில்
வேல்நெடும்கண் பிஞ்ஞையோடு ஆடிய
குரவை ஆடுதும் யாம் என்றாள் - கறவை

கன்று துயர் நீங்குக எனவே '' (ஆய்ச்சியர் குரவை,கருப்பம் -5;7-12)

என்று கூறுகிறாள். ''கண்ணகியுந் தான்காண'' எனும் மாதரியின் கூற்றில் தான் உளவியல் கருத்துப் புலப்படுகிறது. இங்கு நடந்த தீயசகுனங்கள் பற்றிக் கண்ணகி அறிந்திருப்பாளோ இல்லையோ, ஆனால் நம்முடைய மனம் கலங்குகிறது. எனவே கோவலனைப் பிரிந்து தனிமையில் வாடும் அவள் மனம் மகிழும் படி, கண்ணன் நப்பின்னையோடு ஆடிய குரவைக் கூத்தை ஆடுவோம். கண்ணகி காணுமாறு ஆடுவோம் என்கிறாள். ''மனம் இன்னல்படும் பொழுது அவ்வின்னலைப் போக்க இறைவனை இறைஞ்சுவது மனித இயல்பு''. அதுவே இங்கேயும் நடக்கின்றது.

முன்னேற்பாடின்றி, திடீரென குரவை ஆடப்படுவதை மாதரி, ஐயை தவிர பலரும் அறிந்திருக்க வாய்ப்பில்லை. கண்ணகி இங்கே வந்திருப்பதால் அவளுக்காகக் கூத்து நடைபெறுகிறது என்றே பலர் எண்ணியிருப்பர்;. கண்ணகியோ ஆயர்களின் வாழ்வியல் கூறுகளுள் இதுவும் ஒன்று என எண்ணியிருப்பாள். ஆனால் மாதரி, ஐயை ஆகிய இருவர் மட்டும்தான் இதன் நோக்கத்தை முழுமையாகத் தெரிந்தவர்களாக இருப்பார்கள்.

‘‘கோவலன் சாவினால் பொங்கிப் பெருகும் துன்ப வெள்ளத்தில் எல்லோரும் மூழ்கி அழிந்துவிடக் கூடாதே என்பதற்காக அத்துயர உள்ளத்தைத் தாங்கித் திருப்பிவிடும் ஓர் அணைபோல் ஆய்ச்சியர் குரவை விளங்குகின்றது'' (2007:297) என்பது ஆராய்ச்சியாளரின் கருத்து. ஆனால் எல்லோரும் என்பதைவிட 'கண்ணகி' என்பவளே இங்கு முதன்மை பெறுகிறாள்.

பாட்டில் கேட்கும் குரல்

குரவைக்கூத்து ஆடுவோம் என்றவுடன் ஆயர்குலப் பெண்கள் எல்;லாம் வரவழைக்கப்பட்டு கூத்தின் முறைமைப்படி நிறுத்தப்பட்டு ஆடலும் பாடலும் தொடங்குகின்றன. அவ்வாறு பாடும் பொழுது கண்ணனை எண்ணி இன்னல் தீர்வதற்குப் பாடினாலும் பாட்டின் உட்பொருளாகக் கோவலனும் கண்ணகியுமே இடம்பெறுகின்றனர் என்றே கூறலாம்.

‘‘கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவன்
இன்றுநம் ஆனுள் வருமேல் அவன்வாயில்
கொன்றையங் தீங்குழல் கேளாமோ தோழீ ''
(ஆய்ச்சியர் குரவை,பா.19)

‘‘பாம்பு கயிறாக் கடல்கடைந்த மாயவன்
ஈங்குநம் ஆனுள் வருமேல் அவன்வாயில்
ஆம்பலந் தீங்குழல் கேளாமோ தோழீ ''
(ஆய்ச்சியர் குரவை, பா.20)

‘‘கொல்லையஞ் சாரற் குருந்தொசித்த மாயவன்
எல்லைநம் ஆனுள் வருமேல் அவன்வாயில்
முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழீ ''
(ஆய்ச்சியர் குரவை, பா.21)

என்று கண்ணனின் புகழைப் பாடினாலும் பாடலின் பின்பகுதியில் வரும், ‘‘நம் ஆனுள் வருமேல், தீங்குழல் கேளாமோ தோழீ '' எனும் தொடர்கள் கவனிக்கத்தக்கன. பாடல் வெளிப்படையாகக் கண்ணனின் புகழைப் பாடினாலும், 'நம் ஆனுள் வருமேல்' என்று கண்ணனைப் பாடியது கண்ணகியின் உளக்குறிப்பை அறிந்து அவள் மனதிற்கு மருந்து கொடுப்பது போன்று கோவலனையே குறிப்பாகக் கொண்டு பாடியுள்ளனர் எனலாம். ''வஞ்சனையை வென்று

ஆநிரையுள் மாயவன் வருவானாகில் அவன் குழலில் இனிய ஓசையைக் கேட்போம்'' என்று, மாயவன் வந்தால் மனம் மகிழ்வோம் எனப் பாடியது கோவலனின் வருகையை எண்ணிப் பாடுகிற பாங்கு. ''கேளாமோ தோழீ'' என்று பன்மையில் பாடிக் கண்ணகியே உன்னைப் போல் நாங்களும் மனக்கவலையில் தான் உள்ளோம். கண்ணன் வரவு எங்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுப்பது போல், கோவலனின் வரவு உனக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும் என்று குறிப்பால் உணர்த்திப் பாடுகின்றனர் ஆயர்குலப் பெண்கள் என இளங்கோவடிகள் எடுத்துரைக்கின்றார்.

இங்கு கோவலனை மாயவனோடு ஒப்பிடுவதற்கு முன்னோட்டமாகத்தான் கொலைக் களக்காதையில்,

''ஆயர்பாடியின் அசோதை பெற்றெடுத்த
பூவைப் புதுமலர் வண்ணன் கொல்லோ
நல்லமுது உண்ணும் நம்பி'' (கொலைக்களக்.46-48)

என்று ஆயர்கள் வாயிலாக இளங்கோவடிகள் எடுத்துரைத்தாரோ என்று எண்ணத் தோன்றுகிறது. அடுத்ததாக தொழுனைத் துறைவனும், அவனோடு கூடிய நப்பின்னையின் அழகினையும் பாடுவோம் என்று பாடத் தொடங்குகின்றனர்.

''இறுமென் சாயல் நுடங்க நுடங்கி
அறுவை யொளித்தான் வடிவென் கோயாம்
அறுவை யொளித்தான் அயர அயரும்
நறுமென் சாயல் முகமென் கோயாம்'' (ஆய்ச்சியர் குரவை,பா.23)

எனப் பாடும் பாடலில் நப்பின்னையையும் கண்ணனையும் பாடும் பாங்கில் கோவலனையும் கண்ணகியையும் உட்கொண்டே பாடுகின்றனர் எனலாம். முன்பு 'வருமேல்' என்;று ஐயம் கொண்டவர்கள் இப்பொழுது வந்து விட்டதாக எண்ணி வந்தவனையும் இருந்தவளையும் இணைத்துப் பாடுகின்றனர். இரண்டு காரணங்களுக்காக இவ்வாறு பாடினர் எனலாம். ஒன்று கண்ணனும் நப்பின்னையும் மகிழ்ச்சியாக இருப்பது போல் நீயும் கோவலனும் மகிழ்ச்சியாக இருப்பீர்கள் என்று உணர்த்துவதற்கு. மற்றொன்று இவ்வாறு பாடுவதன் மூலம் கோவலன் அருகில் தான் இருக்கிறான் எனும் எண்ணத்தைக் கண்ணகியிடம் ஏற்படுத்துவதற்கு. எப்படியாயினும் கண்ணகியை மகிழ்ச்சியடையச் செய்து அவள் மனதைத் தேற்ற வேண்டும் என்ற எண்ணம் பாட்டில் இழையோடுவதை அறியமுடிகிறது. நிறைவுப் பகுதியில்,

''…யாம்
கோத்த குரவையுள் ஏத்திய தெய்வம் நம்
ஆத்தலைப்பட்ட துயர்தீர்க்க'' (ஆய்ச்சியர் குரவை, பா.38;1-3)

என்று கூறி, பகைவரை வென்று வெற்றி பெறுபவனாகிய பாண்டியனின் வெற்றிமுரசு முழங்கட்டும் என்று கூறுவது, கோவலனுக்கு ஏதேனும் தீங்கு ஏற்பட்டாலும் அதனையும் அவன் வென்று வருவான் எனும் குறிப்பிலேயே இளங்கோவால் பாடப்பட்டுள்ளது.

இவ்வாறு ஆயர்களைக் குரவைக் கூத்தாடச் செய்து நூலைக் கற்பவரின் மனதிலும் கண்ணகிக்காக கவலைப்படும் மனநிலையை உருவாக்கிவிடுகிறார் இளங்கோவடிகள்.

முடிபுகள்

சிறுகுடி மக்களான ஆயர்குலத்தினரின் வழிபாடுகளுள் ஒன்றான குரவைக்கூத்து இளங்கோவடிகளால் படம்பிடித்துக் காட்டப் பட்டிருப்பினும்; அதுவும் சிலப்பதிகாரக் கதையை நகர்த்திச்செல்லும் ஒரு நகர்த்தியாகவே அமைக்கப்பட்டுள்ளது.

கோவலன் கொலை செய்யப்பட்ட பிறகு ஆய்ச்சியர் குரவை அமைந்துள்ளதால் கானல்வரி, கனாத்திறம் உரைத்த காதை, வழக்குரை காதை ஆகியவற்றைப் போலவே ஆய்ச்சியர் குரவையும் சிலப்பதிகாரத்தில் ஒரு முக்கியக் காதையாக அமைகிறது.

குரவைக்கூத்து நடைபெறும் முறை, கூத்துள் பாடப்படும் பாட்டு என எல்லாவற்றையும் கலைநுணுக்கத்தோடு இளங்கோவடிகள் படைத்திருந்தாலும் உளவியல் கூறுகளும்; ஆங்கே நிரம்ப உள்ளன என்பதை அறிய முடிகிறது.

கொலைக்களக் காதைக்கும் துன்பமாலைக்கும் இடையே இடம்பெறும் ஆய்ச்சியர் குரவையை வாசகர் தளத்தில் இருந்து பார்க்கும்பொழுது இளங்கோவின் முன்னோக்கு உத்தியும் காதை அமைக்கப்பட்டதற்கான நோக்கமும் புலப்படுகின்றன.

**துணைநின்றவை**


- இராமகிருஷ்ணன் ஆ., 1982, **அகத்திணை மாந்தர் ஓர் ஆய்வு**, சர்வோதயா வெளியீடு, மதுரை.
- கண்ணன்,வை.சு.சு.,1986, **குறுந்தொகை காட்டும் உளவியல் (தோழி கூற்று) (ஆய்வேடு),** தமிழ் உயர் ஆராய்ச்சி மையம், அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி.
- சக்திவேல்,சு., 2010(ஒ.ப.), **நாட்டுப்புற இயல் ஆய்வு**, மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை.
- சாமிநாதையர்,உ.வே.(பதி.), 2008(11ஆம்.பதி.), **சிலப்பதிகாரம் - மூலமும் அரும்பத உரையும் அடியார்க்கு நல்லார் உரையும்,** டாக்டர் உ.வே.சா.நூல்நிலையம், பெசன்ட்நகர், சென்னை.
- சுப்பிரமணியன் ச.வே.,(உரை.), **2004(மூ.ப.), சிலப்பதிகாரம்,** கங்கை புத்தக நிலையம், தீனதயாளுதெரு, தி.நகர், சென்னை.
- பழனி ஆ., 2007, **சிலப்பதிகாரக் காப்பியக் கட்டமைப்பு**, தமிழினி, இராயப்பேட்டை, சென்னை.


இனம் இனத்தைச் சேரும்
INAM : INTERNATIONAL E-JOURNAL OF TAMIL STUDIES

மதிப்பிடப்பெற்றது

# சிலம்பில் மதுரை Silampil maturai

**முனைவர் ஜெஸின் பிரான்ஸிஸ்,**
தமிழ் - இணைப்பேராசிரியர்
**முனைவர் ம.பிரேமா,**
உதவிப் பேராசிரியர்
**முனைவர் ஆ.ஷர்மி,**
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை
புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி - 02.
jeusinfrancistrichy@gmail.com

**Abstract:** Silappathikaram is the most prominent among the five great epics of Tamil literature. In that Epic the place Madurai was mentioned. That is the reason why the place derived the name of Madurai. The evidence of Tamil sangam, the famous Vaigai Rivers, Several fertile/ important streets where different things are sold, the richness of the people and the minute works carried out by them are the aspects revealed in this essay.
**Keywords:** Silappathikaram, Tamil sangam, literature, Rivers, Several, மதுரை, குறிஞ்சிநில அருங்காப்பியம், காண்டங்கள், முப்பது காதைகள், மதுரைக்காண்டம்

பெருங்காப்பியங்களுள் முதன்மையானது சிலப்பதிகாரம். கண்ணகியின் சிறப்பினை உலகிற்குப் பறைசாற்றிய அருங்காப்பியம். முத்தமிழின் பெருமைகளையும் மூவேந்தர்களின் மாண்புகளையும் வானுயர விரித்துச் சொல்லும் வளமார்ந்த காப்பியம். மூன்று காண்டங்கள், முப்பது காதைகள் என்ற வகைப்பாட்டின்கீழ்ச் சிலம்பின் கதை விரிந்து செல்கின்றது. இச்சிலம்புச் செல்வத்துள் உரைக்கப்பட்டுள்ள மதுரை நகரின் பன்முகச் சிறப்பினை இக்கட்டுரை ஆராய முனைகின்றது.

**மதுரை - பெயர்க்காரணம் - சிறப்பு**

மதுரை என்னும் சொல்லுக்கு இனிமை என்று பொருள். மருத மரங்கள் அடர்ந்த பகுதியாக இருந்தமையால் மருதை என்று வழங்கப்பட்டது. இதனை, **“மருதோங்கு முன்றுறை”** **(மதுரைக்காண்டம் -** 72)

என்ற பாடலடி உறுதிப்படுத்துகின்றது.

**“திசைதிசை தேனார்க்குத் திருமருத முன்றுறை”** (கலி. 26)

**“திருமரு தோங்கிய விரிமலர்க் காவின்”** (அகம்.36)

**“திருமருத முன்றுறையால்”** (பரி.22: 45)

என்று ‘சங்க இலக்கியங்கள்’ மருத மரங்கள் மிகுந்திருந்தமையால் மருதை என்று அழைக்கப்பட்டமையை மெய்ப்பிக்கின்றது. காலப்போக்கில் மதுரை என்று மருவியது. கல்வெட்டில் ‘மதிரை’ என்னும் பெயர் காணப்படுகின்றது. ‘தூங்கா நகர்’என்ற பெருமையும் மதுரைக்கு உண்டு. தென்னிந்தியாவின் ஏதென்ஸ் நகரம் என்று அழைக்கப்படும் தனிச்சிறப்பு மிக்கது. தற்போதைய திண்டுக்கல், தேனி, விருதுநகர், இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை ஆகிய மாவட்டங்கள் முன்பு மதுரை மாவட்டத்தின் ஒருபகுதியாக இருந்தன.

பழமையான சிறப்புடைய மாடமாளிகைகளைப் பெற்றிருக்கும், தேவர்களும் வந்துறையும், பொதியமலைத் தென்றல் உலவும் வளமார்ந்த மதுரை என்பதனையும் கூடல், மாநகர், மல்லல், தீதுதீர் என்ற பல்வேறு அடைமொழிகளைத் தன்னகத்தே கொண்ட தனிச்சிறப்பு மிக்கது 'மதுரை' என்பதனையும்,

**"ஓங்குயர் கூடல்"** **(ஊர்காண் காதை** - 6)

**"வானவர் உறையும் மதுரை"** (புறஞ்சேரி -181)

**"மல்லல் மதுரை"** **(ஊர்சூழ் வரி** - 16)

**"மாட மதுரை மாநகர்"** **(அடைக்கலக்காதை** - 112)

**"மதுரை மூதூர் மாநகர்"** **(அடைக்கலக்காதை** - 6)

**"தீதுதீர் மதுரை"** **(அடைக்கலக்காதை** - 9)

**"தென்னவன் பொதியில் தென்றலொடு புகுந்து"** (புறஞ்சேரி - 115)

என்று 'சிலம்பு' குறிப்பிடுகின்றது.

**மதுரை - முச்சங்கம்**

சங்கம் வைத்துச் செந்தமிழ் வளர்த்த நகரம் மதுரை. இது பாண்டிய நாட்டின் பழமையான தலைநகரமாக விளங்கியுள்ளது. தென்மதுரையில் சிறப்புற்று விளங்கிய 'முதற்சங்கம்'கடற்கோளால் அழிந்துவிட்டது. அடுத்து, கபாடபுரத்தில் இடைச்சங்கம் தோற்றுவிக்கப்பட்டது. மற்றொரு கடைச்சங்கம் நிறுவப்பட்டது. அவ்வாறு கடைச்சங்கம் காலூன்றிய பகுதியே இன்றைய மதுரை.

**"தமிழ்வரம் பறுத்த தண்புனல் நன்னாட்டு" (வேனிற்காதை:2)**

**"தென்தமிழ் நாட்டுத் தீதுதீர் மதுரை" (நாடுகாண்காதை**-58)

**"தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின் மதுரை" (மதுரைக்காஞ்சி)**

**"தமிழ்கெழு கூடல் தண்கோல் வேந்தே"** (புறம் - 58)

**"தென்தமிழ் மதுரை" (மணிமேகலை)**

**"மகாபாரதம் தமிழ்ப் படுத்தும்**
**மதுராபுரிச் சங்கம் வைத்தும்" (சின்னமனூர்ச் செப்பேடு)**

இச்சான்றுகளின் வழியாக மதுரையில் 'சங்கம்'இருந்தமையை அறிந்துகொள்ள இயலுகின்றது.

**மதுரை - வையை**

உலகிற்குரிய பலபொருளை விளைவிக்கின்ற உயர்ந்த ஒழுக்கமுடைய புலவர்களுடைய நாவில் பொருந்திய திருமகளை ஒத்தது வையை. 'வையை' பருவம் பொய்யாத பாண்டியர் குலக் கொடியுள்ளாள் என்பதனை முத்தமிழ்க் காப்பியம் பெருமையுடன் எடுத்துரைக்கின்றது.

**“நீடுநீர் வையை” (துன்பமாலை - 1)**

**“உரவுநீர் வையை ஒருகரைக் கொண்டாங்கு” (கட்டுரைக்காதை- 190)**

**“வையை என்ற பொய்யாக் குலக்கொடி”(புறஞ். 170)**

என்று வையையில் நீர் நிரம்பி இருப்பதையும், இடையறாது நீர்வரத்து மிகுந்திருப்பதையும், மாரி பொய்த்தாலும் வற்றாத நீரையுடையது என்றும் சிலம்பு சுட்டிக்காட்டுகின்றது. வையையின் சிறப்பினை,

**“வருபுனல் வையை வார்மண லகன்றுறை” (அகம் - 36)**

**“தீம்புனல் வையை” (பரி. 22:45)**

என்று இலக்கியங்களில் இடம்பெற்றிருப்பது ஒப்புநோக்கத்தக்க வகையில் உள்ளது.

**வீதிகள்**

அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் வசிக்கும் நால்வேறு வீதிகளும், முச்சந்தியும், நாற்சந்தியும், கோயிற்கடைத் தெரு(ஆவணவீதி), மன்றுகளும், முடுக்குகளும், குறுந்தெருக்களும், ஞாயிற்றின் கதிர் நுழையா வண்ணம் புதிய சிறு கொடி, பெருங்கொடிப் பந்தர் முதலியவை மதுரை நகரில் மலிந்து காணப்பட்டன.

**அரசவீதி**

மிகுந்த செல்வம் மிக்கவர்கள் இவ்வீதியில் வாழ்ந்தனர். அவர்களின் வாழ்க்கை மகிழ்ச்சி நிறைந்தாக இருந்தது என்பதனை,

**“பெற்ற செல்வம் பிறழா வாழ்க்கைப்
பொன்தொடி மடந்தையர் புதுமணம் புணர்ந்து
செம்பொன் வள்ளத்துச் சிலதியர் ஏந்திய
அம்தீம் தேறல் மாந்தினர் மயங்கிப்” (ஊர்காண் காதை:130-134)**

என்ற அடிகளின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகின்றது.

**கலைஞர்கள் வீதி**

இத்தெருவில் செல்வமுடைய மக்களைக் கலைகளால் மகிழ்வூட்டுவதற்காக நிற்றல், இயங்கல், இருத்தல், கிடத்தல் என்ற நால்வகை மரபுடைய அவினய கூத்துகளையும், ஏழ் வகை இசைக்கூறுகளையும் நால்வகை கூத்தினைக் கொடுக்கும் மரபினரும், எண்ணெண் கலையோர், அதாவது 64 கலைகளிலும் வல்ல கலைஞர்களும் வசித்தனர். இதனை,

**“ஏம வைகல் இன்துயில் வதியும்
பண்ணும் கிளையும் பழித்த தீம்சொல்
எண் எண் கலையோர் இருபெரு வீதியும்” (ஊர்காண்காதை:165-167)**

என்ற பாடலடிகள் உரைக்கின்றன.

**இரத்தினக்கடைத் தெரு**

நான்கு குற்றங்களும் நீங்கிய இந்திரவில் போன்று ஒளி விடும் வைரங்களும், பசிய கதிரொளி பரந்த மரகதங்களும், நூல்களில் விதித்த முறையினின்று பிழையாது விளங்கிய பதுமம், நீலம், விந்தம், படிதம் என்னும் நால்வகை சாதி மாணிக்கங்களும், பூனைக்கண்கள் போன்ற புருடராக்கற்களும், தேன்துளி என்று சொல்லப்பட்ட வைடூரியங்களும், இருளை தெளித்து வைத்தாற் போன்ற நீல மணிகளும், மஞ்சளும் சிவப்பும் கலந்த கோமேதகக் கற்களும், வட்டவடிவமான முத்துக்களும் செம்மையான கொடி பவளங்களும், பகைவர் வருந்துதலை அறியாத பயன்மிக்க இரத்தின கடைதெருவில் இருந்தமையை,

**"வகைதெரி மாக்கள் தொகை பெற்று ஓங்கிப்**
**பகைதெறல் அறியா பயம்கெழு வீதியும்" (ஊர்காண்காதை** 199 -200)

**பொற்கடைதெரு சாதரூபம் கிளிச்சிறை ஆடகம்**
**சாம்பூநதம், என ஓங்கிய கொள்கையின்**
**பொலம் தெரிமாக்கள் கலங்கு அஞர்ஒழித்து ஆங்கு**
**இலங்கு கொடி எடுக்கும் நலம் கிளர் வீதியும்" (ஊர்காண்** 201 -204)

என்று இளங்கோவடிகள் காட்சிப்படுத்துகின்றார். மேலும், சாதரூபம், கிளிச்சிறை, ஆடகம், சாம்பூநதம் என்னும் நான்கு சாதியாகிய பொன்னின் வேற்றுமையைப் பகுத்தறியும் பொன்வணிகர் வாங்குநர்க்குப் பொன்னின் வகைகளைப் பிரித்துக் காட்டுவதற்காகக் கொடிகளை நட்டு வைத்துள்ள பொன்கலைத்தெருவும் இருந்துள்ளது. நால்வகை பொன்னிலும் உயரியது சாம்பூநதம் என்பதனை,

**"பொன்னுக்கு சாம்புநதம்"** (34)

என்று திருவள்ளுவமாலை குறிப்பிடுகிறது.

**துணிக்கடை வீதி**

பருத்தி நூலினாலும் விலங்குகளின் மயிரினாலும், உண்மையான பட்டு நூலாலும் என்னென்ன வகையென தெரியாத நிலையில் அழகிய வேலைப்பாடுகள் உடைய பல நூறுகளாக அடுக்கி வைக்கப்பட்ட துணிக்கடைத் தெருவும்; அமைந்திருந்தன. நெய்தல் தொழிலைச் செய்கின்ற காருகராகிய சாலியர் இருப்பிடங்களும் ஏராளமாக இருந்தன. இச்செய்தியைக் கீழ்க்காணும் தொடர்கள் பறைசாற்றுகின்றன.

**"நூலினும் மயிரினும் நுழைநூல் பட்டினும்**
**பால்வகை தெரியாப் பல்நூறு அடுக்கத்து**
**நறுமடி செறிந்த அறுவை வீதியும்" (ஊர்காண்காதை** 205 -207)

**"பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்**
**கட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும்" (இந்திரவிழா -** 16 -17)

**"எலிமயிர் போர்வை" (சீவகசிந்தாமணி)**

**"செந்நெ ருப்புணுஞ் செவ்வே லிம்மயிர்**
**அந்நெருப்பள வாய்பொற் கம்பலம்" (சீவகசிந்;தாமணி** 2686)

அரசர்களும் செல்வமிக்கவர்களும் வாழ்ந்த பகுதியாதலால் அவ்வீதிகளில் செல்வர்கள் பயன்படுத்தக்கூடிய பொருள்களையே விற்பனை செய்தனர். நுகர்வோரின் பயன்பாட்டுக்கேற்ப

பொருள்களும், அப்பொருள்களை விற்பனை செய்வோரும் அப்பகுதியில் வாழ்ந்தனர் என்பதை,

**“அரசுவிழை திருவின் அங்காடி வீதியும்” (ஊர்காண்காதை - 179)**

என்ற தொடர் உறுதிபடுத்துகின்றது.

**கூலவீதி**

நிறுக்கும் கோலாகிய துலாம், முகந்து அளக்கும் அளவையாகிய பறை, மரக்கால் முதலியவற்றைக் கொண்டு பெரிய மிளகு பொதியுடன் கூட்டம் கூட்டமாக பதினொரு வகை கூலங்களை விற்பனை செய்ய குவித்துள்ள கூலக்கடைத் தெருவினை,

**“கரும்கறித முடையொடு**
**கூலம்குவித்த கூலவிதியும்” (ஊர்காண்காதை - 210:211)**

**“நெல்லுப் புல்லு வரகு தினை சாமை**
**இறுங்கு தோரையொடு கழைவிளை நெல்லே**
**இறுங்கு தோரை யிராகியென் கூலம்**
**எள்ளுக் கொள்ளுப் பயறுழுந்த வரை**
**கடலை துவரை மொச்சை யென்றாய்**
**குடனிவை முதிரைக் கூலத்துணவே”(இந்திரவிழா ஊரெடு.காதை)**

என்று சிலம்பு சித்திரிக்கின்றது.

**தனிப்பெண்டு வீதி**

கோவிற்பணி செய்யும் மகளிர் வாழ்ந்த வீதியினை,

**“மாதர் வீதி மறுகிடை நடந்து**
**பீடிகைத் தெருவில் பெயர்வோன்”(கொலைக்களக்காதை - 104:105)**

என்று கோவலன் தனிப்பெண்டு வீதியின் வழியே கடந்து சென்றதனை இளங்கோவடிகள் தெளிவுபடுத்துகின்றார்.

**கொடித்தேர் வீதி**

தீக்கடவுளை மதுரை மீது ஏவ அதன் விளைவாக, கூலம் விற்கும் கடைவீதியும், தேரோடும் வீதியும், நான்கு வகை வருணத்தார் வாழும் வீதியும், வில்லாற்றலில் சிறந்த அர்ச்சுனன் காண்டவ வனத்தைத் தீயினுக்கு அளித்த நாள் போல் தீப்பரவி எங்கும் சாம்பலாயின என்பதை,

**“கூலமறுகும் கொடித்தேர் வீதியும்**
**பால்வேறு தெரிந்த நால் வேறுதெருவும்” (அழற்படுகாதை - 110:111)**

என்று அழற்படுகாதை தெரிவிக்கின்றது.

**சுருங்கை வீதி**

**“சுருங்கை வீதி மருங்கின் போகி” (ஊர்காண். -65)**

புகுந்து செல்லுதலை ஒருவரும் அறியாதபடி நிலத்தின்கீழ் மறைத்துப் படுத்த வழி. இதனைக் கரந்துறை எனவும் கரந்து படை எனவும் கூறுவர்.

**நிறைவுரை**

இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் மதுரைக்கு வளம் சேர்க்கும் வையையின் நீர்ப்பெருக்கு, காண்போரை வியக்க வைக்கும் ஒழுங்கமைப்பு மிக்க அரசரும் விரும்பும் பல்வகை வீதிகள், விலையுயர்ந்த பொருள்களின் விற்பனை முதலியவற்றை இலக்கிய நயத்துடன் சித்திரித்துள்ளார். இவற்றின் வாயிலாக கோயில்களின் நகரம் என்று அழைக்கப்படும் ஓங்குயர் மதுரையின் மாண்பினையும், தமிழர்களின் கலைநுணுக்கங்களையும், செம்மாந்த வாழ்வியலையும் அறிந்துகொள்ள முடிகின்றது.

**துணைநின்றவை**


- கோபிநாத் அ., 2013, **தமிழ்க் காப்பியங்களில் அவலச்சுவை**, இந்திரா பதிப்பகம், மாம்பழச் சாலை, திருச்சி - 5
- பட்டாபிராமன் துரை., மாலினி பா., & மூவேந்தன் ப.சு.(ப.ஆ.), 2007, **காப்பிய அருவி** (கருத்தரங்கக் கட்டுரை), தமிழியல் துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்.
- …, 2007, **காப்பிய உலா**, தமிழியல் துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்.
- வேங்கடசாமி நாட்டார் ந.மு. (உரை.), 2014, **சிலப்பதிகாரம்**, அமிழ்தம் பதிப்பகம், சென்னை.
- ஜகந்நாதன் கி.வா., 2009, **தமிழ்க் காப்பியங்கள்**, அமுத நிலையம், சென்னை

# பொன்னீலனின் 'தேடல்' நாவல் - பன்முகப் பார்வை

## Thedal Navalum Panmugap Parvaiyum

முனைவர் பா.ஈஸ்வரன்
உதவிப்பேராசிரியர்,
கலசலிங்கம் கல்வி மற்றும் ஆராய்ச்சி மையம்,
(நிகர்நிலைப் பல்கலைக்கழகம்)
கிருஷ்ணன்கோவில், ஸ்ரீவில்லிப்புத்தூர் வட்டம்,
விருதுநகர் மாவட்டம் - 626 126.

Dr.ESWARAN.P
Assistant Professor of Tamil,
Department Of English,
Kalasalingam Academy of Research and Education,
Anand Nagar, Krishnankoil,
Virudhunagar District - 622 126. p.eswarpala@gmail.com

**Abstract:** Research in this topic "Thedal Navalum Panmugap Parvaiyum" has the detail about the Novelist, and Sahitya Award winner Ponnilan. It has the detail of the introduction of Ponnilan, the beginning of the novel, the first Novel, the explanation about the novel, the natural elements of the novel, abstract, the title's aptness, story, main theme, the beginning, ascendant, end, characters, and their introduction, the way of narrating stories, the usage of language, and its style, regional dialect, the usage of vadamozhi, and English words, Irrattai Kilavi, Adukkuthodar, the various types of fish, food etc.

**Keywords:** Ponnilan, Sahitya Award, Novelist, ascendant, end, characters, Adukkuthodar தேடல், கன்னியாகுமரி, பொன்னீலன், கடலோரக் கிராமம், கரிசல்.

கடலோரக் கிராமம் என்றாலே கடலில் மீன்பிடிப்பது அக்கிராமத்து மக்களின் முதன்மைத் தொழிலாக அமையும். அங்குள்ள கிராமத்து மக்களின் வாழ்க்கையின் பெரும்பங்கு கடலில்தான் அமைகின்றது. கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற ஆண்கள் கரை வந்து சேர்ந்தால்தான் உயிர் நிச்சயம். சிலநேரம் உயிரும்கூட கடலில் முடிவதாய் அமைந்துவிடும். குடும்பத் தலைவர்கள் உயிரோடு இல்லையென்றால், பெண்களின் வாழ்க்கை நிலை பெருந்துன்பக் கடலில் மூழ்கிவிடும். மீனவர்களின் இப்படிப்பட்ட பல துன்பங்களையும் துயரங்களையும் சுமந்திருக்கின்ற பொன்னீலனின் 'தேடல்' நாவலைப் பன்முகப் பார்வையில் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

### எழுத்துலகில் பொன்னீலன்

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலுக்கு அருகிலுள்ள மணிகட்டிப் பொட்டல் என்ற ஊரில் 15.12.1940இல் பிறந்தவர் பொன்னீலன். இவர் இளம் வயதிலேயே மார்க்சியச் சிந்தனை கொண்டவர். இன்றளவும் எளிமையின் வடிவமாகக் காட்சி தருபவர். பொன்னீலனின் 'ஊற்றில் மலர்ந்தது' என்ற சிறுகதைத் தொகுப்பு 1978இல் வெளிவந்தது. இவரது 'கரிசல்' நாவலும் இதே ஆண்டில்தான் (1978) வெளிவந்தது. இந்நாவல்தான் பொன்னீலனைச் சிறந்த எழுத்தாளராக அடையாளம் காட்டியது. 1992-இல் வெளிவந்த 'புதிய தரிசனங்கள்' என்னும் நாவல் 'சாகித்திய அகாதெமி' விருது பெற்றது. பொன்னீலன் சிறந்த நாவலாசிரியராகவும் சிறுகதை

எழுத்தாளராகவும் தன்னுடைய தடத்தைப் பதித்தவர். இதன் விளைவாகத்தான் 'ஊற்றில் மலர்ந்தது', 'புதிய மொட்டுகள்', 'இடம் மாறி வந்த வேர்கள்' ஆகிய சிறுகதைகள் தமிழ் உலகிற்குக் கிடைத்தன.

**தொடக்க காலப் புதினமும் காப்பியத்தன்மையும்**

தொடக்ககாலப் புதினத்தில் காப்பியத்தன்மை இயல்புகளாக இருந்திருக்கின்றது. இதனை, "தமிழ்ப் புதினம் முதலில் ஓர் உரைநடைக் காப்பியமாகக் கருதப்பெற்றது. இடம், காலம் முதலியவற்றின் விரிவான வருணனைகளும் பாத்திரங்களின் உயர்வு நவிற்சியான வருணனைகளும் கதைத்தலைவனும் தலைவியும் தன்னிகரற்றவர்களாகப் படைக்கப்படுதலும் ஆகிய காப்பியத் தன்மைகள் தொடக்க காலப் புதினங்களில் இயல்புகளாக அமைந்தன." என்று தா.ஏ.ஞானமூர்த்தி தமது இலக்கியத் திறனாய்வு என்ற நூலில் (ப.296) எடுத்துரைக்கின்றார்.

**முதல் தமிழ்ப் புதினம்**

முதல் தமிழ்ப்புதினம், "'பிரதாப முதலியார் சரித்திரம்' என்பது முதல் தமிழ்ப் புதினமாகும். இது வேதநாயகம்பிள்ளை அவர்களால் 1876-ஆம் ஆண்டில் எழுதப்பெற்றது. இவரது இரண்டாவது புதினம் 'சுகுண சுந்தரி' என்பது. இவ்விரு புதினங்களும் இன்பமாகவே முடிகின்றது." என்று தா.ஏ. ஞானமூர்த்தி தமது இலக்கியத் திறனாய்வு என்ற நூலில் (பக்.296-297) சான்றுபகர்கின்றார்.

**புதினத்தின் கூறுகள்**

புதினத்தின் கூறுகளாக, "1.கதைக்கோப்பு, 2.பாத்திரங்கள், 3.உரையாடல், 4.இடமும் காலமும் அல்லது பின்னணி, 5.நடை, 6.வாழ்க்கை விளக்கம் அல்லது வாழ்க்கை உண்மை" என்னும் இந்த ஆறு கூறுகளைத் தா.ஏ. ஞானமூர்த்தி தமது இலக்கியத் திறனாய்வு என்ற நூலில் (பக்.298) குறிப்பிடுன்றார். இந்தக் கூறுகளையும் பொன்னீலின் 'தேடல்' நாவலில் காணமுடிகின்றது.

**புதினத்தின் சிறந்த இயல்புகள்**

"ஆசிரியரின் உண்மையான அனுபவத்தைப் பொருளாகக் கொண்டிலங்கும் புதினமே சிறந்ததாகும். நம்பத்தகுந்த கருத்துக்களும் நிகழ்ச்சிகளும் இல்லாத புதினம் உயர்ந்ததாகக் கொள்ளப்பெறாது. வாழ்க்கையின் எந்தப் பொருளைப் பற்றிப் புதின ஆசிரியர் எழுத விரும்பினாலும் அதை நன்கு தெரிந்தவராகவும் அதன்கண் அனுபவமுடையவராகவும் இருத்தல் வேண்டும்." என்று தா.ஏ.ஞானமூர்த்தி தமது இலக்கியத் திறனாய்வு என்ற நூலில் (ப.299) சுட்டிச் செல்கிறார். தேடல் நாவலின் ஆசிரியர் பொன்னீலன் கடற்கரைப் பகுதியைச் சார்ந்தவர் என்பதால் மீனவ மக்களின் வாழ்க்கையினை நேரில் கண்டு, மீனவ மக்களோடு பேசிப் பழகக்கூடிய வாய்ப்புடையவர். அதனால்தான், தேடல் நாவலில் மீனவ மக்களின் வாழ்க்கை முறைகளையும் உணவு மற்றும் பழக்கவழக்கங்களையும் மீன் வகைகளைப் பற்றியும் விரிவாகக் காட்சிப்படுத்தியுள்ளார். சிறந்த நாவலின் தன்மைகளைத் 'தேடல்' நாவல் பெற்றிருக்கின்றது(ஆகையால்தான், மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தேர்வுக்குழுவினரால் தேர்ந்தெடுக்கப்பட்டு 'தேடல்' நாவல் கல்லூரி மாணவர்களுக்குப் பாடத்திட்டத்தில் வைக்கப்பட்டுள்ளது).

**நாவல் - தலைப்புப் பொருத்தம்**

'தேடல்' என்பது நாவலின் தலைப்பாகும். 'தேடல்' என்பது பணத்தையோ, பொருளையோ, மனிதனையோ, மிருகத்தையோ, தாவரங்களையோ இப்படி எதையாவது ஒன்றைத் தேடுதலைக் குறிக்கும். இத்தேடல் நாவலில் சில்வி, தன்னை ஏமாற்றிக் கருவுறச்செய்த ரூபனைத் தேடுதல், ஜான் தன் தந்தையைத் தேடுதல், ரூபனும் மிக்கேலும் பணத்தாசையால் பணக்காரப் பெண்ணைத் தேடுதல், தாசன் ஒருதலைக்காதல் மயக்கத்தால் சில்வியைத் தேடுதல், தங்கள் வாழ்வாதாரத்திற்காக மீனவர்கள் கடலில் மீனைத் தேடுதல் இப்படி யாராவாது எதையாவது ஒன்றைத் தேடிக்கொண்டேதான் இருக்கிறார்கள். ஆகையால், 'தேடல்' என்ற தலைப்பானது மிகப் பொருத்தமாக அமைந்துள்ளது எனலாம்.

**கதைக்கரு**

ஏழ்மையில் சமநிலையில் இருக்கின்றபோது மனிதர்களின் மனநிலை ஒருமாதிரியாகவும், அதே மக்கள் வாழ்கையில் சற்று உயர்வடைந்த பிறகு அவர்களின் வேறுபட்ட மனநிலையையும் பொன்னீலன் கதைக்கருவாக அமைத்திருக்கின்றார்.

**கதைச்சுருக்கம்**

கதைத்தலைவி சில்வியின் தந்தை சில்வரசு. சில்வியை ஒருதலையாகக் காதலிப்பவன் தாசன். இவர்கள் இருவரும் கதைத்தலைவன் ரூபனின் தந்தை மிக்கேலிடம் கட்டுமரத்தை வைத்து மீன்பிடிக்கும் தொழிலாளியாக வேலை பார்க்கின்றனர். தாசன் சில்வியைக் காதலிக்கின்றான். ஆனால், சில்வி ரூபனைக் காதலிக்கின்றாள். ரூபனும் சில்வியைக் காதலிக்கிறான். கடலில் மீன்பிடிக்கச் சென்ற சில்வியின் தந்தை கடலலையில் சிக்கி இறந்துவிடுகிறார். ஊர்த்திருவிழாவில் ஊர்ப் பொதுமன்றத்தில் நிகழ்ச்சி நடந்துகொண்டிருக்கின்றது. அப்போது மின்சாரம் தடைப்பட்டுவிடுகின்ற நேரத்தைச் சந்தரப்பமாகப் பயன்படுத்திக்கொண்டான் ரூபன். ரூபனால் சில்வி கர்ப்பம் அடைகிறாள். அதனால் ஆண்குழந்தை பிறக்கின்றது. அக்குழந்தைக்கு ஜான் என்று பெயரிடுகிறாள். ரூபன் பணக்காரப் பெண்ணைத் திருமணம் செய்ய விழைகிறான். சில்வியின் வயதான பாட்டி ஆகத்தாளுக்கு இச்செய்தி தெரிந்து இறந்துவிடுகிறாள். ரூபன் கட்டுமரம் வைத்திருப்பவர்களுக்குப் போட்டியாக எந்திரப்படகு வாங்கி, மீன்பிடித் தொழில் செய்வதில் பல பிரச்சனைகள் செய்து, பணக்காரன் ஆகிவிடுகிறான். சில்வியைத் திருமணம் செய்ய மறுக்கிறான். அதனால், தாசனின் ஆதரவில் கருவாடு விற்றுப் பிழைப்பு நடத்துகிறாள் சில்வி. குழந்தைகள் தின விழாவில் ஜான் அனைத்துப் போட்டிகளிலும் முதலிடம் பிடிக்கிறான். அந்நேரத்தில் பல குழப்பங்கள் ஏற்பட, தாசன் அந்நேரத்தைப் பயன்படுத்தி ரூபனையும் சில்வியையும் தன் நண்பர்களின் ஆதரவோடு சேர்த்து வைக்கின்றான். நாவலின் இறுதியில் கட்டுமரத்தை வைத்து மீன்பிடித்துப் பாதிப்படைந்த தொழிலாளர்களுக்கு தோழர் ஜோசப், சந்திரன் தலைமையில் சைமன், தாசன் முன்னிலையில் தொழிலாளர் நலச்சங்கம் அமைக்கப்படுகிறது.

**கதைத் தொடக்கம், உச்சம், முடிவு**

மீனவர்கள் கடலுள் மீன்பிடித்துவிட்டுக் கடற்கரைக்குப் போட்டி போட்டுக்கொண்டு வருவதாகக் கதையின் தொடக்கம் அமைகின்றது. ரூபன் கட்டுமர மீனவர்களுக்கு எதிராக எந்திரப்படகு வாங்கிப் பணக்காரன் ஆவதும், தன்னால் கர்ப்பமடைந்த சில்வியின் கருவினைக் கலைக்கச் சொல்வதும் கதையின் உச்சத்தினை எட்டுகின்றது. ரூபனையும் சில்வியையும் தாசன் சேர்த்து வைப்பதும், தோழர் ஜோசப், சந்திரன் தொழிலாளர் நலச்சங்கம் அமைப்பதும் கதையின்

சிறந்த முடிவாக அமைகின்றது. மொத்தத்தில் நாவலைப் படிக்கும்போது ஒருவிதமான ஆவலை ஏற்படுத்துகின்றது.

**பாத்திரப் படைப்புகள்**

மிக்கேல் (கணவன்) — மேரி (மனைவி), ரூபன் (மகன்), சூசனா (மகள்), வின்சென்ட் (மகன்) இவர்கள் ஒரு குடும்பத்தினர். ஆகத்தாள் (அம்மா) — சில்வரசு (ஆகத்தாளின் மகன்), சில்வி (சில்வரசுவின் மகள்), ஜான் (ரூபன் — சில்வியின் மகன்) இவர்கள் மற்றொரு குடும்பத்தினர். ரோசாரியோ — பூத்துறை எந்திரப்படகு முதலாளிகளின் ஒருவன். மனைவி மற்றும் ஒரு மகளோடு வாழ்பவன். ரீத்தா — அம்புரோஷ் என்பவனால் திருமணத்திற்கு முன்பே 3 மாதம் கர்ப்பம் ஆனபின்பு திருமணம் செய்தவள். தாசன், சைமன், வால்டர், கமலூசு, சூசை ஐந்துபேரும் நண்பர்கள். பூதநாதன் ஆலப்புழைக் கம்பெனியின் ஏஜண்டு, பெரிய வியாபாரி. சூசம்மா-கணவனை இழந்த விதவைப் பெண், பூதநாதனோடு தவறான உறவு வைத்திருப்பவள். பீத்தர் — மீனை ஏலம் போடுபவன் இவ்வாறாகப் பாத்திரங்களைப் பொன்னீலன் அமைத்துள்ளதனைக் காணமுடிகின்றது.

**பாத்திரங்கள் அறிமுகம்**

மிக்கேலுக்கு மனைவி, இரண்டு மகன்கள், ஒரு மகள் இருக்கிறார்கள். இவன் ஒரு கட்டுமரத்தின் சொந்தக்காரனாகவும், பூனைக்கண்ணை உடையவனாகவும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளான். ரூபன் விலையுயர்ந்த வெளிநாட்டுச் சிவப்பு லுங்கியும், மடிப்புக்கலையாத நீலச்சட்டையும் அணிந்து கடற்கரையில் தரகனாக அலைபவன். சில்வியைக் காதலிப்பவனாக அறிமுகம் செய்யப்பட்டுள்ளான். சூசனா வீட்டு வேலையில் தனது அம்மா மேரிக்கு உதவி செய்பவளாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளாள். வின்சென்ட் விளையாட்டுச் சிறுவனாகக் காட்டப்பட்டுள்ளான். தாசன் இரும்பு உடம்புக்காரனாகவும், தாய் இல்லாதவனாகவும், பன்னிரண்டு வயதில் ஊரைவிட்டு ஓடியவனாகவும், பின்பு மீண்டும் வந்து மிக்கேல் சில்வரசோடு கடலில் மீண்பிடிப்பவனாகவும், சில்வியை ஒருதலையாகக் காதலிப்பவனாகவும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளான். சில்வி தந்தை பாட்டியோடு வாழ்பவளாகவும், ரூபனால் ஏமாற்றப்பட்டு ஆண் குழந்தையோடு, தந்தை பாட்டி இல்லாமல் தாசன் ஆதரவில், மீன் விற்று வாழ்க்கை நடத்துபவளாகவும், இறுதியில் வால்டர், கமலூசு முயற்சியால் ரூபனிடம் சேரக்கூடிய பாத்திரமாக அறிமுகப்படுத்தப்பட்டிருகின்றாள்.

பூதநாதன் பெரிய வியாபாரி, மிகப்பெரிய ஆலப்புழைக் கம்பெனியின் ஏஜண்டு, சொந்த ஊர் திருவனந்தபுரம், பத்துவருட வாழ்க்கை ஆலப்புழைக் கடற்கரையில், கடற்கரைக்காரராகவே ஆகிப்போனவர். பெரிய தொந்தியின் அடியில் வேட்டியும், பட்டன் இல்லாத அரைக்கைச் சட்டை, கண்களைச் சுருக்கியவாறு இழுத்துப்பேசுதல், சிவந்த கழுத்தில் சிலுவையைத் தொங்கவிட்டிருத்தல், தந்திர புத்தியை உடையவர், வழுக்கைத் தலை, சூசம்மையிடம் திருட்டுத்தனமாக உடலுறவு வைத்திருப்பவராக அறிமுகம் செய்யப்பட்டுள்ளார். இவ்வாறாகத் 'தேடல்' நாவலின் பாத்திர அறிமுகத்தின் வாயிலாகப் பாத்திரங்களின் குணாதிசயங்களையும் பண்பு நலன்களையும் தொழில்களையும் ஆடைகளின் நிறத்தினையும், உடல் வருணனையையும் அறிந்துகொள்ள முடிகின்றது.

**கதை சொல்லும் விதம்**

தேடல் நாவலில் ஆசிரியரே பெரும்பங்கு கதைசொல்லியாகத் திகழ்கின்றார். தேவையான இடங்களில் பாத்திரங்களைத் தங்களுக்குள் உரையாடச் செய்துவிட்டு ஆசிரியர் பொன்னீலன் ஒதுங்கிக் கொள்கிற விதம் சிறப்பிற்குரியதாக அமைகின்றது.

### மொழிநடையும் வட்டார வழக்குச் சொற்களும்

நாவலின் மொழிநடையானது தமிழில் அமைக்கப்பட்டிருந்தாலும், இடையிடையே வடசொற்களும், ஆங்கிலம் உள்ளிட்ட பிறமொழிச் சொற்களும், வட்டார வழக்குச்சொற்களும் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. இதனால், கடலோரக் கிராம மீனவ மக்களின் பேச்சு மொழியை அறிந்துகொள்ள முடிகின்றது.

### வடமொழிச்சொற்கள்

வியாபிக்கின்றன (பக்.1), விஸ்வரூபமெடுத்து (பக்.1), ஜனங்கள் (பக்.2), பிரவேஷத்துக்காக (பக்.2), குழிந்தது (பக்.2), சீவிதம் (பக்.4), விஷமத்தனம் (பக்.5), வாஞ்சை (பக்.11), அரையில் லங்கோடு (பக்.6), மேசை (பக்.13), அசுவை(பக்.13), ஜோதி (பக்.22), இஷ்டம் (பக்.23), பிரகாசம் (பக்.27), கர்ஜனை (பக்.29), குஷி (பக்.29), வியஷம் (பக்.32), அரிஷ்டக்கடை (பக்.33), சேவகம் (பக்.34), பிரத்யேகம் (பக்.36), ஜனங்கள் (பக்.36), ஸ்தம்பித்து (பக்.45), ஜீவனில்லாமல் (பக்.46), பஞ்சம் (பக்.48), ராட்சச (பக்.49), முஷ்டி (பக்.59), கேசம் (பக்.60), ஜட்டி (பக்.62), ஜன்னல் (பக்.74), பஞ்சாயத்து (பக்.78), ஜமாய்த்து (பக்.78), ஜெயிக்கபரானாம் (பக்.81), தேசம் (பக்.82), மேசை (பக்.83), ஏகாந்த மௌனம் (பக்.87), பிரயோசனம் (பக்.93) இவ்வாறான வடமொழிச்சொற்கள் காணப்படுகின்றன.

### வட்டார வழக்குச் சொற்கள்

மொத மொத (பக்.2), என்னவே (பக்.2), பார்த்தீரா (பக்.2), ‘‘ஏல, அங்க என்னலே பாக்குர?’’ (பக்.2), ‘‘ஒம்ம மக சில்வி அதா பாரும்!’’ (பக்.2), மூர்க்கத்தனமாக (பக்.2), குழிந்தது (பக்.2), அப்பால் தள்ளினான் (பக்.4), மூஞ்சி (பக்.4), நிக்குமா (பக்.5), அப்ராணி (பக்.5), ‘‘ஏ, மீன் வாங்கவா வந்திருக்கிய?’’ (பக்.5), செவிய அறுத்து வைப்பேன் (பக்.5), குந்தியிருந்தான் (பக்.6), பெறவு பாரு (பக்.6), ஈன்னு பல்லைக் காட்டிட்டு நில்லு! (பக்.7), ஒன் இட்டமா (பக்.7), ‘‘பொட்டச்சி போல் மினுக்குற பொட்டப்பய! ஒழச்சி நாலு காசு உண்டாக்கத் தெரியாத பேடிப்பய!’’ (பக்.9), மணல் சூடு காலைப் பிராண்டுகிறது. (பக்.9), ‘‘மக்களே சோறு உண்ணுதியா’’ (பக்.13), சாப்பிடவா மோனே (பக்.13), இந்தச் சோத்த மனுசன் திம்பானா? (பக்.12), ஒன் கிளப்புக்கடைச் சாப்பாட்டோட (பக்.13), தொட நடுங்கப் பயலே (பக்.13), சிறுக்கி வரட்டும், அவ கல ஒடிக்கிறேன் (பக்.13), செருவை இடுக்கு (பக்.18), உள்ளே வெளக்கு இருக்கு (பக்.18), மயிரு! (பக்.20), நாசமாப்போ! (பக்.20), தேவடியா மொவனே! (பக்.21), ஒனக்கு ஒதவரேன் (பக்.17), இடிவிழுவான் மக்க! பேதியில போவானுவ! (பக்.21), விடாத லோய் புடி லோய் (பக்.20), கிட்ட வந்தீகன்னா கொல செஞ்சிருவேன்! (பக்.21), மொதலாளி (பக்.24), குடு (பக்.26), புருசன் (பக்.31), ஆத்தா (பக்.35), வெத்தல குடுத்தியா? (பக்.37), அழுவுற (பக்.39), சாயங்காலம் (பக்.39), சாமான்கள் (பக்.39), நேத்து (பக்.40), சவைத்தார் (பக்.42), கெழவீ (பக்.45), தேவடியா செறுக்கி (பக்.54), மத்தியானம் (பக்.55), ராத்திரி (பக்.56), பொம்பளைக தெனசரி ரெண்டு (பக்.57), ஓலகம் பூராவும் (பக்.58), ஒதவமாட்டா (பக்.59), சென்னி (பக்.60), சாமம் (பக்.61), சொடியாகப் பேசுவான் (பக்.63), வெளையாட (பக்.64), போணி(பக்.68), தடியா வாவுலோய் (பக்.69), டபுக்கென்று (பக்.73), மக்கா (பக்.75), லாந்தினார் (பக்.77), ஒம்ம தங்கச்சி (பக்.80), அஞ்சு மணி(பக்.82), தவப்பன் (பக்.85), கேட்டீயளா? (பக்.86), அறியயில்லியா? (பக்.89) இப்படிப்பட்ட வட்டார வழக்குச்சொற்கள் இந்நாவலில் அதிக அளவில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**ஆங்கிலம், பிறமொழிச் சொற்கள்**

வேன்கள் (பக்.4), கம்பெனி ஏஜண்டு, ஏஜண்டுகள் (பக்.4), லுங்கி (பக்.4), காலர் (பக்.5), நிக்கர் (பக்.12), தம்ளர்(பக்.12), டவுண்ல காப்பிக்கட பெஞ்சு (பக்.16), சிகரட் (பக்.23), லைட்டர் (பக்.23), போட்ல (பக்.25), ரிக்கார்டு (பக்.26), மிசின் போட்டு (பக்.26), டயரக்டர் (பக்.29), மெயின் ரோட்டில் (பக்.33), கார் (பக்.36), சீப்பு (பக்.36), ஸ்டீம் போட் (பக்.37), டிரெயினிங் (பக்.37), பவுடர் (பக்.38), பஸ் (பக்.39), டாக்ஸி (பக்.39), போட் டிரைவர் (பக்.42), பிளேட் (பக்.43), ஸ்டூல் (பக்.73), ஜீப்பு (பக்.77), போஸ்டர் (பக்.78), கேட் மீட்டிங் (பக்.82), மில் (பக்.82), சோசலிசம் (பக்.82), யூனியன் (பக்.83), பெல்ட்டு (பக்.83), சினிமா (பக்.83), பல்பு (பக்.90), இன்ஷூர் (பக்.93) என்னும் ஆங்கிலம் உள்ளிட்ட பிறமொழிச் சொற்கள் மீனவ மக்களிடையே பேச்சுவழக்கில் பயன்பாட்டில் நிலவுவதை ஆசிரியர் இந்நாவலின் வாயிலாக எடுத்துரைத்துள்ளார்.

**இரட்டைக்கிளவி**

இரட்டைக்கிளவி குறித்துக் கீழ்க்கண்டவாறு தொல்காப்பியம் இலக்கணம் வகுத்துள்ளது. இதனை,

*"இரட்டைக் கிளவி இரட்டிற் பிரிந்து இசையா"*

(தொல்.சொல்.கிளவி.48)

என்னும் நூற்பா விளக்குகின்றது. இவற்றில் 'இரட்டை' என்பது இரண்டு. 'கிளவி' என்றால் 'சொல்' எனப் பொருள்படும். ஆகையால், இரட்டைச்சொற்களைப் பிரித்தால் அந்தச்சொல் பொருள் தராது. அதாவது அந்தச் சொற்கள் பொருளற்ற நிலையில் நிற்கும் என்பது தொல்காப்பியரின் கருத்தாகும். இப்படிப்பட்ட இரட்டைக் கிளவிகளைத் 'தேடல்' நாவலின் ஆசிரியர் பொன்னீலன் பல இடங்களில் கையாண்டுள்ளார். சான்றாக,

சளக் சளக்கென்று கட்டுமரத்தில் மோதும் சிற்றலைகள் (பக்.1), இரும்பு உடம்பு வெயிலில் பளபளத்தது (பக்.1), வெவ்வெ (பக்.7), பளபளக்கும் மணல் (பக்.2), துடிதுடிக்கும் நெஞ்சை (பக்.9), தகதகத்தது(பக்.22), கிளுகிளுப்பு (பக்.22), படபடப்பு (பக்.27), சடசடத்தன (பக்.30), பரபரப்பு (பக்.35), விட்டுவிட்டு (பக்.40), பிசுபிசுப்பு (பக்.61), டப டப டப வென்ற(பக்.86), கடுகடுப்புடன் (பக்.63) என்னும் இரட்டைக் கிளவிகளைக் குறிப்பிடலாம். தொல்காப்பியர் குறிப்பிடுவதுபோல இங்கு காணப்படும் இரட்டைக்கிளவிகளை, சள, பள, தக, கிளு, பட, சட, பர, விட்டு, பிசு டப, கடு பிரித்துப்பார்க்கின்றபோது பொருள் கிடைப்பதில்லை என்பது நிரூபணமாகின்றது.

**அடுக்குத்தொடர்**

ஒரு சொல் இரண்டு முறை அடுக்கி வந்து, பிரித்தால் தனித்து நின்று பொருள் தரக்கூடியதை அடுக்குத்தொடர் எனலாம். அந்தவகையில், தேடல் நாவலில் அடுக்குத்தொடரை தேடல் நாவலின் ஆசிரியர் மிகக் குறைவான இடங்களில் மட்டுமே கையாண்டுள்ளார். சான்றாக,

தொடுலே... தொடுலே... (பக்.2), குசுகுசுத்தான் (பக்.16), தம்பீ தம்பீ (பக்.21), திரும்பத்திரும்ப (பக்.68) என்னும் சொற்களைக் காணலாம். தொடு, குசு, தம்பீ, திரும்ப என்னும் சொற்கள் தனித்து நின்று பொருள் தருவததைக் காணலாம்.

**மீன் வகைகள்**

தேடல் நாவலில் நீலச்சுறா மீன், தேளி மீன், விள மீன், இறால் மீன், வாளை மீன், பாரை மீன், சூரை மீன், சாளை மீன், முரல் மீன், நெத்திலி ஆகிய மீன்வகைகளைக் காணமுடிகின்றன. மேலும், சில்லா நண்டும் இந்நாவலின் வாயிலாக அறியப்பட்டுள்ளது. இதனால், ஆசிரியரின் கடல்சார் அறிவினையும் அறியமுடிகின்றது.

**உணவு வகைகள்**

கடலோரக் கிராம மக்களின் உணவுகளாகச் சிவப்புச் சம்பா அரிசியும், மீனும், கருவாடும், கள்ளும், ஒட்டுமாவும்(பச்சரிசி, கருப்பட்டி, சுக்கு, முட்டை சேர்ந்து இடிக்கப்பட்டவை) இடம்பெற்றுள்ளன. இதனால், மீனவ மக்களின் உணவுப்பழக்க வழக்கங்களையும் பொன்னீலன் நுட்பமாக அறிந்திருக்கின்றார் என்பது தெளிவாகின்றது.

**முடிவுரை**

கடலோரக் கிராமத்து மீனவமக்கள் கடலில் மீன்கள் அதிகமாகக் கிடைக்கின்றபோது ஆடம்பர வாழ்க்கை வாழ்கின்றனர். மீன் வளம் குறைவதால் மக்களிடையே பணத்தட்டுப்பாடும் உணவுத்தட்டுப்பாடும் நிலவுகின்றது. அந்நேரத்தில் வாங்கிய பொருளைத் திரும்ப விற்றும், பண்டமாற்று முறையிலும் உணவுகளைப் பெறுகின்ற சூழலை ஆசிரியர் விளக்குகின்றார். இந்நாவலில் ஆசிரியர் அதிக அளவில் வட்டார வழக்குச் சொற்களைக் கையாண்டுள்ளார். வடமொழிச் சொற்களையும் பல இடங்களில் காணமுடிகின்றது. இதனைப்போன்று படிக்காத பாமர மக்களும் பயன்படுத்துகின்ற ஆங்கிலச் சொற்களும் இடம்பெற்றுள்ளன. இரட்டைக்கிளவிகளும், அடுக்குத்தொடர்களும் இடம்பெற்றுள்ளன. இந்நாவலின்வழி, கடலில் கிடைக்கின்ற மீன்களின் வகைகளை அறிந்துகொள்ளமுடிகின்றது. மீனவ மக்களின் உணவுசார் பண்பாட்டையும் இந்நாவலின் வாயிலாக அறியமுடிகின்றது. மீனவ மக்கள் வருங்காலத்திற்குரிய உணவுப் பொருட்களைச் சேமித்து வைக்கக்கூடிய பழக்கம் இல்லாதவர்கள் என்பதையும் ஆசிரியர் நயமாகச் சுட்டிச் செல்கிறார்.

**துணைநின்றவை**


- ❖ சுப்பிரமணியன் ச.வே., 1998(மு.ப.), *தொல்காப்பியம் தெளிவுரை*, மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர், தெரு, பாரி முனை, சென்னை.
- ❖ ஞானமூர்த்தி தா.ஏ., 1996, *இலக்கியத் திறனாய்வியல்,* ஐந்திணைப் பதிப்பகம், பாரதி சாலை, திருவல்லிக்கேணி, சென்னை.
- ❖ பொன்னீலன், 2015(ஒ.ப.), *தேடல்,* பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்.,16 (142), ஜானி ஜான் கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை.

மதிப்பிடப்பெற்றது

# பொய்க்கால் குதிரை நாவலில் அங்கத உத்திகள்

The trick in the Poikkal Kuthirai

முனைவர் மூ.பாலசுப்பிரமணியன்
உதவிப் பேராசிரியர், தமிழியல்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர்
9488013050, nellaibaalaa@gmail.com

**Abstract**: Narration in the important thing in the story telling. Stuffed with tactics. The storyteller handles the tactics for the content of the story and the reader. Writing a specific events with counter contradiction and Humorous is known as Satire. It will condemn the evil and the nescience with humor. Furthermore, this strategy involves making a parody of comic stripes without contempt of contemporary behavior. D.Selvaraj, who is known as the Marxist writer, whose novel 'Poikkal Kuthirai' is different from his other works. This article presents the tactics (satire) that he has employed.

**Keywords**: 'Poikkal Kuthirai, Narration, D.Selvaraj, Satire, அங்கதம், டி.செல்வராஜின் பொய்க்கால் குதிரை, தனி மனித அங்கதம்.

படைப்பாளனையும் படைப்பையும் வாசகனுக்கு அடையாளப்படுத்துவன, உள்ளடக்க வெளிப்பாட்டிற்குப் பயன்படுத்தும் உத்திகள்தாம். ஒருவருக்கு எடுத்துரைப்புக் கைவரப் பெறுகிற நிலையில்தான் படைப்புகள் உருவாவதும், வெற்றி பெறுவதும் சாத்தியமாகிறது. மற்றொரு வகையில் உள்ளடக்கத்திற்குத் தக்க எடுத்துரைப்பு என்பதும் முக்கியத்துவம் பெறுகிறது. கதை சொல்லுதலில் எடுத்துரைப்பு என்பது மற்ற படைப்புகளிலும் முதன்மையான இடத்தைப் பிடிப்பதோடு, அவ்வெடுத்துரைப்பு உத்திகளாலும் நிறைந்து. கதைசொல்லும் படைப்பாளன் உள்ளடக்கத்திற்குத் தக்கவும், வாசகனுக்கேற்பவும் உத்திகளைக் கையாளுகிறான். அந்தவகையில் மார்ச்சிய எழுத்தாளராக அறியப்படும் டி.செல்வராஜின், 'பொய்க்கால் குதிரை' நாவல் அவரின் மற்ற படைப்புகளிலிருந்து வேறுப்பட்டதாக அமைவதற்கு, அவர் கையாண்டுள்ள அங்கத உத்திகளே காரணமாகின்றன. அந்நாவலில் அவர் கையாண்டுள்ள அங்க உத்திகளை முன்வைத்தே இக்கட்டுரை அமைகிறது.

**தமிழ் மரபில் அங்கதம்**

அங்கதம் (Satire) என்பதற்கு, 'கேலி/வசைப் படைப்பு, வசை, பொய், மேற்கையில் அணியும் வளை/வலயம், பாம்பு, பழிச்சொல், மார்பு, யானை உணவு' எனப் பல பொருண்மைகள் உண்டு. அங்கதம் என்பதை இலக்கிய இயல்புகளில் ஒன்றாகத் தமிழ் மரபு போற்றி வருகின்றது. தொல்காப்பியம் யாப்பின் வகையில் ஒன்றாக அங்கதத்தைக் கூறி, அதன் வகைகளையும் விளக்கியுள்ளது. அங்கதம் குறித்துப் பேசும் தொல்காப்பியம்,

> "பாட்டு உரை நூலே வாய்மொழி பிசியே
> அங்கதம் முதுசொல் அவ் ஏழ் நிலத்தும்..." - தொல். செய். நூ. 75

எனக் குறிக்கின்றது. அங்கதம் என்னும் சொல்லால் இதனைக் குறித்திருந்தாலும், 'வசை' என்னும் பொருளில் அதனைக் கையாண்டுள்ளது. 'செம்பொருள் (வெளிப்படை வசை), பழிகரப்பு (மறைபொருள் கொண்ட வகை) அதன் எடுத்துரைப்பு முறையில் இரண்டு தன்மைகள் உள்ளதையும் தொல்காப்பியம் விளக்கியுள்ளது.

"அங்கதம்தானே அரில் தபத் தெரியின்

செம்பொருள் கரந்தது எனஇரு வகைத்தே." - தொல். செய். நூ. 120

என்பதில் வெளிப்படையாகவும், மறைபொருளாகவும் வசைகள் வெளிப்படுத்தப்படலாம் என்பது உணர்த்தப்பட்டுள்ளது. நிகழ்வுகளின் எடுத்துரைப்பு முறையாக இவை அமைந்தாலும் இவற்றின் அடிப்படை நோக்கமாகக் கருதப்பெறுவது அறிவுறுத்தல் என்பதேயாகும். பிறருக்கு அறிவுறுத்தும் நிலையில் செவியுறைச் செய்யுள், அங்கதச் செய்யுள் என்ற இருவகை வடிவங்களில் வெளிப்படுத்தலாம் என்றும் தொல்காப்பியர் வரையறை செய்கிறார். இதனை,

"துகளொடும் பொருளொடும் புணர்ந்தன்று ஆயின்
செவியுறைச் செய்யுள் என்மனார் புலவர்." - தொல். செய். நூ. 124

"வசையொடும் நசையொடும் புணர்ந்தன்று ஆயின்
அங்கதச் செய்யுள் என்மனார் புலவர்." - தொல். செய். நூ. 125

என்னும் நூற்பாக்களின்வழி உணரலாம். பழந்தமிழரின் இலக்கிய மரபுகளுக்கான வரையறைகளை உணர்த்தும் நிலையில் அடிவரையறையில்லாத செய்யுட்களுள் ஒன்றான அங்கதம் என்ற இலக்கிய வகையை 'கூற்றிடை வைத்த குறிப்பு மொழி' என்னும் தொடராலும் அவர் குறிப்பிடுகின்றார். இவரின் எண்வகை மெய்பாட்டுள் வரும் நகை சார்ந்த விளக்கங்களிலும் அங்கதச் சுவையின் தன்மைகள் வெளிப்படுகின்றன.

**தற்காலத்தில் அங்கதம்**

குறிப்பிட்ட நிகழ்வை, எதிர் முரணாக; நகைச்சுவையாக எழுதுவது அங்கதம் எனப்படும். தீமையையும் அறிவின்மையையும் நகைப்புடன் கண்டிப்பதாக இது அமையும். மேலும், சமகால நடப்பியலைக் கடிந்துரைக்காமல் நகைச்சுவையுடன் பகடிச் செய்வதும் இவ்வகை உத்தியில் அடங்கும். அங்கத இலக்கியம் அதிகார அமைப்பையும், புனிதங்களையும், எல்லாராலும் ஏற்கப்பட்டுவிட்ட ஒன்றைத்தான் தன் இலக்காகக் கொள்கிறது. அவ்விலக்கைப் பகடிச் செய்வதன்வழித் தலைகீழாக்கிப் பார்க்கிறது. அந்தவகையில் தோன்றும் இலக்கியங்களை அங்கத இலக்கியம் என்ற வகைக்குள் அடக்குவர். இதனை, தற்காலத் திறனாய்வாளர்கள் கவிழ்ப்பாக்கம் அல்லது வசைப் படைப்புகள் என்றும் குறிப்பிடுகின்றனர்.

**அங்கதத்தின் தன்மையும் வகையும்**

அங்கதம் செய்யும் நிகழ்வுகளை சி.இ.மறைமலை, 'கூர்மையாகக் குத்திக்காட்டிப் பேசுவது; அதேவேளை நகைச்சுவை மையமாக அமைவது; கேலித் தன்மையைப் பூடகமாக, குறிப்பாக, உள்ளடக்கிச் சொல்வது; கேட்போரிடையே சிரிப்பையும், சிந்தனையையும் ஒருசேர உருவாக்குவது' என்ற தன்மைகளை அங்கதம் பெற்றிருக்க வேண்டும் என்பர். தற்காலத் திறனாய்வுகளில் இலக்கியங்களில் வரும் அங்கதங்களை, 'தனி மனித அங்கதம்', 'சமுதாய அங்கதம்', 'அரசியல் அங்கதம்' என வகைப்படுத்துகின்றனர். ஆகையினால், அங்கதம் என்பது நகைச்சுவையும், புலமை நுட்பமும், திறனாய்வு நோக்கும் கொண்ட ஓர் இலக்கிய உத்தி என்பது விளங்கும். இது சமுதாய மேம்பாட்டை அடிப்படையாகக் கொண்டது. கி.சிவகுமார், தீங்கையும், அறிவின்மையையும் கண்டனம் செய்வது; மனிதகுலக் குற்றம் கண்டு சினங்கொண்டு சிரிப்பது என்கிறார்.

மேலை இலக்கிய மரபில், ஹொரேசியன் அங்கதம் (Horatian Satire), ஜூவானலின் அங்கதம் (Juvenlian Satire) என அங்கதத்தை வகைப்படுத்துகின்றனர். ஹொரேசிய அங்கதம், அறிவுச் சாமர்த்தியமும் நகைச்சுவைப் பண்பும் கொண்டு பொதுவாகப் பிறரை நையாண்டி செய்வதாக அமைந்திருக்கும். எதிர்மறைப் பண்பற்று மனித நடத்தையை நகைப்பூட்டும் வகையில் கேலி செய்வதாக அமையும். ஜூவானலியன் அங்கதம், சீற்றமும் வன்மமும் கொண்டது. சமூக மாற்றத்தை உருவாக்கக் கூடியது. இந்த வகையில், டி.செல்வராஜின், 'பொய்க்கால் குதிரை' (NCBH பதிப்பு, 2015) நாவல் மனித நடத்தையை நகைப்பூட்டும் வகையில் கேலிசெய்யும் ஹொரேசிய அங்கத வகையைச் சார்ந்ததாகும். அங்கதப் படைப்பிற்குரிய வசை, நகை, ஏளனம் ஆகிய பண்புகளைப் பெற்றிருக்கிறது.

**பொய்க்கால் குதிரை**

இளம்வயதில், பெண், போகம் எனச் சுற்றித் திரிந்த, சிருங்காரபுரி ஜமீனுக்கு வயதான பிறகுதான் தனக்கென ஒரு வாரிசு வேண்டும் என்ற ஞானோதயம் பிறக்கிறது. ஆகையால், இளம்வயது பெண்ணை மணந்துகொண்டு தன் குறிக்கோளில் வெற்றியும் பெறுகிறார். குழந்தை கருப்புத்துரை பிறந்த நேரம் தந்தை இறந்துவிடுவார் எனச் சோதிடர் கூற, ஜமீன்தார் சோகமாகிறார். கெடு சொன்ன நாட்களும் முடிகிறது. ஆனால், ஜமீன் இறக்கவில்லை. வாக்கு சொன்னவனுக்குத் தண்டனை தர ஏற்பாடு செய்கிறார் ஜமீன். அப்பொழுதும் சோதிடர் குழந்தையின் தந்தை உயிருடன் இருக்க வாய்ப்பில்லை என்று கூறுகிறான். குழந்தை கருப்பின் பிறப்புச் சந்தேகத்திற்குள்ளாகிறது. மனம் நொந்த ஜமீன் ஊரைவிட்டே போகிறார்.

அவமானத்தால் ஜமீன் காணாமல் போக, கருப்புத்துரையைப் பெற்றவளும் தனக்குக் களங்கம் ஏற்பட்டது என்று தற்கொலை செய்துகொள்வதால், பிறந்த சிசு வண்ணானின் மனைவியான ஈனப்பேச்சியிடம் ஒப்படைக்கப்படுகிறது. கருப்புத்துரை ஜமீன் வாரிசு என்று சொல்லி வளர்க்கப்பட்டதால் எந்நேரமும் கனவிலே சஞ்சாரம் ஆகிறான். சுதந்திரத்திற்குப் பிறகு ஜமீன் ஆட்சி முடிவுக்குவர அந்த ஊரில் வட்டிக்குப் பணத்தைக் கொடுக்கும் சித்திரபுத்திரன் செட்டியாரும், ஜமீன் அரண்மனைக் காவலாளி அய்யண அம்பலமும் முக்கிய மனிதர்களாகின்றனர்.

துணிகளைத் துவைப்பது, கனவில் வாழ்வது என்ற இரு வேலைகளில் மட்டும் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளும் கருப்புத்துரை அந்த ஊரின் கேலிக்குரியவனாகிறான். வாழ்விழந்து திரும்பி வந்த சித்திரபுத்திர செட்டியாரின் மகள் பத்மாவதி கருப்பைத் தன் இச்சைக்கு அழைக்கிறாள். பெற்றோருக்குச் செய்தி தெரிந்து கருப்பைத் திருட்டு வழக்கில் சிக்க வைத்துச் சிறையில் அடைக்கின்றனர். தண்டனைக் காலம் முடிந்து ஊர் திரும்புகையில் அவனை யாருக்கும் அடையாளம் தெரியவில்லை. அவன் வந்த நேரம் நீண்ட காலத்திற்குப் பிறகு மழை பெய்கிறது. அவனைச் சித்தர் என்றும் அவன் வந்ததால்தான் மழை வந்தது என்றும் ஊர் மக்கள் நம்பி பணிவிடைகள் செய்கின்றனர். பத்மாவதி புரட்சிக்கரத் தீவிரவாதிகளால் கொல்லப்பட அந்தப் பழி, ஏதும் அறியாத சித்தராகச் சுற்றிக் கொண்டிருக்கும் கருப்பின்மீது புனையப்பட்டுத் தூக்குத் தண்டனை அளிக்கப்படுகிறது.

**டி.செல்வராஜின் அங்கத உத்திகள்**

கருப்புத்துரையின் வாழ்க்கையைப் பேசும் போக்கில் இந்நாவல், ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் தொடங்கி, சுதந்திர இந்தியாவின் நில உச்ச வரம்புக்காலம் வரையில், குறிப்பாக 1960-வரையிலான வரலாற்றையும் சமூக மாற்றங்களையும் அலசுகிறது. இந்தியாவில் புரையோடிப் போன பழமரபு நம்பிக்கைகளும், பழக்க வழக்கங்களும், சாதியக் கட்டமைப்புகளும் எங்ஙனம்

ஒவ்வொரு காலத்திலும் தொடர்கிறது; மாற்றங்களுடன் இயங்குகிறது என்பதை நாவல் பேசுகின்றது. சமூகக் கட்டமைப்பு என்கிற பெயரில் உள்ள பழமரபுகள் தான் ஆளும்வர்க்கத்தின் பலம் என்பதை நாவல் வழியே டி.செல்வராஜ் நிறுவுகிறார். நாவல் சித்தரிப்பில் பாத்திரங்களின் வழியாகவும், நிகழ்ச்சிகளின் வழியாகவும், விவரிப்புகளின் வழியாகவும் அங்கதச் சுவையைத் தருகிறார். நாவலுக்கான கதைக்கருவிற்கு, அறிவார்ந்த கதைப் பின்னலைத் துணைக்கு வைத்துக்கொண்டு அங்கத உத்தியால் எடுத்துரைக்கிறார். பொய்க்கால் குதிரை ஹொரேசிய அங்கத வகைச் சார்ந்தது என்றாலும், தனி மனித அங்கதம், சமூதாய அங்கதம், அரசியல் அங்கதம் என்னும் நிலையிலும் இயங்குகிறது.

**பாத்திர வார்ப்பில் அங்கதம்**

அப்பாவி கருப்புத்துரை, அஞ்சாத ஈனப்பேச்சி, வஞ்சகமிக்க சித்திரப்புத்ரன் செட்டியார், ஆதிக்க எண்ணம் கொண்ட அய்யணம்பலம், பழமையை உடைக்கும் பத்மாவதி போன்றோர்தான் முதன்மைப் பாத்திரங்கள். தமிழக வரலாற்று வளர்ச்சியின் வகை மாதிரிக் கதை மாந்தர்கள். ஜமீன் காலத்தில் ஆங்கிலேயர்களுக்கு அடிவருடிகளாக இருந்த வரலாற்றையும், நில உச்சவரம்புக் காலத்தில் அரசுகளுக்கு அடிவருடிகளாக இருந்த வரலாற்றையும், காவல் துறையினர் பணக்காரர்களுக்குச் சேவகம் செய்யும் நிகழ்வுகளையும் பாத்திரங்களின்வழி அங்கதம் செய்கின்றார் செல்வராஜ். ஆங்கிலேயர் காலம், சுந்திர இந்திய நில உச்சி வரம்பு காலம், 60-களின் காலம் என மூன்று காலங்களிலும் மனிதர்கள் தங்களின் பெயர்களையும் சாதிய அடுக்குகளையும் மாற்றிக் கொண்டனரே தவிர வர்க்க முரண்களும், பிரபுத்துவமுறைகளும் ஒழியவில்லை என்பதைப் பாத்திர வார்ப்பின் வழியே வெளிப்படுத்தியுள்ளார். ஊர்ப் பெரியதனம் அய்யணம்பலம் ஜமீன் இருக்கும் போது அரண்மனைக் காவலனாக, அடியாளாக இருந்தவன். ஜமீன் ஒழிக்கப்பட்ட சுதந்திர இந்தியாவில் மிராசு, பஞ்சாயத்துத் தலைவராகத் தன்னை உயர்த்திக் கொள்கிறான். அவனின் மாற்றங்களைச் செல்வராஜ்,

> “சிருங்காரபுரி ஜமீன் ஒழிக்கப்பட்டது அய்யண அம்பலத்துக்கு, எதிர்பாராத வரப்பிரசாதமாகப் போகும் என்று அவனே கனவில்கூடக் கருதவில்லை. ஆரம்பத்தில் நிலச் சீலிங் ஏற்பட்ட போது, அரண்மனைக்குச் சொந்தமான உபரி நிலங்களுக்கு பினாமியாகச் செயல்பட்டான். எருது இளைத்தால் காகம் மைத்துனர்முறை கொண்டாடும் என்கிற முதுமொழிக்கேற்ப, ஜமீன் தாயாதிகளுக்குள் சண்டைபோட்டுக் கொண்ட போது அவர்களுக்கு ‘பெப்பே’ காட்டிக் கொண்டு அய்யண அம்பலமே அத்தனை நிலங்களுக்கும் உடைமையாளராகிப் போனான். ஜமீன் உபரி நிலங்கள் எல்லாம் அய்யண அம்பலத்தின் பேரில் மாற்றப்பட்டபோது, அவனது குணநலத்திலும், மாற்றம் ஏற்பட்டுப் போயிற்று. இப்பொதெல்லாம் பெரிய புள்ளி என்கிற தோரணை, அம்பலம் ஜாதிக்கட்டுப்பாட்டையும் குல கௌரவத்தையும் கட்டிக் காப்பதில் கண்ணும் கருத்துமாக இருக்கக் கூடியவன் - பெரிய மனிதத் தோரணை” (பக். 12-13).

என விவரிக்கின்றார். அரண்மனை நாயைப் போல இருந்தவனின் வாழ்வில் ஏற்பட்ட மாற்றங்களை அங்கத சுவையுடன் எடுத்துரைத்துள்ளார்.

**கதைப்பின்னலில் அங்கதம்**

அப்பாவியான கருப்புத்துரையின் வாழ்க்கையை மையப்படுத்திக் கதைப்பின்னல் அமைந்திருக்கின்றது. கருப்புத்துரையின் பிறப்பும் அநாதையாகும் விதமும் ஆரம்பநிலையாகக் கொண்டால், அவனின் இளமை வாழ்வு கனவில் நகர்கிறது. செட்டியாரின் வீட்டிற்குச் சலவை செய்யச் செல்வதும், பத்மாவதி அவனிடம் ஆசைக் கொள்வதும் கதைக்கான சிக்கலாகிறது.

சிறையிலிருந்து திரும்பி வந்து சாமியாராக வாழ்க்கையைத் தொடர்வதும், கொலை குற்றம் சாட்டப்பட்டுத் தூக்குத் தண்டனையை அடைவதும் உச்ச நிலையாகின்றது. இம்மூன்று நிலைக்கான கதைப்பின்னல் தமிழகக் கால மாற்றங்களின் ஊடே புனையப்பட்டுள்ளது. ஆரம்பம்முதல் முடிவுவரை தான் ஏன் அநாதையானோம் என்றும் தெரியாது, தனக்கு ஏன் பத்மாவதி சுவையான உணவு தருகிறாள் என்றும் தெரியாது, செட்டியார் ஏன் கட்டி வைத்து உதைக்கிறார் என்றும் தெரியாது, தான் எப்படி சாமியார் ஆனோம் என்றும் தெரியாது, ஏன் தனக்குத் தூக்குத் தண்டனை அளிக்கப்படுகிறது என்றும் தெரியாது வாழ்ந்து மடியும் கருப்புத்துரையின் சோகமான வாழ்க்கை படைப்பாளியால் அங்கதச் சுவையுடன் நகர்த்தப்பட்டுள்ளது. இக்கதைப் பின்னல்களால் கட்டப்பட்ட நடப்பியலை அங்கதச்சுவை கூட்டி நாவலாசிரியர் பகடிச் செய்திருக்கிறார்.

நாவலில் அங்கதத் தொனிப்புகளெல்லாம் கதை விவரிப்புக்குத் துணை நிற்பதோடு சமூக அவலத்தையும் நகைப்புடன் சுட்டிச் செல்கின்றன. ஒவ்வொருவரும் தங்களின் சாதியப் பெருமைகளைப் பேசிக் கொண்டிருப்பதை நகைப்புக்குள்ளாக்கும் விதமாகச் செட்டியாரை இங்ஙனம் அறிமுகப்படுத்துகிறார்.

> “செட்டியாரின் பூர்வீகம் பற்றி பலவிதமான யூகங்கள். சிலபேர் செட்டியார் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் வம்ச வழியைச் சேர்ந்தவர் என்பர். செட்டியாரைக் கேட்டால் பூம்புகார் நகரம் தனது பூர்வீக பூமியென்றும், மாசாத்துவான் செட்டியார் தனது மூதாதையர்களில் ஒருவர் என்றும் கேட்பவர்களிடம் கூசாமல் சொல்லுவார். எது எப்படியிருந்த போதும், ஆதியில் செட்டியாரின் பாட்டனார் பர்மா தேசத்தில் பிழைப்புத் தேடிப் போனவர் என்றும் ஜப்பான்காரன் பர்மா தேசத்தின் மீது குண்டு போட்டபோது தன் குடும்பத்துடன் கால்நடையாக இந்திய தேசம் வந்தடைந்து செட்டி நாட்டில் வட்டிக் கணக்கு எழுதப் போனவர், ஒரு ஆச்சியை ஏமாற்றிப் பணக்காரர் ஆகிவிட்டார் என்றும் சொல்லப்படுகிறது.” (ப. 30)

இதில், சாதிப் பெருமைக்காக எங்ஙனம் பழந்தமிழ் இலக்கியத் தொன்மங்களைத் துணைக்கு அழைத்துக் கொள்கின்றனர் என்பதையும், தான் செய்யும் குற்றங்களைப் பழமரபுகளைக் கொண்டு எவ்வாறு நியாயப்படுத்துக்கின்றனர் என்பதையும் பகடிச் செய்துள்ளார்.

**மொழியாடலில் அங்கதம்**

படைப்பாளனின் வெற்றி எடுத்துரைப்பிலும் அதற்குத் துணைசெய்யும் மொழியாடலிலும் அமைந்திருக்கிறது. மனித வாழ்க்கையின் நடப்பியலைப் பேசும் படைப்பாளிகள் எடுத்துரைப்பாலும் மொழிநடையாலும் சுவைப்படத் தந்துவிடுவர். அதற்கு, கு.அழகிரிசாமி நல்ல எடுத்துக்காட்டு. அத்தகைய மொழியாளுகை டி.செல்வராஜிடம் காணப்படுகின்றது. தனது மற்றைய படைப்புகளிலிருந்து முற்றிலும் மாறுபட்டப் படைப்பாகப் பொய்க்கால் குதிரை நாவலைத் தந்திருக்கிறார். இந்நாவல் முழுவதும், அங்கத நடையிலேயே செல்கிறது என்றாலும், அந்த அங்கதத்தையும் தனது மார்க்சிய வெளிப்பாட்டு உத்தியாக்கிக் கொண்டு வர்க்க முரண்களை அற்புதமாகச் சொல்லிவிடுகிறார். அந்தவகையில் மூடப் பழக்கவழக்கங்களால் அழிந்தொழியும் தமிழ் மக்களின் வாழ்வியலை நகைப்பிற்குள்ளாக்குகிறார். கருப்புத்துரையை யாரெனத் தெரியாமல் அம்மணச்சித்தர் என நம்பி மக்கள் அவனுக்குச் சகல சுதந்திரமும் மரியாதையும் தருகின்றனர். அதனைப் பகடி செய்யும் செல்வராஜ்,

> “நேர்ந்துவிட்ட கோவில் காளையா ஊருக்குள் நடமாடுவதற்கு கருப்புத்துரை அனுமதிக்கப்பட்டான். பெரியவர்கள் அனைவரும் கருப்புத்துரையை அவதார

புருஷனாகக் கருதலானார்கள். பெண்கள் கூட கருப்புத்துரையின் நிர்வாணக் கோலத்தைக் கண்டு வெட்கப்படுவதோ, அசூயை கொள்வதோ கிடையாது. தெய்வீகப் பிறவி அம்மணமாகத் தானே இருக்கும். பழனி முருகன் சிலைகூட நிர்வாணமாகத் தானே நிற்கிறது. மாறாக, அவனது திருப்பாதார விந்தங்கள் தங்கள் வீட்டு வாசலைத் தழுவும் புண்ணியம் கிட்ட வேண்டும் என்பதற்காக, கோலம்போட்டு அவனது வருகைக்காகக் காத்துக் கிடந்தார்கள் பெண்கள்'' (ப.69)

என எழுதியுள்ளார். மூட நம்பிக்கை நிர்வாணக் கோலத்தைக்கூடச் சகித்துக் கொள்கிறது. கருப்பு சலவைத் தொழிலாளியாக இருக்கும்போது பின் வாசல் வழியாக அனுமதித்த ஊர், சாமியார் என்றவுடன் முன்வாசல் வழியே வரவேற்கிறது என்பதை உணர்த்தியுள்ளார். நாவலில் தொடக்கப் பகுதியிலேயே இந்நாவல் ஒரு அங்கதப் படைப்பு என்பதைத் தன் கூற்றாகப் பேசியுள்ள செல்வராஜ். அதனை,

''மெய்ஞ்ஞான சித்தர் சுவாமிகள் என்கிற கருப்புத்துரையின் மெய்க்கீர்த்தியை ஒரு சாகாவரம் பெற்ற இலக்கியமாக வடித்துவிட வேண்டும் என்பது நீண்ட நாளைய ஆசை, கனவும் கூட.

பிள்ளையார் சுழி போட்டு மெய்ஞ்ஞான சித்தர் சுவாமிகளின் பூர்வாசிரமம் பற்றியும் மெய்க்கீர்த்தியைப் பற்றியும் எழுதத் தொடங்கும் போதுதான், எக்காலும், முக்காலும் நிலைபெற்று நிற்கும் தன்மை படைத்த அவதார புருஷர்களுடையவும், மகான்களுடையவும், திருவிளையாடல்களையும் மெய்க்கீர்த்தியையும் சொல்ல வரும் படைப்பாளியும், மகாகவி காளிதாஸனைப் போன்றோ, வால்மீகியைப் போன்றோ தெய்வக் கடாட்சம் பெற்ற காப்பியப் புலவனாகவும், மகா பண்டிதனாகவும் இருக்க வேண்டும் என்கிற காவிய நியதி என்னை அலைக்கழிக்கலாயிற்று. ஏனெனில், காவிய நாயகனால், கவிஞனுக்குப் பேரும் புகழும் ஏற்பட வேண்டும். அதே போன்று புலவனால் காவிய நாயகனின் புகழும் பெயரும் விளங்க வேண்டும்'' (ப.1).

என்னும் பகுதியால் உணரலாம். சாமியார் எனத் தெரியாமலேயே அவர்களை வணங்குவதும், அவர்களைப் படைப்பாளிகள் புகழ்ந்து எழுதுவதும் நகைப்பிற்குரியதாக்குகிறார். சமூகத்தில் வெற்று வேதாந்தங்களும், போலி மதவாதமும், மூடநம்பிக்கைகளும் எவ்வாறு ஆளுமை செலுத்தி மனிதர்களின் சிந்தனைகளை முடக்குகின்றன என்பதை அங்கதச் சுவையுடன் வெளிப்படுத்த நாவலாசிரியருக்கு மொழிநடைகள் துணைநிற்கும் இடங்களாக மேற்குறித்தவற்றைக் கூறமுடியும். காலங்காலமாக இலக்கியங்களின் வளர்ச்சியும் புலவர்களின் வாழ்வும் இவ்வாறுதான் இருந்துள்ளன என்பதையும் இம்மொழியாடல்கள் வாயிலாவே இவர் இடித்துரைக்கிறார்.

**தனிமனித அங்கதம்** (Individual Human Satire)

தனி மனித செயல்பாடுகளில் காணப்படும் சுயநலமும் குணநலன்களும் படைப்பாளர்களால் பகடி செய்யப்படுவதுண்டு. கதையின் போக்கிற்கேற்க கதை மாந்தர்களின் நலன்களை அங்கதமுறையில் அறியமுகப்படுத்துவதோ, சூழலைத் தனியொருவரைப் பகடி செய்வதன்வழி விவரிப்பதும் படைப்பாளர்களின் உத்திமுறைகளில் அடங்கும். அந்தவகையில் டி.செல்வராஜ் தனது பொய்க்கால் குதிரை நாவலில் தனிநபர் ஒவ்வொருவரையும் பகடியுடனே அறிமுகம் செய்கிறார். அவர்களின் ஒவ்வொரு செயல்களின்வழிக் கதையை நகர்த்திச் செல்கிறார். முதன்மை மாந்தர்கள் அனைவரையும் பகடி முறையிலேயே படைத்துக்காட்டியுள்ளார். இந்நாவல் ஒரு துன்பியல் கதையோட்டத்தைக் கொண்டிருந்தாலும்

செல்வராஜின் அங்கத உத்திமுறைகள் அதனை அங்கதப் படைப்பாக்கியுள்ளது. கருப்புத்துரையின் வளர்ப்புத் தாயாகிய ஈனப்பேச்சியின் குணநலன்களைச் விவரிக்கும்,

“ஈனப்பேச்சி என்றால் கருப்புத்துரைக்குச் சிம்ம சொப்பனம். தாடகை போன்ற தேக அமைப்பும், மலைகளை ஒத்த தனக்கட்டுமாகப் பார்த்தாலே பயம் தட்டக்கூடிய உருவம். ஈனப்பேச்சி நடந்தாள் என்றால் பூமி அதிரும், தூசி பறக்கும். வாய் திறந்தாள் என்றால் தூஷணமான வார்த்தைகள் அருவியாகக் கொட்டும் அனல் பறக்கும்.

ஊசக் குமரிக்குத் தெரியும் ஊர்க் காட்டு ரகசியம் என்பதுபோல், ஈனப் பேச்சிக்குத் தெரியாத ரகசிய உறவுகள் ஏதும் சிருங்காரபுரியில் இருக்க முடியாது. எந்தப் பெண் எந்த ஆணுடன் முறைகேடான உறவு வைத்திருக்கிறாள் என்கிற ரகசியங்கள் எல்லாம் ஈனப் பேச்சிக்கு அத்துப்படி. எனவே, தீட்டுப்பட்ட ஈனப் பிறவி என்று எந்தப் பெண்ணும் பேச்சியுடன் பேச்சு வைத்துக் கொள்ள முடியாது. அப்படி யாராவது அவளைக் கேவலமாகப் பேசிவிட்டார்கள் திட்டி, நண்டுக் குடுவையை நடுவீதியில் போட்டு உடைத்தது மாதிரி அந்தப் பெண்ணின் கேடு கெட்ட வாழ்க்கையின் ரகசியங்களையெல்லாம் அம்பலப்படுத்திப் போடுவாள். அதற்குப் பிறகு அந்தப் பெண் ஊருக்குள், மான ஈனத்தோடு நடமாட முடியாது. தலையை மொட்டையடித்துக் கொண்டு தேசாந்திரம் போய்விட வேண்டியதுதான்” (ப. 20)

என்னும் வரிகளில் ஒரு தனிமனிதனின் நடத்தைகள் எவ்வாறு சமூகத்தால் நகையாகவும், வசையாகவும் வெளிப்படும் என்பதற்கு அரணாகின்றன. கிராமத்திற்குரிய மொழியாடல்களைக் கொண்டு ஈனப்பேச்சியையும் அவளின் குண நலன்களையும் அங்கத முறையில் விவரிப்பதன்வழிச் செல்வராஜ் வெற்றிப் பெற்றவராகிறார். இவரின் பாத்திரப்படைப்புகள் ஒவ்வொன்றும் இத்தகைய அங்கதச் சுவையுடனே விளக்கப்படுவதைக் காணமுடிகின்றது.

**சமுதாய அங்கதம் (Social Satire)**

சமூக நடத்தைகளும் மதிப்புகளும் குறைபாடுகளுடன் இருப்பதைச் சாடுவது சமுதாய அங்கதம் எனப்படுகிறது. இந்திய சமூகத்தில் புரையோடிப் போன பழமரபுகளும், மூடப்பழக்க வழக்கங்களும், சாதிய ஏற்றத்தாழ்வுகளும், வர்க்க முரண்களும் நிரம்ப உண்டு. இவை சமூகத்தின் முன்னேற்றத்தைத் தடுப்பன. படைப்பாளன் தான் வாழும் சமூகத்தின் முன்னேற்றத்தை எண்ணி இவற்றைச் சுட்டி எழுதுவது கடமையாகிறது. கண்டித்து எழுதாமல் பகடியாய் விவரிப்பதன்வழி மேற்கண்ட நடைமுறைகள் ஒழிவதற்கான வாய்ப்புகள் ஏற்படும். தமிழில் அவ்வாறான படைப்புகளைப் பாரதி, பாரதிதாசன், பெரியார், கவிமணி போன்றோர் படைத்துக் காட்டியுள்ளனர். டி.செல்வராஜ் இந்நாவலில் மூட நம்பிக்கைகளையும், சாதியக் கட்டமைப்பு ஆணவத்தையும், சுரண்டலினால் மக்கள் பாதிக்கப்படுவதையும், பண முதலைகளின் திரைமறைவு வேலைகளையும், குற்றப் புனைவுகளால் நீதி வளைக்கப்படுவதையும் அங்கத உத்தியால் சாடியுள்ளார். போலிச் சாமியார்களை மக்கள் நம்புவதும், அந்நம்பிக்கையை இச்சமூகம் வளர்த்தெடுப்பதையும்,

“வெகு சீக்கரத்திலேயே, நிர்வாணமாக அலையும் கருப்புத்துரை நிகழ்த்தும் அற்புதங்கள் இறக்கைக் கட்டிப் பறந்து பக்கத்துக் கிராமங்களுக்குப் பரவி மாவட்டம் தழுவிய அற்புதமாகப் போயிற்று. திகம்பரனாக அலையும், அந்த மனித ஜீவனைப் பார்ப்பதற்கும், அவனது ஆசி பெறுவதற்கும் வேண்டி அந்த வட்டாரமென்ன பக்கத்து வட்டாரத்தில் இருந்தெல்லாம் வண்டிகளிலும் வாகனாதிகளிலும் அவனது தரிசனத்துக்காக மக்கள் வர ஆரம்பித்துவிட்டனர். சிருங்காரபுரி கிராமம் புண்ணியஸ்தலமாகிப் போய்விட்டது.

> ஒரு கட்டம் வரையில் கருப்புத்துரையினால் நிகழ்த்தப்படும் அற்புதங்கள் பற்றியும், சித்தாட்டங்கள் பற்றியும் கண்டு கொள்ளாமல் இருந்த வெளியூர்ப் பத்திரிக்கைகள், சிருங்காரபுரி கிராமத்திற்குத் தங்கள் நிருபர்களை அனுப்பி கருப்புத்துரையினால் நிகழ்த்தப்படும் அற்புதங்களைக் கண்டறிந்து, ஒரு சிலபேரிடம் பேட்டியும் எடுத்து கருப்புத்துரையின் நிர்வாணக் கோலத்தையும், அவனைத் தரிசிக்க வரும் பக்தர்கள் கூட்டத்தையும் படம்பிடித்து, தலைப்புச் செய்தியாக வெளியிட்டக் கௌரவித்தன. ஒரு நிருபர், கருப்புத்துரையின் பூர்வாசிரமத்தைப் பற்றியெல்லாம், ஆராய்ச்சி செய்து, கருப்புத்துரையின் உண்மையான பூர்வ ஜென்மப் பெயர் மெய்ஞ்ஞான சித்தர் சுவாமிகள் என்றும், அவர் சமாதியில் அடங்கும்போது ஊர் மக்களுக்குக் கொடுத்திருந்த வாக்குறுதிக்கேற்ப சிருங்காரபுரி கிராமத்தில் திரு அவதாரம் செய்திருப்பதாகவும், அதனால் சித்தரின் பெயர் மெய்ஞ்ஞான சித்தமுனி, அல்லது சித்தர் சுவாமிகள் என்றும் கட்டுரை தீட்டியிருந்தார்'' (பக். 70-71).

என விவரிக்கின்றார். மூட நம்பிக்கையோடு மக்கள் இருப்பதையும் அதனைப் பயன்படுத்தி எப்படி ஒவ்வொருவரும் பிழைப்பு நடத்துகிறார்கள் என்பதையும் தொடர்ந்து விரித்துரைத்துள்ளார். மேலும், மக்கள் மட்டுமல்லாது அவர்களைச் சீர்திருத்தி வழிநடத்த வேண்டிய அரசும், அதிகாரிகளும், நீதித்துறையுமே மூடநம்பிக்கையில் இருப்பதை,

> ''அரசு பெரிய உத்தியோகஸ்தர்கள், தேர்தலில் வெற்றி வேண்டி நிற்போர், சட்டமன்ற உறுப்பினர்கள், மந்திரிப் பிரதானியர், நீதிபதிகள், விஞ்ஞானிகள் இப்படி சமூகத்தின் சகல தரப்பினரும் மெய்ஞ்ஞான சித்தரை வந்து தரிசனம் செய்துவிட்டுப் போனார்கள்'' (ப.74)

என்னும் பகுதியால் நையாண்டி செய்கிறார். தவறுகளைக் கண்டிக்க வேண்டிய இடத்திலுள்ள சமூகமும் அதனை ஆளும் அரசுகளும் தவறுசெய்தவர்களிடம் மண்டியிட்டுப் பிழைக்கும் தற்கால வழக்கத்தை, மெய்ஞ்ஞான சித்தரை வந்து தரிசனம் செய்து விட்டுப் போனார்கள்'' என்றும் நகைமொழியால் விளக்குகின்றார்.

**அரசியல் அங்கதம் (Political Satire)**

அரசியல் மற்றும் அரசாங்க நடவடிக்கைகள் மக்கள் எண்ணங்களும் வாழ்வியலுக்கும் எதிராகயிருக்கிறபோது அவற்றைக் கண்டுணர்த்த வேண்டிய பொறுப்புப் படைப்பாளர்களுக்கு உண்டு. நேரடிக் கண்டனமாக இல்லாமல் அரசியலை நையாண்டி செய்வதன்வழியும் மக்களுக்கும் அரசிற்கும் உணர்த்திவிடலாம். அதற்கு அங்கதம் சிறந்த முறையாகும். படைப்பை நகைச்சுவையுடன் நகர்த்துவதோடு, அரசியல் சார்ந்த பகடியின் வாயிலாகச் சமூதாயத்தை விழிப்படையச் செய்யமுடியும். டி.செல்வராஜின் உத்தியும் அம்முறையிலேயே அமைந்துள்ளது. மூன்று காலக்கட்டங்களின் மாற்றங்களைக் குறிப்பிடுகையில் நையாண்டி செய்தே விவரிக்கின்றார். ஜமீன்தாரி முறையின் அவலங்களையும், நில உச்சவரம்பு சட்ட அமலாக்கத்தில் நடைபெற்ற ஊழல்களையும், தற்கால அரசாங்கங்களின் மக்கள் விரோதப் போக்குகளையும் நாவலெங்கும் பகடிச் செய்ய தவறவில்லை. ஜமீன் காலத்தில் நடைபெற்ற கூத்துக்களை,

> ''கருப்புத்துரையின் பிதாமகனான, பட்டத்து ஜமீன்தார் ராவ் பகதூர் பொம்மு பாண்டித்துரை, தனது மூதாதையர் வழியைப் பின்பற்றி, நாட்டையும், வீட்டையும் மறந்து மேல்நாட்டுக் கீழ்நாட்டு வேசைப் பெண்களோடும், வைப்பாட்டிகளோடும், தனது பொருளையும், இளமையையும், வலிமையையும் பகிர்ந்து கொண்டு, தாதிழந்த நபுஞ்சகனாகிய பின்பு, கண்கெட்ட பின்பு, சூரியநமஸ்காரம் என்கிற வகையில், ராஜ்ய பரிபாலனம் செய்வதற்காக வேண்டி சிருங்காரபுரி ஜமீனுக்கு வந்து சேர்ந்தார்''

என எழுதுகிறார். ஜமீன்கள் மக்களின் நலனைப் பார்க்காமல் வழிவழியாகத் தங்களின் போக வாழ்க்கையிலேயே மூழ்கியிருந்த செய்தியை நயம்பட விவரித்துள்ளார். கருப்புத்துரையை எப்படிச் சித்தர், சுவாமி என்று கட்டமைத்து வளர்த்தார்களோ அதுபோலவே அவனைப் பயங்கரவாதி என்றும் கட்டமைத்தார்கள். காவல்துறை கருப்பைத் தீவிரவாதி என்றும் வழக்கைச் ஜோடித்து நீதிமன்றம் முன் நிறுத்தியது. அதனை,

> “மெய்ஞ்ஞான சித்தர் முனி என்கிற புனைப் பெயரில் மறைந்திருந்த கருப்புத்துரை, பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்தவன் என்றும், நாட்டில் பல இடங்களில் ஏற்பட்ட கொள்ளைகளுக்கும், வெடிகுண்டு சம்பவங்களுக்கும், கொலைகளுக்கும் கருப்புத்துரைக்கும் சம்பந்தம் உண்டு என்றும் பலவாறாக விளம்பரப்படுத்தப்பட்டது. பத்திரிகைகளும் இல்லாததும், பொல்லாததுமான சம்பவங்களுடன் கருப்புத்துரையின் பெயரைச் சம்பந்தப்படுத்தி, பூதாகரப்படுத்தி அவனை ஒரு அதிபயங்காவாதியாகச் சித்திரித்திருந்தன.” (ப.87)

எனப் பகடி நடையில் எழுதும் செல்வராஜ், தனிமனிதனின் மீது தொடுக்கப்படும் அதிகாரத் தாக்குதல்களையும் போன்மைகளைப் போற்றும் சமூக அவலங்களையும் இருவேறு கோணத்தில் வெளிப்படுத்துகின்றார். பொய் வழக்குகள் அதிகார வர்க்கத்தின் ஒடுக்குமுறைக் கருவிகளாவதைச் சிலப்பதிகார காலத்திலேயே காணமுடியும். பொய்கொல்லனின் பொய் வழக்கால் கொல்லப்பட்ட கோவலன் இதற்கோர் எடுத்துக்காட்டு. டி.செல்வராஜின் கருப்பும் இந்தவகையான பொய்வழக்குகளை எதிர்கொண்டு மரண தண்டனையைப் பெறுகிறான். இந்த அவலச்சுவையைச் சிலப்பதிகார அவலச்சுவை போலச் சொல்லாமல், அங்கதச்சுவையோடு வெளிப்படுத்தும் நிலையில்,

> “மெய்ஞ்ஞான சித்தர்சுவாமிகள் என்ற பெயரில், மறைந்திருந்த தீவிரவாதிக்கு செஷன்ஸ் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை உயர்நீதிமன்றம் ஊர்ஜிதம் செய்ய வேண்டியிருந்தது. அதற்குமேல் உச்ச நீதிமன்றத்திற்கு வழக்கை எடுத்துச் செல்ல அவனக்கு நாதியும் கிடையாது” (ப. 93).

எனச் செல்வராஜ் விளக்குகிறார். மெய்ஞ்ஞான சித்தர் சுவாமிகள் என்னும் சொல்லால் கருப்பை குறிக்கும் இவர் அவன் மீது இச்சமூகம் புனைந்த போன்மையையும், தற்போது அதிகாரவர்க்கம் தீவிரவாதி எனப் புனையும் போலிமையையும் ஒருசேர நகையாடுகிறார். இவ்விடங்களில் காவல்துறையும் நீதிமன்றங்களும் உண்மைத்தன்மையை உணராமல் செயல்படுகின்றன என்பதை அங்கத உத்தியால் செல்ராஜ் உணர்த்திவிடுகிறார்.

**நிறைவாக...**

அங்கதப் படைப்புகள், தனக்குத்தானே பகடிச் செய்வதோடு, நாட்டு நடப்புகளையும் சமூக அவலங்களையும் நையாண்டி செய்கின்றன. பொய்க்கால் குதிரை நாவல் அங்கதமில்லாமல் எழுதப்பட்டிருந்தால் ஆகக்கூடிய துன்பியல் நாவலாகியிருக்கும். டி.செல்வராஜின் இயல்பான நடையில்லாமலும், கருத்தியல் தர்க்கங்கள் இல்லாமலும் அங்கதப் படைப்பாக இருக்கவேண்டும் என்ற முனைப்புக்காட்டி எழுதப்பட்டுள்ளது என்பதை வரிக்குவரி வாசிக்கையில் உணரமுடிகிறது. நாவலைப் படர்க்கைக் கூற்றில் நாவலாசிரியர் எடுத்துரைப்பதால் அங்க உத்திகள் இயல்பாக வெளிப்பட்டுள்ளன. இந்திய, தமிழக மக்களின் வாழ்வியலும், அரசியல் செயல்பாடுகளும், பொருளாதார நடவடிக்கைகளும் விதியால் கட்டமைக்கப்பட்டன என்பதையும், தனக்கு என்ன நடக்கிறது; நடக்க வேண்டும் என்பதையும் ஒவ்வொருவரும் தீர்மானிக்க முடியாது. ஏன், எதற்கு இப்படி நடக்கிறது? என்ற சிந்தனைகூட வரமுடியாத அளவிற்கு, விதிக் கோட்பாடும், மூடப்

பழக்கவழக்கங்களும் அமைந்துள்ளன என்பதை அங்கதம்சார் எடுத்துரைப்பின்வழிச் சொல்கிறார். அங்கதச்சுவை நகைப்பிற்கு மட்டுமல்ல, சிந்திக்க வைப்பதற்குமுரியது என்பதை இந்நாவல்வழி நிறுவியுமுள்ளார் டி.செல்வராஜ்.

**பயன்பட்ட நூல்கள்:**


- தொல்காப்பியர், தொல்காப்பியம், இளம். உரை, சாரதா பதிப்பகம், சென்னை. 2006 (இரண்டாம் பதிப்பு)
- பஞ்சாங்கம் க., நவீனக் கவிதையியல் கடுத்துரைப்பியல், காவ்யா பதிப்பகம், சென்னை. 2003 (முதல் பதிப்பு)
- ஆவ்னர் ஸிஸ், மார்க்சிய அழிகியலின் அடிப்படைகள் (தமிழாக்கம் - பொன்னீலன்), NCBH, சென்னை. 2015 (முதல் பதிப்பு)
- ஞானசம்பந்தம் அ.ச., இலக்கியக் கலை, பாவை பதிப்பகம், சென்னை. 2016 (இரண்டாம் பதிப்பு)
- நடராசன் தி.சு., திறனாய்வுக் கலை, NCBH, சென்னை. 2009 (ஏழாவது பதிப்பு)
- மணவாளன் அ.அ., இருபதாம் நூற்றாண்டின் இலக்கியக் கோட்பாடுகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை. 2002 (இரண்டாம் பதிப்பு)
- மறைமலை சி.இ., இலக்கியமும் சமூகவியலும், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1991 (முதல் பதிப்பு)

மதிப்பிடப்பெற்றது

# சு.தமிழ்ச்செல்வியின் 'கீதாரி' நாவலில் தகுபுணர்ச்சிக் கோட்பாடு

# The theoretical theory in 'Geetari' novel by Thamizhaldevi

முனைவர் அ.மரிய செபஸ்தியான்
உதவிப்பேராசிரியர் - தமிழ்
சமூக அறிவியல் மற்றும் மொழிகள் பள்ளி
வி.ஐ.டி. பல்கலைக்கழகம், வேலூர்.
mariasebastin.a@vit.ac.in

**Abstract:** The human community is renewing itself with various restrictions. Human Sexual relations rules are based on community and cultural. This Novel indicates that human sexual behaviours and relationships are in harmony with the circumstances. This Novel given the message of all the feelings of frustrations, pains, and unstable living in the lives of "kithaari".

**Keywords:** kithaari, human community, harmony, cultural, Novel, சு.தமிழ்ச்செல்வி, கீதாரி, நாவல், தகுபுணர்ச்சிக் கோட்பாடு.

யாருக்காகவும் பாசாங்கு செய்துகொள்ளாத எழுத்து சு.தமிழ்ச்செல்வியினுடையது. தனது எழுத்துப் பயணத்தில் தொடர்ந்து காத்திரமாகவே எழுதிவரும் சு.தமிழ்ச்செல்வி அவர்களின் கீதாரி நாவலானது சமூகம் கட்டமைத்த பாலியல் ஒழுக்கங்களைக் கேள்வி கேட்கும் படைப்பாக அமைந்துள்ளது. பொதுவாகவே ஒரு சமூகம் தனக்கென தனிப்பட்ட பாலியல் கோட்பாடுகளை வகுத்து அதன்படி மக்களை வாழ நிர்பந்திக்கும். அச்சமூகம் கட்டமைத்த கோட்பாடுகள் ஒரு படைப்பாளியின் எழுத்துக்களால் தகரும்போது அச்சத்தின் அதிர்வுகள் அனைவருக்குமானதாக இருக்கும். காரணம் அதுவரை தாங்கள் பின்பற்றி வந்த அல்லது பாதுகாத்து வந்த சிந்தனைக் கோட்பாடு அதனோடு தொடர்புடைய நடைமுறைப் பழக்கவழக்கங்கள் இனி தொடராது என்ற முடிபும் அதன் பயனாகத் தாங்கள் பாதுகாத்து வைத்திருந்த பெண் உடல்சார்ந்த புனைவுகள், பெண் உடல்மீது கட்டி எழுப்பப்பட்ட ஆணுக்கான உரிமை கட்டுமானங்கள் தகர்ந்துவிடும் என்பதால். இங்கு தகர்தல் என்பது ஆண் தனது அதிகாரத்தின் பிடியில் வைத்துப் பாதுகாத்த பெண்ணின் மீதான உரிமையின் தளர்வாகவும் கொள்ளலாம்.

படைப்பாளி என்பவன் சமூகம் தனக்கென எழுப்பி வைத்திருக்கும் கருத்துருவாக்கங்களில் குறுக்கும் நெடுக்குமாக பயணிப்பவன். சமூகத்தின் கடுமையான இருள்சூழ்ந்த மறைவான பக்கங்களில் பயணப்பட்டு அதனைப்பற்றிய பிம்பத்தைப் பாரபட்சம் இன்றி வெளிப்படையாகப் பேசி கடும் அதிர்வுகளை எதார்த்தமான சமூகத்தின் முகமாக வெளிச்சமிட்டுக் காட்டிவிடுவான். அத்தகு அதிர்வுப் போக்கே கீதாரி நாவல் நெடுக இடம்பெற்றுள்ளது.

மானுடத்தை உயிர்ப்போடு வைத்திருக்க இயற்கையானது காமத்தைத் தொடர்ந்து பல்வேறு தளங்களில் பரிசோதித்துப் பார்த்துக்கொண்டே இருக்கின்றது. சுற்றியிருக்கும் இயற்கை எவ்வகையிலேனும் ஒரு ஆண் தனக்கான பெண் உடலை அல்லது ஒரு பெண் தனக்கான ஆண் உடலைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளும் முடிவுநோக்கி நகர்த்தி விடுகின்றது. சுழலானது

தனிமனிதனின் வரையறுக்கப்பட்ட பாலியல் தேவைகளைப் பகடிசெய்து சமூகம் வகுத்த திசைக்கு எதிர்திசையில் பயணப்படவைத்து சமூக கட்டமைப்பை அவ்வப்போது உடைத்துக் கொண்டிருக்கின்றது.

**கீதாரி : மாற்றியமைக்கப்பட்ட தகுபுணர்ச்சிக் கோட்பாடு**

கீதாரி நாவலானது மாற்றியமைக்கப்பட்ட தகுபுணர்ச்சிக் கோட்பாடு குறித்து வெளிப்படையாகப் பேசுகின்றது. ஒரு சமூகத்தின் பாலுறவு குறித்த கோட்பாடு யாருக்கானதாகப் புனையப்பட்டிருக்கும் என்ற கேள்விக்கு விடையாகக் கீதாரி நாவலானது அமைந்துள்ளது. மேல்தட்டுச் சமூகம் கடைபிடிக்கும் பாலியல் உறவு குறித்த கருத்தாடல்களுக்கும், இடைநிலைச் சமூகமக்கள் பின்பற்றுகின்ற பாலுறவுக் கோட்பாட்டில் இருந்து முற்றிலும் வேறுபட்ட கருத்துருவாக்கத்தை நிலமற்ற, நகரும் நாடோடிக் குழுவினுள் காணமுடியும் என்பதை ஆட்டு மந்தைகளை ஓட்டிச்செல்லும் எதிர்த்துப்பேச இயலாத மக்களின் வாழ்வின் மூலம் சு.தமிழ்ச்செல்வி கட்டமைக்க முயலுகின்றார். எதிர்த்துப் பேசத் திராணி அற்ற, நாடோடிக் குழுவிற்கான உணர்வு நிலைகளை இயற்கை தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றது. இடம் மற்றும் பருவம் ஒரு குழுவை வழிநடத்திச் செல்வதை நாவலை வாசிக்கும் பொழுது உணரமுடிகின்றது.

யாவரிடமும் சொல்வதற்கென்று இருக்கும் இருள்சூழ்ந்த சொல்லப்படாத பக்கங்களைக் கதாப்பாத்திரங்களின் வழியே சமூகத்தின்முன் பார்வைக்கு வைக்கின்றார். சேது, ராமாயி, சிகப்பி, கரிச்சா, வெள்ளைச்சாமி, சேர்வை, இருளாயி என நாவல் நெடுக பயணப்பட்டுக் கொண்டிருக்கும் எளிமையான கதாப்பாத்திரங்கள் வலிமையான முடிவுகளை எடுத்துக்கொண்டே உயிர்ப்பித்து இருத்தலுக்கான தேவையை நோக்கி இயற்கையானது வழிநடத்திச் செல்வதைக் காணமுடிகின்றது.

சிகப்பியை வயதிற்கு வரும்வரை வளர்த்த சேது ‘தந்தை’ என்ற சொல்லாடலுக்கான சமூகத்தோடு இயங்கும் முகத்தோடு தன் கடன் பணிசெய்து கிடைப்பதாகவே இருக்கின்றார். ஆனால் தந்தை வயதொத்த ‘சாம்பசிவம்’ எடுத்து வளர்க்கும் மகள் சிகப்பியுடன் வலுக்கட்டாயமாகக் கூடுவதென்பது தகாப்புணர்ச்சிக் கோட்பாட்டைத் தருவதாகவே கருதப்படுகின்றது. கரிச்சாவின் துணைக்கு இருக்கும் சித்தப்பா முறை (சேதுவால் எடுத்து வளர்க்கப்பட்ட) வெள்ளைச்சாமி கால ஓட்டத்தில் கணவனாக வருவது சமூக விதிகளுக்குப் பழகிய மனங்களுக்குப் பெரும் அதிர்வை வழங்குவதாக அமைகின்றது. சமூகத்தினால் பயிற்றுவிக்கப்பட்ட மக்களுக்குத் தனக்கான இணைதேடல் என்பது வரையறுக்கப்பட்ட ஒன்றாக அமைந்திருக்கும். ஆனால் சமூகத்திலிருந்து ஒதுங்கி உயிர்ப்பித்தலை மட்டுமே தலையாயக் கடனாகக் கொண்டு இடம் விட்டு இடம் நகரும் குழுவிற்குத் தனக்கான இணைதேடல் என்பது சவால் நிறைந்த ஒன்று. அத்தகு சவாலான சூழல்களில் இயற்கையானது சமூக விதிகளைப் பகடிசெய்யும் விதமாகப் புதுவித கட்டவிழ்ப்புகளை அல்லது ஆண், பெண் என்ற ஆதிமரபு நிலைப்பாட்டின் பாதையைத் தேர்ந்தெடுக்க வைப்பதைக் காணமுடிகின்றது.

சமூகம் கட்டமைத்த மனத்திற்கும் இயற்கை நிகழ்த்தும் உடலியல், மன மாறுதல்களுக்கும் இடைப்பட்ட மோதலை சு.தமிழ்ச்செல்வி கரிச்சா பருவமடையும் இரவு குறித்த கதையாடல் மூலம் நிகழ்த்திக் காண்பிக்கிறார். பேயிலுப்பை, தேனிலுப்பைப் பூ இதழ்களை வறுத்து உண்ணுதல், மூல சூட்டுக்கு ஆமைக்கறி உண்ணவேண்டும் என்ற குறிப்பு மற்றும் நாவல் முழுக்க பழமொழி பயணப்பட்டுக் கொண்டிருப்பதைக் காணமுடிகின்றது.

தொடர்ந்து நகரும் இடையர்களின் வாழ்வியல் கூறுகளை எந்தவித பாசாங்குகளும் இன்றி ஆவணமாகப் பதிந்துள்ளார் என்றே சொல்லலாம். திருமணச் சடங்கில் மாப்பிள்ளை தொலைவில் வேறு ஊரில் இருக்க கரிச்சாவிற்கு அருகில் மாப்பிள்ளையாக அலங்கரிக்கப்பட்ட இடையர்களின் "தடிக்கம்பை" சித்தப்பா என்று யாரும் அறியாமல் சொல்லி அழைத்தபடிக் கணவனாக ஏற்கும் சூழல் யாரும் எதிர்கொள்ளாத - அல்லது சமூகத்தால் ஏற்றுக்கொள்ள இயலாத சூழல் அமைவதும், அதன்பிறகான வாழ்க்கை தொடர்வதும் கோட்பாடுகள் அனைத்தும் அவ்வப்போது மாறுதலுக்குரியதே என்ற கருத்துருவாக்கத்தை சு.தமிழ்ச்செல்வி கட்டமைக்கின்றார் எனலாம்.

ஏதுமற்றவர்களின் நீதி என்றுமே மௌனம்தான் என்பதும் தொடர்ந்து நகரும் சமூகத்திற்கென்று இருக்கும் எடையற்ற பொருட்கள் (போகும் இடங்களில் அம்மி கடன் வாங்கும் நிலை), பழகிய பொருட்களை விட்டுவிட்டு வரும் சூழல், வழிதவறிப்போன ஆடுகளைத் திரும்ப ஒப்படைக்கும் ஊர்மக்கள், இரவு துக்கமற்ற இடையர்கள் வாழ்க்கை, அண்ணன் இறந்தபிறகு அவரின் மனைவியைத் தம்பிக்குக் கட்டிவைக்கும் பழக்கம், சபித்தல் தொடர்பான சடங்குகள், ராஜா வாய்க்கால் வழியாக அரிசி கொண்டுசெல்லுதல் என இடையர்கள் வாழ்வியலோடு கூடிய சடங்குகள் அனைத்தையும் சு.தமிழ்ச்செல்வி அவர்கள் தனது கீதாரி நாவலை எதார்த்த இயங்குதளத்திலிருந்து புனைந்துள்ளார்.

**நூல்விவரம்**

நாவல் பெயர் : கீதாரி

ஆசிரியர் : சு.தமிழ்ச்செல்வி

பதிப்பகம்: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., 41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 098.

பக்கம்:175

விலை:115

பதிப்பு விவரம்: may 2017 (10th edition)

First Edition : Dec 2008

INAM : INTERNATIONAL E-JOURNAL OF TAMIL STUDIES
இனம் இனத்தைச் சேரும்

மதிப்பிடப்பெற்றது

# பாரதிதாசன் படைப்புகளில் பெண்ணுரிமைக் கதாபாத்திரங்கள் - ஒரு பார்வை

## Feminist characters in Bharathidasan creation - a vision

**மா.இரா.இராஜ்குமார்**
உதவிப்பேராசிரியர், வரலாற்றுத்துறை,
பிஷப் ஹீபர் கல்லூரி(தன்னாட்சி),
திருச்சிராப்பள்ளி - 620 017.
8344261514. rajkanth.kumar2@gmail.com

**Abstract:** Bharathidasan was known as one of the morning stars in Tamil Literature. He was deeply influenced by Tamil poet Subramaniya Bharathi and named himself as Bharathidasan. This article briefly explains about the Bharathidasan's literature and women empowerment. It explains the role of revolutionary women characters in his literature. He used his literature to empower the women in Tamil Society.

**Keywords:** Bharathidasan, Subramaniya Bharathi, literature, women empowerment, பாவேந்தர், திராவிட இயக்கம், பகுத்தறிவு, பாரதிதாசன்.

இருபதாம் நூற்றாண்டின் இலக்கிய வரலாற்றில் பாவேந்தர் பாரதிதாசனுக்குத் தனியிடம் உண்டு. பாரதிக்குத் தாசன் ஒருவன் தான். ஆனால், பாரதிதாசனாரைப் பின்பற்றிப் பாடும் பாவலரோ பலநூறு பேர். தன் படைப்புகளில் பெண்ணுரிமைக்காகக் குரல் கொடுத்த புலவர் இவர். திராவிட இயக்கம் மூலம், பகுத்தறிவு தமிழன் பிறக்க, பெண்ணிடம் தமிழ்க் குடும்பங்கள் அடைக்கலம் புகவேண்டும் என்றார் பாவேந்தர் பாரதிதாசன்.[1]

அவ்வகையில், பாரத்திதாசனின் படைப்புகளில் இடம்பெறும் பெண் கதாபாத்திரங்களின் செயல்திறனை மதிப்பிடுகின்றது இக்கட்டுரை.

**சஞ்சீவி பர்வதத்தின் சாரல்**

பெண் ஓர் அடிமையாக இருக்கும்போது ஆண் மட்டும் சுதந்திரமாக இருக்க முடியுமா? இந்த எல்லையற்ற காற்றை உட்கொண்டு உயிர்வாழும் ஒருவரை விலங்கிட்டு அவர்களை, இருண்ட சமாதியொன்றின் சிதைவுக்கு ஆளாக்குவதா? உழைப்பு அல்லது வேதனை ஆகியவற்றைக் காட்டிலும் வளமான நிந்தனையைச் சுமக்கும் பழிக்கு ஆளாகி, விலங்குகளாக உள்ளவரோடு கூடிவாழும் ஆண்கள் தமது கொடுங்கோலர்களை, மிதித்து நசுக்கத் துணிய முடியுமா? என்று 'இஸ்லாமின் புரட்சியில்' சித்னா பெண் விடுதலை பற்றிக் கூறுவதைப் போன்று[2] 'சஞ்சீவி பர்வதத்தின் சாரலில்' வஞ்சி பெண்ணுரிமை முழக்கம் செய்கின்றாள். 'சொன்னபடி கேட்காமல், தோஷம் விளைவிக்கின்றாயே' என்று சினந்து உரைத்த குப்பனை நோக்கி,

'பெண்ணுக்குப் பேச்சுரிமை வேண்டாம் என்கின்றீரோ?
மண்ணுக்கும் கேடாய் மதித்தீரோ பெண்ணினத்தை?
பெண்ணடிமை தீரும் மட்டும் பேசுந்திரு நாட்டு
மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே!
ஊமை என்று பெண்ணை உரைக்கு மட்டும்

உள்ளடங்கும் ஆமை நிலைதான் ஆடவர்க்கும் உண்டு
புலன் அற்ற பேதையராய்ப் பெண்ணைச் செய்தல்
அந்நிலம் விளைந்த பைங்கூழ் நிலைமையும் அம்மட்டே!
சித்ர நகர்பெண்டிர்களைச் சீரழிக்கும் பாரத
நற்புதர்களைப் பற்றியன்றே பூலோகம் தூற்றுவது?'

என்று வஞ்சி கூறுகின்றாள்.[3]

**புரட்சிக் கவி**

'புரட்சிக் கவியில்' அமுதவல்லி நான்கு வர்ணக் காவலனாம் மன்னனை நோக்கி, 'என் மணம் காதலனைச் சென்றிழுத்த பின்னே அவன் இணங்கினதால் அன்னவன் பிழையிலனாம்: அதற்கு அணங்குனைத் தண்டித்தல் முறையெனினும், மன்னா! நின் ஒரு மகள் நான். என்னை வருத்திட உனக்கதிகாரம் இல்லை! உன் குடிக்கு ஊறிழைத்தாள் எனில் ஊர்மக்கள் இடம் அதை உரைத்தல் கடன்' என்று முழங்குகிறாள்.[4]

**தமிழச்சியின் கத்தி**

தமிழச்சியின் கத்தியில் சுப்பம்மா என்பவள் குப்பு, முருகி எனும் இரு பெண்டிரை நோக்கி, 'கண்ணகி யென்னும் இந்தத் தமிழ்நாட்டின் கண்ணே போன்ற பெண் கதை கேட்டு இருப்பீர்! அப்பெண்ணைப் பெற்ற நாட்டுப் பெண்களே நீரும்! அந்தப் பெறும் பண்பே உமக்கும் வேண்டும். எண்ணமேன் இவ்வாறானீர்? திருந்துங்கள்' என்று பெண்ணின் பெருமையை நினைவுபடுத்தித் திருத்துகின்றாள்.[5]

**குடும்ப விளக்கு**

தொல்காப்பியர் காலத்தில் கடல்வழிப் பயணத்திற்குப் பெண்கள் அனுமதிக்கப்படவில்லை. பொதுவாக, 'வினையே ஆடவர்க்கு உயிர் மனைபுறை மகளிர்க்கு ஆடவர்உயிர்' என்ற கருத்து அன்றைய நாளில் ஆட்சி செலுத்திற்று.[6] அக்காலச் சமூகத்தில் ஆடவரே முதன்மை பெற்றிருந்தனர் என்பதற்கு 'எவ்வழி நல்லவர்ஆடவர் அவ்வழி நல்லை வாழிய நிலனே' எனும் புறப்பாடல் சான்றாக அமைந்துள்ளது. 'பொருள்வயிற் பிரிவு' என்பதும், 'செய்க பொருளை' என்பதும் ஆடவர்க்கே உரியவையாக அமைந்தன.[7]

இவ்வாறு பெண்களுக்குத் தீங்கு இழைக்கப்பட்ட கொடுமையான கால கட்டத்தில் தோன்றிய பாரதிதாசன், வீட்டை விட்டுப் பெண்டிரை வெளியே அனுப்பாமல் திரைபோட்டு மறைப்பதை வன்மையாகக் கண்டித்தார். 'குடும்ப விளக்கில்' தங்கம், கடை வணிகம் புரிகின்ற காட்சியைக் காட்டுகின்றார் பாவேந்தர்.

'இளகிய நெஞ்சத்தாளை இளகாத வெல்லம் கேட்பார்
அளவாக இலாபம் ஏற்றி அடக்கத்தை எடுத்துரைப்பாள்.
மிளகுக்கு விலையும் கூறி, மேன்மையும் கூறிச்
சற்றும் புளுகாமல் புகன்ற வண்ணம் புடைத்துத்
தூற்றிக் கொடுப்பாள்'.[8]

அனைத்துத் துறையிலும் ஆணோடு பெண் சரிநிகராகப் பணிபுரிதல் வேண்டும். அப்போதுதான் மகளிர் வாழ்வில் பொருளியல் விடுதலையை எய்த முடியும். பொருளியல் விடுதலையை எய்தும் காலமே, பெண்ணடிமைத்தனம் ஒழியும் காலமாகும் என்ற அறிஞர்களின் கருத்தை ஏற்றுக் கொண்டவர் பாவேந்தர் பாரதிதாசன். குடும்பவிளக்கில் தங்கம்

மலர்க்குழலியிடம் பேசும்போது, 'வானூர்தி செலுத்தல், வையமாக்கடல் முழுதளத்தல் ஆன எச்செயலும் ஆண், பெண் அனைவர்க்கும் பொதுவே! இன்று நானிலம் ஆடவர்கள் ஆணையால் நலிவடைந்து போனதால் பெண்களுக்கு விடுதலை போனறதன்றோ?' என்று கூறுகிறாள்.[9]

சமையல் தொழிலிலும், வேறு இல்லப் பணியிலும் ஆடவரும் பங்கேற்க வேண்டும் என்ற கருத்தை, 'சமைப்பதும், வீட்டு வேலை சலிப்பின்றிச் செய்தலும் பெண்கள் தமக்கே ஆம் என்று கூறல் சரியில்லை' எனும் பகுதியில் பாவேந்தர் ஆணுக்குப், பெண் சரிநிகர் என்பதை வலியுறுத்துகிறார்.[10]

அரேபியாவில், பெண் குழந்தை பிறப்பது இழிவு எனக் கருதப்பட்டது. பெண்குழந்தை பிறந்தவுடன் தாயானவள் அதைக் கொன்று புதைத்துவிட வேண்டும்.[11] இந்தியாவில் வேதகாலத்தில், 'பெண் மகவு வேறு எங்காவது பிறக்கட்டும். இங்கே ஆண் மகவு பிறக்கட்டும் என்று இறைவனை வேண்டினர்.[12] ஆயின் பாரதிதாசனோ பெண்குழந்தை அதுவும் முதற் குழந்தை பிறந்தால் மிகவும் சிறப்பானது எனக் கருதினார். எடுத்துக் காட்டாகப், 'பெண்ணே பிறந்தால் எங்கே போடுவீர்' என்று கேட்ட பெரியவரிடம், மலர்க்குழலி, 'மண்ணில் பட்டால் மாசுபடும் என்று என் கண்ணில் வைத்தே காப்பேன்' என்று இயம்புகிறாள்.[13] குடும்பவிளக்கில் திருமண ஒப்புதல் கேட்ட சான்றோரை நோக்கி நகைமுத்து,

'கட்டழகனை மணக்கக் காத்திருக்கின்றேன்
அட்டியில்லை, ஆனால் ஒரு திட்டம்,
மட்டமாய்ச் செலவிடுக எங்கள் மணம் முடித்துத்
தட்டாமல் ஈக தனி இல்லம்'

என்று சட்டாம்பிள்ளை போல் பேசுகிறாள்.[14]

### காதலா? கடமையா?

காதலா கடமையாவில் மணமான மங்கை தன் கணவனின் தீய ஒழுக்கத்தைக் குறித்து, நீதிமன்றத்தில் முறையிடுகின்றாள். 'மன்றுளீர்! என்றன் தலைவன் மணமாகாத மங்கையை நாடிப் பணமாய்ப், பட்டாய், அணியாய் அவட்கு நாடோறும் நல்குகிறான். அதனால், நான் ஈடேறும் வகை எதுவும் காணேன். இருக்கும் சொத்தில் என் விழுக்காட்டை அளிக்கும்படியும், அன்றைய மணத்தைக் கிறுக்கும்படியும் கேட்பதென் வழக்கு, என மொழிகிறாள். இதில் மணவிலக்கும், சொத்துரிமையும் பெண்களுக்கு வலியுறுத்தப்படுகின்றன.[15]

### பாண்டியன் பரிசு

பாண்டியன் பரிசு நரிக் கண்ணனோடு அன்னம் உரையாடும்போது, 'பொருந்தாத் திருமணத்தையும், குழந்தைமணக் கொடுமையையும் சாடுவதாகக் காட்டுகிறார் பாவேந்தர்.[16]

### குறிஞ்சித் திட்டு

குறிஞ்சித் திட்டில் மன்னி மல்லிகை, பெண்களைத் தாழ்த்தி உரைக்கும் கொடியவரை, 'தொழிம்பர்' எனக் கடிகிறாள். மேலும்,

'நூலெல்லாம் பெண்ணைத் தாழ்த்தும்
நுண்ணறிவாளர் என்போர்
காலெல்லாம் கைலாம்பெண்
கண்ணிலே மண்ணைத் தூவும்'

என்று சாடுகிறாள். மேலும்,

‘எண்ணமும் செயலும் இவ்வாறிருந்திடும் நாட்டில்,
வாழ்வின் கண்ணெனும் பெண்ணினந்தான்
கடைத்தேற வழியுண்டோ?
மண்ணினும் கேடாய் அன்றோ,
மதிக்கின்றார் பெண்ணி னத்தை?’

என்றும் சாடுகிறாள்.[17]

**மணிமேகலை வெண்பா**

மணிமேகலை வெண்பாவில் நோய்வாய்ப்பட்ட காயசண்டிகையை விட்டு ஓடிய கணவன் காஞ்சனனைக் குறித்து,

நோயென்றால் ஓடுவதும், நோயின்றேல் ஓட்டுவதும்
நாயென்றால் பின்னோடும் நாய்ச் செயலே!

என்று கடிகிறார்.[18]

**கற்புக் காப்பியம்**

தொடக்கக் காலத்தில் பெண்களுக்கே கற்பு வலியுத்தப் பட்டதேயன்றி, ஆண்களுக்கு வலியுறுத்தப்படவில்லை.

‘கண்டார் இகழ்வனவே காதலன்தான் செய்திடினும்
கொண்டானை அல்லாமல் அறியாக் குலமகள்’ (குலசேகர ஆழ்வார்)
‘கற்புடைய பெண்டிர் பிறர்நெஞ்சு புகார்’ (மணிமேகலை).[19]

இக்கொடுமையை எதிர்த்து, ‘கற்பென்பது ஆணுக்கும், பெண்ணுக்கும் பொதுவானதாக இருக்க வேண்டும். சில புருஷர்களுக்கு தாசிகமனம் தண்ணீர் குடித்த பாடமாயிருக்கின்றது. அதில் சங்கோசமுமில்லை - அவமானமுமில்லை. பொக்கவாயன் பொரிமாவை மெச்சிக்கொள்வது போலவும், கோழி குப்பையை மெச்சுவதைப் போலவும், ஈக்கள் அசுத்தத்தைச் சிலாகிப்பது போலவும் தாசிகமனஞ் செய்வதைத் தங்களுக்குக் கௌரவமாக எண்ணுகிற ஞான சூனியர்களும் அநேகர் இருக்கிறார்கள். இது பெரிய பத்தினித் துரோகமல்லவா? என்று மாயூரம் வேதநாயகம் பிள்ளையும்,[20] ‘கற்புநிலை என்று சொல்ல வந்தால்

இருகட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்’

என்று பாரதியாரும்,[21] ‘கற்பு என்பதற்குப் பதி விரதம் என்று எழுதிவிட்டதன் பலனாலும், பெண்களை விட ஆண்கள் செல்வம், வருவாய், உடல்வலி கொண்டவர்களாக ஆக்கப்பட்டு விட்டதனாலும், பெண்கள் அடிமையாவதற்கும், புருஷர்கள் மூர்க்கர்களாய்க் கற்பு என்பது தங்களுக்கு இல்லை என்று நினைப்பதற்கும் அனுகூலம் ஏற்பட்டதே தவிர வேறில்லை’ என்று தந்தை பெரியாரும் கூறிச் சென்றார்கள். பாரதிதாசனும் இந்த ஒரு சார்புடைக் கற்பைக் கடிந்துள்ளார்.[22]

கற்புக் காப்பியத்தில் ஆடவர், பெண்டிர், ஒழுக்கம் குறைவு பற்றிப் பொன்னி, ‘பெண் எனில் பேதை என்ற எண்ணம் இந்த நாட்டில் இருக்கும் வரைக்கும் உருப்படல் என்பது

சரிப்படாது. மாதரும் கற்பை மறப்பாராயின், தீதெல்லாம் செழித்து வளரும் நாட்டில் ஒருத்தியைக் கண்டால் ஒன்பது நாய்கள் துரத்துவது தொலைவது எந்த நாளோ?[23]

காசுக்குக் கற்பிழக்கும் பெண்கள்
மாசுக்கே வாழ்கின்றார் நாட்டில்'

என்று கூறுகிறார்.

எது பழிப்பில் விதவை முத்தம்மை, கூழப்பனிடம்
'என்னை மணப்பீரோ என்றன் அருமை மகன்
தன்னை உம்பிள்ளையெனத் தாங்கத்திருவுளமோ'

என வினவுவதின் மூலம் பெண்களுக்கு மறுமண உரிமையை வலியுறுத்தியுள்ளார்.[24]

**முடிவுரை**

தமிழ்ச்சமூகத்தில் பெண்ணுரிமைக்குப் பாரதி அடித்தளமிட, அதனைத் தம் படைப்புகளின்மூலம் நிலைநிறுத்தியவர் பாவேந்தர். எனவே, இன்றைய புதுமைப் பெண்களுக்கும் பெண்ணுரிமைக் கொள்கைதனைச் செயலாற்றி வருவோர்க்கும் பாவேந்தர் என்றும் முன்னத்தி ஏரே!

**சான்றெண் விளக்கம்**


1. முத்துக்குமாரசுவாமி ப., (தொ.ஆ.), 'இருபதாம் நூற்றாண்டின் 100 தமிழ்க்கவிஞர்கள், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 2004, ப.7.
2. ஜெகந்நாதன் ஆ., 'பாரதிதாசனில் மார்க்சியம்', அகரம் பதிப்பகம், கும்பகோணம், 1996, ப.30.
3. இளங்கோ ச.அ., 'பாரதிதாசன் பார்வையில் பாரதி' அன்னம் (பி.லிமிடெட்), சிவகங்கை, 1982, ப.121.
4. பாரதிதாசன், 'விடுதலை' 21.04.1970, ப.6.
5. …, 'தமிழச்சியின் சக்தி', பாரிநிலையம், சென்னை, 1988, ப.11
6. ….., 'குடும்ப விளக்கு', பாரிநிலையம், சென்னை, 1982, ப.30
7. மேலது., ப.31.
8. ஜீவபாரதி கே., 'உலகப்பன் காலமும் கவிதையும்', நியூ செஞ்சுரி புக் ஹைவுஸ் (பி). லிமிடெட், சென்னை, 1995, ப.64.
9. பாரதிதாசன், 'குடும்ப விளக்கு', பாரிநிலையம், சென்னை, 1982, ப.71.
10. …, 'குயில்', 16.02.1960, ப.1.
11. ஜெகந்நாதன் ஆ., 'பாரதிதாசனில் மார்க்சியம்', அகரம் பதிப்பகம், கும்பகோணம், 1996, ப.11.
12. பாரதிதாசன், 'குயில்', 24.02.1959, ப.2.
13. Selected poems of Bharathidaasan, Bharathidasan University, Trichy, 1991, p.223.
14. பாரதிதாசன், 'குடும்ப விளக்கு', பாரிநிலையம், சென்னை, 1982, ப.21.
15. …, 'காதலா? கடமையா?' பாரிநிலையம், சென்னை, 1980, ப.72.
16. …, 'பாண்டியன் பரிசு', செந்தமிழ் நிலையம், திருச்சி, 1972,ப.37.
17. கந்தசாமி சோ. நா., 'தமிழிலக்கியச் செல்வம்', மெய்யப்பன் பதிப்பகம், சென்னை, 2003, ப.14.
18. பாரதிதாசன், 'மணிமேகலை வெண்பா', பாரி நிலையம், திருச்சி, 1985, ப.43.

19. ஈரோடு தமிழன்பன், ‘தெரிந்தெடுத்த பாரதிதாசன் கவிதைகள்’, சாகித்திய அகாதெமி, புதுதில்லி, 2007, ப.19.
20. ஜெகந்நாதன் ஆ., ‘பாரதிதாசனில் மார்க்சியம்’, அகரம் பதிப்பகம், கும்பகோணம், 1996, ப.132.
21. இளங்கோ ச.அ., ‘பாரதிதாசன் பார்வையில் பாரதி’ அன்னம் பி(லிமிடெட்), சிவகங்கை, 1982, ப.64.
22. தங்கப்பிரகாசம் சா., ‘பாரதிதாசன் பாடல்களில் பெரியாரின் சிந்தனைகள்’ பகுத்தறிவு பதிப்பகம், பெரம்பலூர், 1995, ப.111.
23. பாரதிதாசன், ‘குயில்’, 5.07.1958, ப.1.
24. ஜீவபாரதி கே., ‘உலகப்பன் காலமும் கவிதையும்’, நியூ செஞ்சுரி புக் ஹௌவுஸ் (பி) லிமிடெட், சென்னை, 1995, ப-65.

மதிப்பிடப்பெற்றது

# தமிழவனின் ஆடிப்பாவை போல : தீவிர கதைத்தேர்வும் ஜனரஞ்சகக் கதைபோக்கும்

## Tamiḻavaṉiṉ āṭippāvai pōla: Tīvira kataittērvum jaṉarañcakak kataipōkkum

**ஆ.ஈஸ்வரன்,**
தமிழ் இளநிலை வள நபர்.
தேசிய தேர்வு பணி-இந்தியா,
இந்திய மொழிகளுக்கான நடுவண் நிறுவனம், மைசூர்-570006.
அலைபேசி 9013942343, மின்னஞ்சல்: aeswar94@gmail.com

**Abstract:** Tamilavan's 'Adippaavai pola': In the author's introduction of this novel gives Instruction to readers for reading this novel in three ways. Odd number chapters have one story that is Love. Even number chapters have one story that is protest. And if we read both it means usual reading without skipping of any chapters; It gives another story. I took third way. But for this article I took Odd number chapters as Main story and even number chapters as background of the odd number chapters' story. This article concentrates to trace out some popular fiction's feature through story telling method.

**Keywords:** Tamilavan, Adippaavai pola, novel, story, Love, telling method, ஜனரஞ்சகத் தன்மை, கதைத்தேர்வு, கதைப்போக்கு, தமிழவன், ஆடிப்பாவை போல.

தமிழவனின் “ஆடிப்பாவை போல” எனும் புதினத்தில் உள்ள ஜனரஞ்சகத் தன்மை எனப்படும் கேளிக்கைக் கூறுகள் உள்ள இடங்களைச் சுட்டிக்காட்டுதல் இக்கட்டுரையின் நோக்கம்.

**விளக்க முறை**

கேளிக்கை இலக்கியப் பண்புகள் என சில கூறுகளை முன்கருத்துக்கள் வழியாகவும் சுய தர்க்கத்தின் வழியாகவும் வறையறுத்துக்கொண்டு அவை இப்புதினத்தில் பொருந்தும் இடங்களைச் சுட்டுக்காட்டி விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

**கதைத்தேர்வும் கதைப்போக்கும்**

இப்பதினத்தின் தொடக்கத்திலேயே இப்புதினத்தை எவ்வாறு படிக்க வேண்டும் என்ற வழிகாட்டு நெறிமுறை தரப்பட்டுள்ளது. ஒற்றைப்படை எண் கொண்ட அத்தியாயங்கள் காதல் சார்ந்த அகக்கதையாவும், இரட்டைப்படை எண் கொண்ட அத்தியாயங்கள் போர் அல்லது போராட்டம் சார்ந்த புறக் கதையாவும் இருக்கும் என்றும் எவ்வித தாவலும் இல்லாமல் படிப்பவர்களுக்கு அகமும் புறமும் கலந்த ஒரு முழுக் கதையாக இருக்கும் என்றும் கூறப்பட்டுள்ளது.

முழுக்கதையும் படித்ததன் அடிப்படையில் இக்கதைக்கான காலப்பின்னணியாக இந்தி எதிப்புச் சூழலையும் இடப் பின்னணியாகத் திருநெல்வேலி கல்லூரிச் சூழலையும் கொண்டு காதலைச் சொல்லும் அக அத்தியாயங்களை மட்டுமே கொள்ளப்படுகிறது. இந்த வாதத்தின் பின்னணியிலேயே கட்டுரைத் தலைப்புத் தேர்வுக்கான காரணமும் வாதமும் அமைகிறது என்பதை இங்குச் சுட்ட வேண்டும். எவ்வாறெனில் இந்தி எதிர்ப்புப் போராட்டம் வெகு

உக்கரமாக நிகழ்ந்து கொண்டித்தல், அது சார்ந்த மேடை பேச்சுகள், எதிர்ப்புப் பிரச்சாரங்கள் எனப் பல நிகழ்ந்து கொண்டிருக்கும்போது, அதே சூழலில் ஏற்படும் இரு காதல் இணைகளின் கதையைத் தேர்வு செய்திருத்தலைத் தீவிர கதைத்தேர்வாகவும் அக்கதையை நகர்த்திச் சென்றுள்ள கதைப்போக்கு அல்லது கதைப்பின்னல் அல்லது நிகழ்ச்சித் தொகுப்புகளின் இணைவு முறையில் ஜனரஞ்சகத் தன்மை இருப்பதையும் கொண்டு இத்தலைப்பு இடப்பட்டு இருக்கிறது.

**கேளிக்கை இலக்கியத்தின் சில தன்மைகள்**

1.கதை செய்யப்பட்டது போல இருக்கும்.

2.முக்கிய கதாபாத்திரங்கள் அழகானவர்களாகவும், முழுமை பெற்ற மனிதர்களாவும், நாகரீகமானவர்களாகவும் இருப்பார்கள். இல்லாவிட்டால் அதனைச் சமன்செய்யும் விதத்தில் வீரம் கொண்டவர்களாவும், சாகசம் செய்யக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டும்.

3.கதைமுடிவு பொரும்பாலும் இன்பமானதாக இருக்கும்.

4.கதையின் மைய பாத்திரங்கள் மேல்தட்டு அல்லது மத்திய தர வர்க்கத்து மக்களாக இருப்பர். அவர்களின் மொழியிலேயே கதையும் சொல்லப்படும். மேலும் கதை சொல்லப்படும் மொழியில் புனைவுத் தன்மை இருக்கும்.

5.கதை நிகழ்வுகள் ஒரு செயற்கைத் தன்மையைக் கொண்டிருக்கும்.

**சில புரிதலூடான விளக்கங்கள்**

இக்கதையில் நிறைய இடைவெளிகள் இருப்பது போன்ற ஓர் உணர்வு ஏற்படுகிறது. அதாவது ஓர் இறுக்கமான கதைப்பின்னல் இல்லையோ என்ற உணர்வை ஏற்படுத்துகிறது. இவ்விடத்துக் கதை என்று குறிப்பிடுவது அகம் சார்ந்த கதை மட்டுமே என்பது மீண்டும் நினைவுபடுத்தப்படுகிறது. பல செய்திகளை வின்சென்ட்-காந்திமதி, கிருபாநிதி-ஹெலன், காதல் சார்ந்ததாக மட்டும் இல்லாமல் சந்தோஷின் ஊர் சார்ந்த சாதிய மோதல்கள், காந்திமதியின் அக்கா மரணம், அதன் பிறகு காதல் கதை போன்ற ஓர் உணர்வே இல்லாமல் ஒரு துப்பறியும் தன்மை கொண்ட கதை போன்று புதினத்தின் அகக்கதை நகர்கிறது.

'நண்பனின் காதலியின் தோழி தனக்குக் காதலி' என்று பாவிக்கும் மனநிலை கொண்ட பாத்திரச் சித்திரிப்பு (கிருபாநிதி) திரைப்படத்தின் நகைச்சுவைப் பாரத்திரம் போன்று முதலில் தோன்றுகிறது. பிறகு வின்சென்ட ராஜா-காந்திமதி இணைக்கு இணையான முக்கியத்துவம் தந்து கதை நகர்வது இரு காதல் கதை என்ற தன்மையை அடைகிறது. இரண்டாம் காதல் இல்லாமலேயே கதையை ஒரே கதையாக நகர்த்தியிருக்க முடியும். மேலும் ஒரே கல்லூரிகளில் படிக்கும் மற்ற மாணவர்களுக்கிடையே ஆன ஊடாட்டம் குறிப்பாக இந்தி எதிர்ப்புச் சார்ந்த போராட்டம் இல்லாமல் கதை நகர்வதை அகம் புறம் இரண்டையும் ஒருங்கே வாசிக்கும் இடத்து நம்ப முடியவில்லை.

அகக்கதையை இருபத்து ஐந்து வருட இடைவெளி தாண்டி முடித்தாலும் கடைசி அத்தியாயத்தில் வின்செண்ட் ராஜா,-காந்திமதியின் உரையாடல் அந்த இருப்பதைந்து வருட இடைவெளிக்கான காரணங்களைச் சரிசெய்ததாக அமைந்துள்ளது. இருப்பினும் அதில் படிப்போரைச் சமாதானப்படுத்தும் தன்மைதான் அதிகம் காணப்படுகிறது. இத்தன்மையானது கதைமாந்தர்களின் உணர்வுகளோடு வாசகர்களின் உணர்வுகளைப் பொருத்தி அதையே

வாசகர்களிடம் எதிர்நோக்கும் உணர்ச்சிக் கதைகளின் (sentimental novels) **தன்மையாகக்** கொள்ள வழியுள்ளது.

கதையின் மையப் கதாபாத்திரங்கள் திரைப்பட நாயகன்-நாயகி தன்மையிலேயே அமைக்கப்பட்டு இருக்கின்றன. காந்திமதியைப் பற்றிய அறிமுகத்தில் “நெடுநெடுவென வளர்ந்திருக்கும் ஒளிபொருந்திய கண்களைக் கொண்ட கருப்பு நிறமான இளம்பெண்.” (ப.10) முன்பே குறிப்பிட்டதைப் போன்ற கிருபாநிதியைப் பற்றிய தொடக்கநிலை அத்தியாயங்கள், வின்சென்ட் ராஜாவின் மிக கண்ணியமான பாத்திரச் சித்திரிப்பு போன்றவை வெகுமக்கள் விரும்பும் ஜனரஞ்சகத் தன்மையைக் கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது.

கதையில் காதல் இணைகள் இரண்டுமே மத்தியதர வர்க்கத்து குடும்பத்தைச் சார்ந்தவர்களாக இருக்கிறார்கள். வின்சென்ட் ராஜா மட்டும் அனாதை விடுதியில் தங்கி வாழ்ந்தவன் என்பது கூட கதையின் இறுதியலேயே தெரிய வருகிறது. காந்திமதியிடம் தன் காதலை வெளிப்படையாகச் சொல்லாமல் வைந்திருந்தமைக்கான காரணமும் அதுவாகத்தான் இருக்கும் என்பதைக் கடைசி அத்தியாயத்தின் வழியே உணரமுடிகிறது. இருப்பினும் அவனின் பின்னணியைக் கதையின் ஓட்டத்திலேயே எங்கு வேண்டுமானலும் சொல்லி இருக்கலாம். அவ்வாறு சொல்லியிருப்பினும் கதை வளர்ச்சிக்கு எவ்விதத் தடையும் ஏற்பட்டிருக்காது. அவ்வாறு சொல்லாமல் ஒரு விஷய மறைப்பாக(suspense) வைத்திருந்தமையும் ஜனரஞ்சகப் பண்பாக்க் கொள்ளத் தோன்றுகிறது.

மற்றொரு முக்கிய ஜனரஞ்சகப் பண்பாகத் துப்பறியும் தன்மையும் இக்கதையில் அமைந்திருக்கிறது. காந்திமதியின் அக்கா விசாலாட்சியின் தற்கொலைக்கான காரணம் என்னவாக இருக்கும்? அவளின் கணவனாக இருக்குமோ? அப்பாவாக இருக்குமோ? அல்லது அது ஒரு கொலையாக இருக்குமோ? என்பதாகக் கதை ஒரு கட்டத்திற்குமேல் நகர ஆரம்பிக்கிறது. இந்தக் குழப்பத்தை அக கதாநாயனான வின்சென்ட் ராஜாவிடம் கூட விவாதிப்பதில் இருந்தே இக்கதை அகம் எனும் தன்னையை இழந்து விடுகிறது. அதன்பிறகு புதினம் ஒரு துப்பறியும் தன்மை போன்றே நகர்கிறது. தன் அக்கா விசாலாட்சியின் தற்கொலைக்குக் காரணம் அக்காவின் கணவனாகத் தான் இருக்க வேண்டும்; அதனைக் கண்டறிய வேண்டும் என்பதாக காந்திமதியின் செயல்பாடுகள் அமைகின்றன. அவள் மிகவும் சிரமப்பட்டு பள்ளியை அடைதல் விசாலாட்சியின் கணவனோடான உரையாடல் போன்ற சிலவற்றைக் குறிப்பிடலாம். இறுதியில் காந்திமதியின் அக்காவின் மரணத்திறகு யார் காரணம் என்பதைச் சொல்லாமலேயே விடுத்துள்ளமை சிறப்பாகும். அது இப்புதினத்திறகுத் தேவையற்ற தரவும் கூட!

அகக்கதையின் கடைசி சில அத்தியாயங்கள் முன்பே குறிப்பிட்டுள்ளது போன்று அகத்தன்மையைத் தாண்டி, துப்பறியும் தன்மை அடைந்து, பின் இறுதி அத்தியாயத்தில் அகத்தன்மையில் நிறைவடைகிறது. இந்த நீட்சி புறத்திற்கு ஈடாக அமையுமாறு அமைக்கப்பட்டு உள்ளதாகத் தோன்றுகிறது.

கதையின் முடிவு இயல்பிறந்த தன்மையில் இருப்பதாகத் தோன்றுகிறது. இருபத்தைந்து வருடங்கள் கழித்தும் இருவரும் திருமண உறவு க்குள் செல்லாமல் இருப்பதை ஒரு தற்செயல் நிகழ்வாகக் (co-incident)_கொள்ள முடியவில்லை. ஒருவரை ஒருவர் தேடாமல் இருந்ததற்கான காரணமும் திருமணம் ஆகாமல் இருந்தற்கான காணமும் ஒன்றாக அமைவதாக “அந்த அளவு நாம இரண்டு பேரும் நம்மள வெறுத்திருக்க வேண்டும்.” என்று ஆசிரியர் பெண் கூற்றாகக் கூறுகிறார். சமூக ஒழுங்கைப் போற்றும் ஜனரஞ்சக வாசகர்களால் ஒருவர் திருமணம் ஆகி

மற்றொருவர் திருமணம் ஆகாமலோ அல்லது இருவருக்கும் திருமணம் ஆகியோ இருக்கும் படசத்தில் அவர்களுக்குள்ளான அந்தரங்கமான உரையாடலை ஏற்றுக்கொள்ள முடியாது. அதுவே இருவருக்கும் திருமணம் ஆகவில்லை எனும்பொழுது வயது ஒரு தடையில்லாமல் ஜனரஞ்சக மனம் ஏற்றுக்கொள்ளும். இதைக் கருத்தில் கொண்டே ஆசிரியர் இத்தகைய முடிவைத் தந்திருக்கலாம் என்பதாகத் தோன்றுகிறது.

**தொகுப்புரை**

மிக அதீத கவனத்தோடு செய்யப்படுவதில் இயல்பாக மலிந்துவிடும் அமைந்து விடும் பண்புகளாத்தான் மேற்கூறியவை அமைந்துள்ளன.

ஏனெனில் கதையில் சொல்லப்படும் அகம், புறம் எனும் பிரிவில் எவ்விடத்திலும் கதைமாந்தர்கள் இடையில் ஊடாட வரவில்லை என்பதை அதீத கவனம் என்பதாகக் கொள்ளலாம். அதேவேளையில் அத்தன்மை படிப்பர்களுக்கு, இது மிக கவனமாகச் செய்யப்படதுதான் என்பதைத் தெளிவாகக் காட்டி விடுகிறது.

இந்நாவலில் அக்ககதை முழுக்க முழுக்க ஜனரஞ்சகத் தன்மையோடு எழுதப்பட்டது என்பதை இங்குக் கூற விழையவில்லை. மாறாகப் பெருந்திரள் மக்கள் விரும்பும் கேளிக்கைப் பண்புகள் இந்நாவலின் அகக்கதையில் அமைந்துள்ள பண்புகளே சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.s

**துணைநூற் பட்டியல்**


- ஈஸ்வரன்.ஆ ,, 2017, தமிழில் தெலுங்குக் கேளிக்கைப் புனைகதை மொழிபெயர்ப்புகள் எண்டமூரி வீரேந்திரநாத் புதினங்கள் ஓர் ஆய்வு (முனைவர் பட்ட ஆய்வேடு.) புதுதில்லி : ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம்
- தேவதாஸ் டி,. & நாச்சிமுத்து கி .(மொஆ.) (2007) .*மக்கள் விருப்ப இலக்கியமும் அறிவாளி இலக்கியமும்.* மேலும் - கட்டுரைத் தொகுப்பு. சென்னை : காவ்யா.
- பூர்ணச்சந்திரன் க. (2012). *கதையியல் - கதைகளை வாசிப்பதற்கும் எழுதுவதற்கும்,* திருச்சி : அடையாளம்.
- ஸ்டீபன் ஞா. , 2005, *தமிழகத்தில் வெகுசன இலக்கியம்.* தமிழ் இனி:2000 இருபதாம் நூற்றண்டு உலகத் தமிழ் இலக்கிய வரலாறு, காலச்சுவடு பதிப்பகம் (ப.ஆ.) நாகர்கோயில் : காலச்சுவடு.

இனம்: பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ் ISSN : 2455-0531 பிப்ரவரி 2019 மலர்:4 இதழ்:16 75

மதிப்பிடப்பெற்றது

# அதிக கல்வித் தகமை உடையவர்கள் அதிகளவு சம்பாதிக்கக் கூடியவர்கள் - பொருளியல் நோக்கு

## Those with higher education are highly earned - economical orientation



**வினாயகமூர்த்தி - வசந்தா**
கலைமாணி மாணவர், பொருளியல் துறை
கலைகலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம்
வந்தாறுமூலை, இலங்கை.
nirovasa2919@gmail.com

Abstract: This essay studies to find about the more educated persons earn more money. This title based on economical human capital theory and current examples. Today we can get money from many ways. But more money earners invest in education. In the studies time they have opportunity cost. But they hope in the future we can get more money than other low educated persons. We can see this situation in our real world. The paper aims to point out if we invest in education, we must get more money in the future.

Keywords: educated persons, money, economical, human, capital theory, Gary Becker, மனித இனம், மூலதனக் கோட்பாடு, சிக்காக்கோ, தியோடோர், அறிவு, பழக்கம்.

உலகில் தோன்றிய மனித இனம் பெறுமதி வாய்ந்ததாகும். பொருளாதார செயற்பாட்டுடன் மனிதர்கள் ஒவ்வொருவரும் பின்னிப் பிணைந்திருக்கின்றனர். உற்பத்தியினை மேற்கொள்வது, உற்பத்தியின் நோக்கங்களினை நுகர்வது மனிதனேயாகும். ஒவ்வொரு மனிதர்களினுடைய வாழ்க்கைக்கும் பணம் என்பது அத்தியாவசியமான ஒன்றாகக் காணப்படுகின்றது. மனிதர்கள் ஒவ்வொருவரும் பல்வேறுபட்ட வழிவகைகளில் வருமானங்களை சம்பாதிக்கின்றனர். இன்றைய நவீன வளர்ச்சியடைந்த பொருளாதார உலகில் மனிதன் தன்னிடம் உள்ள விசேட ஆற்றல்களை பொருத்தமான வகையில் பயன்படுத்தி வருமானத்தினை உழைப்பின் மூலம் பெறுகின்றான். அந்த வகையில்தான் மனிதர்கள் தங்களை ஒரு மூலதனமாக வழிப்படுத்திக் கொண்டு வருமானத்தினைப் பெற எத்தனிக்கின்றனர்.

### மனித மூலதனக் கோட்பாடு

மனித மூலதனமானது சிக்காக்கோ பல்கலைக்கழகத்தினைச் சேர்ந்த பொருளாதார நிபுணரான நோபல் பரிசு பெற்ற கேரி பெக்கர் (Gary Becker) மற்றும் ஜேக்கப் மினௌர் (Jacob Mincer) ஆகியோரால் பிரபல்யப்படுத்தப்பட்டது. தியோடோர் ஹீல்ட்சினுடைய (Theodore Schultz) பங்களிப்புக்களையும் இது குறிப்பிடுகிறது. மனித மூலதனக் கோட்பாடு அறிவு, பழக்கம், சமூக மற்றும் ஆளுமைப் பண்புகளைக் குறிக்கிறது. படைப்பாற்றல் உள்ளிட்ட பொருளாதார மதிப்பை உற்பத்தி செய்வதற்கான உழைக்கும் திறனையும் உள்ளடக்கியது. வணிக நிர்வாகம் மற்றும் நுண்ணினப் பொருளியல் நடைமுறைகளில் காணப்படும் மனிதவள மேலாண்மை பற்றிய ஆய்வுடன் இது நெருக்கமாகன தொடர்புடையதாகக் காணப்படுகின்றது. மனித மூலதனம் பற்றிய கருத்தானது 18ஆம் நூற்றாண்டில் அடம்ஸ்மித்தினுடைய காலப்பகுதியில் தோற்றம் பெற்றதாகக் காணப்படுகின்றது.


மனித மூலதனம் என்பது ஒரு தொழிலாளியால் திரட்டப்பட்ட சிறப்புத்தன்மையின் இருப்பாகும். இது எதிர்காலத்தில் அதன் வருமானம் உழைக்கும் ஆற்றலுக்குப் பெறுமதியளிக்கின்றது. பௌதீக மூலதனத்தைப் போலவே கடந்தகால முதலீட்டின் ஒரு பெறுபேறாக மனித மூலதனம் இருப்பதுடன், எதிர்கால வருமானங்களை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. கூலி வேறுபாடுகள் வேறுபட்ட தொழிலாளரிடையே உற்பத்தித் திறன் வேறுபாட்டை ஏற்படுத்துவதாக மானிட மூலதனக் கோட்பாடு குறிப்பிடுகின்றது. தேர்ச்சியுடைய தொழிலாளர்களுக்கு அதிக எல்லைப் பெறுமானம் காணப்படுகிறது.

எனினும் மானிட மூலதனத்தைப் பொறுத்தவரையில் அதன் முதலீடு தொடர்பாக அவர்கள் எவ்வளவு முதலிடுவதன் மூலம் தனது சொந்த உற்பத்தி திறனை அதிகரிப்பது என்பது பிரச்சினையாகக் காணப்படுகின்றது. மனித மூலதன முதலீடுகள் என்பது கல்வி மற்றும் தொழிற்பயற்சி போன்றவற்றின் மீதான செலவீடுகளை மட்டும் கொண்டிருப்பதில்லை. அதனுள் சுகாதாரத்துறை ரீதியான செலவீனங்களும் உள்ளடங்கிக் காணப்படுகின்றது. நன்கு கல்வி கற்ற அதிகளவு பயிற்றப்பட்ட ஊழியர் குறைந்த கல்வியறிவு கொண்ட பயிற்றப்படாத ஒரு ஊழியரைவிட அதிகளவில் பயன்மிக்க உற்பத்திகளை நிரம்பல் செய்யக்கூடிய தகைமையைப் பெற்றிருப்பார்.

பாடசாலையில் ஒரு வருடம் கல்வியில் முதலீடு செய்வது தனியார் பாடசாலைக்கான கட்டணம் அல்லது வேறு கட்டணம், புத்தகம், புத்தகப்பைச் செலவு என்பனவுடன் வேலை செய்வதன் மூலம் உடனடியாக உழைக்கக்கூடிய வருமானத்தை இழக்கவேண்டி இருந்தாலும் எதிர்காலத்தில் பணவருமானமாக அல்லது தொழில் விளைவினை அதிகரிப்பதாகக் காணப்படும். கூலி வேறுபாடுகள், வேறுபட்ட தொழிலாளர்களிடையே உற்பத்தித்திறன் வேறுபாட்டைக் குறிக்கின்றது என மனித மூலதனம் எடுகோள் கொள்கிறது. ஆகவே தேர்ச்சியுடையோர் அதிக எல்லைப் பெறுமான உற்பத்தியுடன் கூடுதலான வருமானம் பெறுகின்றனர். அவர்களது சொந்த உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கு எவ்வளவு முதலீடு செய்யவேண்டும் என்பதனைத் தீர்மானிப்பதே தொழிலாளர்களின் பிரச்சினையாகும்.

மேற்கத்தேய நாடுகள் முழுவதிலும் சமீபகாலத்தில் மனித மூலதன கோட்பாட்டின்கீழ் கல்வி என்பது முதன்மையான ஒரு பொருளாதாரச் சாதனமாக இருக்கின்றது. எனவேதான் மனித மூலதனக் கோட்பாடு மேற்கத்தேய கல்வியில் மிகவும் செல்வாக்குக் கூடிய பொருளாதாரக் கோட்பாடாகக் காணப்படுகின்றது. மனிதர்களின் மூலதனமாக தொழில்நுட்ப மாற்றம், ஆராய்ச்சி, கண்டுபிடிப்பு, உற்பத்தி, கல்வி மற்றும் போட்டித்தன்மை போன்ற பல்வேறு பொருளாதார சிறப்பியல்புத் தன்மைகளானது பொருளாதாரச் செயற்றிட்டத்தை நிர்ணயிக்க ஒரு முக்கிய மூலோபாயமாக உள்ளது.

மனித மூலதனக் கோட்பாடு, உள்ளார்ந்த மற்றும் அளவிடக்கூடிய பொருளாதார மதிப்பை உருவாகுவதற்கான திறனில் உள்ளடங்கியிருக்கும். மனித மூலதனக் கோட்பாடு தகுதி, அறிவு, சமூக மற்றும் தனிப்பட்ட பண்புகளின் மொத்த பங்கு ஆகும். மனித மூலதனத்தின் பங்கு பொருளாதார வளர்ச்சி, உற்பத்தித்திறன் பகுப்பாய்வு, புதுமை, பொதுக்கொள்கை மற்றும் கல்வி ஆகியவற்றில் பரவலாக விவாதிக்கப்படுகின்றது. மனித மூலதனக் கோட்பாட்டின் அடிப்படைக் கருத்து என்னவெனில் தனிநபர்களின் முதலீடுகள் சமூகத்திற்குப் பங்களிக்கக் கூடிய பொருளாதார மதிப்பின் அடிப்படையில் கணித ரீதியாக அளவிடப்படுகிறது. மனித மூலதனம் பெரும்பாலும் கலாச்சார மூலதனம், சமூக மூலதனம், பொருளாதார மூலதனம் மற்றும் அடையாள மூலதனம் போன்ற பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. மனித மூலதனம் என்கின்ற எண்ணக்கருவில் செல்வாக்குச் செலுத்தும் முக்கிய விடயங்களைக் கீழ்வரும் வரைபடம் 1.1 மூலம் தெளிவாகப் புரிந்துகொள்ளலாம்.





வரைபடம்: 1.1

நவீன மனித மூலதனக் கோட்பாடானது அனைத்து மனித நடத்தைகள் சுதந்திரமாகப் போட்டியிடும் சந்தைகளில் செயல்படும் தனிநபர்களின் சுயநல நலன்களை அடிப்படையாகக் கொண்டவை. இது புதிய உலகப் பொருளாதாரத்தில் பங்குபெறுவதற்கான முக்கியத்துவமாக கல்வி மற்றும் பயிற்சியின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றது. மனித மூலதனத்தின் சிறப்புப் பண்பான கல்வியில் முதலிடுவதன் மூலம் வருமானத்தினை உழைக்கின்றமையினை பெரும்பாலான நாடுகள் உறுதியாய்க் கடைப்பிடிக்கின்றன. எந்தவகையான பொருளாதாரத்தினைப் பின்பற்றுகின்ற நாட்டிலும் கல்வி மட்டத்தில் தங்களை உட்படுத்திக் கொண்ட மனிதர்கள் ஒருபோதும் வருமான எதிர்பார்ப்பில் தோல்வியடையமாட்டார்கள். இதனை தொடர்ந்துவரும் விடயங்கள் மற்றும் நடைமுறை நிகழ்வுகளுடன் புள்ளிவிபர ரீதியான தரவுகளுடன் ஆராய்வோம்.

**வேறுபட்ட கல்வி மட்டங்களுக்கான வேறுபட்ட கூலிக்கொடுப்பனவுகள்**

கீழ்வரும் வரைபடம் 1.2ஆனது வேறுபட்ட கல்வி மட்டங்களுக்கான வேறுபட்ட கூலிக்கொடுப்பனவு தொடர்பான விளக்கங்களினை வழங்குகின்றது.





வரைபடம்: 1.2

மேற்படி வரைபடம் 1.2இன் படி H-H எனும் கோடானது 18 வயது உயர்கல்வி வரை கல்வி கற்ற ஊழியர்களது வருடாந்திர சம்பளத்தைக் காட்டுகின்றது. C-C எனும் கோட்டின் படி 18 - 22 வரையான 4 வருட பட்டப்படிப்பின் பின்னரே ஊழியர்கள் ஊழியச்சந்தையினுள் நுழைகின்றனர். இக்காலப்பகுதியில் அவர்களுக்கு ஏற்படக்கூடிய செலவீனங்களாக நேரடிச் செலவீனங்கள், மறைமுகச் செலவீனங்கள் காணப்படுகின்றன. இங்கு ஏற்படும் மொத்தச் செலவீனங்களை மனித மூலதனத்திற்கான கல்வி மீதான முதலீடுகளாகக் காணப்படுகின்றன. அதனை நேர்கோட்டினால் நிழற்றப்பட்ட பகுதிகளினூடாகக் காட்டலாம். 22 வயதுக்குப் பின்னர் பட்டப்படிப்பை பூர்த்தி செய்து கொண்ட ஊழியர்கள் ஊழியச் சந்தையினுள் நுழைந்து உயர்கல்வி கற்றவர்களைவிட வருடாந்தம் அதிகளவு உழைத்துக் கொள்வதனைக் காணலாம். இதனை அலைவடிவிலான நிழற்றப்பட்ட பகுதியினூடாகக் காட்டலாம்.

**வயது அடிப்படையில் கல்வித்தரத்தக்கு ஏற்ப வருமானங்களின் அளவு**

கீழ்வரும் வரைபடம் 1.3 வரைபடமானது கல்வியும், வேலை அனுபவமும் உயர்ந்த வருமானங்களுக்கு பங்காற்றுகின்றது என்பதைத் தெளிவுறக் காட்டுகின்றது. அதாவது மூன்று கல்வித் தகமைகளை உடைய தொழிலாளர்களின் வயதின் அடிப்படையில் உழைக்கும் வருமானம் எவ்வாறு மாற்றமடைகின்றது என்பதனைக் காட்டுகின்றது. பல்கலைக்கழகம் அல்லது ஏனைய உயர் பட்டங்கள், உயர்தரம் அல்லது ஏனைய தகமைகள் என்பது சிறப்பாகப் பாடசாலையிலிருந்து விலகியவர்களுக்குப் பொருத்தமானதாக அமைகின்றது. அத்துடன் இவ்வட்டவணை முற்றாக தகுதியற்றவர்களுக்கு இடையிலான வேறுபாட்டையும் காட்டுகின்றது.




**வரைபடம்: 1.3 அதி உயர்ந்த கல்வித்தர அடிப்படையில் வயது வருவாய் அமைப்பு**

மேற்காட்டப்பட்டுள்ள வரைபடமானது UKஇல் முழுநேர வேலையில் ஈடுபட்டுள்ள ஆண்களின் வருவாயைக் காட்டுகின்றது. கல்விமட்ட அடிப்படையிலும் வருவாய் அதிகரிக்கின்றது (Source: Reproduced with permission of the Office of Population Censuses and Surveys, General Household Survey).

இவ்வரைபடமானது இரண்டு முக்கியமான விடயங்களை உணர்த்துகிறது.

1. உயர்கல்வித் தரமுடைய மக்கள் கூடுதலாக உழைக்கின்றனர்.

2. வயது அனுபவ அடிப்படையிலான வேறுபாடு தொடர்ச்சியாக வளர்ச்சியடைந்து செல்கிறது.

உடல் நலம் மிக்க இளம் மக்கள் தகுதியற்றவர்களாக இருந்தாலும் கடினமாக வேலைசெய்து கூடியளவான பணத்தை உழைக்க முடியும். ஆனால் மெய்க்கூலி தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்லும் என எதிர்பார்க்க முடியாது. உண்மையாக 30ஆவது வயதில் அவர்களது உழைப்பு வருமானம் உச்சத்தை அடைந்துள்ளது. மறுதலையாக மிக உயர்ந்த கல்வித்தரம் உடையவர்கள் திறமையற்றவர்களின் கூலியை விட ஒரு சிறியளவு கூடுதலான கூலியைப் பெறுகின்றனர். ஆனால் அதன்பின்பு அவர்களது உழைக்கும் வாழ்நாளில் தொடர்ந்து அதிகரித்துச் செல்லும் வருமானத்தினையே அதிகம் பெறுகின்றனர்.

மேற்படி வரைபடம் 1.3ஆனது உயர் கல்வித் தகமையுடையவர்கள் மிகக் கடினமான தொழிலுக்குச் செல்கின்றனர் என்பதைக் குறிப்பிடுகின்றது. இதில் உயர்பதவிகளைப் பெற நீண்ட காலம் எடுக்கும். உயர்ந்த அனுபவத்துடனும், உயர்தொழில்களுடனும், உற்பத்தி திறனும், சம்பளங்களும் மிக விரைவாக அதிகரிப்படைகின்றன. உயர்கல்வித் தகமையுடையோர் நீண்டகாலம் பயிற்சிபெற வேண்டிய கடினமான தொழிலுக்குச் செல்வதனால் அனுபவ முதிர்ச்சியோடும், தொழில் தேர்ச்சியோடும் உற்பத்தித் திறனும், கூலியும் தொடர்ச்சியாக அதிகரிக்கும்.


உயர்படிப்பினை உடையவர்கள் ஏன் உயர் வருமானத்தைப் பெறுகின்றனர் என்பதற்கு இரு வேறுபட்ட முக்கியமான விளக்கங்கள் உள்ளன.

1. கல்வி நேரடியாக ஊழியத்தின் உற்பத்தித்திறனை அதிகரித்து அதனால் உடனடியாகவோ அல்லது பிற்காலத்திலோ உயர் உழைப்பு வருமானத்தைப் பெறுவதற்கு வழிவகுக்கின்றது.

2. ஊழியரின் உற்பத்தித்திறனை அதிகரிக்கின்ற சிறப்புத் தகுதிக்கு கல்வி பங்காற்றுவதில்லை. கல்விக்கு மேலாக வேறுபட்ட திறமைகளை தம்மகத்தே உடையவர்கள். இவ்வாறு திறமை கொண்ட உயர் இயலுமையயுடைய மக்கள் உயர் உற்பத்தித்திறன் உடையவர்கள். ஏனெனில் வேறுபட்ட கடின தொழில்களை அவர்கள் கற்றுக் கொள்ளலாம். இவ்வாறான திறமைகள் அனைத்தும் பிறக்கும்போதே ஏற்பட்டு விடும்.

**கல்வி கற்ற ஊழியருக்கான சந்தை**

உயர் கல்வித்தரம், உற்பத்தித் திறனுக்குப் பங்காற்றுகின்றது. கீழ்வரும் வரைபடம் 1.4 உயர்கல்வித்தரமுடைய தொழிலாளர்களுக்கான சந்தையைக் காட்டுகிறது.




வரைபடம்: 1.4

மேற்படி வரைபடத்தின் படி நிலைக்குத்தச்சு உயர்கல்வித்தரமுடைய, உயர்கல்வித்தரமற்ற தொழிலாளர்களுக்கான கூலி வேறுபாட்டினைக் காட்டுகின்றது. இது உயர்கல்விக்கான கூலிக்கட்டணமாகும். கிடையச்சில் உயர்கல்வித் தரமுடைய ஊழியப்படையின் விகிதத்தை அளவிடுகின்றோம். D யானது உயர்கல்வித் தரமுடைய தொழிலாளர்களுக்கான கேள்வி வளையியாகும். உதாரணமாக B புள்ளியில் கூலி வேறுபாடு மிக உயர்வாகும். அத்துடன் இம்மேலதிக கல்வித்தரத்துடன் சிறியளவு விகிதாசாரத் தொகை தொழிலாளர்களை நிறுவனம் வேண்டி நிற்கின்றது. மிகக் குறைந்த வேறுபாடுடைய C புள்ளியில் படித்த தொழிலாளர்களுக்கான கேள்வி மிக உயர்வாகும். கீழ்நோக்கி சரிந்து செல்லும் கேள்வி வளையியானது (D) உயர்கல்வித் தரமுடைய தொழிலாளர்கள் அதிக உற்பத்தித்திறன் வாய்ந்தவர்கள் எனக் கருதுக. ஆனால் படித்த தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துவதால் நிறுவனம் குறைந்து செல்லும் விளைவினை எதிர்கொள்கிறது. எவ்வாறிருந்தும் கடந்தகால கல்வித்தரத் தீர்மானங்களில் இத்தகைய தொழிலாளர்களின் நிரம்பல் நிலையானதாகும்.

குறுங்கால நிரம்பல் வளையி (S) என்பதாக நிலைக்குத்தாகக் காணப்படுகிறது. ஏனெனில் குறுங்காலத்தில் கல்வித்தரம் கொண்ட ஊழியர்களை உருவாக்குவது கடினம். அதனால் அதனுடைய நிரம்பல் நிலையானதாகக் காணப்படும். நீண்ட காலத்தில் உயர்கல்வித் தரமுடைய தொழிலாளர்களுக்கான $S^1$ நிரம்பல் வளையி மேல்நோக்கி சரிவடைகின்றது. உயர்கல்வித்தரத்திற்கு கூடியளவான கூலி வழங்கும் செயற்பாடானது பாடசாலை விட்டு விலகும் மாணவர்கள் வேலை பெறுவதைத் தவிர்த்து மேலதிக படிப்பை மேற்கொள்வதை ஊக்குவிக்கும். கல்வி கற்ற தொழிலாளர்களுக்கான நீண்டகால நிரம்பல் வளையி மேல் நோக்கி சரிந்து செல்கின்றது.

குறுங்காலத்தில் கல்வி கற்ற தொழிலாளர்களுக்கான $N_0$இல் நிலையாக உள்ளது. ஆனால் நீண்டகாலத்தில் கல்விகற்ற தொழிலாளர்களுக்கான கூலி அதிகமாகக் காணப்படுவதனால் அதிகளவில் பல்கலைக்கழகம் செல்ல தூண்டுவதால் நீண்ட கால நிரம்பல் வளையி $S^1$ஆகக் காணப்படும். D என்பது கல்வி கற்ற ஊழியர்களுக்கான கீழ்நோக்கிச் சரிவடையும் கேள்வி வளையியாகும். ஆரம்பச் சமநிலை E புள்ளியில் இருந்து கூலி வேறுபாடு WDயுடன் கல்வி கற்ற


தொழிலாளர்களுக்கான கேள்வி வளையியின் நகர்வு ஆரம்பத்தில் மேல்நோக்கி கூலி வேறுபாட்டில் கூடுதலான அதிகரிப்பான $WD^1$க்கு வழிவகுக்கின்றது. படிப்படியாகக் கூடுதலான மக்கள் உயர்கல்வியைப் பெற புதிய நீண்ட கால சமநிலை $E^2$ புள்ளியில் ஏற்படுகின்றது.

சந்தையின் குறுங்கால மற்றும் நீண்டகால சமநிலை E புள்ளியில் ஆரம்பித்தால் கூலி வேறுபாடு WD ஆகும். (WD கூலியானது மேலதிக கல்விக்காக ஏற்பட்ட செலவையும் கல்வியைத் தொடர்ந்து பெறுவதற்கு வேலை செய்யாமல் விடுபட்ட கூலி போன்றவற்றுக்கான நட்ட ஈடாகும்). உயர்தொழில்நுட்பப் பயன்பாடு காரணமாக படித்தவர்கள் வேலை செய்வது தொடர்பாகப் பட்டதாரிகளுக்கான கேள்வி அதிகரிக்கும்போது இங்கு கல்விகற்ற தொழிலாளர்களுக்கான கேள்வி வளையி $D^1$ஆக நகர்வடையும்போது அத்தொழிலாளர்களுக்கான நிரம்பல் மாறாதிருக்கும் நிலையில் கூலி வேறுபாடு $WD^1$ஆக உயர்வடைகிறது. கல்வித்தரம் மிக்க தொழிலாளர்கள் பற்றாக்குறையாகக் காணப்படுவதனால் நிறுவனங்கள் அவற்றின் கூலியை உயர்த்துகின்றன. தற்போது பொருளாதாரம் $E^1$ என்ற புள்ளியில் காணப்படுகிறது.

உயர்கல்வித்தரமுடையவர்களுக்கான மிகை ஊதியம் தற்போது மிகஉயர்வாகும். ஆகவே அதிகளவிலான மக்கள் கல்விபெறத் தீர்மானிக்கின்றனர். நீண்டகாலத்தின் படித்த தொழிலாளர்களுக்கான நிரம்பல் அதிகரிக்கும். இந்நிகழ்வுடன் பற்றாக்குறையாக இருந்த தொழிலாளர்களுக்கான மிகை ஊதியம் மீண்டும் குறைவடைகின்றது. நீண்டகாலத்தில் $E^2$ புள்ளியில் கூடிய எண்ணிக்கையான படித்த தொழிலாளர்களுடன் கூலி வேறுபாடு $WD^2$ உடன் சமநிலை ஏற்படுகிறது. நீண்டகாலத்தில் படித்த மக்களின் எண்ணிக்கை அதிகரிக்கின்றது.

மேலும் ஒரு சிறப்பான ஒரு உதாரணத்துடன் ஆராய்கின்றபோது கனடா நாட்டில் கல்வித்தரம் கூடியவர்களினுடைய வருமான மட்ட நிலை எவ்விதம் காணப்படுகின்றது என்பதனைக் கீழ்வரும் வரைபடம் 1.5 தெளிவுறக் காட்டுகின்றது. அந்த வகையில் 2010ஆம் ஆண்டுக்கான கல்வித்தர வேறுபாடுகளுக்கு அமைவான வருமான விபரங்கள் அடங்கிய சதவீத வரைபு கீழ்வருமாறு.

**Figure 1 Distribution of persons by income group and highest level of education attainment**





This is a reblog of Junjie’s post in Pinoys to Canada, *January 19, 2015.*

வரைபடம்: 1.5

மேற்படி வரைபில் வருமான மட்டத்தினை நோக்கும்போது கல்வித் தரத்துக்கு ஏற்ற வகையில் எவ்விதம் வருமானம் உயர்வாகக் காணப்படுகின்றது என்பது தெளிவாக விளங்குகின்றது. அந்த வகையில் வருமான மட்ட விபரங்கள் வருமாறு,

- The median income was $27,900 per year
- The top 10% earners had incomes of over $80,400
- The top 5% earners had incomes of over $102,300
- The top 1% earners had incomes of over $191,100

ஆகவே கனடா நாட்டில் கல்வித்தரத்துக்கு ஏற்ற வகையில் வருமானம் அதிகளவில் அழிக்கப்படுகின்றமையினைக் காணலாம். இதனை விடவும் ஐக்கிய அமெரிக்காவில் 2010ஆம் ஆண்டில் கல்வித்தரத்துக்கு எற்ற வகையிலான சராசரி வருமான மட்டமானது கீழ்வரும் வரைபு 1.6 இல் காட்டப்பட்டுள்ளது.




வரைபடம்: 1.6

மேற்படி வரைபின்படி கல்வித்தரம் அதிகரித்துக்கொண்டு செல்வதற்கேற்ப சராசரி வருமானமும் அதிகரித்துக்கொண்டு செல்வதனை அவதானிக்கலாம்.

**மனித மூலதனத்தில் முதலிடல் அல்லது செலவு நன்மை ஆய்வு**


பாடசாலையை விட்டு விலகிய ஒருவரின் கல்வியைத் தொடர்வதா அல்லது தொழிலைப் பெறுவதா என்ற தீர்மானத்தின் போது கல்வியில் மேலும் முதலீடு செய்வது பயன் உடையதா என ஆராயும்போது இரு நன்மைகளும் இரு செலவுகளும் காணப்படுகின்றன.

Cost: உடனடிச் செலவு - புத்தகங்கள், கட்டணங்கள் என்பவற்றின் மீது செலவிடப்படும் செலவு, சந்தர்ப்பச் செலவு - கல்வியைத் தொடராமல் தொழில் செய்து அதன் மூலம் பெறும் வருமானம் இழக்கப்படும்.

Benefits: எதிர்காலத்தில் உயர்கல்வித்தரம் உடைய தொழிலாளர்கள் தொடர்ந்து உழைக்கக்கூடிய மேலதிக கூலிகள் என்ற வகையில் ஏற்படுகிறது.

இது பணரீதியற்ற வடிவில் உடனடியாக ஏற்படுகிறது. அதாவது கல்லூரிக்கு அல்லது பல்கலைக்கழகத்திற்குச் செல்வதனால் ஏற்படும் நுகர்வுப் பெறுமதி அல்லது மனமகிழ்ச்சி ஆகும்.

பெரும்பாலான மாணவர்களுக்கு இது மகிழ்ச்சிகரமான காலமாகும். அதிகமான மாணவர்களுக்கு புதிய மாணவர்களைச் சந்திப்பதற்கும் மற்றும் ஏனைய நடவடிக்கைகளுக்கும் சந்தர்ப்பம் அளிக்கப்படுகிறது. எந்தவொரு முதலீட்டுத் தீர்மானத்தினைப் போலவே உயர்கல்வியை தொடர்வது தொடர்பான தீர்மானம் நடைமுறை செலவுகளையும், நன்மைகளையும் (பொதுவாக தேறிய செலவு) எதிர்காலத்தில் தொடர்ந்து பெறுகின்ற செலவுகளையும் நன்மைகளையும் (பொதுவாக தொடர்ந்து பெறும் தேறிய நன்மைகள்) ஒப்பிட்டு ஆராய்வதில்தான் தங்கியுள்ளது. நிகழ்கால நன்மை, நிகழ்கால செலவு எனின் மனித மூலதன வளர்ச்சிக்காக கல்விக்கான முதலீட்டினை மேற்கொள்வது அர்த்தமானதாகும். நிகழ்கால நன்மை < நிகழ்கால செலவு எனின் கல்விக்கான முதலீடு பயனற்றதொன்றாகக் காணப்படும். மேலும் உயர்கல்வியில் முதலீடு செய்தல் தொடர்பான மேலதிக விளக்கங்களை பெற்றுக் கொள்வதற்குக் கீழ்வரும் வரைபடம் 1.7இனை நோக்குவோம்.




**வரைபடம்:** 1.7

மேற்படி வரைபடமானது வயதுப் பாங்கான வருமானத்தினை 18 வயதில் பாடசாலையை விட்டு விலகி ஊழியப்படையில் சேருகின்றவர்களுக்கும், 21 வயதில் ஊழியப்படையில் சேருகின்றவர்களுக்கும் தருகின்றது. கறுப்பான பகுதி மேலதிகமான ஒரு மாணவன் இறுதியாக எவ்வளவு உழைக்க முடியும் என்பதைக் காட்டுகின்றது. மென்மையான நிறப்பகுதியில் 0-க்குக் கீழுள்ள பகுதி பல்கலைக்கழகத்தில் இருக்கின்றபொழுது ஏற்பட்ட ஏனைய செலவுகளினதும், வருமானங்களினதும் பெறுமதியினைக் காட்டுகின்றது. வரைபடத்தின்படி இச்செலவுகள், நன்மையினைவிட கூடுதலாக உள்ளது என எடுகோள் கொள்ளப்படுகின்றது. பல்கலைக்கழகத்திற்குச் செல்வதா இல்லையா என்ற தீர்மானத்தினை கறுப்புப் பகுதியினை

மொத்த மென்மையான நிறப்பகுதியுடன் ஒப்பிட்டு அறிந்து கொள்ளலாம். செலவு நன்மை ஆய்வானது தொழிற்சாலையைக் கட்டுவதா? அல்லது பல்கலைக்கழகத்தைக் கட்டுவதா? என்ற நீண்டகாலத் தீர்மானங்கள் பற்றிய வழிமுறையாகும். இங்கு நிகழ்கால நடவடிக்கை எதிர்கால நடவடிக்கைமீது செல்வாக்கு உடையதாகக் காணப்படுகிறது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

**சமிக்ஞை காட்டுதல்**

வங்கியில், ஒரு வரலாற்றுப் பட்டதாரி ஏன் கூடியளவு உழைக்கக் கூடியதாக உள்ளது? மனித மூலதனக் கோட்பாட்டின்படி கல்வி மற்றும் தொழிலில் ஏற்படும் பயிற்சி தொழிலாளரின் உற்பத்தித்திறனை அதிகரிப்படையச் செய்யும். மேலும் கல்வி மீதான முதலீட்டுக் கோட்பாடு இன்னுமொன்று காணப்படுகின்றது. இதுவே சமிக்ஞை காட்டுதல் பற்றிய கோட்பாடாகும். இக்கோட்பாட்டின்படி கல்வி நேரடியாக தொழிலாளரின் எல்லை உற்பத்திக்கு மேலதிகமாக ஏதும் பங்களிப்புச் செய்யவிட்டாலும்கூட அதியுயர் செலவுடைய கல்வியில் முதலீடு செய்வது பகுத்தறிவுடையது எனக் குறிப்பிடப்படுகிறது. வரலாற்றுப் பட்டதாரிகள் வங்கியில் ஏன் பெருமளவு வருமானம் பெறுகின்றனர் என்பதை விளக்குவதற்கு இக்கோட்பாடு அதிகளவுக்கு உதவியாக அமையலாம்.

உயர்கல்வி உற்பத்தித் திறனுக்கு ஏதும் பங்காற்றவில்லை என்ற வாதத்தினை நாம் ஏற்றுக் கொள்வதாகக் கருதுவோம். மனித முதலீட்டிலான இத்தகைய உயர் செலவை மேற்கொள்வதற்கு முன்னர் பாடசாலையை விட்டு விலகுபவர்கள் ஆரம்ப செலவை ஈடுசெய்யக்கூடிய வகையில் எவ்வாறு கூலியை உயர்த்திக் கொள்வதற்காக உறுதிப்படுத்த முடியும்? சமிக்ஞை காட்டுதல் கோட்பாட்டின்படி திறமையான தொழிலாளர்கள்தான் எதிர்காலத்தில் உயர் உற்பத்தித்திறன் உடையவர்கள் என்ற சமிக்ஞையை வேலை வழங்குனருக்கு அறிவிக்கின்றனர். உயர்கல்வியானது உற்சாகமுள்ள உயர் உற்பத்தித் திறனுடைய தொழிலாளர்களை வெளிப்படையாக அடையாளம் காட்டுகிறது. நிறுவனங்கள் பல்கலைக்கழகப் பட்டதாரிகளுக்குக் கூடுதலாக வேதனம் வழங்கமுடியும். ஏனெனில் அவர்களே உயர் ஆற்றல் படைத்த தொழிலாளர்கள் என நிறுவனங்கள் உறுதிப்படுத்த முடியும்.

வெளிப்படையாக அடையாளம் கண்டு கொள்ளும் செயன்முறை, உயர் ஆற்றல் பெற்ற தொழிலாளர்களை ஏனைய தொழிலாளர்களிடமிருந்து வேறுபடுத்துகின்றது. குறைவான ஆற்றல் உடைய தொழிலாளர்கள் ஏன் பல்கலைக்கழகம் செல்வதில்லை? என்பதுடன் அவர்களுக்கு உயர்கல்வியை வழங்கும் முறையில் நிறுவனங்களை அவர்கள் ஏன் ஏமாற்றுவதில்லை? இதற்கு இரண்டு விடைகள் உள்ளன. முதலாவது, குறைவான ஆற்றல் உடைய தொழிலாளர்கள் சித்தியடைவார்கள் என்ற நம்பிக்கை இல்லை. கல்வியிலான இரண்டு முதலீட்டுக் கோட்பாட்டிற்கும் சுவாரஸ்யமான ஒப்பீட்டினை நாம் அவதானிக்கலாம். கல்வி கற்பது உற்பத்தித்திறனை அதிகரிக்கச் செய்யுமாயின் பல்கலைக்கழகத்துக்குச் சென்ற மாணவர்களுக்கு நிறுவனங்கள் உயர் கூலியினை வழங்குதல் வேண்டும்.

சில நிறுவனங்கள் பல்கலைக்கழக மாணவர்களின் இறுதிப்பரீட்சை முடிவதற்கு முன்பே அவர்களை வேலைக்கு அமர்த்துகின்றன. இச்சான்றுகள் சமிக்ஞை சார்பாகக் கோட்பாட்டுக்கு எதிரானவையா? இவ்வாறு இருக்கத் தேவையில்லை ஏனெனில் வெளிப்படையாக அடையாளம் கண்டுகொள்ளும்முறை இன்னொரு முறையிலும் செயற்படுகிறது. குறைவான ஆற்றல் உடைய மக்கள் பல்கலைக்கழகம் செல்வதில்லை என தீர்மானிக்கலாம். அதிகமான மக்கள் அவர்களின் சொந்த திறமைகளை அறிந்து கொள்கின்றமையால் பல்கலைக்கழகத்தில் இறுதி வருடத்தில் இருக்கின்றவர்கள் உயர்தேர்ச்சி உடையவர்கள் என நிறுவனங்கள் நம்பிக்கை கொண்டிருக்கலாம்.

கல்வி (மிக உயர்ந்த மட்டங்களிலாவது) உற்பத்தித் திறனுக்கு ஓரளவுக்கு பங்காற்றுகின்றது என்பது சாத்தியமானது. தூய கல்விசாராப் பயிற்சிகள் தவிர்ந்த ஏனையவைகளில் வெளிப்படையாக அடையாளம் காணல் என்றவொரு விடயம் காணப்படலாம். பொறியியல், சட்டம், மற்றும் வணிகப்பட்டங்கள் என்பன மெய்யியல், வரலாறு, மற்றும் அரசியல் என்பவற்றினைவிட உற்பத்தித்திறனுக்கு அதிகளவு பங்காற்றுகின்றன.

கல்வித் துறைக்கான முதலீடு பற்றிய ஆய்வு தொடர்பில் முடிவுக்கு வரும் முன்னர் முக்கிய ஒரு விடயத்தினை நாம் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். இது தனிப்பட்ட ஒருவருக்கு நல்லது எது? சமூகம் முழுவதுக்கும் நல்லது எது? என்பவற்றுக்கு இடையிலான வேறுபாட்டில் கவனம் செலுத்துகிறது. கல்வி நேரடியாக உற்பத்தித்திறனை அதிகரிக்குமாயின் சமூகத்திற்கு அது நன்மையானது. ஊழியப்படை உற்பத்தி செய்யக்கூடிய வெளியீட்டின் தொகையினை அது அதிகரிக்கச் செய்யும்.

எவ்வாறாயினும், உயர்கல்வியின் ஒரே ஒரு தொழிற்பாடு தொழிலாளரின் உயர்ந்த ஆற்றலை சமிக்ஞை செய்வதாக மட்டும் கருதிக் கொள்வோம். இந்நிலையிலும்கூட பல்கலைக்கழகம் செல்கின்றவர்களுக்கு இது பொருத்தமானதாகும். ஆனால் சமூகம் முழுவதற்கும் இது பொருந்துமா? உற்சாகமுடைய தொழிலாளர் யார் என்பதை அறிவதில் சமூக நன்மை ஒன்று உள்ளது. கடினமான தொழில்களுக்குத் திறமையான தொழிலாளர்களை அமர்த்துவதன் மூலம் சமூகம் உயர்தளவு வெளியீட்டினைப் பெற்றுக்கொள்ளும். இன்றைய பொருளாதார உலகிலே ஆண்கள், பெண்கள் என்பவர்கள் கல்வித்தரம் அதிகரிக்க அதிகரிக்க வருமானங்களை உயர்ந்தளவாகப் பெற்றுக்கொள்கின்றனர். ஆனாலும் அதில் பெண்கள் ஆண்களின் உழைப்பில் மூன்றில் இரண்டு பங்கினைத்தான் பெறுகின்றார்கள் என்பதும் இங்கு கவனிக்கப்பட வேண்டியதாகும். இதற்கான காரணம் ஆண்கள் மேற்படிப்புக்களைச் செய்வதற்கும் அதன் மூலம் வருமானத்தினை ஈட்டிக் கொள்ளவுமே சிந்திக்கின்றனர்.

**நடைமுறை உதாரணங்கள்**

எனவே எந்தவொரு நாடாக இருந்தாலும் சரி மனித மூலதனத்தில் கல்வி என்பது முக்கிய பங்கினை வகிக்கின்றது. எந்தவொரு நாட்டில் வாழும் உயர் வருமானம் உழைக்க வேண்டும் என்கின்ற நபர்களில் பெரும்பாலானோர் கல்வியில் முதலீடு செய்கின்றனர். பாடசாலைக்கே செல்லாதவருக்கும், பல்கலைக்கழகம் வரை உயர்பட்டம் பெறுபவருக்கும் ஒரே அளவான கூலி வழங்குதல் என்பது சாத்தியமற்றது. ஏனெனில் இருவரது வேலைகளிலும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. வேறுபட்ட கல்வித் தகமை கொண்டவர்கள் ஒரே வேலை செய்யக் கூடிய ஒரு நிலை இருந்தால்கூட அங்கு உயர்கல்வித்தரம் கொண்டவர்களின் சம்பள மட்டம் உயர்வாகவே காணப்படும். சில நேரங்களில் மாறான நிலைமைகளும் தோன்றலாம்.

ஒரு நபர் தனது கல்வித் தரத்தினை உயர்த்திக் கொள்ளுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வருமான மட்டம் ஏதோ ஒரு தொகையினால் அதிகரிக்கப்படும் என்பதும் உண்மையாகும். ஒரு நபர் தனது கல்வித் தரத்தினை உயர்த்திக் கொள்ளுவதற்கான அடிப்படைக் காரணம் வருமான உழைப்பு நோக்கம் என்று கூறலாம். இலங்கையினைப் பொறுத்தவரையில் கல்வித்தரம் கூடியவர்கள்தான் அதிகளவில் சம்பாதிக்கின்றார்கள். அந்த வகையில் உதாரணமாக இலங்கை முழுவதற்குமான சேவைகளான இலங்கை நிர்வாக சேவை (SLAS), இலங்கை விஞ்ஞானவியலாளர் சேவை (SLScS) மற்றும் இதுபோன்ற பல சேவைகளின் மூலம் உயர்கல்வியால் உள்வாங்கப்படுகின்ற ஊழியர்களுக்கு இலங்கையில் அதிகளவான சம்பளமட்டம் வழங்கப்படுகின்றது. இவ்வாறான தொழில்கள் White collar job என அழைக்கப்படுகின்றன. இதனைவிடவும் வைத்தியர்கள், பொறியியலாளர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் போன்ற

உயர்கல்வித்தரம் கூடியவர்களும் அததிளவில் சம்பாதிக்கின்றனர். கல்வித் திணைக்களங்களில் வேலை செய்பவர்கள் அவர்களின் கல்வித் தரத்துக்கு ஏற்ற வகையில் வேறுபட்ட சம்பளங்களைப் பெற்றுக்கொள்கின்றார்கள். கல்வித்தரத்தில் உயர்நிலை பெறாதவர்கள் பெரும்பாலான நேரங்களில் அவர்களைவிட ஒப்பிட்டு ரீதியில் குறைந்தளவான வருமானத்தினைப் பெற்றுக் கொள்கின்றனர்.

**முடிவுரை**

ஒட்டுமொத்த ரீதியில் நோக்கும்போது வருமானம் பெறுவதற்குப் பல வழிகள் காணப்படுகின்றன. அதில் சில பிரிவினர் கல்வி மீதான மனித முதலீட்டில் தங்களை வளர்த்தெடுக்கின்றனர். அவ்வாறன நபர்கள் தங்களது கூடியளவான கல்வித்தரத்தினால் கூடியளவு சம்பாதிக்கின்றனர். அவர்கள் தாம் கல்விக்காகச் செலவிட்ட காலப்பகுதியை வேறு ஏதாவது விடயங்களில் முதலிட்டிருந்தாலும் கல்வி பெற்றுத்தருகின்ற வருமானம் ஒப்பிட்டு ரீதியில் அதிகமாகவே காணப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். மாறாக, சில நிலைமைகளின்போது கல்வித்தரம் கூடியவர்கள் அதிகளவு சம்பாதிக்கமுடியாத ஒரு நிலையும் தோன்றலாம். அத்தகைய சந்தர்ப்பத்திற்கான வாய்ப்பு சிறிதளவே காணப்படும். இத்தகைய ஒரு நிலை ஊழியச் சந்தையினது மாற்றங்களுக்கு ஏற்ப தாக்கம் செலுத்தக்கூடியது எனலாம்.

**துணைநின்றவை**


- Ronald G. Ehrenbeerg and Robert S. Smith, 2012, **"Modern Labor Economics"**,Prarson Education, Pages - (280 - 317).
- Becker. Gary, 1975, **"Human Capital, New York: National Bureau of Economic Research"**.
- Schultz, Theodore, 1963, **"The Economic Value of Educa- tion. New York"**, Columbia University Press.
- Spence, Michael. (August 1973), **"Job Market Signaling"**, Quarterly Journal of Economics 87355-374.
- https://en.wikipedia.org/wiki/Human_capital
- https://www.economicshelp.org/blog/26076/economics/human-capital-definition-and-importance
- https://www.britannica.com/topic/human-capital
- https://www.quora.com/Is-more-education-the-answer-to-making-more-money
- https://handsonbanking.org/military/education/investing-education/more-education-more-earning-power
- https://business.financialpost.com/opinion/want-to-earn-more-money-get-a-good-education
- https://en.wikipedia.org/wiki/Education_in_Canada
- https://www.theguardian.com/education/2016/aug/18/gap-between-graduate-and-non-graduate-wages-shows-signs-of-waning

மதிப்பிடப்பெற்றது

# முதுகுளத்தூரார்
## MUDUKULATHURAR

**சே.முனியசாமி**
தமிழ் உதவிப் பேராசிரியர்
ஜெ.பீ.கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
அகரக்கட்டு, தென்காசி
திருநெல்வேலி மாவட்டம்

S.MUNIYASAMY
Asst.Professor of Tamil
J.P. Arts and Science College,
Agarakattu, Aaykudi, Tenkasi 627852
Thirunelveli - Dist.
muniyasethu@gmail.com

**Abstract:** Tamil poets have many features to describe the importance of the Linguistics. Sethu nadu has contributed more for the growth of the classical Tamil language. Vannachasarapam thandapani samy's "Puzhavar Puranam" revealed some of the greatest poets and their life history. The Classical work "Mudukulathurar" consists of 21 poems and it describes the life history of a poet "Mudukulathurar" who went to surandai (Thirunelveli Dist) much of the information about "Mudukulathurar" comes from legendary accounts and little is known certainly about his religious affiliation character and birth place. This article speaks about the anonymous classical tamil poet known as "Mudukulathurar form sethu nadu.

**Keywords:** Tamil poets, Puzhavar Puranam, Vannachasarapam thandapani samy's, Thirunelveli, Mudukulathurar, புலவர், இராமநாதபுரம் மாவட்டம், செந்தமிழ், முகநூல், கட்செவி, காணொலி, தமிழ்ப் புலவர் சரித்திரம், வி.கோ.சூரியநாராயண சாஸ்திரியார்.

மொழியின் சிறப்பை விளக்கும் கடப்பாடுடையோருள் புலவர்களுக்குத் தனிப் பங்குண்டு. அவ்வகைப் புலவர்களைத் தத்தெடுத்து செந்தமிழ் வளர்த்ததில் சேதுநாட்டின் (இராமநாதபுரம் மாவட்டம்) பங்களிப்பு அளப்பரியது. சொந்தமண்ணில் பிறந்த புலவர்களை மட்டுமின்றி, தன்னைத் தேடி வந்த புலவர் பெருமான்களையும் ஆதரித்து, அவர்களது திறமையறிந்து பரிசளித்ததில் முதன்மைபெற்ற மண் எனினும் அது மிகையாகாது. தமிழகத்தின் தென்கோடியில் அமைந்திருக்கும் இராமநாதபுரம் அருகே முதுகுளத்தூர் எனும் ஊர் பல்வேறு புலவர்பெருமக்களை ஈன்றெடுத்துள்ளது. விளம்பரமயமான இற்றைக் காலத்தில் படைப்பாளன் தன்னை அடையாளப்படுத்தா விட்டாலும், வாசகன் எனக்குப் பிடித்த படைப்பாளன் எனும் நிலையில் படைப்பை முகநூல், கட்செவி, காணொலி வாயிலாகப் பதிவேற்றம் செய்து உலகறியச் செய்கின்றான். இது சமகால பாணியாகப் படையெடுத்துள்ளது. இதில் படைப்பின் சாராம்சத்தைவிடப் படைப்பாளனின் அறிமுகம் அனைவராலும் நோக்கப்படுகின்றது. இவ்வாறு சிலரறிந்த படைப்பாளனைப் பலரறிய ஊடகங்கள் இன்று வழிவகை செய்கிறது. பிறருடைய பார்வையில் இது விளம்பரமாக இருந்தாலும் எதிர்வரும் சந்ததியினருக்குச் சேமித்து வைத்திருக்கும் வரலாற்றுப் பெட்டகம் இது என இயம்பலாம்.

பெரும்பாலும் முந்தைய காலத்தில் வாழ்ந்த புலவர்கள் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்வது அரிது. சமகாலத்தில் வாழ்ந்த புலவர்கள் அறிமுகம் செய்தாலொழிய மட்டுமே அறிய முடியும். இல்லையெனில் மன்னர்கள் பரிசளித்தலின்போது அடையாளச் சின்னங்களாக அவதரிக்கும் கல்வெட்டு, செப்பேடு, சுவடி வாயிலாகவும் அறியக்கூடும். அவ்வாறு அறிமுகம் செய்தாலும் அவர்கள் இயற்றிய பாக்கள் முழுவதும் இடம்பெறுவதில்லை.

புலவர்களின் வரலாறு முழுமையாக வரவில்லை எனும் ஏக்கத்தில் சூரியநாராயண சாஸ்திரியார், தமிழிலக்கியங்களை ஈன்ற புலவர்கள் பற்றிய வரலாறுகள் திருப்தியளிக்கவில்லை; புலவர்களின் வரலாறு எழுதப்பட்டாலும் அது காலவரிசைப்படி அமையவில்லை; நல்லிசைப் புலவர்களின் பலருடைய வரலாறு வெளிவராததால் அவர்களைப் பற்றிய அருமையான செய்திகள் கிடைக்கவில்லை; உ.வே.சா பதிப்பித்த இரட்டைக்காப்பியங்களில் பல தமிழ்நூல்கள் பற்றிய குறிப்புகள் இடம்பெறுகின்றன; இவற்றைத் தொகுத்துத் தனிநூலாக வெளிவந்தால் மகிழ்ச்சியளிக்கும்; இப்பணியை மேற்கொள்ள இறைவன் உ.வே.சாவிற்கு அருள்புரிய வேண்டும் எனும் சிந்தனையுடையவராக இருந்துள்ளார். இதனை, *“யாழ்ப்பாணத்திற் காசி செட்டியென்பாரொருவர் தமிழ்ப்புலவர் சரிதத்தைத் தொகுத்து ஆங்கில மொழியிலெழுதிப் பல்லாண்டுகட்கு முன்னர் வெளியிட்டனர். அது நூலாராய்ச்சி முறையைத் தழுவி ஒருவாறு எழுதப்பட்டுள்ளது; அது காலக்கிரமப்படி யெழுதப்படாமை காலவரையறை காண்ட லரிதாகின்றமை பற்றியே போலும். அதன்கண் நல்லிசைப்புலவர் பலருடைய சரிதங் காணப்படாமையாற் குன்றக் கூறலென்னுங் குற்றந் தங்குவதாயிற்று. அதன்பின்னர் யாழ்ப்பாணத்து ஆ.சதாசிவம் பிள்ளை யென்பார் ‘பாவலர் சரித்திர தீபகம்’ என்றதோர் நூலியற்றிப் பிரசுரித்தனர். அது தமிழ்ப்புலவர் பெயர்களை அகராதிக் கிரமப்படுத்தி யெழுதியதோர் தமிழ்வசன நூலாகும்; இடையிடையே அவ்வவ் புலவருடைய பாடல்களும் உதாரணமாகக் காட்டப்பட்டுள. கால நிர்ணய விஷயத்தில் இந்நூல் அதிக திருப்திகரமானதா யிருக்கவில்லை. இதன்கட் சில அருமையான விஷயங்களும் கூறப்படாமற் போயின.*

*இனிக் கும்பகோணக் கலாசாலையில் தமிழ்ப் புலமை நடாத்திவரும் மகாவித்துவான் பிரம்மஸ்ரீ உ.வே.சுவாமிநாத ஐயரவர்கள் தாம் பதிப்பித்த சிலப்பதிகாரத்தினும் மணிமேகலையினும் தமிழ்நூல்கள் பலவற்றைப் பற்றிக் குறிப்புக்க ளெழுதியிருக்கின்றனர். இன்னும் புறநானூற்றிலும் நல்லிசைப் புலவர் பலருடைய சரித்திரக் குறிப்புகளும் அப்புலவர்களை யாதரித்தாரைப் பற்றிய குறிப்புகளும் வரையப்பட்டுள. இவையனைத்தையும் ஒருங்கு தொகுத்து இன்னுந் தாம் அருமையாகக் கண்டு குறித்து வைத்துளவிஷயங்களையுங் கூட்டித் தனிநூலாக வெளிப்படுத்திப் போகின்றனரெனக் கேள்வியுற்றுக் கழிபேருவகை பூக்கின்றாம். இம்முயற்சி கை கூடுமாறு நம் ஐயரவர்கட்கு இறைவன் திருவருள் புரிவாராக”* எனும் செய்தியின் மூலம் அறிய முடிகின்றது.

பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் நமக்குக் கிடைத்துள்ள சங்கநூல்கள். அவற்றில் நமக்கு கிடைத்துள்ள பாடல்கள் 2381. அவற்றுள் 2279 பாடல்களுக்கு மட்டுமே அவற்றைப் பாடிய புலவர்களின் பெயர்கள் தெரிகின்றது. ஏனைய பாடல்களைப் பாடிய புலவர்களின் பெயர்கள் தெரியவில்லை.

பெயரறியாப் புலவர்களின் பாடல்களில் இடம்பெற்றுள்ள உவமைகளின் அடிப்படையில் புலவர் பெயர் சூட்டப்பட்டுள்ளது. அவ்வரிசையில் **அணிலாடு முன்றிலார், உழுந்தினைம்புலவர், ஓரேர் உழவனார், குப்பைக் கோழியார், செம்புலப் பெயனீரார், மீனெறி தூண்டிலார்** போன்றோர்.

[1] தமிழ்ப் புலவர் சரித்திரம், பக். Vii-viii.

மேற்சுட்டிய புலவர்களின் பெயர்கள் தத்தம் பாடலில் அமைந்த உவமைப் பொருளின் வாயிலாக அமைந்திருப்பதுபோல **அஞ்சில் ஆந்தையார், பிசிராந்தையார், அள்ளூர் நன்முல்லையார், ஒக்கூர் மாசாத்தியார், கொல்லிக் கண்ணனார், கோவூர் கிழார், மதுரை மருதனிள நாகனார்** ஆகியோர் பிறந்த ஊரை அடையாகக் கொண்டு அழைக்கப்படுகின்றனர்.

`இக்கட்டுரையின் மூலம் அறிமுகமாகும் புலவரின் பெயரை அறிய இயலாததால் அவர் பிறந்த ஊரை அடையாகக் கொண்டு முதுகுளத்தூரார் என அழைக்கப்பெறுகிறார் (பதிவு: தண்டபாணி சுவாமிகள்). புலவர் என்றாலே சிறப்பு. அதில் தத்தம் அறிதிறனுக்கேற்ப தனது திறமைகளை வெளிக்காட்டுவர். இங்கே முதுகுளத்தூராரின் சிறப்பினையும், கடவுள்மீது அவர் கொண்ட பக்தி, அதன் வாயிலாக வெளிப்பட்ட வியப்புகள் ஆகியவற்றைச் செவிவழிச் செய்திகள் மூலமாகப் பதிவுசெய்துள்ளார் தண்டபாணி சுவாமிகள்.

1931ஆம் ஆண்டு சென்னை கேசரி அச்சுக்கூடத்தில் அச்சிடப்பெற்ற பதிப்பாக **‘புலவர் புராணம்’** வெளியானது. இந்நூல் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளால் இயற்றப்பட்டது. எழுபத்திரண்டு புலவர்பெருமானின் வாழ்க்கையையும், பாடப்பட்ட செய்யுளையும் சிறப்பிக்கும் முகமாக அமைந்துள்ளது. இந்நூலில் அமையப்பெற்றிருக்கும் அறுபத்திரண்டாம் தலைப்பில் **‘முதுகுளத்தூரார் சருக்கம்’** எனும் தலைப்பில் முதுகுளத்தூரில் வாழ்ந்த ஒரு புலவரைப் பற்றிய குறிப்பு உள்ளது. இச்சருக்கத்தில் மொத்தம் இருபத்தொன்று பாடல்களில் பதினாறு பாடல்கள் முதுகுளத்தூரார் சுரண்டை நகரில் வாழ்ந்தபோது நடந்தேறிய நிகழ்வுகளைக் கேள்விப்பட்ட செய்தியினையும், மீதமுள்ள ஐந்து பாடல்களில் முதுகுளத்தூராரைப் பற்றி தான் உணர்ந்த அனுபவங்களை முன்வைக்கின்றார்.

**ஊர்ச்சிறப்பு**

முதுகுளத்தூரிலிருந்து புலம்பெயர்ந்து **‘சுரண்டை’**(தென்காசி அருகில்) எனும் ஊருக்குச் சென்ற முதுகுளத்தூராரின் வாழ்வில் நடந்த எதிர்பாராச் சம்பவத்தினை இச்சருக்கத்தில் காணமுடிகிறது.

‘‘சேதுத்தலத் தருகேநனி திகழ்சீர்முது குளமென்
றோதும்பதி வந்தோன்குல மொடுபேர்வின வில்லோன்
காதுந்தொழி லில்லானவிர் கல்லாடைய நிந்தோன்
வாதுண்டம னத்தோர்வெருள் வண்ணப்புல வோனே’’[2]

என முதலாவது பாடல் அமைகிறது.

சேதுத்தலம் என்பது ‘‘பண்டைப் பெருமை வாய்ந்த பாண்டிய நாட்டின் தென்கோடியிலே சேது மூலம் என்றழைக்கப்படும் தர்பசயனம் தேவிப்பட்டினம் இவை முதற்கொண்டு தனுஷ்கோடி வரை பரவித் திகழ்கிறது சேது ஸ்தல என்றும் ராமசேது என்றும் வழங்கப்படும் ராமேசுவரம் என்ற ஷேத்திரம். இது புனித யாத்திரை மேற்கொள்ளும் பாரத நாட்டவர் ஆயிரக்கண்க்கில் குழுமி போற்றிப்புகழும் பெருமை வாய்ந்தது’’[3] எனச் சேதுநாட்டின் (இராமநாதபுரம்) சிறப்பினை முத்துஸ்வாமி சாஸ்திரிகள் குறிப்பிடுவர். இராமநாதபுரம் மாவட்டத்தில் காணலாகும் ஏழு தாலுகாவில் முதுகுளத்தூரும் ஒன்று. இவ்வூரில் இப்புலவர் பிறந்தவர் என்ற செய்தியினை முதலடியில் முன்வைக்கின்றார். முதுகுளத்தூராரின் குலம் பற்றிக்

[2] புலவர் புராணம், ப.394

[3] சிறப்பு மிக்க சேது ஸ்தலம் (இராமேசுவரம்), ப,1

குறிப்பிடாமல் வாதம் புரிவதில் வல்லவர் எனவும், எதிர்வாதம் புரிபவரை பயம் கொள்ளச் செய்யக்கூடிய வகையில் சிறந்த புலமையுடையவர் எனவும் கூறுவதை அறிய முடிகிறது.

**புலவர் சிறப்பும் குணமும்**

குளிர்ந்த மேகங்கள் தவழும் பொதிகைமலையின் அருகிலே சுரண்டை அமைந்துள்ளது. இப்பொதிகைமலையில் வள்ளி தெய்வானையோடு வாழும் முருகனையே நிதமும் நினைக்கக் கூடிய முதுகுளத்தூரார், அப்பொதிகைமீது நூறு சந்தப்பாக்களைப் பாடியதோடு மட்டுமின்றி அழகிய பிற வண்ணங்களையும் பாக்களையும் பாடியவராகத் திகழ்ந்துள்ளார். இதனை

''திருமாமலைக் கொருநூறுதி றற்சந்தமு மற்றும்

பெருமாண்புறு வண்ணங்களும் பிறபாக்களுஞ் சொன்னேன்''[4]

எனும் பாடல் மூலம் அறியலாம்.

முதுகுளத்தூராரின் சரித்திரங்கள் பல உண்டு என்பதையும், அவற்றை நான் அறியவில்லை என்பதையும் திட்டவட்டமாகத் தண்டபாணி சுவாமிகள் குறிப்பிட்டுள்ளார். கற்பனை வாயிலாக எடுத்தியம்பாமல் உண்மையை உரக்கச் சொன்ன செய்தியானது இங்கே கவனிக்கத்தக்கது மட்டுமின்றிப் போற்றத்தக்கதாகும். முதுகுளத்தூரார் சிவனது நெற்றிக் கண்ணில் உதித்தவனாகிய முருகனது அருளால் உய்வு பெற்றுள்ளார் எனும் நிலையினை அறிந்ததாகச் சுட்டுகின்றார். மேலும் அன்புடைய நெஞ்சுடன் அவர் ஆற்றிய கவிதைகள் பல உண்டு எனவும், புலவரின் அருட்குணம் மட்டும் மாறவில்லை என்றும் குறிப்பிடுகின்றார்.

பல ஊர்களுக்குச் சென்று தமிழ்ச்சுவையைத் தேடிப் பருகும் முதுகுளத்தூரார் ஒருநாள் சுரண்டை நகருக்குச் சென்றுள்ளார். அந்நகரிலே இவரது சொல்லின்பத்தை நுகர்ந்து இன்புறும் சிலர் இருந்தமையால் சிலநாள் சுரண்டையில் தங்கி வசிக்கக்கூடிய நிலை வந்தது. சுரண்டை நகரில் ஒரு வேளாளன் மந்திர சக்தியால் வலிமை பெற்றிருந்தான். அவன் தன் வீட்டில் யந்திரஸ்தாபனம் செய்திருந்த பலகையில் அறியாது அமர்ந்தார் முதுகுளத்தூரார். அக்காட்சியைக் கண்ட அவன் கடுஞ்சினங்கொண்டு புலவரது தவவேடத்தை மதியாமல் பலவாறு இகழ்ந்து, நீ இன்றே இறந்தொழிவாய் என்ற சாபத்தையும் கொடுத்தான்.

மேலும் வேளாளனின் குணத்தை எடுத்துரைக்கும் முகமாக, ''சாமானிய மனிதர்களிடம் பொருட்கூலிபெற்று, மந்திர ஜெபத்தால், வசியம், மரணம், முதலிய கன்மங்களைச் செய்து கெடும், மூடனாதலின் இவரது பொறுமையுணர்தற்கு முடியாதவனாயினன். ஆன்மார்த்தவுபாசனையான பக்தி மார்க்கியாகில், அடியார் வேடத்தை ஆண்டவன் வடிவெனக்கொண்டு பணியுந்தகுதியமையும் என்பது குறிப்பு''[5] என இப்பாடலின் அடிக்குறிப்பாகத் தண்டபாணி சுவாமிகள் குறிப்பிடுகின்றார். இதனை,

''ஒருநாளவன் மனையின்கண வண்ணப்புல வோனுற்
றருகேயுறு பலகைத்தக வறியாமலி ருந்தான்
வெருளாதிதன் மிசையுற்றனை யெனவன்னவன் வெம்பிக்

[4] மேலது, ப,394

[5] மேலது, ப,394

குருவேடமு மதியாதுகொ டுஞ்சொற்சில கூறி''[6]

எனும் அடிகள் மூலம் அறியலாம். இப்பாடல் மூலம் இலக்கிய மாண்பாளர்களும், புலவரின் கவிநயம் நுகர் விரும்பிகளும், அதேசமயத்தில் மாந்தீரகவாதிகளும் சுரண்டை நகரில் இருந்துள்ளனர் என்பதை அறிய முடிகிறது.

'நீ இன்றே இறந்தொழிவாய்' எனக் கூறக்கேட்ட புலவர் ஒரு சொல்கூட உரைக்காமல் தன் மனம் நொந்து அவ்விடம் விட்டு அகன்று போகிறார். தமக்கு நிகழ்ந்த துன்பத்தை நினைத்து மிகவும் வருத்தப்படுகிறார். அவமானப்பட்ட மண்ணில் நிற்பதை நினைத்து வெட்கம் கொண்டார். தனக்கு ஏற்பட்ட நிலையை அறிவோரிடம் உரைத்து, கதிரவன் மறையும் மாலைவேளையில் ஊரைவிட்டு அகன்று, சுடுகாட்டினை நோக்கி விரைந்தார். தளிர்களை மெத்தையாக எண்ணி அதில் உறங்கலாயினார். இதனை

''வெளியுற்றவ னகரத்திடை வீதற்குள நாணித்
தெளிசித்தமு ளார்சிற்சில ருடனவ்வகை செப்பி
யொளிரெற்கதி ரோன்மேற்கட லுறுபோதும யானந்
தளிர்மெத்தையெ னக்கொண்டுத நித்தேசய னித்தான்''[7]

எனும் பாடலடிகள் விளக்கும்.

வேளாளன் இட்ட மந்திரம் தன்னை ஆட்கொள்ளாதபடி முருகனின் திருவடியை மனதில் நினைத்துக் கொண்டு தனது பொறிகளால் துதித்துக் கொண்டேயிருந்தார். அடர்ந்த அவ்விருள் பொழுதிலும் பகல்பொழுதைப் போன்று ஒரு சூரியன் வந்ததுபோல் முருகன் தனது ஒருகையில் வேலுடனும் மயிலுடனும் முதுகுளத்தூராரின் முன் காட்சியளித்தார். அக்காட்சியைக் கண்ட அவருக்கு ஆர்வம் எனும் கடலில் தமிழையே காணும் காட்சி நமக்குக் கிட்டியது அதிசயமே என்றெண்ணி, அந்த வேளாளனின் தீய பகை நமக்கு நன்மையைச் செய்தது என்று எண்ணி இனி நம்மை சூலத்தையுடைய எமன் நெருங்க மாட்டான் என்று உறுதிகொண்டார். அப்போது ஒரு பேய் தனது கையில் ஒரு தண்டை ஏந்தி தாக்க முற்பட, முருகனின் செவ்வேல் இருகூறாக பேயைத் துண்டித்தது. அதனை மயில் உண்டது. நடந்தேறிய காட்சிகள் அனைத்தும் அந்த தீயமந்திரத்தின் விளைவாய் ஏற்பட்டதென உணர்ந்த முதுகுளத்தூரார் இனி எத்தகு துன்பமும் நம்மை நேரிடாதென நம்பிக்கை கொண்டார்.

அப்பேயைத் தொடர்ந்து மற்றொரு பேயும் வந்து அவ்வாறே அழிந்தது. இவ்வாறு தொடர்ந்து சில பேய்கள் காணப்படினும் அவற்றையெல்லாம் முருகனின் சேவல் ஒழித்தது. அதன் பின்பு முதுகுளத்தூரார் சுரண்டை நகரில் அமைந்துள்ள அநுமந்திகுளத்தில் நீராடி, காவியும் கன்டிகையும் அணிந்து அந்நகருக்குள் நுழைந்தார். இதனை,

''மயினேர்கடன் மீதேகுகன் மானுங்கதிர் வந்த
தயிலாலுயு மவனாங் கநு மந்திப்புன லாடிக்
கயிலாயப தியினீறுகண் டிகைகாவிய ணிந்து
வெயிலேறுமு னேயந்நகர் வீதிக்கணுற் றானே''[8]

---

[6] மேலது, ப,394

[7] மேலது, ப,395

[8] மேலது, ப,395

எனும் பாடல் மூலம் அறியமுடிகிறது.

அநுமந்திகுளத்தில் நீராடி சுரண்டை நகருக்குள் சென்ற முதுகுளத்தூரார், வேளாளன் ஏவிய மந்திரத்தால் மடிந்து போனான் என்று வருந்தியோர்களைக் கண்டு அப்பாவியால் எனக்கு ஏதும் நேரிடவில்லை. முருகப்பெருமானின் அருள் கிட்டியமையால் உயிர் பிழைத்தேன் என எடுத்துரைத்தார். இதனை

''அப்பாவியு ரைத்திட்டசொ லவனார்ந்தமை யறியா
ரிப்பாவல னேகொன்றன னென்றோதின ரின்னோ
னெப்பாவமு மறியேனவ ணிவ்வாறியன் றனவென்
றோப்பாருமில் செவ்வேள்பதத் துறுசூளுரைத் தனனே''[9]

எனும் அடிகள் விளக்கி நிற்கும். மறுபடியும் சுரண்டை நகருக்குள் செல்ல வாய்ப்பை ஏற்படுத்தியதை நினைத்து முருகனுக்கு நன்றி தெரிவிக்கும் பொருட்டு இவ்வாறு கூறலாயினார் என்பதை இப்பாடல் மூலம் அறியமுடிகிறது.

இவ்வாறு கவிபாடுகின்ற இயல்பு ஒன்றையே சிறப்பாகக் கொண்டவரும், இதமான அன்பைப் பொழிபவரும், அனைவராலும் மதிக்கப்படுபவருமாகிய முதுகுளத்தூரார் இவ்வாறாகத் திருவிளையாடல் புரிந்து பொதிகை மலையில் நற்கதி அடைந்தார். அவரைக் குறித்து நான் அறிந்தது இவ்வளவே என்பதை,

''புவியிற்சில விளையாடல்பு ரிந்தேபொதி யையிலுற்
றெவிதக்கதி யோவெய்தின னியான்கேட்டதி வளவே''[10]

என்பதை மேற்சுட்டிய பாடலடிகள் மூலம் அறியலாம்.

இதுகாறும் முதுகுளத்தூராரின் வாழ்வில் நடந்தேறிய செய்திகள் அனைத்தும் பதினாறு பாடல்களில் குறிப்பிட்டுள்ளவை. அதனைத் தொடர்ந்து மீதமுள்ள ஐந்து பாடல்களில் புலவரைக் குறித்துத் தம் கருத்தாக்கங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவை வருமாறு.

- அவர் பொருட்டு முருகக்கடவுளே வேலும் மயிலும் கொண்டு காட்சியளித்தமையால் இறுதியில் முருகனே அவரை ஆட்கொண்டிருப்பார் என நம்புகிறேன். எனினும் நிகழ்ந்தது யாதோ/ முக்காலத்தையும் உணரும் ஆற்றல்மிக்கோரால் மட்டுமே அதை உறுதியாகக் கூறஇயலும் எனவும்,
- இவ்வுலகத்தில் சிறுபயன்களை அளித்துப் பின் யாவற்றையும் அழிக்கின்ற மாந்திரக நூலின்வழி நிற்போர், அன்பு வழியில் இறைவனைத் தரிசித்து நிற்போரைப் பகைத்துச் சினந்தால் விரைவில் அந்த துஷ்டர் கெட்டழிவர் என்பதற்கு இக்கதை ஒரு சான்றாகும் எனவும்,
- சித்தர்களின் தலைவனாகிய சிவனின் மகனாகிய குகனின் திருவடியை வணங்கி அவன் மீது வண்ணக்கவி பாடி அவனது திருவடியை அடைந்த பெருமைக்குரியவர் எனவும்,
- மந்திரத்தின் வழிநின்று இப்புவியை அடைய ஆசைகொள்வோர், முருகனை சார்ந்து அன்பு, பக்தி, வழிபாடு, சத்தியம், சாந்தம் முதலிய குணங்களை உடையோர்க்கு

[9] புலவர் புராணம், ப.396

[10] புலவர் புராணம், ப.396

நிகராக மாட்டார்கள். இறைவனைச் சரணடைந்தோர் பெற்றோரால் பாதுகாக்கப்படும் பிள்ளைகளுக்குச் சமமாவர். மந்திரத்தின்வழி நிற்போர் வேலைக்கேற்பப் கூலிபெறுதல் போன்று குறுகிய கால மகிழ்வு எய்யும் மனிதர்களுக்குச் சமம் என்றும்,

- அழகிய குளிர்ச்சி பொருந்திய முத்துக்கள் நிரம்பிய முத்தமிழ் நாட்டிலுள்ள முதுகுளத்தூரிலிருந்து வந்து கவிபாடி வாழ்ந்தவரின் நற்கதையைக் கூறினேன். இதனைத் தொடர்ந்து நெற்குன்றவாணரின் புகழைக் கூற முற்படுகிறேன் என முடிக்கின்றார். இதனை

''குளிர்முத்தமிழ் நாட்டேமுது குளத்தூரிடை வந்து
தெளிசொற்கவி பாடிக்குகற் சேர்ந்தோன்செயல் சொன்னேன்
வெளியெங்குநெற் குன்றென்றசொன் மிளிரும்புகழ் பெற்றுக்
களிகூரொரு கவிஞன்பெறு கதியும்புகல் வேனே''[11]

எனும் அடிகள் விளக்கி நிற்கும்.

பிறரிடம் அன்பாகவும், பிறரால் மதிக்கப்படுபவராகவும் திகழும் முதுகுளத்தூரார் தெய்வீக அன்பால் மீண்டெழுந்துள்ளார் என்பதாக மேற்சுட்டிய பாடலடிகள் குறித்து நிற்கின்றன. இவரது காலம் பற்றிய குறிப்பு எதிலும் காணப்படவில்லை. 19 அல்லது 20ஆம் நூற்றாண்டாக இருக்கலாம்.

முதுகுளத்தூரார் போலப் பல புலவர் பெருமக்களின் வாழ்க்கை வரலாறுகளும், படைப்புகளும் அறியப்படாமல் அழிந்துபோயின என்பது வெள்ளிடைமலை. அந்தவகையில், முதுகுளத்தூராரின் வாழ்க்கைச் சிறுநிகழ்வுதனை ஆர்வத்துடன் தேடி, செவிவழிச் செய்தியாகக் கேட்டுப் பதிவுசெய்த வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் அனைவராலும் போற்றப்படத் தக்கவரே!

**துணைநூற்பட்டியல்**


- ❖ சூரியநாராயண சாஸ்திரியார் வி.கோ, 1950, **தமிழ்ப் புலவர் சரித்திரம்**, வி.சூ.சுவாமிநாதன் பிரசுரகர்த்தர், மதுரை : திருநெல்வேலி.
- ❖ தண்டபாணிசுவாமிகள், 1931, புலவர் புராணம், கேசரி அச்சுக்கூடம், சென்னை.
- ❖ முத்துஸ்வாமி சாஸ்திரிகள் டி.கே., 1981(நா.ப.), சிறப்புமிக்க சேதுஸ்தலம், அருள்மிகு இராமநாதசாமி திருக்கோயில் வெளியீடு.


[11] புலவர் புராணம், ப.397

மதிப்பிடப்பெற்றது

# மருத்துவ விஞ்ஞானத்தின் ஒழுக்க மீறுகைகளும் அவற்றின் அனுமதிப் பாங்கும்

Moral violations of medical science are also permitted



**அரியரெத்தினம் அனேஜா**
கலைமாணி மாணவர்
மெய்யியல் மற்றும் தத்துவவியல் கற்கைகள் துறை
கலைகலாசார பீடம், கிழக்குப்பல்கலைக்கழகம்
வந்தாறுமூலை, இலங்கை
anejaariyarethnam@gmail.com

**Abstract:** This essay studies to find about how medical science violate medical ethics and its possibility. In our society, we can see more medical ethics. Some time which are accept by some person. But some time it is not accept in many situation. So the philosophy is covered this problems and give some solution. This paper aims to point out argument of medical ethics.

**Keywords:** society, medical ethics, philosophy, Ethics, அழகியல், அறிவாராய்ச்சியியல், பௌதீக அதீதம், ஒழுக்கவியல்.

இவ்வுலகில் பிறந்து வாழ்கின்ற ஒவ்வொருவரது எதிர்பார்ப்பும் தத்தமது வாழ்வைச் சிறப்புற அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதேயாகும். அவ்வகையில் மனிதன் வாழ்வதற்கான வழிபற்றிக் கூறும் துறையாகவே ஒழுக்கவியல் காணப்படுகின்றது. ஒழுக்கவியலானது சர்வ உலகு பற்றிய தேடலான மெய்பொருளியலின் பிரதான பிரிவுகளில் ஒன்றாகும். அழகியல், அறிவாராய்ச்சியியல், பௌதீக அதீதம், ஒழுக்கவியல் ஆகியனவே மெய்யியல் ஆய்வு செய்யும் பிரதான துறைகளாகும். இவற்றுள் ஒழுக்கவியல் தனிச்சிறப்புப் பெற்றுக் காணப்படுகின்றது. மனித வாழ்வின் இயல்புகளைப் பற்றியும் பிரச்சினைகளைப் பற்றியும் ஆழ்ந்து சிந்திக்கத் தொடங்கிய போதே ஒழுக்கவியல் சார்ந்த பிரச்சினைகளும் தோன்றின எனலாம். தான் எவ்வாறு வாழ்க்கை நடத்த வேண்டும்? நன்மையை அனுசரித்து செயற்பட வேண்டுமா? அல்லது எக் காரணத்திற்காக நன்மையை அனுசரித்துச் செயற்பட வேண்டும்? என்ற கேள்வி மனதில் எழுந்த போதே ஒழுக்கவியல் பிரச்சினைகளும் வளர்ச்சி பெற்றன எனலாம்.

**ஒழுக்கவியல்**

ஒழுக்கவியல் எனும் பதமானது ஆங்கிலத்தில் 'Ethics' என அழைக்கப்படுகின்றது. இது கிரேக்க மொழியான 'Ethos' எனும் அடிச்சொல்லிலிருந்து எழுந்ததாகும். மற்றும் 'Mores' எனும் பதமானது 'Moral' என்னும் இலத்தீன் சொல்லடியில் இருந்து எழுந்ததாகும். இப் பதங்கள் வழக்கம் அல்லது சம்பிரதாயம் எனும் பொருளை குறித்து நிற்கின்றன. ஒழுக்கவியலானது இனத்திற்கு இனம் நாட்டிற்கு நாடு, மொழிக்கு மொழி, சமயத்திற்கு சமயம் வேறுபட்டதாக காணப்படுகின்றது. இருப்பினும் ஒழுக்க கடப்பாடுகள் என்பது அனைவருக்கும் பொதுவான ஒன்றாகும். ஒழுக்கவியலானது அதீத ஒழுக்கவியல், நியம ஒழுக்கவியல், பிரயோக ஒழுக்கவியல் என்ற வகைப்பாட்டினைக் கொண்டதாகும். இவற்றுள் தற்காலத்தில் மனிதனின் அன்றாட விடயங்களில் ஏற்படக்கூடிய ஒழுக்கவியல் சிக்கல்களிற்கு ஒழுக்கவியல் கோட்பாடுகளை பிரயோகப்படுத்தி தீர்வு காணுகின்ற முறை பற்றி கூறும் வகையாக பிரயோக

ஒழுக்கவியல் காணப்படுகின்றது. இத்தகைய ஒழுக்கவியலானது ஆய்வு செய்யாத விடயங்களே இல்லை என்ற அளவிற்கு தன் ஆய்வுப் பரப்பினை விரிவுபடுத்தி செல்கின்றது.

ஆரம்ப காலத்தில் அனுபவ சோதனை முறைகள் வளர்ச்சியடையாத நிலையில் அக்கால கண்டுபிடிப்புக்கள் எல்லாம் ஊகங்களையும் கற்பனைளையும் கொண்டனவாக காணப்பட்டன. மனிதனுக்கு நோய் வருவதற்கு காரணம் கடவுள் மற்றும் பேய், பிசாசுகள் எனவும் அத்தோடு மனிதனுக்கு நோய் ஏற்பட்டால் கூரிய ஆயுதத்தினால் துவாரமிடுவதும், நோய் பிடித்தவர்களை சமூகத்தில் இருந்து ஒதுக்குவதும் மற்றும் அவர்களை கொலை செய்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டான்.

அச்சந்தர்ப்பத்திலே ஹிப்போகிரட்டிஸின் வருகையானது அவர்களை மூட நம்பிக்கைகளில் இருந்து விடுபடவைத்தது. நோய் வருவதற்கு காரணம் கடவுளோ, பேயோ, பிசாசுகளோ இல்லை எனவும் ஒவ்வொரு நோய்க்கும் ஒரு நோய்க்காரணி உண்டு எனவும் கூறி மருத்துவத்தினை கலையினைப் போன்று வளர்த்தெடுத்தார். இதனால் மருத்துவத்தின் தந்தையாகவும் அடையாளப்படுத்தப்பட்;டார். மருத்துவம் பயிலுகின்ற மாணவர்களுக்காக சட்டக் கோவை ஒன்றினையும் வெளியிட்டார். இது ஹிப்போகிரடிஸின் சத்தியப் பிரமாணமாகும். இவ்வாறு இவரினால் வளர்த்தெடுக்கப்பட்ட மருத்துவமானது இன்று பாரிய ஒழுக்கப் பிரச்சினைகளில் சிக்கித் தவிக்கின்றது எனலாம்.

இன்று மருத்துவ ஒழுக்கவியலில் பல விமர்சனங்களிற்கு உள்ளாகியுள்ள மருத்துவ ஒழுக்க மீறுகைகளாக கருச்சிதைவு, செயற்கை முறையிலான குழந்தை உருவாக்கம், கருணைக்கொலை, நோயாளர் வைத்தியர் உறவு போன்றவற்றைக் குறிப்பிட முடியும்.

**சுக மரணம்**

சக உயிரியின் மீது கருணையற்றவர்களால் நிகழ்த்தப்படுவதுதான் கொலை. ஓர் உயிரியின் மீதான கருணையின் காரணமாகவும் கொலை புரியலாம் என்கின்ற கருத்தை கொண்டது 'கருணைக் கொலை' அதாவது தாங்கமுடியாத நோயினால் அவதிப்படுவோரை செயற்கை முறையில் மரணமடையச் செய்வது 'கருணைக் கொலை' (Mercy killing) எனக் கூறலாம். கருணைக் கொலையின் நோக்கம் துன்பத்தை முடித்து வைப்பதாகும். 'சுகமரணம்' என்றும் இதனைக் கூறுவர். நோயாளியே தனது உயிரை முடித்து விடுமாறு வைத்தியரைக் கோரலாம். இது ஒரு நீண்டகால ஒழுக்கப் பிரச்சினையாகக் காணப்படுகின்றது.

சுக மரணத்தில் இரு வகைகள் உண்டு. மரணத்தை செயற்கையாக ஏற்படுத்துதல் மற்றும் சாகவிடுதல் என்பனவாகும். ஒருவரை விச ஊசி போட்டோ அல்லது வேறு முறைகளிலோ, டாக்டர்கள் முன்னிலையில் உடனடியாக சாக அனுமனிப்பது மரணத்தை செயற்கையாக ஏற்படுத்துதல் ஆகும். மருத்துவ உபகரணங்கள் உதவியுடன் ஒருவரை உயிர் வாழச் செய்வதை தவிர்த்து, அவரது உயிரை சிறிது நேரத்தில் அகற்றுவது சாகவிடுதல் ஆகும்.

தீர்க்க முடியாத வலி மீண்டு வர இயலாத மூளை செயலிழப்பு போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்களைக் கருணைக்கொலை செய்ய அனுமதிக்க வேண்டும் என்கின்ற கோரிக்கை நெடுங்காலமாகவே எழுப்பப்பட்டு வருகின்றது. என்னவாயினும் ஒரு உயிரைக் கொலை செய்வதை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும், வாழ்தலே துன்பம் என்றானபின் அந்தத் துன்பத்தில் இருந்து விடுதலை அளிப்பது கொலை ஆகாது என்றும் கருணைக்கொலை மீதான இரு வேறான கருத்துக்கள் இருக்கின்றன.

வைத்தியத்தின் நோக்கம் மனிதரைச் சாவிலிருந்து காப்பது மட்டுமல்ல அவனது நோவிலிருந்து அவனை விடுதலை செய்வதுமாகும். உயிரை வாழவைப்பதும் சாவை முடிந்தவரை தாமதப்படுத்துவதும் அல்லது தள்ளிப்போடுவதும் வைத்திய சாஸ்த்திரத்தின் குறிக்கோளாகும். தற்காலச் சட்டங்களின்படி 'உயிரை எடுக்குமாறு நோயாளி கோருவது அவரை கொலைகாரராக்குவதாகும்' என பீட்டர் சிங்கர் கூறுகின்றார்.

நாம் எல்லோரும் இவ் உலகத்திற்கு வந்துள்ள அந்நியர்களே எமது ஆன்மாக்கள் எமது உடல் என்னும் சமாதியில் அடைக்கப்பட்டிருக்கின்றன. ஆயினும் தற்கொலை மூலமோ சுகமரணத்தின் மூலமோ எம்மை நாம் விடுவித்துக் கொள்ள முயலலாகாது. ஏனெனில் நாம் எல்லோரும் எமது பாதுகாவலனாகிய இறைவனின் அடிமைகள் அவன் ஆணையின்றி எம்மை விடுவித்துக் கொள்ள எமக்கு உரிமையில்லை.

தொன்மைக் காலத்திலே நோயின் கொடிய வேதனையிலிருந்து விடுதலைபெறத் தமது உயிரை மாய்த்துக் கொள்வதற்கு நோயாளிகள் தாமாகவே முன்வந்தனர். அந்த வகையான சுகமரணம் மற்றும் தற்கொலை தொன்மைக் காலத்தில் நாளாந்த நிகழ்வாகக் காணப்பட்டது. தொன்மை மரபுகள் சுகமரணத்தையோ தற்கொலையையோ எதிர்க்கவில்லை. தாங்கமுடியாத நோயினால் அவதிப்படுவோரை காப்பாற்றுவதாகவே அவர்கள் எண்ணினர்.

ஜேம்ஸ் வில்லியம் என்பவர் கருணைக்கொலை பற்றிக் குறிப்பிடுகையில் நியாயமான முறையில் குணமாக்க முடியாத ஒருவர் நோயினாலோ அல்லது காயத்தினாலோ துன்பப்படும் நிலையில் அவரின் உயிரை நோக்கத்துடன் எடுத்தல் என்கின்றார். இவ்வாறு மேற்கொள்ளப்படும் கருணைக் கொலையானது மருத்துவ ஆலோசனையுடனும் நீதிமன்ற அங்கீகாரத்துடனும் மருத்துவர்களினால் உயர்ந்த நோக்குடன் யேற்கொள்ளப்பட வேண்டும் என்றார்.

மற்றும் 'காமன் காஸ்' என்ற தொண்டு நிறுவனம் உச்ச நீதிமன்றத்தில்; 'நீண்டகாலமாக நோய்வாய்ப்பட்டவர்கள் குணமடைய வாய்;ப்பு இல்லாத நிலையில் வைத்தியசாலையில் அவர்களது செயற்கை சுவாசக்கருவிகளை அகற்றி அவர்கள் மரணத்தை தழுவ அனுமதிக்க வேண்டும்' என மனுததாக்குதல் செய்திருந்தது. அது தொடர்பாக ஜெனரல் பி.எஸ் நரசிம்மா வாதாடுகையில் கருணைக் கொலையினை ஏற்றுக் கொண்டால் அது தவறாக பயன்படுத்தப்பட வாய்ப்புள்ளதென்றும் அதனைப் பொதுக் கொள்கையாக உருவாக்க முடியாது என்றும் குறிப்பிட்டார். காரணம் ஒருவரது மருத்துவ சிகிச்சையை முடித்துக்கொள்ள வேண்டும் என்று தனிநபர்கள் தீர்மானிக்க முடியாது. ஒருவர் நல்ல மனநிலையில் இல்லாதவராக இருந்தால் அவர் தனது சிகிச்சையை முடித்துக் கொள்ள வேண்டும் என்று முடிவு எடுக்க உகந்தவர் அல்ல. மருத்துவ வாரியம்தான் அதனை ஆராய்ந்து முடிவு எடுக்க வேண்டும். அதுதான் இறுதி அதிகாரம் படைத்தது. அந்த அளவிற்கு அதில் பாதுகாப்பு அம்சங்கள் சேர்க்கப்பட வேண்டும். ஆரோக்கியமான நோயாளிக்கு தவறான முறையில் பிழையான மருந்தினைக் கொடுத்து அதன்வழி அவர் இறக்க நேர்ந்தால் அது கொலைக் குற்றமாகும். கருணைக்கொலை ஒருபோதும் தவறுதலாகவோ விபத்தாகவோ அமைந்து விட முடியாது. இன்று பெரிதும் இவ்வாறான சம்பவங்கள் நடந்தேறி வருகின்றன.

இருப்பினும் எங்களது இருப்பை பற்றியும் அதனை முடிவுக்கு கொண்டு வருவது பற்றியும் நாங்கள்தான் முடிவு செய்ய வேண்டும். ஒருவருக்கு வாழ்வது மிகவும் கொடுமையானதாகவும் ஒவ்வொரு நிமிடமும் உயிரோடு இறக்கும் வலியினை அனுபவிப்பவருக்கு அவரது இறப்பினை தீர்மானிக்க உரிமை இருக்கின்றது. ஆனால் அவரது இறப்பினை தீர்மானிக்கும் உரிமை மற்றயவர்களிற்கு வழங்குவது தவறான ஒன்றாகும். மருத்துவராக இருந்நதலும் சரி குடும்பத்தவராக இருந்தாலும் சரி இன்னொருவரின் உயிரினை

எடுக்கும் உரிமை இல்லை. அவ்வாறு மேற்கொள்ளப்படும் கருணைக்கொலை கருணையாக கருதப்பட முடியாது அது கொலையாகவே கருதப்பட வேண்டும்.

தசைச் சிதைவு நோயினாலும், கோமாவிலும் இருக்கின்றவர்களுக்குக் கருணைக்கொலை வழங்க அனுமதிக்க வெண்டும் என்ற கருத்தும் நிலவி வருகின்றது வறுமையில் வாடுபவர்களும், நிர்க்கதியாக விடப்பட்டவர்களும், சொந்தங்களை இழந்தவர்களும், ஆயுள் கைதிகளும், ஊனமடைந்தவர்களும் கூட தங்களை கருணைக்கொலை செய்யுமாறு வேண்டுகின்றனர். இவ்வாறான விடயங்களை ஏற்றுக் கொள்ள முடியாது. காரணம் அவர்களின் மனநிலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. இது விரக்தியின் காரணமாக எடுக்கப்படும் முடிவாகும். கருணைக்கொலை என்பது கருணையினால் செய்யப்படும் விடயமானாலும் அதுவும் கொலைதான் எனும் கருத்து பெருமளவில் காணப்படுகின்றது.

வலி, வேதனை இல்லாத வாழ்க்கைதான் நோக்கம் எனும்போது தேவைப்படும் வரையிலும் வலிகொல்லி மருந்துகளைக் கொடுத்து வலியிலிருந்து அவர்களை விடுவிக்கலாம். வலிகொல்லியின் பக்க விளைவுகள் காரணமாக மரணத்தை தழுவ நேரிட்டாலும் அது வலியில்லாத மரணமாக இருக்கும் என்கிறது அமேரிக்கன் அசோசியேசன். கருணைக்கொலை என்பது, மனிதனின் உயிர் வாழ்தலுக்கான உரிமை மட்டுமல்லாமல் இயற்கைக்கும் எதிரானது. மீண்டு வர இயலாதபடியான உடல் மற்றும் மன ரீரியான பாதிப்புக்கு ஆளானவரை கருணைக்கொலை செய்யலாம் என்பதில் நியாயமிருக்கின்றது. முதியவர்களை கவனிக்க முடியவில்லை, குழந்தை ஊனமாக பிறந்துவிட்டது என்பதற்காக மேற்கொள்ளப்பட்டால் நிச்சயம் அது கொலைதான். நூற்றுக்கணக்கானோர் இன்றளவிலும் இது போன்று கொலை செய்யப்பட்டு கொண்டுதான் இருக்கின்றார்கள். சிசுக்கொலையை கண்காணிப்பதற்கு சட்டம் இருப்பது போல் கருணைக்கொலையை கண்காணிக்க சட்டம் இல்லை என்பது முக்கிய பிரச்சினையாக உள்ளது.

கருணைக்கொலைக்கு ஆதரவாக கருத்துக்கள் இருந்தாலும் வாழும் காலத்தினை வைத்தியர் நிச்சயிப்பதனைக் காட்டிலும் வாழ்பவன் வாழும்வரை போராடி வாழ்தலிலேயே அவன் வாழ்வு முழுமைபெறும். அப்போதுதான் அவன் சாவிற்கும் சமூக அங்கீகாரம் கிடைக்கும் உறவினருக்கும் சாந்தி கிடைக்கும் எனக் கருணைக்கொலைக்கு எதிரான வாதங்களும் இருக்கவே செய்கின்றன.

**நோயாளர் வைத்தியர் உறவு**

வைத்தியத் தொழில் நோயாளி மீதான பண்டைய அணுகுமுறைக்கும் நவீன கால அணுகுமுறைக்கும் இடையில் வேறுபாடுகள் தோன்றியுள்ளது போல் தெரிகின்றது. இலாப நோக்கும் பொருளாதார முனைப்பும் முதலிடத்திற்கு வரும் போது விஞ்ஞான முன்னேற்றங்கள் நிகழும் போது எந்த விடயமும் 'பொருள்' அல்லது 'விற்பனைப் பண்டம்' என்ற அடையாளத்தைப் பெறுகின்றது. தற்காலத்தில் எங்கும் பரவியுள்ள இப் பிரச்சினை 'நோயாளி மனிதனையும்' பாதித்துவருகிறது. நோயாளி ஒரு பண்டமா? ஒரு மனிதனா? என்பது முக்கிய கேள்வியாகும். தொழில் பண்டமாகியுள்ளது போல் நோயாளியும் பண்டமாகியுள்ளான். என்றால் அது தற்கால அடையாளங்களில் ஒன்றாகும் ஆனால் அது ஆரோக்கியமானதல்ல.

மனிதன் எந்த நிலையினாலும் பண்டமாக்கப்படுவதன் கேடுகள் பற்றி மார்க்சிய அந்நியமாதல் கோட்பாடு தெளிவாகக் கூறுகின்றது. மனிதன் ஒரு பண்டமல்ல என்ற கருத்து தற்கால கிளர்ச்சிக் குரலாகும். இளைய மார்க்சின் சிந்தனைகளிலும் மகாவலி இக்பாலின் சிந்தனைகளிலும் இது ஆழமாக எதிரொலித்தது. தற்கால இருப்பு வாதமும் தனது அடி நாதமாக இதனையே கொண்டுள்ளது.

நவீன மனிதனின் ஒழுக்கவியல் பிரச்சினைகளில் மையத் தலைப்பாக இருப்பது ‘மனிதன் ஒரு பண்டம் அல்ல’ என்பது தான் என்பார் எரிக் ப்ரொம். ‘Medicine and the ethical problem of morden man’ என்ற கட்டுரையில் ‘மனிதன் ஒரு பண்டம் அல்ல அவனை நீ பண்டமாக மாற்ற முனைந்தால் நீ அவனுக்கு தீங்கு செய்கின்றாய்’ என அவர் கூறுகின்றார். வைத்தியத் தொழிலையும் உட்படுத்தி அக் கட்டுரையில் அவர் கூறியிருப்பவை நுணுகி நோக்குவதற்குரியனவாகும்.

நோயாளியை மனிதனாகப் பார்க்க வேண்டுமே ஒழிய நோயுற்ற பண்டமாக அல்ல. வைத்திய சாஸ்த்திரம் அதன் அடிப்படையில் இயற்கை விஞ்ஞான அவதானத்திலும் பரிசோதனையிலும் தங்கியிருப்பதனால் வைத்தியர் நோயாளியைப் பரிசோதனைப் பொருளைப் போல் பார்க்க நேர்வது இயல்பு ஆனால் அவனை மனிதனாகப் பார்க்கும் பயிற்சியை அவர் பெற்றிருக்க வேண்டும். வைத்தியர் நோயாளியை அறிவது ஒரு மனிதனை இன்னொரு மனிதன் அறிவது போன்றதாயிருக்க வேண்டும். எரிக்ப்ரொமின் கருத்தில் வைத்தியர் அன்பு, கருணை, பிறர் வேதனையை தன் வேதனையாய் உணர்தல் போன்றவற்றினூடாக நோயாளியை அணுகவேண்டும் அப்போதுதான் நோயாளியை ஒரு பொருளாகவன்றி மனிதனாகப் பார்க்கும் அத் தொழிலுக்குத் தேவையான அணுகுமுறை சாத்தியமாகும் என்பார்.

வைத்தியத் தொழல் நோயாளி என்ற மனிதன் மீதே நிலைபெற்றுள்ளதால் வைத்தியர் இயற்கை விஞ்ஞான முறையியலுக்கு மாத்திரம் கட்டுப்பட்டிருப்பது போதுமானதன்று. அவர் மனித விஞ்ஞானத்தையும் அறிந்திருக்க வேண்டும். அன்பு, மனிதாபிமானம், இரக்கம் ஆகியவற்றின் மூலமே அத்தகைய அறிவினைப் பெற முடியும். வைத்தியர் தனது கடமையைச் செய்தாலும் நோயாளிக்கு எனச் சில உரிமைகள் உள்ளன. வைத்திய ஒழுக்கவியல் வைத்தியரை நோய் தீர்க்கும் ஒரு இயந்திரமாக கருதவில்லை. நோயாளி மீது அவருக்கு சில கடப்பாடுகள் உள்ளன. வைத்திய ஒழுக்கவியல் வைத்தியருக்கும் நோயாளிக்குமிடையில் பரஸ்பரம் ஒத்துளைப்பையும் கூட்டுறவையும் நம்பிக்கையையும் உறுதியான மனோநிலையையும் வளர்க்கின்றது. நோயாளி திருப்தியையும் தன்னம்பிக்கையையும் பெறும் விதத்தில் செயற்படுவது வைத்தியரின் கடப்பாடுகளில் ஒன்றாகும் வைத்தியரின் ‘கருணைமிக்க கவனிப்பை’ எதிர்பார்க்க நோயாளிக்கு உரிமை உண்டு. ‘நோயை அல்ல நோயாளியை சுகமாக்கு’ என்பதே ஒழுக்கக் கோட்பாடாக வேண்டும் என வைத்திய ஒழுக்கவியல் கோருகின்றது.

எனினும் வைத்தியர் நோயாளி தொடர்பு இன்று பெரிதும் குறைவடைந்துள்ளதாக மதிப்பீடுகள் கூறுகின்றன. உயர்தொழில்நுட்பக் கருவிகளின் பயன்பாடு வைத்தியர் நோயாளி தொடர்பைக் குறைப்பதில் முக்கிய பங்குவகிக்கின்றது. குறைந்த நேரத்தில் அதிகளவு நோயாளிகளை பார்க்கத்தூண்டும் ‘இலாபநோக்கிற்கு’ வைத்தியர்கள் ஆளாவதும் இதற்குரிய மற்றொரு காரணமாக்கப்படுகின்றது.

நோயாளி தொடர்பிலான வைத்தியரின் முக்கிய கடமையானது ‘நோயாளி தொடர்பான இரகசியத்தைக் காப்பாற்ற வேண்டும்’ என்பதாகும். அதாவது வைத்தியர் நோயாளர்களுக்கிடையில் நம்பிக்கையானது பேணப்பட வேண்டும். இருப்பினும் சில சந்தர்ப்பங்களில் வைத்தியர் நோயாளி தொடர்பான இரகசியத்தினை பேணுவது தொடர்பில் சிக்கலான நிலைக்கு தள்ளப்படுகின்றார். உதாரணமாக ஒரு பாடசாலை மாணவி தன் குடும்ப வைத்தியரை சந்தித்து கருக்கலைப்பு செய்யுமாறு வேண்டுகிறார். இந் நிலையில் வைத்தியர் அப் பிள்ளையின் குடும்பத்தினருக்கு குறித்த மாணவியின் தப்பான நடத்தை பற்றி அறிவிப்பதா? அல்லது அவர் இரகசியத்தை பேணுவதா? என்பது குழப்பமான ஒன்றாகும்.

நோயாளி விரும்பினால் வைத்தியர் நோயாளிக்கு நோய் பற்றிய தகவல்களைக் கூறவேண்டும். நோயைச் சுகப்படுத்துவதற்குரிய முறைகளையும் அதனால் ஏற்படும் சாதக பாதகங்களையும் அவர் கூற வேண்டும். நோயைச் சுகப்படுத்துவதற்குரிய முறைகளையும் அதனால் ஏற்படும் சாதக பாதகங்களையும் அவர் கூற வேண்டும். சுகப்படுத்த முடியாத நோயைப்பற்றியும் வைத்தியர் கூற வேண்டுமா? என்பது பிரச்சினைக்குரியதாகும். இப்படியான சந்தர்ப்பங்களில்நோயாளியைப் பாதிக்காத விததத்தில் சமயோசிதமும் புத்திக்கூர்மையானதுமான பதில்களையே வைத்தியர் கூறக்கடமைப்பட்டுள்ளார். எவ்வாறு இருப்பினும் வைத்தியர் நோயளர்களிற்கிடையில் உள்ள உறவானது சரியான முறையில் பேணப்பட வேண்டியது அவசியமாகும்

**கருச்சிதைவு**

சிசுவைக் கொலை செய்வது, பெண்களின் உரிமை என்ற இரு பிரச்சினைகளை மையமாகக் கொண்டு கருச்சிதைவு விவாதிக்கப்படுகின்றது. மனிதக் கர்ப்பச்சிசு பாதுகாக்கப்பட வேண்டும் என வைத்திய தொழில் ஒழுக்கப் பிரமாணங்கள் வற்புறத்துகின்றன. ஹிப்போகிரட்டிஸின் சத்தியப்பிரமாணத்தில் ‘நான் கருச்சிதைவு செய்ய மாட்டேன்’ என வைத்தியர் சபதம் செய்கின்றார். இது அடிப்படையில் மனித உயிர் பற்றிய பிரச்சினையாகும். கருச்சிதைவு மனிதக்கருவின் வாழ்க்கை உரிமைக்கும் அதனை அழிப்பதற்குப் பெற்றோருக்கும் சமூகத்திற்குமுள்ள உரிமைக்கும் இடைப்பட்டதாக அமைந்துள்ள சிக்கலான பிரச்சினை எனக் கூறலாம்.

கரு வளரும் போது அதை அழிப்பதை நினைவுக்கெட்டிய காலம் முதலே சமூகம் மறுத்து வந்துள்ளது. ஆனால் பரந்த அளவில் கருச்சிதைவானது நடைமுறையிலிருந்த சமூகங்களும் உள்ளன. இவ் உரிமை மறுககப்பட்ட சமூகங்களில் பிரத்தியேக சந்தர்ப்பங்களில் அதற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டு வந்துள்ளதையும் அவதானிக்க முடிகிறது. தாயின் உயிருக்கு ஆபத்தான வேளைகளில் இவ் அங்கீகாரம் அழிக்கப்படுகின்றது. மூலமடைந்துள்ள பெண்ணின் உயிரை அல்லது சுக நலத்தைக் காப்பாற்றுவதற்காக மட்டும் பழைய ஏற்பாட்டின் தல்மூதிய மரபு இதற்கு இடமளித்துள்ளதாகக் கூறுவர்.

கரு வளர்ச்சிபெற்று இயற்கையாக தாயிலிருந்து வெளிவரும் முன்னரே அதைக்கரு நிலையில் திட்டமிட்டு அழிப்பதைக் கருச்சிதைவு எனலாம். இதை எதிர்ப்பவர்கள் அதை ஒரு கொலைச்செயல் எனக் கூறுகின்றனர். உயிரியல் ஒழுக்கவியலில் உணர்ச்சிக்கொந்தளிப்பிற்கு இடமளிக்கும் தலைப்பு கருச்சிதைவாகும். எந்த ஒரு மனிதனுக்குமுள்ள வாழும் உரிமை கர்ப்பசிசுக்கும் வேண்டும். எனவே எந்தச் சூ ழலிலும் அது காப்பாற்றப்பட வேண்டும் என கருச்சிதைவை எதிர்ப்போர் வாதிடுகின்றனர். அவர்களது கருத்தில் முதிர்வடையாக்கரு அல்லது கர்ப்ப சிசு தாயின் கருப்பையினுள் இருந்தாலும் அது முழுமை பெற்ற ஆள் அல்லது மனிதனாகும். கருவுற்ற காலத்திலிருந்து கர்ப்பசிசு முழு மனிதன் என்ற கருத்தை கத்தோலிக்க சமயம் தீவிரமாக ஆதரிக்கின்றது. தாயின் கருவறையில் மறைந்திருக்கும் குழந்தையை அழிப்பதுகொடிய பாவமாகும் என்று கிறிஸ்தவ சமய ஞானியர் கூறுகின்றனர்.

முதிர்வடையாக் கரு கர்ப்பசிசு போன்ற பதப்பிரயோகங்களும் அவை பற்றிய விபரிப்புக்களும் தெளிவற்றதாக உள்ளன. இது இவ் விடயத்தில் எழும் அடிப்படைப் பிரச்சினைகளில் ஒன்றாகும். கர்ப்ப சிசு என்றால் என்ன? அது முழு அளவிலான மனிதனா? என்ற கேள்விக்கும் விடை காணப்பட வேண்டியுள்ளது. கர்ப்ப சிசுவை மனிதன் என்று கூறுவதாய் இருந்தால் அது பல நிபர்ந்தனைகளை பூர்த்தி செய்ய வேண்டும் என கருச்சிதைவு

ஆதரவாளர்கள் கூறுகின்றனர். தனிநபர் என்ற எண்ணக்கருவை அது பூர்த்தி செய்திருக்க வேண்டும். அறநூலினுள் சமூகம் ஒன்றில் அங்கத்தவராக இருக்க வேண்டும்.

தொடர்புபடும் ஆற்றல் மற்றும் உணர்வு, நனவு, பகுத்தறிவு ஆகிய அம்சங்கள் ஒவ்வொன்றையும் கொண்டிருக்க வேண்டும். கர்ப்பசிசு இவற்றை பெறவில்லை எனின் அது மனிதனல்ல. அது கொல்லப்படலாம். கரு வாழ்க்கையும் மனித வாழ்க்கையும் என இதைப்பிரித்துப் பார்க்கலாம் கரு வாழ்க்கை எங்கே முடிவடைகின்றது, மனித வாழ்க்கை எங்கே தொடங்குகின்றது என்பதை நிர்ணயிப்பது இலகுவானதாக இல்லை. ஒரு உயிர் தன்னுணர்வைப் பெற்றிருத்தல், சுற்றாடலை அறிந்திருத்தல், அதனுடன் தொடர்புபட்டிருத்தல், ஹோமோ சேப்பிய இனத்தவரின் அங்கத்தவராக இருத்தல், சமூகக் கடப்பாடுகளைப் பெற்றிருத்தல், வாழ வேண்டும் என்ற தன்னுணர்வை பெற்றிருத்தல் போன்ற இயல்பினைக் கொண்டிருக்க வேண்டும். இவற்றை அடையாளப்படுத்துவதன் மூலம் ஓரளவு அந்த எல்லையை தீர்மானிக்கலாம்.

அப்பாவிக் குழந்தையைக் கொலை செய்வது குற்றமாகும். ஆனால் கொல்லப்படுவது மனிதனா? என்பதே இங்கு எழும் கேள்வியாகும். கர்ப்ச்சிசு மனிதனில்லை என்பதையே மேற்சொன்னவாறு நிரூபிக்க முடிந்தால் 'மனிதக் கொலை' கருத்திற்கு இடமில்லாது போகலாம். கலிபோர்னியப் பல்கலைக்கழக உயிரில்வாதி ஹார்டின் தான் நிகழ்த்திவரும் செறிவான DNA ஆய்வுகளினூடாக பெற்ற முடிவுகளிலிருந்து கர்ப்பசிசு பற்றிப் பின்வருமாறு கூறுகின்றார். கருவின் ஆரம்பநிலையில் மனித அம்சங்கள் மிகச்சிறிய அளவிலேயே காணப்படுகின்றன. அவை பெறுமதியில் மிகக் குறைந்தனவாகும். மனித உயிர் அல்ல என்பது அவரது கருத்து.

கத்தோலிக்க சமயத்தின் கருச்சிதைவுக் கொள்கையை ஆதரிப்பவராக ஜோன் ரி. நூலான் குழந்தை கருத்தரிக்கும் அந்த கணத்திலேயே 'மனிதன்' ஆகிவிடுவதாக வாதிடுகின்றார். புதிய முதிர்வடையாக்கரு முதிர்ப்பருவ மனிதனுக்குரிய முழுமையான பிறப்பியல் தொகுதிகளையும் கொண்டுள்ளது என்பது அவரது கருத்து. "A being with a human genetic code is man" என அவர் கூறுகின்றார்.

கருச்சிதைவு ஆதரவாளர் முன்வைக்கும் வாதங்களில் 'கர்ப்பச்சிசு' ஒரு மனிதன் அல்ல என்பதும் அது சமூக நிலைப்பட்ட உயிரியல்ல என்பதும் வலுவுடையனவாக உள்ளன. எனினும் முழுமனித வளர்ச்சிக்கு மூலகாரணமாயுள்ள கர்ப்பச்சிசுவின் வாழும் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முறியடிப்பதற்கு மேலும் அழுத்தமான நியாயங்கள் தேவை.

கருச்சிதைவு எதிர்ப்பாளர்கள் கருச்சிதைவை கொலை எனக் கூறுகின்றனர். இது ஒரு பாரதூரமான குற்றாச்சாட்டாகும். கருவும் சமூகத்தில் உள்ள மனிதனும் ஒன்றா? கொலை என்ற சொல்லுக்குச் சில வரையறைகள் உள்ளன. கொலை என்பது சட்டரீதியற்ற திட்டமிட்ட வன்முறைச் செயலாகும். முழுமையான நபர் என்ற அந்தஸ்த்துக்குரிய சமுதாய மனிதனை சட்டத்திற்கு முரணாக அழித்தொழிப்பது கொலையாகும். கொல், கொலை இரண்டுக்குமிடையில் வேறுபாடுகள் உள்ளன. நுளம்புகளும் எலிகளும் கொல்லப்படுகின்றன. சில சந்தர்ப்பங்களில் மனிதனைக் கொல்லுவது அற நெறிக்கு உடப்பட்டதாகக் நியாயப்படுத்தப்படுகின்றது. வறுமைக்காகவோ நேர்ச்சைக்காகவோ மனிதக் குழந்தைகள் கொல்லப்படுவதை சில சமூகங்கள் அங்கீகரித்து வந்துள்ளன. கருச்சிதைவு விடயத்தில் கருச்சிதைவு எதிர்ப்பாளர்கள் கூறும் கருத்துக்கள் சில தாக்கம் மிகுந்தவையே என்றாலும் அவர்கள் பயன்படுத்தும் கொலை என்ற சொல் பொருத்தமானதா? என்பது விவாதத்திற்குரியதாகும். கருச்சிதைவு ஆதரவாளர்கள் குறிப்பிடுவதில்லை இவற்றிற்குப் பதிலாக 'சிதைத்தல்' அல்லது 'அகற்றுதல்' என்ற பதங்களை அவர்கள் பயன்படுத்தகின்றனர்.

கரு மனித உயிர் பற்றிய பிரச்சினைகள் மட்டுமல்ல அது ஒரு சமூக அரசியல் பிரச்சினையாகும். அது பெற்றோரின் பிரச்சினையுமாகும். கருச்சிதைவு ஆதரவாளர்கள் கர்ப்பச்சிசுவின் வாழ்க்கை உரிமைக்குள்ள முக்கியத்துவத்தை பெற்றோரின் அல்லது சமூகத்தின் உரிமைக்கும் வழங்க முன்வருகின்றனர். பெண்ணிலை வாதிகள் கருச்சிதைவை தாயின் உரிமை எனக் கூறுகின்றனர். 'ஒழுக்கவியல் ரீதியாக கருச்சிதைவை ஏற்றுக் கொள்ள காரணங்கள் உண்டு' ஜீடித் ஜாவிஸ் தோம்சன் கூறுகின்றார். கருவுக்கும் உயிர்வாழும் உரிமை உண்டென்ற கருத்து வலுவானதாக இருந்தாலும் தாயின் உரிமையுடன் போதிய இணக்கத்தை இச் செயல் பெற்றாக வேண்டும் என்பது அவர் கருத்து.

**செயற்கை முறை கருத்தரிப்பு**

வைத்தியவியலில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களினால் கருமாற்றங்களும் கருத்தடைகளும் புதிதாக வெற்றியளித்துள்ளன. கருத்தடை முறைகள் மூலம் இனப்பெருக்கம் தடை செய்யப்படுகின்றது. இன்று நம்பகமான கருத்தடை முறைகள் மூலமாக பாலியலும் இனப்பெருக்கமும் வேறுபடுத்தப்படுகின்றது. அதாவது இனப்பெருக்கம் நிகழாத பாலியலை வைத்தியவியல் சாதகமாக்கியுள்ளது. வர்த்தகமும் வைத்தியவியலும் ஒன்றிணைந்து பரந்த அளவில் கருத்தடைகளையும் கருமாற்றங்களையும் வியாபிக்கச் செய்து வருவதனால் புதிய பிரச்சினைகள் தோன்றியுள்ளன.

செயற்கை சினைப்படுத்தல் முறை இன்று மகப்பேற்றிலும் சாதகமாகியுள்ளது. இது ஏற்படுத்தியுள்ள 'பதில்தாய்' சமூகத்தில் தாய் பற்றிய மீள் கருத்துகளுக்குரிய தேவையை தோற்றுவித்துள்ளது. குழந்தைப்பேறில்லாத கணவன் மனைவியர் செயற்கை சினைப்படுத்தல் முறையை நாடுகின்றனர். செயற்கை சினைப்படுத்தலில்

- கணவனின் விந்தை மனைவிக்குச் செயற்கை முறையில் தருதல். (A.I.H)
- நன்கொடையாளருடைய விந்தை செயற்கை முறையில் மனைவிக்கு வழங்கல் (A.I.D)

திருமணமானவர்களுக்குக் குழந்தைப் பேறில்லாதிருப்பது முக்கிய பிரச்சினையாகும். போதிய வைத்தியப் பரிசோதனைகள் சிகிச்சைகளின் பின்னரும் குழந்தைப் பேற்றினை அனுபவிக்க முடியாத தம்பதியினர் உள்ளனர். குழந்தைளிடையே வாழ்ந்துமுடிப்பது என்ற ஓர் திட சித்தத்தை வளர்த்துக் கொள்வது இவர்கள் மேற்கொள்ளக் கூடிய ஒரு தீர்வாக இருக்கலாம். ஆனால் பிரச்சினைக்குரிய சரியான தீர்வாக அது இருக்காது. எந்த நிலையிலும் தங்களிற்கு குழந்தையே வேண்டும் என்று கருதும் தம்பதியினருக்குரிய நடைமுறைத் தீர்வு செயற்கை சினைப்படுத்தல் ஒன்றுதான் எனக் கூறுவார் ஹெவலொக் எலிஸ். எனினும் இதிற் பிர்சினைகள் உள்ளன. இவ் சினைப்படுத்தல் முறையினூடாக உலகில் 26.12.2002 அன்றுமுதன் முதலில் ஏவாள் எனும் குழந்தை பிறந்தது எனலாம்.

இவற்றுடன் தொடர்புபட்ட வகையே சோதனைக்குளாய் குழந்தைகள் ஆகும். இயற்கையான கருத்தரிப்பு மற்றும் குழாய்க் குழந்தை போன்றவற்றிறகு 30 ஆயிரம் முதல் 40 ஆயிரம் வரை உயிரணுக்கள் தேவைப்படும். ஆனால் 'இக்ஸி' முறையில் ஒரேயொரு ஆண் உயிரணுவை மிக நுண்ணிய ஊசியில் எடுத்து கம்பியூட்டர் உதவியுடன் ஒரு கரு முட்டையின் சைட்டோபினாஸம் பகுதியில் செலுத்தி கருத்தரிக்கச் செய்யப்படும். குடும்பக் கட்டுப்பாடு செய்து கொண்ட பின்னர் மீண்டும் குழந்தை வேண்டும் என நினைப்பவர்களிற்கு இம்முறை சிறந்தது. சில வேளைகளில் சில பெண்கள் விசேடமான இயல்பைக்கொண்ட ஆணின் விந்தின் மூலம் விசேடமான குழந்தையை பெற்றெடுக்க விரும்புவர்.

இருப்பினும் இவற்றினால் பல ஒழுக்கப் பிரச்சினைகளும் ஏற்படுவதனைக் காணலாம். A.L.H முறையினைவிட அதிகம் பிரச்சினை தருவது A.L.D முறையாகும். சே.சி மகப்பேற்றிற்கு ஒரு தீர்வாக அமைந்தாலும் அது பல ஒழுக்கப் பிரச்சினைகளுக்கும் காரணமாய் அமைகின்றது. நன்கொடையாளருடைய விந்தின் மூலம் மனைவி பிள்ளை பெற்றுக்கொள்ளும் போது தந்தை பிள்ளையின் உயிரியல் தந்தை என்ற தகுதியினை இழக்கின்றார். அதாவது குழந்தை பிறந்தவுடன் குழந்தைக்கு தந்தை பற்றிய பிரச்சினை எழுகின்றது. காரணம் குழந்தைக்கு 2 தந்தைகள் இருக்கின்றார்கள். ஒரு சமூகத் தந்தை மற்றயது உயிரியல் தந்தை எனவே குழந்தை எவரை தந்தையாக அழைப்பது விந்தினை வழங்கியவரையா அல்லது சமூகத்தந்தையையா? இவ்வாறான பிரச்சினைகள் அதிகம் இடம்பெறுகின்றது. இது தந்தை பிள்ளை உறவிலும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது.

பதில்தாய், வாடகைத்தாய் விடயத்திலும் இவ்வாறான பிரச்சினையே எழுகின்றது. இது தாய் தந்தை மரபிலும் சொத்துரிமை விடயங்களிலும் பாதிப்பை ஏற்படுத்தலாம். மற்றும் வைத்திய முன்னேற்றம் என்பது மகப்பேற்றிலும் பாலியல் உடலுறவை அவசியமற்றதாக்கியுள்ளது. இதனால் கணவன் இல்லாமல் கூட மனைவி குழந்தையினைப் பெற்றுக் கொள்ளலாம். இதனால் பிறக்கின்ற குழந்தைக்கு தந்தை இல்லாத நிலை ஏற்படலாம். அத்தோடு குழந்தை வளர்ந்து வருகின்ற வேளை சமூகத்தினால் பல பிரச்சினைக்கு உள்ளாகலாம். இன்று குழந்தைப்பேறு என்பது வியாபாரமாக்கப்பட்டுள்ளது. விந்து வங்கிகளில் விந்து விற்கப்படுகின்றன.

மற்றும் இம்முறையில் காணப்படுகின்ற பதில் தாயும் ஒரு ஒழுக்க ரீதியான பிரச்சினையே அல்லது சட்டப் பிரச்சினையே ஆகும். பிள்ளைப் பேற்றிற்காக பதில் தாய் தேவையாயின் அதற்கான பெண்களை தரகர்கள் ஏற்பாடு செய்து தருகிறார்கள். இதில் எழுகின்ற சட்டப்பிரச்சினைகளை தீர்க்க சட்டத்தரணிகள் அமர்த்தப்படுகின்றனர். மொத்தத்தில் வியாபாரிகள், வைத்தியர்கள், சடடத்தரணிகள், நன்கொடையாளர்கள் சம்பந்தப்பட்டுள்ள ஒரு கொடுக்கல்வாங்கல் நிலமைக்குத் தள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இருப்பினும் சமூகத்தேவையினை நிறைவு செய்வதில் இவை நிறைவு கொண்டவையாகவே உள்ளன எனலாம்.

இவ்வாறான மருத்துவத்துறையானது இன்று பாரிய வளர்ச்சியடைந்துள்ளது இதுவே அவற்றின் சிறப்பாகவும் மற்றும் சங்கடங்களாகவும் அமைந்து விடுகின்றன. பாரிய வளர்ச்சியானது பாதுகாக்கப்பட வேண்டிய ஒன்றேயாகும். கண்டுபிடிப்புக்களாக இருந்தாலும் சரி ஒழுக்க விழுமியங்களாக இருந்தாலும் சரி பேணப்பட வேண்டியது அவசியமே.

**முடிவுரை**

மருத்துவ விஞ்ஞானம் அபார வளர்ச்சியுற்று உலகை வியக்க வைக்கின்றது. ஆனாலும் அவற்றினது ஒழுக்க மீறுகை என்பதும் மறுபுறம் வளர்ச்சியடைந்தே செல்கின்றது. இத்தகைய விடயங்களை காலம் காலமாக மெய்யியலும் தனது கட்டக்குள் ஆய்வு செய்கின்றது. இத்தகைய மருத்துவ ஒழுக்க மீறுகைகள் சாவாலாக மாறிவருகின்றமையை இன்றைய உலகில் நாம் கண்ணூடே நோக்கலாம். ஒழுக்க மீறுகைகளின் பொருத்தப்பாட்டு என்பது பற்றிய கருத்தியலில் பல வேறுபட்ட கருத்தாக்கங்கள் முன்வைக்கப்படுகின்றன. சில நியாயங்களை வேறு கோணத்தில் நின்று ஒதுக்கி விடவும் முடியாது. மறு புறம் அவற்றை ஏற்றுக் கொள்ளவும் முடியாது என்பதுதான் யதார்த்தமான உண்மையாகும்.

**துணைநின்றவை**


- சிவானந்தமூர்த்தி க, 2010, **"ஒழுக்க நியமங்களும் அதன் நடைமுறைகளும்"**, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
- ஜமாஹிர் பீ.எம், 2012, **"ஒழுக்கவியலுக்கு ஓர் அறிமுகம்"**, நதா வெளியீடு, கண்டி.
- ……………………, 2010, **"மெய்யியல் பிரச்சினைகளும் பிரயோகங்களும்"**, நதா வெளியீடு, கண்டி.
- https://en.wikipedia.org/wiki/Medical_ethics
- https://www.medscape.com/courses/section/898060
- https://www.ncbi.nlm.nih.gov/pmc/articles/PMC1079446/
- https://en.wikiversity.org/wiki/Medical_ethics
- https://jme.bmj.com/content/31/8/481